சிவசங்கரி

# நெருஞ்சி முள்



கங்கை
புத்தக
நிலையம்

# 1

நிமிர்ந்து, புதுசாய் உருவாகிக் கொண்டிருக்கும் அந்தக் கட்டிடத்தை நோக்குகையில், பூமாவின் விழியோரங்களில் நீர் கட்டிக் கொண்டது.

'சாந்தி சதன்' —

'அமைதியின் இருப்பிடம்'—

'ச்சி— இனி நீ வேண்டாம்,' — என்று பிள்ளைகளாலும், பெண்களாலும், உற்றவர்களாலும் எட்டி உதைக்கப்படும் வயதான எத்தனையோ அம்மாக்களில் சிலரையாவது இரண்டு கைகளாலும் இழுத்து அரவணைத்துக் கொண்டு இதம்தர உருவாகி இருக்கும் சாந்தி சதன்.

இதைச் சாதித்து முடிப்பதற்குப் பட்ட கஷ்டங்கள் எத்தனை, எத்தனை?

அனுபவித்த பிரச்சினைகள், வேதனைகள்தாம் எத்தனை எத்தனை?

'ஹோ! லேடீஸ் கிளப்பா? அரட்டை அடிப்பதைத் தவிர உங்களுக்கெல்லாம் வேறு என்ன வேலை?'—

'அன்றாடம் ஒரு இடத்தில் கூடவேண்டியது; ஊரில் இருக்கும் அத்தனை பேர் தலையையும் உருட்ட வேண்டியது. எவள் எந்தப் புடவை, நகை புதுசாய் பண்ணிக் கொண்டிருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டு வந்து வீட்டில் புருஷன்காரன் கழுத்தை அறுக்க வேண்டியது. இதுதானே எல்லா மாதர் சங்கங்களிலும் நடக்கும் சமாசாரம்?'—

'ஜூஸ், கேக் கற்றுத் தருகிறேன் பேர்வழி என்று பத்தைக் கொண்டா, இருபதைக் கொண்டா என்று காசு இல்லாத மாசக் கடைசியில் தொண தொணத்துப் பிடுங்கி வாயில் வைக்க வழங்காமல் அரை பாட்டிலில் எதையாவது நிரப்பிக் கொண்டு வருவதற்குப் பதில் வீட்டிலேயே ருசியாய் பலகாரங்களைச் செய்தால், சிக்கனத்துக்குச் சிக்கனம், கெட்டிக்காரத்தனத்துக்கு, கெட்டிக்காரத்தனம்... ஹூம்... நம் பேச்சை யார் காதில் வாங்குகிறார்கள்? முதலில் இந்த லேடீஸ் கிளப்பை எல்லாம் ஒழித்துக்கட்ட வேண்டும்.'

இன்னும் என்னென்ன சொன்னார்கள்?

இவர்கள் காதுபடவே என்னென்ன கூறினார்கள்?

நமுட்டுச் சிரிப்பு, வக்ர பார்வை, 'என்ன செய்து கிழிக்க முடியும் உங்களால்?' என்ற அலட்சியப் பேச்சு...

ஒன்றையும் 'அபயா சாரிடி கிளப்' அங்கத்தினர்கள் லட்சியம் பண்ணாமல் இருந்ததோடு நாங்கள் வித்தியாச மானவர்கள், எங்கள் சிந்தனை மாறுபட்டது, எங்கள் செய்கை ஆக்கப் பூர்வமானது என்ற நம்பிக்கையில் உண்மையாய், சிரத்தையாய், சமூக சேவையில் ஈடுபட்டதற்குப் பிரதிபலனாய், சின்னச் சின்ன பெருமைகள், ஆத்மதிருப்தியுடன் சந்தோஷப் படக் கூடிய பாராட்டுக்கள் கிடைத்து வந்தது நிஜம்



என்றாலும், இதோ கண்முன் பிரும்மாண்டமாய், சாந்தி சதன் என்ற பெயருடன் உருவாகி இருக்கிறதே, இதுதான் அத்தனைக்கும் சிகரம்... ரொம்பப் பெரிய சமாசாரம்.

பூமா கட்டிடத்தை நெருங்கி வாசற்படியிடம் நின்று சுவரைத் தடவிப் பார்த்தாள்.

குழந்தை ஒன்றைத் தட்டிக் கொஞ்சும் உணர்வு பிரவாகமெடுத்தது.

வாய் மட்டும் இருந்தால் இந்தக் கட்டிடத்துள் அடங்கி யுள்ள ஒவ்வொரு செங்கல்லும் எத்தனை கதை சொல்லும்?

அடி அடியாக உயர எத்தனை பேருடைய அலைச்சல், உழைப்பு, அவஸ்தை பின்னணியில் இருந்திருக்கிறது என்பதைச் சொல்லும்?

"அம்மா — கொஞ்சம் நவந்துக்கறீங்களா? கலவை மேல சிந்திடப் போவுது..."

முகப்பைக் காரைக் கலவையால் பூசிக் கொண்டிருந்த கொத்தனார் குரல் கொடுக்க பூமா வராந்தாவில் ஏறி உள்ளே நகர்ந்தாள்.

படிகளைக் கடந்ததும் முதலில் வலப்பக்கம் காணப் படுவது ஆபீஸ் அறை. அதை ஒட்டி டிஸ்பென்ஸரி, வாரம் ஒருமுறை அம்மாக்களை கவனிக்கவென்று வரும் வைத்தியர் இங்கு அமர்ந்துதான் அவர்களைப் பரிசோதிப்பார். மருந்து களை வைக்க ஓர் அலமாரி, மேஜை நாற்காலியுடன் ஓரமாய் கட்டில் ஒன்றைப் போட்டு விட்டால், உடம்பு சரியில்லாத அம்மாவை இங்கே தனியாகப் படுக்க வைத்து மற்றவர்களுக்கு வியாதி பரவாமல் கவனத்துடன் சிகிச்சை அளிக்கலாம்...

அடுத்து விஸ்தாரமான கூடம். இதில் ஒரு பக்கத்தில் பூஜை மண்டபம். ஆஸ்திக நண்பர் ஒருவர் 'நான்

இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்... உங்கள் இல்லத்து அம்மாக்கள் பஜனை செய்ய, தியானம் பண்ண சௌகர்ய மாய் ஒரு சின்ன பூஜை அலமாரி கட்டிவிடுங்கள், என்று கேட்டுக் கொண்டதன் பேரில் சிமெண்ட்டிலேயே விமானம் எழுப்பி, பூ வேலைகள் செய்யப்பட்டு மண்டபம் தயாராகி வருகிறது. இன்னும் பெயிண்ட் அடிக்க வேண்டிய வேலை பாக்கி.

முதலில், இந்த விதானத்துள் நாலு படங்கள் எதையா வது மாட்டலாமா, என்று நினைத்தவள், அப்புறம் அந்த நினைப்பை மாற்றிக் கொண்டுவிட்டாள்.

ஒரு கிருஷ்ணர், ஒரு ராமர், ஒரு சிவன், ஓர் அம்பிகை என்று ஆரம்பிப்பது விரைவிலேயே குல தெய்வ வழக்கப்படி மாரியம்மன், ஐயப்பன், குருவாயூரப்பன், வெங்கடாசலபதி, என்று ஹனுமான் வாலாக நீண்டு கொண்டே போய், கடைசி யில் சுவர் முழுவதும் படங்களாகவே நிறைத்துவிடலாம்; தவிரவும் உன் சுவாமி சின்னவர், என் கடவுள் பெரியவர் என்ற தர்க்கங்களும், மனஸ்தாபங்களும் எழ இதுவே காரணமாகிவிடலாம்...

எதற்கு வம்பு?

க்ளப் அங்கத்தினர்களிடம் தன் பயத்தை பூமா சொல்ல, அவர்களும் அதை ஆமோதிக்க, மண்டபத்துள் உயரமாய் ஒரு குத்து விளக்கை வைத்து அதற்கு பூ சாற்றி, ஊதுபத்தி ஏற்றி வழிபாட்டை நடத்தலாம் என்பது தீர்மானமாயிற்று.

வேண்டுமானால், 'தீப மங்கள ஜோதி நமோ நம'— என்று மண்டபச் சுவரில் ஒரு வாக்கியம் எழுதிவிடலாமோ?

ஒரு நிமிஷம் பூஜை மண்டபத்தையும் அதனுள் அந்த வாசகத்தையும் மனசில் முழுசாய் உருவாக்கி, சந்தோஷித்த பூமா, பார்வையைக் கூடத்தின் மற்ற இடங்களில் சுழல விட்டாள்.



இந்தப் பக்க சுவரில் நடு மையமாய் தேசத் தந்தை காந்திஜி, கூடவே கஸ்தூரிபா, நேர் எதிர் சுவரில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர், அன்னை சாரதாதேவி.

வடக்கு சுவரில் மதர் தெரிஸா. பிஞ்சுக் குழந்தையை நெஞ்சோடு அணைத்து நான் இருக்கிறேன் உனக்கு என்று சொல்லும் பாவனையில் அன்பாய், இதமாய் சிரிக்கும் அன்னை.

படங்கள் என்று இவ்வளவு மாட்டினால் போதும்...

மற்றபடி விட்டத்திலிருந்து தொங்கும் பேன்கள்... ஒரு பக்கமாய் வைக்க டி.வி., ரேடியோ, ஏ அப்பா! போதும். அம்மாக்கள் மகிழ்ச்சியோடு பொழுது போக்க இத்தனை சாதனங்கள் போதும்! நல்லிதயம் படைத்த அன்பர்கள் இல்லத்துக்குக் கொடையாக இவற்றை அளிக்கத் தயாராக இருக்கிறார்கள். கட்டடம் ரெடி ஆனதும், வாங்கி வந்து விடலாம்.

கூடத்தை ஒட்டி பக்கத்துக்கு இரண்டாக மொத்தம் நாலு படுக்கை அறைகள்.

இவற்றில் இரண்டில் மட்டும் ஒவ்வொன்றிலும் பத்து கட்டில்கள், அம்மாக்கள் தங்கள் சாமான்களை வைத்துக் கொள்ள இழுப்பறைகளைக் கொண்ட சின்ன மேஜைகள் போட வேண்டும்.

தற்சமயம் பத்தொன்பது அம்மாக்கள் மட்டுமே இல்லத்தில் இருப்பதால் இரண்டு அறைகளுக்குத் தேவை யான சாமான்களை உடனடியாக வாங்கி விடலாம். பிறகு எண்ணிக்கை அதிகரிக்கும்போது மற்ற அறைகளில் கையை வைக்கலாம் என்பது க்ளப்பின் முடிவு...

அதுவும் சரிதான்... ஒரேயடியாய் எல்லாவற்றையும் இழுத்துவிட்டுக் கொண்டு அகலக் கால் வைத்தால் பணத் துக்கு எங்கே போவது?

ஜன்னல் ஒன்றின் அருகில் சென்று நின்றபோது தூரத்தில் நீலப் புடவையாய் விரிந்து கிடந்த சமுத்திரம் பார்க்கப் பரவசமாய் இருந்தது.

அதிக ஜன சந்தடி இல்லாமல், ஊருக்கு ஒதுக்குப் புறமாய் காற்றோட்டமான சமுத்திரக் கரையில், ஆரோக்கிய மான சூழ்நிலையில் இந்த இல்லம் அமைந்து விட்டதில் பூமாவுக்கு அலாதி திருப்தி.

வயதானவர்களுக்குச் சப்தம், சந்தடி அத்தனை நல்லதுக்கு இல்லை. சிலருக்குப் படபடப்பு வரும். சிலருக்குத் தலைவலி வரும். அதெல்லாம் ஒன்றும் இல்லாமல் நிம்மதி யுடன் தங்கள் கடைசி நாட்களைக் கடவுள் சிந்தனையுடன் சத்தான உணவு, இதமான கவனிப்புடன் இந்த அம்மாக்கள் அனுபவிப்பது என்பது எத்தனை பெரிய விஷயம்!

படுக்கை அறையிலிருந்து மீண்டும் கூடத்துக்கு வந்து, சமையல், சாப்பாட்டு அறைகளைப் பார்க்க நடந்தவள், ஒரு படுக்கை அறையிலிருந்து வெளிப்பட்டு கூடத்துச் சுவரை ஒட்டி நெடுக ஓடும் இரும்புப் பிடிமானத்தைப் பார்த்து, அருகில் சென்று உறுத்தல் எதுவும் இல்லாமல் இருக்கிறதா என்று தடவிப் பார்த்தாள்.

இரும்புக் குழாய் வழவழவென்று சுத்தமாய் இருந்தது.

இடுப்பளவு உயரத்தில் படுக்கை அறையில் துவங்கி, கூடம், சாப்பாடு, குளியல் அறை வரை செல்லும் இந்தப் பிடிமானம், வயதானவர்கள் இருக்கும் இடத்தில் மிகவும் அவசியமானது என்று வைத்தியர் சொன்னதன் பேரில் சுவரில் பொருத்தப்பட்டிருக்கிறது.

பிறருடைய தயவோ ஊன்றுகோலின் துணையோ தேவை என்று ஆகிவிட்டவர்கள் ஒரு அறையிலிருந்து இன் னொ'ார் இடத்துக்குப் போக, கட்டிடத்துக்குள்ளேயே தேகப் பயிற்சி செய்வதுபோல நடக்க, இந்தப் பிடிமானம் ரொம்ப உபயோகமாய் இருக்குமாம். இடுப்புயரத்தில் தங்கு தடையின்றி, குழாய் நெடுக ஓடுவதால் எழுந்து நின்று அடிமேல் அடி வைத்து, விழுந்து விடுவோம் என்ற பயமில்லாமல் என் காரியத்தை நானே கவனித்துக் கொள்கிறேன் என்று பெருமையோடு வளைய வரலாம்.



திடுமென்று பூமாவினுள் ருக்மணி அம்மாவின் நினைப்பு எட்டிப் பார்த்தது.

காலையில்கூட இங்கு வருவதற்கு முன் சொந்தக் கட்டடம் தயார் ஆகாததால் அடையாறில் வாடகை வீடு ஒன்றில் இயங்கிவரும் சாந்தி சதனத்துக்குப் போனபோது, ருக்மணி அம்மாவைப் பூமா பார்த்தாள்.

சப்பை எலும்பு முறிவு ஆகி, நாலு மாசங்களாய் படுத்த படுக்கையில் கிடந்த ருக்மணியம்மா இப்போது எழுந்து உட்காருகிறார், மேட்ரன் திலகாவின் உதவியுடன் இரண்டடி எடுத்து வைக்கிறார்.

வழக்கமாக விவேகத்தோடு காணப்படுபவருக்கு இன்று உடம்புக்கோ, மனசுக்கோ அதிக அலுப்பாக இருந்திருக்க வேண்டும்.

"என்னம்மா, நடக்க முடியறது போலிருக்கே" என்று தட்டிக் கொடுக்கும் பாவனையில் பூமா கேட்டதும், அவர் கண்கள் கலங்கிப் போயின.

"திலகா பிராணனை வாங்கிண்டு, இரண்டு அடி எடுத்து வைக்கிறதுக்குப் பேர் நடையா? ஒண்ணுத்துக்கும் பிரயோஜனம் இல்லாம இருக்கிறவளை இங்க கூட்டிண்டு வந்துட்டேளேம்மா... என்னால உங்களுக்குத்தான் எத்தனை கஷ்டம்? நாலு மாசமா படுக்கைலே கிடந்து இருக்கிறவா உசிரை வாங்கினது போதாதுன்னு, இப்பவும், விடாம கஷ்டப்படுத்தறேன். எந்த வேளைல பொறந்தேனோ, தெரியலை. எல்லாருக்கும்

என்னால துன்பம்தான். எனக்கு மனசிலே எந்தவித பெரிய ஆசையும் இல்லேம்மா. யாரையும் தொந்தரவு பண்ணாம எங்காரியத்த நானே கவனிச்சுக்கற தெம்பை மட்டும் பகவான் கொடுத்தா போதும்... இல்லேன்னா 'வாடிம்மா'னு கூட்டிண்டாக்கூட போதும்... யார் யாரையோ கூட்டிக்கிற கடவுள், என்ன கூட்டிக்கப் படாதா?... நல்லவா உங்களுக்கெல்லாம் பாரமா இருக்கேனே பாவி."

ஜல ஜலவென்று கண்களில் நீர் பெருக ருக்மணியம்மா அழுதுவிட்டார்.

கிட்டத்தில் போய் பூமா அவர் தோள்களைத் தடவிக் கொடுத்தாள்.

"நீங்க யாருக்கும் பாரமா இல்லே, ருக்மணியம்மா. வீணா கவலைப்படறதை விட்டுடணும். கொஞ்சம் பொறுத்துக் கோங்க, சீக்கிரமா நம்ப சொந்த வீட்டுக்கு நாம குடி போயிடப் போறோம். அங்க நிச்சயமா உங்க ஆசை நிறை வேறும். பார்த்திண்டே இருங்க, யாரோட தயவும் இல்லாம தன்னிச்சையா நீங்க நடக்கலாம், உங்க காரியத்தைக் கவனிச்சுக்கலாம். நா சொல்றதை நம்புங்கம்மா."

'மிட்டாய் கொடுத்து, குழந்தையை ஏமாற்றுகிற மாதிரி என்னையும் தாஜா பண்ணுகிறீர்களா?' என்று கேட்கும் பார்வையை ருக்மணி பார்க்க, திலகா சக்கர நாற்காலியைக் கொண்டு வந்து அவரை அழைத்துப் போனாள்.

ருக்மணி இந்த இல்லத்துக்கு வந்து நாலு மாசமாகிறது. இவர் பின்னால் ஆளை அசர அடிக்கும் மஹா சோகக் கதை ஒன்று அசுரனாய் நின்று கொண்டிருக்கிறது.

முதன் முதலில் ருக்மணியைப் பற்றிப் பூமா கேள்விப் பட்டது மைதிலி மூலம்.



மைதிலியும் அபயா சோஷியல் க்ளப்பின் ஓர் அங்கத்தினர் தான். இத்தனைக்கும் மைதிலி வசதியான குடும்பத்தைச் சார்ந்தவள் இல்லை. கணவனுக்கு க்ளார்க் உத்தியோகம். முன்னூற்றுச் சில்லறை சம்பளம். வயதான மாமியார், மாமனார், ஒரு குழந்தை.

க்ளப்பில் சேரும் எண்ணத்தோடு மைதிலி வந்தபோது பூமா அவளை உடனே ஏற்கவில்லை.

"உனக்கு ஆசை இருக்கலாம் மைதிலி... ஆனா உங்க வீட்டுலே இதுக்கு ஆட்சேபணை சொல்லாம இருக்கணுமே! வீட்டுச் செலவுகளைச் சரிபார்க்கவே முழிபிதுங்கிப் போறப்ப, இவளுக்கு கிளப் என்ன வேண்டியிருக்குதுனு நாளைக்கு உங்க பெரியவா யாரும் சொல்லக் கூடாது பாரும்மா."

"சொல்லமாட்டா மேடம், எங்காத்துக்காரர், மாமனார், மாமியார் எல்லாரும் சரினு சொன்னப்புறம்தான் நா வந்திருக்கேன். உங்க 'அபயா கிளப்' பத்தி நாங்க நிறைய கேள்விப் படறோம். 'இது சாதாரண சங்கம் இல்லே, நிஜமாவே கஷ்டப்படற மனுஷாளுக்கு சமயத்துலே உதவற அமைப்பு; ஒரு சினிமா பாக்கற காசுகூட இல்லே, இவா மாத சந்தா, வெறும் மூணு ரூபாதான். என்னால அதக் கொடுக்க முடியும், நீயும் மெம்பரா சேர்ந்து உன்னாலான ஒத்தாசையை உடம்பாலயாவது பண்ணு. நம்ம கஷ்டம் ஆயுசுக்கும்தான் நம்மகூட இருக்கும்'னு எங்காத்துக்காரரே சொன்னார் மேடம்."

இப்படியொரு தீவிரமான நம்பிக்கையுடன் சேர்ந்த மைதிலி நாலு மாசம் முன் இவள் முன் வந்து நின்றாள்.

"என்ன மைதிலி?"

"இல்லே, வந்து மேடம்."—

"சொல்லும்மா..."—

"எங்காத்துக்கு எதிர் வீட்டுலே ருக்மணினு ஒரு அம்மா சமையல் வேலை பண்ணிண்டு இருந்தா... பதினைஞ்சு நாள் முன்னாடி கிணத்தடிலே சறுக்கி விழுந்ததுமே அவ தொடை எலும்பு உடைஞ்சு போயிடுத்து... கட்டுப் போட்டு படுத்த உடனே வீட்டுக்காரர் 'வேலையைவிட்டு நின்னுடு'னு சொல் லிட்டார். மாமிக்கு உறவுனு சொல்லிக்க யாரும் இருக்கறதா தெரியலை. எங்க போவேன், ஏது பண்ணுவேன்னு அழுது பறந்தவளை எங்காத்துக்குக் கூட்டிண்டு வந்தேன். பதினைஞ்சு நாளாயிடுத்து. மாமிய எங்களோடயே வைச்சுக்கறதுலே பெரிசா கஷ்டம் இல்லே. ஆனா, வைத்தியம், அது இது பார்த்து இன்னும் சௌகரியமா வைச்சிக்க முடியுமோங்கற ஆசை... அதான் மேடம்..."

தயங்கித் தயங்கிப் பேசிவிட்டு மைதிலி நிறுத்தினாள்.

அபயா சாரிடி க்ளப் அனாதரவான பெண் முதியோர் களை ஏற்கத் தீர்மானித்து, சாந்தி சதனத்தை உருவாக்கி ஐந்து அம்மாக்களை ஏற்றுக் கொண்டு விட்ட சமயம் அது. ஆத லால், மைதிலியுடன் சென்று, ருக்மணியைப் பூமா சந்தித்தாள்.

ருக்மணி பிறந்து வளர்ந்து வாழ்க்கைப்பட்டது காஞ்சிபுரத்தில்.

முன்பல் தூக்கலாக இருக்கிறது என்றும், வெள்ளி சொம்பு கொடுக்கவில்லை என்றும் பதினைந்தாவது வயதில் கணவனால் துரத்தப்பட்டு, வாழாவெட்டி ஆன ருக்மணிக்கு இன்று வயது அறுபத்து ஆறு. அப்பா அம்மா செத்த பிறகு, அண்ணா வீட்டில் அவனுக்கும் அவன் மனைவி குழந்தை களுக்குமாய் உழைத்து, தேவாங்காய் தேய்ந்தவர். உடம்புக்கு முடியாமல் படுத்த ஒரு நாளில் பெண்டாட்டியின் ஏவலால் 'கொட்டிக்க முடிஞ்சவளுக்கு எழுந்து வேலைகளைக் கவனிக்க மட்டும் கஷ்டமா? எழுந்திரு மாமாலம் பண்ணாதே' என்று விறகுக் கட்டையாலேயே கூடப்பிறந்தவன் மொத்தி விட, அத்தனை வருஷங்களாய்ப் பொறுத்து அடங்கிப் போன



ருக்மணி 'என்ன உறவு வேண்டிக் கிடக்கிறது' என்ற சுசப்பில் சென்னைக்கு வந்து ஒரு வீட்டில் சமையல்காரியாகப் பன்னிரண்டு வருஷங்கள் இருந்திருக்கிறார். ஒரு மாமாங்கம் உழைத்த உழைப்புக்கு அர்த்தமே இல்லாமல் கால் ஒடிந்து போனதும் அந்த வீட்டார் விரட்டிவிட நிமிஷத்தில் நடுத் தெருவுக்கு வந்தவர். யாருமே அற்ற அனாதையாய் அவர் தவித்ததும், மைதிலி மூலம் சாந்தி சதனத்துக்கு வந்ததும் நடந்து இப்போது மாசங்கள் நாலு ஆகிவிட்டன.

ருக்மணி அம்மா கம்பியைப் பிடித்துக் கொண்டு நடக் கிற மாதிரியும் 'பாருங்கோ—நா நடக்கிறேன், தனியா நடக்க றேன்' என்று சிரிக்கிற மாதிரியும் கற்பனை பண்ணி, அது தந்த இதமான உணர்வுடனேயே பூமா சமையல் கட்டு, குளியல் அறைகள், பின் தாழ்வாரத்தைக் கடந்து, படிகளில் இறங்கி, மணலில் கால் புதையப் புதைய நடந்து, சவுக்கு மரம் ஒன்றின் அடியில் உட்கார்ந்து கொண்டாள்.

ஹோஷ் ஹோஷ் என்று வீசிய காற்று உடம்புக்கு இதமாக இருந்தது.

தலையைத் திருப்பிக் கட்டிடத்தை முழுசாய்ப் பார்த்த போது இரு நாழிகை அடங்கி இருந்த நீர் மீண்டும் கண்களில் ஊறியது.

சாந்தி சதன்.

அமைதியின் இருப்பிடம்.

வயசான காலத்தில், பெற்று வளர்த்தவர்களால், உற்றவர்களால் அனாதையாகக் கைவிடப்பட்டு, அல்லல் உறும் சில அம்மாக்களுக்காவது இதம் தரப்போகும் இடம்.

நிம்மதியின் இருப்பிடம்....

சாந்தி சதன்—

எத்தனை வருஷத்துக் கனவு இது!

எத்தனை வருஷத்து ஏக்கம் இது!

திண்டாடித் தெருவில் நின்று அவஸ்தைப்படும் முதியவர்கள்.

பசித்த வாய்க்கு ஒரு கவளம் கிடைக்காமல், பரிவான வார்த்தை இல்லாமல் வாடும் வயதானவர்கள்.

கடவுளே!

எத்தனை காலமாய் மனசில் நெருஞ்சி முள்ளாய்ப் படர்ந்து உறுத்தும் அவலம் இது?

சாந்தி சதனம் இந்த உறுத்தலுக்கு நிவாரணமாக அமையுமா?

அமையும். அமைய வேண்டும்.

கண்களை மீறிக் கொண்டு எழுந்த கண்ணீரை அடக்கப் பிரயத்தனப்படுவதுபோல இரண்டு தரம் இமைகளைச் சிமிட்டிய பூமா நிமிர்ந்தபோது தூரத்தில் சாந்தி சதன் மங்கலாய்த் தெரிந்தது.

## 2

அது, 1944-ஆம் ஆண்டா, இல்லை 1945 ஆம் ஆண்டா? சரியாக நினைவில்லை.

அப்போது எட்டு வயசா, இல்லை ஏழா? அதையும் குண்டூசியால் குறிப்பாகக் குத்தத் தெரியவில்லை.

அந்த வருஷம் மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தது நினைவிருக்கிறது. அப்பா என்னேரமும் சுதந்திரம் சுதந்திரம் என்று அங்கலாய்த்துத் தவித்துப் பறந்தது நினைவிலிருக்கிறது. வீட்டில் ரகசிய கூட்டங்கள் நடந்ததும், அப்பா துண்டுப் பிரசுரங்களை மடியில் கட்டிக்கொண்டு வினியோகித்துவிட்டு, இரவு பன்னிரண்டுக்கும் ஒரு மணிக்கும் வந்து கதவைத் தட்டியதும் ஞாபகம் இருக்கிறது. மன்னியும் அண்ணாவும் தனியாய் அம்மா மாட்டிக் கொண்டால் பிலுபிலுவென்று சண்டை போட்டதுகூட திப்பி திப்பியாய் ஞாபகம் இருக்கிறது.



சுந்தரேசன், ஞானம் தம்பதிக்கு ராகவன்தான் சீமந்த புத்திரன். அவனுக்குப் பிறகு லட்சுமியும் சீதாவும் பிறந்து, என்னமோ அவசரத்துடன் ஒருத்தி நாலு வயசிலும், இன்னொருத்தி பத்து மாசத்திலும் மண்ணைப் பார்க்கப் போன பிறகு, இனி தாம்பத்திய உறவே வேண்டாம் என்று உறுதியுடன் அவர்கள் வாழ்ந்த சமயத்தில் எப்படியோ, எங்கோ ஒருநாள் உணர்ச்சி வசப்பட்டதன் காரணமாய், ஒரு விபத்தாய், ஜனித்தவள் பூமா.

அவள் பிறக்கும்போது ராகவன் எஸ்.எஸ்.எல்.ஸி., முடித்துவிட்டுப் பிற்பாடு பூமாவுக்கு ஆறு வயசாகையில் அந்தக்கால வழக்கப்படி சாரதாவின் கழுத்தில் மூன்று முடிச்சுகளைக் கூடப் போட்டுவிட்டான்.

சுந்தரேசன் ஓரளவுக்கு வசதியான குடும்பத்தைச் சார்ந்தவர்தான். வக்கீலுக்குப் படித்துவிட்டு, சொல்லும் படியாகச் சம்பாதித்துக் கொட்டியவர்தான்.

ஆனால், நாட்டில் சுதந்திரத் தீ ஹோ ஹோ என்று பற்றி ஜ்வாலை விட்டபோது அதன் வெப்பத்தால் இழுக்கப் பட்டு, ஆனானப்பட்ட காந்தி, நேரு போன்றவர்களே பாரிஸ்டர் தொழிலை விட்டுவிட்டு நாட்டுக்காக உழைக்கும் போது எனக்கு மட்டும் என்ன கேடு என்று நினைத்தவர் பொட்டென்று ஒரு நாள் வக்கீல் தொழிலுக்கு முழுக்குப்

போட்டார்; கதர் கட்டினார். அந்நியச் சாமான்களைப் பகிஷ்கரித்தார். பாரதியின் பாடல்களை மனனம் செய்து, சதா முணுமுணுத்தார். கூட்டங்களில், ஆவேசமாகப் பேசினார்.

“தள்ளி நில்லேண்டா. அந்தண்டை போயேண்டா” என்று ஒதுக்கி வைத்த மனிதர்களுக்கு ஹரிஜன் என்ற நாமகரணத்தைச் சூட்டி, அவர்களும் நம் உடன் பிறப்புக்களே என்று மகாத்மா அறிவித்ததன் பேரில் ‘வேணாஞ்சாமி, எங்களைத் தொடாதீங்க சாமி’ என்று கூனிக் குறுகி விலகிய குப்பனையும் முனியாண்டியையும் தோளோடு தோள் இணைத்து வீட்டுக்கு அழைத்து வந்து, கூடத்தில் இலை போடச் சொல்லி, கிட்ட அமர்ந்து கவனித்துச் சாப்பாடு போட்டார். ஒன்றும் புரியாமல் அகல அகல விழித்த மகளை மடியில் அமர்த்திக் கொண்டு.

“ஜாதி மதங்களைப் பாரோம்— உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதிய ராயினும் ஒன்றே— அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே
ஈனப் பறையர்களேனும்— அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றோ?—”

என்று கம்பீரமாகப் பாடினார். அதிசயமாய் ஓய்வு இருந்து வீட்டில் இருக்கும் நாழிகையில்கூட ராட்டையைச் சுற்றிக் கொண்டே ‘பூமா இங்கு வா. இதுல எப்படி நூற்கறதுனு கத்துக்கோ’ என்றார். இல்லாவிட்டால் “எங்க நா பாடறதை அப்படியே திரும்பப் பாடு பார்க்கலாம்”—

“வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்... அடி
மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்;
பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்—எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்—”

என்று உணர்ச்சிவயப்பட்டுப் பாடுவார்.



மொத்தத்தில் தீவிர தேச பக்தரானார்.

எதற்கும் வாயைத் திறந்து ஒரு வார்த்தை சொன்னவளில்லை ஞானம். கணவன் ‘நில்’ என்றால் நின்றாள். ‘சரிதானே’ என்றால், சரி என்றாள். உங்கள் வழி என் வழியும் கூட என்றாள் செய்கையால்.

இதனால்தான் கோட்டை மாதிரி வீட்டையும் தனது ஒட்டியாணம், காசுமாலை, நாகொத்தையும் விற்று அர்ப்பணித்தபோதும் அவள் ‘ம்’ என்று முனகினவள் இல்லை, சத்தியமாய்.

பூமாவுக்கு நன்றாக நினைவிருந்தது. அந்த வருஷம் வீட்டை விற்று, வீட்டிலிருந்த பெரிய நகைகளை விற்று, தேசத்தின் விடுதலைக்காகத் தந்து, சுதந்திர வேள்வியில் முழுசாய் அப்பா குதித்துவிட்ட அந்த வருஷம் காந்திஜி சென்னைக்கு வந்திருந்தார்.

ஹிந்தி பிரசார சபாவில் அவரும், தொண்டர்களும் இறங்கி இருக்க, சுற்று வட்டாரமே கோயிலாக மாறிப் போயிருந்தது.

சேவாதளத்துப் பெண்கள் வெள்ளையில் பச்சை பார்டர் போட்ட புடவை, வெள்ளை ரவிக்கை கதரில் உடுத்தி, பெரிசாய் பாட்ஜ் அணிந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவரவர்க்கு இட்ட வேலைகளைச் செய்தார்கள். இடத்தைப் பெருக்கினார்கள். சமையலறையில் ஒத்தாசை செய்தார்கள். கும்பலாய் பஜனைப் பாடல்களைப் பாடினார்கள். வெளியூரிலிருந்து வருபவர்களுக்குக் கவனித்துச் சாப்பாடு போட்டார்கள். முண்டி அடிக்கும் கூட்டத்தாரைக் கட்டுப்படுத்தினார்கள்.

ஞானத்துக்குச் சமையல் கட்டில் உதவி பண்ணுகிற வேலை.

அம்மா மாதிரியே தனக்கும் சீருடை வேண்டும் என்று பூமா அழ, முதல் நாளே சுந்தரேசன் மகளுக்குப் பச்சைப் பாவாடையும் வெள்ளைச் சட்டையும் கதரில் தைத்து மாட்டி விட்டார்.

அப்பா பின்னாலேயே நாள் முழுவதும் பூமா ஓடுவாள். முக்கால்வாசிப் பேருக்குச் சுந்தரேசனை நன்கு தெரியு மாதலால் இவளை ஒன்றும் சொல்லமாட்டார்கள்.

ஒருநாள் அப்பா காந்திஜியின் குடிசைக்குள் ஏதோ வேலையாய் இருக்க, சேவாதளப் பெண்களோடு பூமா குடிசை வாசலில் நின்றிருந்தாள். மகாத்மாவைப் பார்க்க வருபவர்களின் அனுமதிச் சீட்டு சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். துடிப்புடன் நின்று யாராவது கூப்பிட்டால் ஏன் என்று கேட்க வேண்டும். காந்திஜி, பஜனை பந்தலுக்குச் சென்றால் கூடவே போகவேண்டும். இவைதான் அந்தப் பெண்களின் வேலைகள்.

சூரிய அஸ்தமனத்துக்குக் கொஞ்ச நேரம் இருக்கையில் ஆலோசனைக் கூட்டம் முடிந்து பாபுஜி குடிசைக்கு வெளியே வந்து நின்றார்.

அன்றைக்குத்தான் அத்தனை கிட்டத்திலிருந்து பூமா அவரைப் பார்த்தாள்.

தங்கம் மாதிரி, அது என்ன ஜொலிப்பு?

தகதகவென்று உடம்பில், அது என்ன அப்படியொரு தேஜஸ்!

வெள்ளை வேட்டி, இடுப்பில் தொங்கிய கடிகாரம். கம்பி ஃப்ரேம் போட்ட மூக்குக் கண்ணாடி.

சுற்றி நின்றவர்களைப் பார்த்து மலரச் சிரித்தபடி நடந்தவர், குனிந்து யார் கண்ணிலும் படாமல் கிடந்த காகிதக்



குப்பையை எடுத்து, கூடவே வந்த சுந்தரேசனிடம் கொடுத்தார். அப்புறம் அவரோடு ஈஷிக் கொண்டு அருகில் நின்ற பூமாவின் கன்னத்தைத் தட்டி விட்டு பஜனைப் பந்தலைப் பார்க்க நடந்து விட்டார்.

காந்திஜி விரல் அசைத்தால் ஓடிவர சேவாதள அங்கத்தினர்கள் சுற்றி நிற்க, யாரையும் ஏவாமல் தானே குனிந்து குப்பையை எடுத்துத் தந்துவிட்டு அவர் போனதை நினைக்கும் போதெல்லாம் பூமாவுக்கு அப்பா சொன்ன ஒரு சம்பவம் கூடவே மனசில் மின்னும்.

ஒரு சமயம் காந்திஜி ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தாராம். மூன்றாம் வகுப்பு. எக்கச்சக்க கூட்டம். பயணம் செய்தவர்களில் யாருக்கும் இவர் இன்னார் என்பது தெரியவில்லையாம்.

அருகில் அமர்ந்திருந்த ஒருவன் அவ்வப்போது இருமி விட்டுக் காலடியிலேயே துப்பிக் கொண்டதைக் கவனித்த மகாத்மா "ஐயா... தயவு செய்து ஜன்னல் வழியாக வெளியே துப்புங்கள். அதுதான் சுகாதாரமானது" என்றாராம். அந்த ஆள் அதற்கு "இது என்ன உனக்குச் சொந்தமான ரயில் பெட்டியா? அப்படித்தான் துப்புவேன், உனக்குப் பிடிக்க வில்லையென்றால் நீ தள்ளி உட்கார்ந்து கொள்" என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து துப்பவும், அடுத்த முறையிலிருந்து காந்திஜி தன் கையிலிருந்த பேப்பரைத் துண்டு துண்டாகக் கிழித்து, அவன் துப்பியதும், குனிந்து அந்தச் சளியைத் துடைத்து வெளியில் போட்டாராம்.

இதற்குள் அடுத்த ஜங்ஷன் வந்துவிட, காந்தியைத் தேடிக் கொண்டு தொண்டர்கள் வரவும்தான், அவர் யார் என்பது அனைவருக்கும் புரிந்ததாம்.

காந்திஜி வாழ்க்கையையும் இந்தச் சம்பவத்தையும் மகளிடம் கூறும் போதெல்லாம் "இப்படித்தானம்மா நாம ஒவ்வொருத்தரும் நான்ங்கற மமதை, நான் உயர்வு அவன்

தாழ்வுங்கற அகங்காரம் இல்லாம இருக்கவும், இரண்டாம் பேர் அறியாம பிறருக்கு உபகாரம் பண்ணவும், எளிமையா மகாத்மா மாதிரி வாழவும் கத்துக்கணும், பூமா. நீ பெரியவ ளானா நேர்மையா, உபகாரியா, சத்தியத்தை மறக்காதவளா வாழணும், செய்வியாம்மா?" என்றும் வேண்ட சுந்தரேசன் தவறியதே இல்லை...

சென்னைக்கு காந்திஜி வந்து போன அந்தச் சமயம் தான் இதுநாள் வரை கணகணவென்று கனன்று கொண்டி ருந்த வீட்டில் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

சாரதா ஒரு சாதாரண குடும்பத்துப் பெண். எட்டுக் குழந்தைகளில் ஒருவளாகப் பிறந்து வளர்ந்து, நல்ல சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தாலும், ஒருமுறை பார்த்தாலும் ஆளை அசர அடிக்கிற அழகு மட்டும் எப்படியோ அவளிடம் இருக்கவே செய்தது. தாழம்பூ நிறம், கறுப்புக் கண்கள், கோயில் சிலை மாதிரி மார்பகங்கள், சின்ன இடுப்பு, சாட்டையாய் கை கால்கள் என்று இருந்தவளை ஒரு கல்யாணத்தில் ராகவன் பார்த்து மயங்கி, அம்மாவிடம் இதுபற்றி பிரஸ்தாபிக்க; தெரிந்தவர் ஒருவரே இந்தப் பொருத்தம் பற்றிப் பேச்செடுக்க ஆரம்பித்த சூட்டிலேயே நல்ல வேளையாய் கல்யாணம் நடந்து விட்டது.

நல்ல வேளையா?

இல்லை, இல்லை...

சாரதா அந்த வீட்டில் காலடி வைத்தது நிச்சயமாக நல்ல வேளையே இல்லை.

சாரதாவுக்கு உடம்புதான் அழகாய் இருந்ததே தவிர, மனசு மஹா கோரம். இந்தக் கோடிக்கு அந்தக் கோடி வாய் தான் அழகு என்று கர்வம், குத்திக் குத்திப் பேசும் நாக்கு, வணங்கா முடி உடம்பு, அப்புறம் நெஞ்சு பூராவும் ஆசை... ஆசை... ஆசை..."



மாட்டுப் பெண் வந்த சில நாட்களிலேயே அவள் குணம் பிடிபட்டுப்போக, கூடுமான வரையில் அவள் வழிக்கே யாரும் போகாமல் ஞானம் சமாளித்து, எல்லாவற்றையும் மூடி மறைக்க முயற்சித்தாள்.

என்ன சமாளித்து என்ன?

என்ன மூடி மறைத்து என்ன?

இந்த வீட்டில் பணம் இருக்கிறது. மாமனார் வக்கீலாகக் கொழித்துக் கொட்டுகிறார், ராணி மாதிரி கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்து அதிகாரம் பண்ணலாம் என்று வந்த சாரதாவுக்கு, ஒரு வருஷத்துக்குள் சுந்தரேசன் தொழிலை விட்டதும் அல்லாமல், நாடு விடுதலை என்று அலைந்து இருக்கிறதையும் வாரி விட்டதும் கோபம் வராமல் வேறு என்ன வரும்?

அரிசியும், பருப்பும், எண்ணெயும், காபிப் பொடியும் பை நிறைய குறைந்த பணத்துக்குக் கிடைத்தது நிஜம்தான் என்றாலும், ஒருத்தன் சம்பளத்தில், பி.ஏ. படித்து விட்டு ஆபீஸ் ஒன்றில் சுமாரான உத்தியோகம் பார்த்து ராகவன் கொண்டு வந்த சில நூறு பணத்தில், ஐந்துபேர் குந்தி உட்கார்ந்து சாப்பிட வேண்டுமென்று ஆன பிறகு, நினைத்த படி வெளியில் வாசலில் போக வர, புதுசு புதுசாய் புடவை நகை வாங்க, இந்தச் சம்பளம் இடம் கொடாததால் ஏமாந்து போன சாரதா வெளிப்படையாகப் புலம்பவே தொடங்கி னாள்.

முதலில் தனக்குத்தானே முனகிக் கொண்டாள். அடுத்து கணவனிடம் புலம்பினாள். கொஞ்சம் தைரியம் வந்ததும் மாமனார் வீட்டில் இல்லாத சமயங்களில் மாமியாரிடம் விஷமாகக் கொட்ட ஆரம்பித்தாள்.

"என்ன இருக்கு இந்த எழவு எடுத்த வீட்டுலே! சோத்து பண்டாரம் மாதிரி அத்தனையும் உட்கார்ந்து கொட்டிக் கறதுக்குத்தானே வர்ற காசு சரியா இருக்கு?" என்றாள்.

"என் அழகப் பாத்து மயங்கி கோடீஸ்வரா வீட்டுப் பிள்ளையெல்லாம் நீ, நான்னு நின்னா. அத்தனையும் விட்டுவிட்டு கழனிப் பானைல கைய விட்ட மாதிரி, இங்க தள்ளி, என் வாழ்க்கைய எங்கப்பா நாசமாக்கிட்டாரே" என்றாள்.

"நாடு... நாசமாப் போற நாடு... இதுக்கு விடுதலை வந்தா என்ன, வராட்டா என்ன? நாம காசு இல்லாம திண்டா டிண்டாவது, இருக்கறதை யெல்லாம் இதுக்கு வழிச்சி அப்பணுமா?" என்றாள்.

இன்னும்... இன்னும்...

ஞானம் கொல்லையில் பத்து தேய்த்தால் அங்கு நின்று கத்தினாள், சமையல் கட்டில் இருந்தால் அங்கு உட்கார்ந்து அரற்றினாள்.

தன் வீட்டு மனிதர்களைக் கண்டு விட்டால் நீலிக் கண்ணீர் வடித்துக்கொண்டு 'ஹா ஹா' என்று அழுதாள்.

அன்றாடம் கட்டாயம் பெண்டாட்டி வேண்டும் என்கிற ரகத்தைச் சேர்ந்த ராகவன் ஒரு தரம், தப்பித் தவறி ஒரு தரம் கூட 'என்ன சாரதா... வீணா ஏன் பேசறே? சித்த சும்மா இரேன்' என்று அதட்டத் துணியாததால், ரொம்ப சீக்கிரமே சாரதாவின் கத்தலும், அழுகையும் விஸ்வரூபம் எடுத்ததில் ஆச்சர்யம்தான் என்ன?

# 3

அடுத்து வந்த வருஷங்களில் சுந்தரேசனின் சுதந்திர வெறி இன்னும் அதிகமாக, வீட்டுக்கு வருவது குறைந்து, இங்கே கூட்டம், அங்கே ரகசிய சந்திப்பு என்று வெளி யிலேயே தங்கலானார்.

நாட்டின் எந்த மூலையில் காங்கிரஸ் கூட்டம் நடந்தா லும் அதில் பங்கெடுத்துக் கொண்டார். மேடை மேடையாய் வெண்கலக் குரலில் பாரதியின் பாடல்களைப் பாடி, மக்களை உசுப்பினார். கலகக்காரன் புரட்சிக்காரன் என்ற பெயரை வாங்கிக்கொண்டு தடியடிபட்டார், சிறைக்குப் போனார்.

எப்போதாவது அதிசயமாய் வீட்டுக்கு வந்தாலும், மகளைக் கிட்டத்தில் இருத்தி, "எங்கே 'வந்தே மாதரம்'னு சொல்லு, 'தாயின் மணிக்கொடி பாரீர்' பாடு" என்று நாட்டைப் பற்றியே பேசினார்.

"எப்படியம்மா இருக்கிறாய்?"

"நன்றாகப் படிக்கிறாயா?" – என்று பெண்ணிடம் ஒரு வார்த்தை?

"என்ன ஞானம், உடம்புக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கிறாயா? மகன், மருமகள், பேரக் குழந்தைகள் சௌக்கியமா?" – என்று மனைவியிடம் ஒரு கேள்வி?

ம்ஹூம், இல்லை. ஒன்றும் இல்லை.

என் பாரத நாடே... உன் அடிமை விலங்குகள் என்று தெறிக்கும்?

என்று தணியும் இந்த சுதந்திர தாகம்— இதேதான்.

சிந்தனை, பேச்சு, செய்கை எல்லாவற்றையும் நாட்டுக்கு அர்ப்பணித்த பிறகு வீடாவது, சொந்த பந்தமாவது?

பட்ட வேதனை, அனுபவித்த அவஸ்தைகள், அத்தனைக்கும் பலனாய்ச் சுதந்திரம் கிடைத்த அன்று, சுந்தரேசன் குதித்த குதிதான் என்ன!

**"ஆடுவோமே பள்ளு பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் – என்று"**

கூத்தாடினார்; கண்ணீர் விட்டு, கை கூப்பிக் கதறினார். தெருத் தெருவாக, வீடு வீடாக ஓடி, கதவுகளைத் தட்டி 'சுதந்திரம் வாங்கி விட்டோம், கொண்டாடலாம் வாருங்கள்;' என்று எதிரில் தென்பட்ட நபரை எல்லாம் அழைத்துப் பரவசப்பட்டார்.

ஞானத்தின் கையில் கிடந்த ஒரு ஜதை வளையல்களில் ஒன்றை விற்று, சேரிக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார். தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்து, நீர்மோர்ப் பானகம் அளித்தார். நாலு தெரு கூடும் இடங்களில் மேடை போட்டு, ஒலி பெருக்கியில் ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் தொண்டர்களை,

**'விடுதலை விடுதலை விடுதலை**
**பறையருக்கும் இங்கு தீயர்**
**புலையருக்கும் விடுதலை**
**பரவரோடும் குறவருக்கும்,**
**மறவருக்கும் விடுதலை'–**

என்று பாட வைத்தார். அண்டம் கிடுகிடுக்க வந்தே மாதரம் என்று அத்தனை பேர்களையும் முழங்கிக் கொண்டே இருக்கச் சொன்னார்.

சுதந்திரம் பெற்றுவிட்ட மகிழ்ச்சியை நின்று நிதானித்து அனுபவிக்க முடியாதபடி தேசத் தந்தையைப் பொல்லாதவன் ஒருவன் பிரார்த்தனை மண்டபத்தில் சுட்டுக் கொன்றதும்,



சுந்தரேசன் அதிர்ந்துதான் போனார். என்ன செய்வோம் ஏது செய்வோம் என்று புரிபடாமல் பரிதவித்தவர், அழக்கூடத் தெரியாமல் பிரமை பிடித்த மாதிரி ஜடமாகிப் போனார்.

மகாத்மாவின் சாம்பல் குடம் சென்னைக்கு வந்து ராஜாஜி ஹாலில் மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருந்த நாட்கள், பூமாவால் ஆயுசுக்கும் மறக்க இயலாத நாட்கள்.

ஆயிரக் கணக்கில், லட்சக் கணக்கில் மக்கள் சமுத்திர மாய் ராஜாஜி ஹாலில் பொங்கி ஆர்ப்பரித்தார்கள்.

அழுது அழுது சிவந்த கண்கள், கலைந்த தலைமுடி, சோறு, தண்ணீர், குளியல் என்ற எந்த பிரக்ஞையும் இல்லாத உடம்பு, ராமா.... ராமா என்று அரற்றும் வாய்.

சுந்தரேசன் ராஜாஜி ஹாலில் சாம்பல் குடத்துக்குப் பக்கத்திலேயே பழி கிடந்தார்.

ஞானமும், பூமாவும் பஜனை கோஷ்டிகளில் உட்கார்ந்து 'ரகுபதி ராகவ ராஜாராம்' என்று திரும்பத் திரும்பப் பாடினார்கள்.

சாம்பலைக் கரைக்க அலங்கரித்த வண்டியில் குடத்தை வைத்து ஊர்வலமாக இழுத்துச் சென்றபோது தாங்க மாட்டாமல் 'என் தெய்வமே... என் கடவுளே, இந்த தேசத்துக் காக உயிர் நீத்த அண்ணலே...' என்று சுந்தரேசனும் இன்னும் பலப் பல தொண்டர்களும் முட்டிக் கொண்டு கதறினார்கள். மயங்கி விழுந்தார்கள்.

சாம்பல் குடத்தைத் தாங்கிச் சென்ற அலங்கார வண்டியில் இரண்டு பக்கமும் தேர் வடம் போல கயிறுகள், ஆண்கள் ஒரு புறமும், பெண்கள் ஒரு புறமும் வடத்தைப் பற்றி மெதுவாக வண்டியை இழுத்துச் சென்றபோது

பதிமூன்று வயசுகூட நிரம்பாத பூமாவும், அன்று ரொம்ப பெரிய மனுஷி போல கதர்ப் புடவை, சட்டை அணிந்து வடத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு நடந்தாள்.

மகாத்மாவின் மரணம் தன்னை வெகுவாய்ப் பாதிக்க, சில நாட்களுக்குப் பித்துப் பிடித்த மாதிரி மூலையோடு மூலையாய் அமர்ந்திருந்த சுந்தரேசன், ஒரு மாசம் ஆன பிறகு ஒருநாள் என்னவோ நினைத்துக்கொண்டு ஞானத்தை அழைத்தார்.

"மனசிலே கொஞ்சம்கூட நிம்மதி இல்லே ஞானம்... ஆனானப்பட்ட மனுஷரை பலி கொடுத்திட்டு, இப்படி ஒண்ணுக்கும் பிரயோஜனம் இல்லாமல் இருக்கிறது வேதனையா இருக்கு... திருச்செங்கோட்டிலே தென்னாட்டுத் தலைவர்களெல்லாம் ஒண்ணாக்கூடி என்னமோ தீர்மானம் பண்ணப்போறாளாம், பாச்சா சொல்றான். ராஜாஜியையும் காமராஜரையும் கிட்ட நின்னு பார்த்து நாலு வார்த்தை பேசினா தேவலைபோல இருக்கு, அது முடியாவிட்டாலும் தலைவர்களையெல்லாம் பார்த்தாலே, கொஞ்சம் ஆறுதலா இருக்குமோனு தோணறது. போயிட்டு வரட்டுமா ஞானம்?"–

என்றைக்குக் கணவனின் பேச்சுக்கு ஞானம் மறுப்பு சொல்லி இருக்கிறாள், இன்று சொல்ல?

சுந்தரேசனும், பாச்சா என்கிற இன்னொரு தொண்டரும் திருச்செங்கோட்டைப் பார்க்கப் போய்ச் சேர்ந்த எட்டாம்நாள், மதுரையிலிருந்து வந்த தந்தி ஞானத்தின் தலையில் பெரிசாய் கல்லைத் தூக்கிப் போட்டது.

"கொடைக்கானலுக்குப் போகும் வழியில் பஸ் விபத்துக் குள்ளானதில் சுந்தரேசன் ஸ்தலத்திலேயே மாண்டுவிட்டார், உடனே வரவும்."



தந்தியைப் படித்த ஞானத்திற்கு தலையும் புரியவில்லை; காலும் புரியவில்லை.

கொடைக்கானலுக்கா?

இவரா?

பஸ் விபத்தா?

மாண்டுவிட்டாரா?

ஆள் மாறாட்டமாக இருக்குமோ?

விவரம் எதுவும் புரியாமல் தவித்தவளுக்கு உதவும் தினுசில் விவரமாகச் செய்தி பிரசுரமாகியிருந்த அன்றைய தினசரியுடன் சுந்தரேசன் நண்பர்கள் அவளிடம் ஓடி வந்தார்கள்.

காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் சிலர் ஒன்று சேர்ந்து திருச்செங்கோடு கூட்டம் முடிந்த பிறகு, ஒரு பஸ்ஸை அமர்த்திக் கொண்டு மதுரை, பழனி, கொடைக்கானல் என்று கிளம்பியிருக்கின்றனர்.

"நா வரலைப்பா... எனக்கு மனசே சரியில்லே" என்று மறுத்த சுந்தரேசனை "வாங்க சார்... நாலு இடத்துக்குப் போனாதான் மனசு தேறும்... துக்கம் எங்களுக்கு மட்டு மில்லியா? குந்தி உக்காந்திட்டா ஆச்சா? தேசத்துலே கவனிக்க வேண்டிய வேலை எத்தனை இருக்கு?" என்று வற்புறுத்தி கூட்டிச் சென்றிருக்கின்றனர். பழனி முருகனைத் தரிசித்து விட்டு கொடைக்கானலுக்குப் போகும் வழியில் மழை பெய்ததன் காரணமாக பஸ் வழுக்கி, முப்பதடி பள்ளத்தில் செங்குத்தாக விழுந்து எரிந்ததில் ஒட்டு மொத்தமாக பஸ்ஸில் இருந்த நாற்பது தொண்டர்களும் ஸ்தலத்திலேயே மரண மடைந்து விட்டார்கள். உன்பாடு, என்பாடு என்று பள்ளத்தில் ஆட்கள் இறங்கி, முடிந்த வரைக்கும் உடல்களை மேலே கொண்டு வந்திருக்கிறார்களாம். அடையாளம் தெரியாதபடி

உடல்கள் சின்னா பின்னமடைந்திருந்ததாலும், மேற்கொண்டு அந்தச் சடலங்களை அவரவர் ஊருக்கு அனுப்புவது சாத்திய மில்லை என்பதாலும், அவற்றை மதுரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிருக்கிறார்களாம். உறவினர் வந்து அடை யாளம் காட்டினால் அதிகாரிகள் ஆவன செய்வார்களாம்.

என்ன, அடையாளம் தெரியாதபடி உடல்கள் சிதைந்தி ருக்கின்றனவா?

செங்குத்தாக விழுந்து, பஸ் தீ பிடித்துக்கொண்டு எரிந்ததில் பாதி பேர் கரிக் கட்டைகளாகி விட்டனரா?

கடவுளே!

'மனசு சரியில்லை ஞானம், தலைவர்களை கிட்ட நின்று பார்த்துவிட்டு வருகிறேன்' என்று சொல்லிப் போனவர், இனி திரும்பமாட்டாரா?

போய் விட்டாரா?

போதும் உங்கள் உறவு என்று போய்விட்டாரா?

சேதி அறிந்து தொண்டர்கள் சிலர் வீட்டில் குழுமி 'ஐயோ– எங்கய்யா போயிட்டாரா! இப்படி இடிமேல் இடியா சேதி வந்தா நாங்க என்ன பண்ணுவோங்க...' என்று கதற ஆரம்பித்தனர்.

ஞானம் கத்தவில்லை, குதிக்கவில்லை. சரம் சரமாய்க் கண்களில் நீர் வடிய ஒரு மணி நேரம்போல அப்படியே உட்கார்ந்திருந்தவள், கொஞ்சம் சமாளித்துக் கொண்டபின் உள் அறையில் இருந்த மகனிடம் வந்தாள்.

சின்னக் குரலில் "எப்ப புறப்படலாம் ராகவா?" என்றாள்.



ராகவன் பதில் ஏதும் சொல்லாமல் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்: அப்புறம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"எங்க...?"

"எங்கவா? என்னப்பா இப்படிக் கேக்கறே?"

"அதான் எல்லாம் ஆயாச்சே!"

"டே... ராகவா... என்னடா சொல்றே; அங்க அவர், உங்கப்பா அனாதை மாதிரி கிடக்கார்டா– நீ போய் தானேடா, ஆகிறதை கவனிக்கணும்?"

"ஆமா... பெரிய்ய... அப்பா... தன் கடமையைச் சரியா கவனிச்சுட்டார் பாரு. என் கடமையைக் கவனிக்க நா ஓடறத்துக்கு..."

என்ன சொல்கிறான் இவன்?

அப்பாவின்மேல் உள்ள கோபத்தை வெளியிட இதுவா சமயம்!

உடனே புறப்படாமல், தர்க்கம் பண்ண இதுவா நேரம்!

"சும்மா தொண தொணங்காதேம்மா, இப்ப அங்கு போய் என்ன ஆகப்போறது? அதுதான் பேப்பர்ல விளக்கமா போட்டுட்டாளே, பஸ் எரிஞ்சு போனதுலே எல்லாம் கரித்துண்டங்களா இருக்குனு– பிணமெல்லாம் சின்னாபின்ன மடைஞ்சு போயிட்டதாலே ஒண்ணுகூட உருப்படியா இல்லேனு. நா போனா மட்டும் அப்பாவைக் கண்டுபிடிச்சு, முழுசாக்கிடப் போறேனாக்கும்..."

"ரா... ராகவா இப்படித் துக்கிரித்தனமா பேசறது உனக்கே நன்னா இருக்காடா...? உன்னைக் கெஞ்சி கேக்கறேண்டா,

விதண்டாவாதம் பண்ணாம கிளம்பு... பிள்ளை நீ போய் உன் கையால அவருக்குக் கொள்ளி போடறது தானேடா தர்மம்... ராகவா..."

இப்போது சாரதா வாயைத் திறந்தாள்.

"கொள்ளி— மஹாப் பெரிய்ய கொள்ளி— இவர் போய் போடாட்டா, அந்த உடம்பு வேகாதாக்கும்— இல்லை... இவர் போகப் போறதில்லே... அப்புறம்?"—

ஒருமணி நேரமாய் கணவனும் மனைவியும், அறைக்குள் குசுகுசுத்தது இந்த முடிவு எடுக்கத்தானா?

அப்பா, அப்பா என்று பறந்துகொண்டு, தான் ஆடாவிட்டாலும் சதை ஆடும் என்கிற தினுசில் ராகவன் கிளம்பிவிடக்கூடாது என்று முன் ஏற்பாடாய், சாரதா சரியாய் ஏற்றிவிட்டாளா?

அதுதான் சாவி கொடுத்த மாதிரி திரும்பத் திரும்ப சொன்னதையே சொல்கிறானா?

வெகு வெகு என்று எழுந்த கோபத்தை ஞானம் கஷ்டப்பட்டு அடக்கினாள்.

இல்லை, இப்போது கோபம் கூடாது; ஆத்திரம் கூடாது; பக்குவமாய்ப் பேசி பிள்ளையைக் கொள்ளிபோடக் கிளப்புவது இப்போது முக்கியம். வாசலில் கூடி இருக்கும் தொண்டர்களின் முன்பு குடும்பச் சண்டையை வெளிப் படுத்துவது அநாகரிகம்...

ஞானம் குரலை இன்னும் தழைய விட்டாள்.

"அவர்மேல உனக்கு ஆயிரம் கோபம் இருக்கலாண்டா. ஆனா, அதை இப்பக் காட்டறது நியாயமா ராகவா?... உடனே



நாம புறப்பட்டுப் போனாதான் முகமுழியாவது நமக்குக் கிடைக்கும்டா... அவர் உன்னைப் பெத்தவர்டா... போய் கொள்ளி போட்டு அவரை கரை ஏத்தற வழியைப் பாருடா... டேய் ராகவா?"

வெளியில் காத்திருந்தவர்களுக்குக் கேட்காதபடி பேசிய ஞானம், இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டாள். பிள்ளையிடம் சென்று குனிந்து, கண்களில் நீர் பெருக, "உடனே கிளம்பிப்போய் உன்னைப் பெத்தவர் மானத்தைக் காப்பாத்து ராகவா. நாலு பேர் மத்தியிலே அவரை கைவிட்டுடாதப்பா... பிள்ளையா லட்சணமா செய்ய வேண்டியதைச் செஞ்சுடு ராகவா..." என்று கெஞ்சினாள்.

ராகவன் பதில் ஏதும் சொல்லாமல் மனைவியை நிமிர்ந்து 'என்னடீ சொல்றே?' என்று பார்க்க, அவள் முறைத்தாள்.

"நீங்க என்ன கெஞ்சினாலும் இவர் இப்ப புறப்படப் போறதில்லே. தேசம் தேசம்னு அலைஞ்சு, வீட்டை கவனிக்கத் துப்பு இல்லாம திரிஞ்சவருக்கு, சாவுல மட்டும் திடீர்னு பிள்ளை வேண்டியிருக்காக்கும். அத்தனாம் பெரிய வீட்டை. நிலத்தை, கல்லு கல்லா நகையை வித்து யாருக்குக் கொடுத்தார்? எங்களுக்கா? இந்தப் பாழாப் போன தேசத்துக்குத்தானே? இருக்கிற பையன் ஒருவன். அவனுக்கு நாலு காசு சேர்த்து வைப்போங்கற ஆதங்கம் இல்லாம, அத்தனையும் துடைச்சி எடுத்து அந்த காங்கிரஸ் காரா காலிலேதானே கொட்டினார். அதனாலே அந்தப் பெரிய மனுஷாளே, அவருக்குக் கொள்ளி போடட்டும்... எந்த தேசத்தை கட்டிண்டு மாரடிச்சாரோ அந்த தேசத்துலே இவருக்குக் கொள்ளி போட ஒருத்தர் கூடவாக் கிடைக்கலை?...

இல்லை... இப்படி அனாதைப் பொணமா கிடந்து அவர் போறதுதான் இத்தனை வருஷமா எங்க வயத்தெரிச்சலை கொட்டிண்டதுக்குச் சரியான தண்டனை. இப்ப இவர் இங்கே இருந்து அசையப் போறதில்லை... நா சொல்லறதைச் சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்... வாசல்லே காத்திண்டு இருக்கிற அந்த வேலைவெட்டி அத்த கும்பல்கிட்டச் சொல்ல வேண்டியதைச் சொல்லி நீங்க அனுப்பறேளா? இல்ல நா போய் அத்தனை பேரையும் அடிச்சு விரட்டிட்டு வரட்டுமா?"

அப்பா... என்ன பேச்சு பேசினாள், அன்றைக்குத்தான் அந்த சாரதா?

லங்கிணி மாதிரி இடுப்பில் கை வைத்து நின்றுகொண்டு, விழிகளை உருட்டி உருட்டி என்னமாய் வார்த்தைகளைக் கொட்டினாள்!

ராட்சஸி... பிரும்ம ராட்சஸி.

இனி இந்தப் பிள்ளை, பெண்டாட்டியை எதிர்த்துக்கொண்டு சத்தியமாய் கிளம்பாது என்பது புரிந்ததும், மேற்கொண்டு என்ன செய்வது என்று ஞானம் யோசித்தாள்.

சில நிமிஷங்களில் தான் செய்ய வேண்டியது என்ன என்பது புரிந்துபோக முந்தின வருஷம் சுதந்திரம் கிடைத்த அன்று கணவரிடம் உருவிக் கொடுத்த வளையலின் ஜதையாக உள்ளே பெட்டியில் இருந்த ஒற்றை வளையலை எடுத்து வாசலில் நின்ற கட்சித் தொண்டர் ஒருவரிடம் கொடுத்து உடனே விற்றுக் காசாக்கி வரும்படி சொன்னாள்.

ராகவனின் புறப்பாடுக்காகக் காத்திருந்த நண்பர்களிடம் பொதுவாக "அவன் புறப்படலை... நா வரேன்... என் கூட யாராவது வரணும்னா வாங்கோ" என்று சொன்னபோது, பையில் அம்மாவுக்கும் தனக்கும் தலைக்கு ஒரு புடவை, ரவிக்கை, துண்டைத் திணித்துக்கொண்டு முதலில் கிளம்பியது பூமாதான்.

# 4

சுந்தரேசன் இருந்த வரைக்கும் அவருடன் ரொம்ப ஆப்த நண்பர்களாக இருந்த இரண்டு கட்சித் தொண்டர்கள் உடன்வர, பூமாவுடன் ஞானம் மதுரைக்கு ரயில் ஏறினாள்.

தங்கள் கைக் காசைப் போட்டு நண்பர்கள் டிக்கெட் எடுக்க முனைந்தபோது அதை ஞானம் தடுத்து, வளை விற்று வந்த காசிலிருந்து தேவையானதை எடுத்துக் கொடுத்தாள். அவர்கள் 'எதுக்கும்மா?' என்று தயங்கிய கணத்தில் 'அவர் எனக்கு ஒரு குறையும் வைக்கலை... தயவு செஞ்சி இதை எடுத்துக்கோங்கோ' என்று மட்டும் சொன்னாள்.

ரயில் பயணத்தின்போது ஞானம் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. ஜன்னலுக்கு அருகில் பூமாவை உட்கார்த்திவிட்டுப் பக்கத்தில் அமர்ந்து கண்களை மூடி மாலையாய் ஜலம் வடித்துக்கொண்டே வந்தாள். தாங்க மாட்டாமல் விசும்பல்கள் வெடித்து எழும்போது மட்டும் பூமா, அம்மாவின் கையை லேசாகச் சமாதானம் சொல்கிற பாவனையில் அமுக்குவாள். மற்றபடி ஞானமும் இவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. இவளும் அம்மா அம்மா என்று அரற்றவில்லை.

அம்மாவின் அழுகையை, வேதனையை, நன்றாக பூமாவால் உணர முடிந்தது.

காலமெல்லாம் கல் தூணாகத் துணைவன் இருப்பான்; அவன் மேல் சாய்ந்துகொண்டே வாழ்க்கையைக் கடத்தி விடலாம் என்று எண்ணியது கனவானது ஒரு பக்கம். தன் இரத்தம், சதையில் உதித்தவன் என்பதால், தாலி கட்டியவள்

என்ன சொன்னாலும் பெற்றவர்களை விட்டுக் கொடுக்க மாட்டான் என்று நம்பியது பொய்யானது ஒரு பக்கம்.

அம்மா அன்று எதற்கு அதிகம் வேதனைப் பட்டாள்

புருஷன் போய் விட்டதற்காகவா, இல்லை பிள்ளை மன குதிரையானதற்கா?

இல்லை. இரண்டுக்குமாகத்தானா?

மதுரையை அடைந்து ஒரு குதிரை வண்டி பேசி கொண்டு ஆஸ்பத்திரியை அடைந்தார்கள்.

சுதந்திர வீரர் சுந்தரேசனின் மனைவி என்பதா டாக்டர்களும், மற்றவர்களும் மரியாதையுடன் பிணங்களை வைத்திருந்த இடத்திற்கு இட்டுச் சென்று காண்பித்தார்கள்

மூக்கைப் பொத்திக்கொண்டு ஆளை ஓட வைக்கு நாற்றம்.

வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்த சடலங்களில் பாதிக்கு கை, கால், ஏன் முகமே இல்லை... பல உடல்க கரிக் கட்டைகளாய் மாறி, அங்கு அடையாளம் எதுவு இல்லாமல் இருந்தன.

ஞானம் மிகவும் பிரயத்தனப்பட்டு தன்னை அடக்கி கொண்டு ஒவ்வொரு சடலத்தையும் குனிந்து பார்த்தா ஊன்றித் தேடினாள்.

ஏதாவது அடையாளம்?

ஏதாவது?... ஏதாவது?

கழுத்து மச்சம், முன் கை தழும்பு, பத்து நாட்களுக் முன் காலில் வென்னீர் தவலை விழுந்ததால் நீலம் பாரித்து போன கட்டைவிரல் நகங்கள் என்று ஏதாவது புரிபடாதா



மஹூம் இல்லை.

கடுகத்தனைகூட எதுவும் தெரியாதபடி சடலங்கள் க்ஷீணித்திருந்தன.

எப்படியாவது கணவனை இனம் கண்டு கொள்வோம் என்று ஆசைப்பட்டது, இல்லை என்று ஆகிப்போக ஏமாற்றத்துடன் ஞானம் நிமிர்ந்தாள்.

கிசுகிசுத்த குரலில் 'ஐயோ... யாருன்னு எனக்குப் புரியலையே... தொட்டுத் தாலி கட்டி, இருபத்தஞ்சு வருஷம் வாழ்ந்த புருஷனை அடையாளம் காட்டத் தெரியாத பாவி ஆயிட்டேனே...' என்று பேசி பதைத்தவள் அது நாழிகை அடக்கி வைத்திருந்த துக்கம் கீறிக் கொண்டு வெளிப்பட கண்கள் இருண்டு, கால்கள் துணியாய் வெலவெலக்க அங்கேயே அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

அன்று மாலை அடையாளம் காட்டவோ, இன்னார் இவர் என்று குறிப்பிட்டுச் சொல்லவோ இயலாமல் போய்விட்ட அத்தனை சடலங்களின் பொறுப்பையும் கட்சித் தொண்டர்கள் ஏற்றுக் கொண்டனர்.

வேன் ஒன்றை அலங்கரித்து அதில் வெள்ளைத் துணியால் மூட்டையாய்க் கட்டப்பட்ட பிணங்களை ஏற்றி வைகைக் கரையில் பொதுமக்கள் சாட்சியாக நிற்க, அத்தனை சடலங்களையும் ஒரே சிதையில் அடுக்கி ஒன்றாக எரித்தார்கள்.

வைகையில் முங்கிக் குளித்தபோதும், மீண்டும் ரயிலில் பிரயாணித்து ஊர் வந்து சேர்ந்தபோதும்கூட வாயைத் திறந்து ஞானம் யாரிடமும் எதுவும் பேசவில்லை.

இரண்டு மூன்று நாட்களுக்கு யார் யாரோ வந்தார்கள். துக்கம் விசாரித்தார்கள். இரங்கல் கூட்டம் போட்டுப் பேசப் போவதாகச் சொன்னார்கள். சுந்தரேசன் மாதிரி ஒருத்தர்

பிறப்பது அபூர்வம். இப்படி அகாலமாக இறந்து விட்டவரின் குடும்பத்துக்குக் கணிசமாய் தொகை கொடுத்து உதவ அரசாங்கத்தை வேண்டப் போவதாகச் சொன்னார்கள். இன்னும் என்னென்னவோ சொன்னார்கள். அப்புறம் மெள்ள மெள்ள ஒருவர் பின் ஒருவராக அடங்கிப் போனார்கள்.

எட்டாம் நாள் காலை ஞானம் கூடத்தில் இருந்த பிள்ளையிடம் சென்றாள்.

"நாளைக்கு ஒன்பது – ஞாபகம் இருக்கு இல்லியா ராகவா?"

"அதுக்கென்ன இப்போ?"

"கொள்ளி போடத்தான் நீ வரலை. இப்ப முறையா காரியமாவது செய்ய உத்தேசம் இருக்கா, இல்லியா?"

ராகவன் அவசரமாய் மனைவியை ஏறிட, அவள் "இல்லேனு சொன்னா என்ன பண்ணறதா உங்களுக்கு உத்தேசம்?" என்றாள்.

"புத்ரன்னு ஒருத்தன் இருக்கறப்போ? பெத்தவரோட ஆத்மாவை நிம்மதி இல்லாம திரியவிடறது மகா பாவம்னு நம்ப சாஸ்திரம் சொல்றது சாரதா. உனக்கும் அவனுக்கும் அவர் மேல வேணா கோவம் இருக்கலாம்... அதை குறைச்சுக்கோங்கோனு கேட்க நா வரலை... சம்பிரதாயத்தை விடறது தர்மமானுதான் கேட்க வரேன்..."

"பெரிய்ய சாஸ்திரம், சம்பிரதாயம்... செத்தவருக்கு அதுலெல்லாம் ரொம்ப நம்பிக்கை இருந்த மாதிரி, இது என்ன விதண்டாவாதம்! பிராமணரா பொறந்திட்டு வேற சாதிக்காரரை பக்கத்துலே உக்கார வைச்சி சாப்பாடு போட்டாரே, அது மட்டும் ரொம்ப சரியாக்கும்? தனக்கு வேணும்னா சாஸ்திரம் அது, இதுனு சொல்லணும் இல்லாட்டா வேண்டாம். அப்படித்தானே?"



"எதுக்கும் எதுக்கும் நீ முடிச்சுப் போடறே சாரதா? ஆன்மாவைப் பத்தி நம்ப வேதத்துலேயே சொல்லி இருக்கு... அதைத் திருப்தி பண்ணா, சந்ததிக்கும் தலை முறைக்கும் நல்லதுனு சொல்லி இருக்கு. வேதத்துலே சொல்லி இருக்கிறதை செஞ்சு, குடும்பத்தை நல்ல வழிலே நடத்திண்டு போகணுமேங்கற கவலைலே நா சொல்றேன். நீ என்னடான்னா கேவலம் மனுஷன் உண்டாக்கின ஜாதி சண்டைய பிடிச்சு இழுத்து, இதோட கலந்து தர்க்கம் பண்ணறே..."

"ஆஹா... ரொம்ப அக்கறைதான் போங்கோ... குடும்பம், சந்ததி, நன்னா இருக்கணுங்கற எண்ணம் உங்க ஆத்துக்காரருக்கோ, உங்களுக்கோ லவலேசம் உண்டாகி இருந்திருந்தா சொத்துப் பத்து பூரா எவனுக்கோ தூக்கிக் கொடுத்திட்டு பெத்த பிள்ளையை அம்போனு விடுவேளா? பேச்சைப் பாரு பேச்சை! அமெரிக்காலே செத்து போறவாளுக்கு யார் காரியம் பண்றா. இல்ல தெவசம் பண்றா? அங்க மனுஷா நம்பளைவிட கொடிகட்டிப் பறந்துண்டு சௌக்கியமா வாழலியா? சும்மா அப்பா, பிள்ளை, வேதம், பரம்பரைனு வேஷம் போட்டுண்டு வெத்துப் பேச்சு பேசி காரியத்தைச் சாதிச்சுக்கப் பார்க்காதீங்கோ.... அப்புறம் நா பொல்லாதவளாயிடுவேன்... ஆமா...!"

இனியும் இவளோடு பேசிப் புண்ணியமில்லை என்று தோன்றினாலும் ஞானம் அரை நிமிஷம் அப்படியே நின்று "என்ன ராகவா?" என்று மகனிடம் மெதுவாக வினவவும்–

இவன் சட்டென்று எழுந்தான்.

"அதான் அவ பளிச்சுனு சொல்லிட்டாளே, அப்புறமும், என்ன ராகவா, என்ன? என்ன ராகவா?"–

"அப்போ? நிச்சயமா உங்கப்பாவுக்கு எந்தக் காரியமும் நீ பண்ணப் போறதில்லே?"–

"இல்லே..."

"சரி... நீ சொல்லறதைச் சொல்லிட்டே. இப்போ நா சொல்லறதைக் கேட்டுக்கோ— பெத்தவரையே வேண்டாம்னு நீ ஒதுக்கினப்புறம், எனக்கும் இனிமே இங்கே இடம் இல்லை. இந்த நிமிஷத்திலேந்து அப்பாகூட அம்மாவும், தங்கையும் செத்துப் போயிட்டதாக நினைச்சுக்கோ..."

நறுக்காய் அழுத்தமான குரலில் நாலு வார்த்தைகள் பேசின ஞானம் உள்ளே போனாள். இரண்டு பைகளில் தனக்கும் பெண்ணுக்கும் தேவையான துணிமணிகளை எடுத்துக் கொண்டாள். அலமாரி ட்ராயரில் பத்திரப் படுத்தி வைத்திருந்த ஓரிரு சில்லறை நகைகள், சின்னச் சின்ன வெள்ளிப் பாத்திரங்களையும் எடுத்துக்கொண்டு மகளுடன் கிளம்பி விட்டாள்.

சேவாதளத்தைச் சார்ந்த பெண்மணி ஒருவர் உடனடியாகத் தங்க இடம் கொடுக்க, ஒரு வாரம்போல அங்கே இருந்துகொண்டு, சின்னதாய், ரொம்பச் சின்னதாய், ஒரு போர்ஷனை, வாடகைக்குப் பேசினபின் அதில் மகளுடன் குடிபுகுந்தாள்.

கையோடு கொண்டு வந்திருந்த வெள்ளிப் பாத்திரங்களை விற்று, வீட்டுக்குத் தேவையான, மிகவும் அத்யாவசியமான சாமான்களை - நாலு அலுமினிய குண்டான்கள், இரண்டு டம்ளர், தட்டு, மளிகை இத்யாதி சாமான்களை வாங்கி உடனடியாக அப்பளாம், வடகம் இட்டுத் தெரிந்தவர்களுக்கு விற்கத் தொடங்கினாள். ராட்டை ஒன்றைச் சேவாதளத்திலிருந்து எடுத்துவந்து விடிய விடிய நூல் நூற்றாள். வீட்டிலேயே சுத்தமான மஞ்சள் குங்குமத்தைச் செய்தாள். கறுப்பு சாந்து, கண் மை கூட்டி, கேட்டவர்களுக்குக் கொடுத்தாள்.

எப்படியோ, இல்லை என்று சொல்லாமல், முதல் மாசத்திலிருந்தே அரை வயிறுச் சாப்பாட்டையாவது மகளும்,



தானும் சாப்பிட முடியும் என்று தைரியம் மனசில் பூத்துவிட, தொடர்ந்து படிக்க பூமாவைப் பள்ளிக்கும் அனுப்பவே செய்தாள்.

அப்போது பூமாவுக்குச் சரியாகப் பதினாலு வயசு.

விடிகாலையில் எழுந்து அம்மாவுக்கு அப்பள மாவு இடிக்க, வடகம் கூழ் கிளற உதவி விட்டு, குளித்து, படித்து, எட்டுக்கெல்லாம் கிளம்பி விடுவாள்.

யார் யாருக்கு அப்பளாம், வடாம் தேவையோ அவற்றை ஒரு பையில் போட்டு அந்தந்த வீடுகளில் கொடுத்து விட்டுச் சரியாக ஒன்பதரை ஆகும்போது வீட்டுக்குத் திரும்பி வந்து, அப்பளப் பையை வைத்து விட்டு, அம்மா தயாராய் வைத்திருக்கும் சாப்பாட்டைச் சாப்பிட்டால், பள்ளிக்கு ஓடத்தான் நேரம் சரியாக இருக்கும்.

மாலையில் வீடு திரும்பினதும் திரும்ப அம்மாவுக்கு உதவி பண்ண வந்து விடுவாள்.

அப்பா இறந்துபோய் வருஷம் ஒன்றாகவில்லை என்பதால், அம்மா வீட்டை விட்டு எங்கும் படி இறங்க மாட்டாள். கடை கண்ணிக்குப் போவது, பணம் வாங்க வேண்டிய இடங்களுக்குப் போவது, இதர வெளி வேலைகளைக் கவனிப்பது.... எல்லாம் பூமாதான்.

சில சமயங்களில் அம்மா படும் பாட்டைக் காணும்போது "நா படிச்சு என்னம்மா பண்ணப் போறேன்? பேசாம உனக்கு ஒத்தாசையா வீட்டுலேயே இருந்திடறேம்மா" என்று பூமா சொன்னதுண்டுதான்.

அப்போதெல்லாம் மகளை இழுத்து, கிட்டத்தில் இருத்திக் கொள்வாள் ஞானம்.

"இப்ப நமக்கு என்ன கஷ்டம் வந்துடுத்துனு நீ இந்த பேச்சுப் பேசறே? ம்? நா ஒண்ணும் நீ நினைக்கிற மாதிரி

சிரமப் படலியே! மத்தியான வேளைல போது போகா
அவதிப் படாம, சுறுசுறுப்பா இருக்கேன் — இதனால யா
கிட்டயும் கை ஏந்தி நிக்காத அளவுக்கு நமக்குக் கா
கிடைக்கிறது. இதை நினைச்சு சந்தோஷப் படறதை விட்டுட்
யாராவது வருத்தப்படுவாளா... அசடு... அசடு..." என்பாள்

"உன்னை கலெக்டர் படிப்புக்கா நா படிக்க வைக்கிறேன்
சிரமம் அது, இதுங்க! சாதாரண ஸ்கூல் படிப்பு
தானேம்மா? பொம்மனாடிக்குப் படிப்பு அவசியம்னு
உங்கப்பா சொல்வாரே. மறந்துட்டியா பூமா? வேண்டாத
சமாசாரத்துக்காகக் கவலைப்படறதை நிறுத்திட்டுப் படிப்புலே
கவனத்தைச் செலுத்து. என்ன?" —என்பாள்.

முகவாயைத் தடவி, முன்னுச்சி மயிரைக் கோதி
சொல்ல வேண்டியதைப் பக்குவமாய், புரியும்படி சொல்வாள்

அம்மா கொடுத்த இந்தத் தைரியத்தில்தான், இதத்தில்
தான், வீடு வீடாகச் சென்று அப்பளம் விற்பதோ, எண்ணி
நாலே நாலு பாவாடை தாவணிகளைத் துவைத்து மாற்றி
மாற்றிக் கட்டுவதோ, சங்கீதக் கச்சேரி, பீச், நாடகம் என்று
எங்குமே போகாததோ, குறையாகத் தெரியாமல் மற்ற
சகவயசுப் பெண்களைப்போல காதல், குடும்பம், மண்ணாங்
கட்டி என்று எந்தக் கனவுகளுக்கும் மனசில் இடம் கொடாமல்
தனக்கென்று ஒரு நிம்மதியான உலகத்தை சிருஷ்டி செய்து
கொண்டு பூமாவால் எஸ்.எஸ்.எல்.சி. ஐ முடிக்க முடிந்தது

# 5

வெள்ளை வெயில் கண்களைக் கூச வைத்தது.

மணி என்ன?

பதினொன்று ஆகி இருக்குமா?

அதற்குள் என்னமாய்க் கொளுத்துகிறது!

சேவாதள அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பூமா சாலை ஓரமாய் நின்ற மரங்களின் அடர்த்தியான நிழல்களை ஒட்டி மெதுவாய் நடந்தாள்.

காலை ஆறு மணிக்கு வெறும் காபி குடித்த வயிறு 'கொரீர்' என்று குரல் கொடுத்தது.

எட்டுக்குப் புறப்பட்டவளை ஞானம் 'ஒரு வாய் சாப்டுட்டுப் போறயா?' என்ற போது 'வேண்டாம்மா, ரொம்ப வேலை இல்ல.... சுருக்க வந்துடுவேன்' என்று பதில் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டாள்.

தொட்டுத் தொட்டு நேரம் இழுத்துக் கொண்டு போனதில் பதினொன்று அடித்துவிட்டது. வீட்டைப் பார்க்கக் கிளம்ப...

சாலையில் அத்தனை நடமாட்டம் இல்லை.

வலப்புறம் இருந்த பள்ளிக்கூடம் கோடை விடு முறைக்கு மூடப்பட்டு விட்டதால், வழக்கமாக நண்டும் சிண்டுமாய் ஜகஜகவென்று காணப்படும் வாசல், வெறிச் சோடிக் கிடந்தது.

கேட்டின் வலப்பக்கத்தில் ஒரு குச்சி ஐஸ்காரர்... இந்தப் பக்கம் மாங்காய், கொடுக்காப்புளிகளைப் பரத்திக்கொண்டு பிள்ளைக்குப் பேன் பார்த்தபடி ஒரு பெண்மணி.

இருவருக்குமே காலையிலிருந்து சொல்லும்படி வியாபாரம் ஆகவில்லை என்பதைப் பூமாவால் ஊகிக்க முடிந்தது.

ஐஸ்காரர் பிளாஸ்குகளுக்கு அருகில் துண்டை விரித்துப் படுத்திருந்தார்.

பரத்தப்பட்ட கோணி. அதில் நவ்வாலாய் கூறு கட்டப்பட்ட கொடுக்காப்புளிக் காய்கள். ஒரு ஓரமாய் மாங்காய் பத்தைகள், பெரிசு பெரிசாய் பல்லைக் காட்டிக்கொண்டு சிரிக்கிற மாதிரி... பக்கத்திலேயே தொட்டுக் கொள்ள உப்பும், காரப் பொடியும்...

பள்ளிக்கூடம் இருந்தால் பசங்கள் இவர்களைச் சூழ்ந்து கொண்டு காலணா, அரையணாவை நீட்டி "எனக்கு ரோஸ் ஐஸ் குடு. எனக்கு மாங்காய் பத்தை..." என்று கீச்சு கீச்சென்று குரல் எழுப்புவதை அந்த இடத்தைத் தாண்டும் போதெல்லாம் பூமா தப்பாமல் பார்த்திருக்கிறாள்.

மிட்டாய் ரோஸ் நிறத்தைக் கொண்ட ஐஸை சப்பித் தின்று யார் உதடுகளும், நாக்கும் அதிகமாகச் சிவப்பாகி இருக்கின்றன என்பதற்காக நாக்கை வெளியே துருத்தி, கீழ்க்கண்ணால் பார்த்துச் சந்தோஷிக்கும் குழந்தைகள்...

பள்ளிக் கூடத்தை அடுத்து விளையாட்டு மைதானம்... அதைத் தாண்டி சின்னதாய் ஒரு மார்க்கெட்...

மாலை நாலுமணி ஆனால் பூந்தமல்லியிலிருந்து கூடையில், கை வண்டிகளில் காய்கறிகளைக் கொண்டு வந்து விற்கும் ஈவ்னிங் மார்க்கெட்... பகலெல்லாம் தூங்கி விட்டு மூன்று மூன்றரைக்கு விழித்துக் கொள்ளத் துவங்கி, ஐந்துக்குள் களை கட்டிவிடும் இடம். கீரையும், வெண்டை



கத்தரிக்காயும் புதுசாய், பளபளவென்று 'என்னைப் பாரேன், என்னை வாங்கேன்' என்று ஆசையைத் தூண்டும் இடம்...

காலியாய்க் கிடந்த தட்டுப் பந்தல் கடைகளில் கள்ளிப் பெட்டிகளைக் கவிழ்த்துப் போட்டு ஓரிரண்டு ஆண்கள் உறங்கிக் கொண்டிருக்க நாலாவது கடை வாசலில் மட்டும் கொஞ்சம் சலசலப்பு...

பெரிய பலாப்பழம் ஒன்றை இரண்டாகப் பிளந்து எண்ணெய் தடவின கத்தியால் சுளைகளைப் பக்குவமாக ஒரு பெண் எடுத்துக் கொண்டிருந்தாள். மஞ்சளாய் சதைப் பற்றுடன் இருந்த சுளைகளை வாங்க, பக்கத்தில் இரண்டு வாடிக்கையாளர்கள்.

பூமா அந்த இடத்தை நெருங்கும்போது கறுப்பு நிற ஆஸ்டின் கார் ஒன்று வேகமாய் அவர்களைத் தாண்டிப் போய்விட்டு, சட்டென்று ப்ரேக் போட்டு, ரிவர்ஸில் வந்து பலாப்பழக்காரிக்கு நேராக நின்றது.

"என்னம்மா, பழம் எப்படி?"

"அணாவுக்கு நாலு சொளைங்க..."

"என்னது! நாலா!... ஏ, அப்பா, என்ன இந்த விலை சொல்றே!... சரி... எட்டு கொடுப்பியா."

பலாப்பழக்காரி ஏற்கனவே ஏதோ கோபத்தில் இருந்திருக்க வேண்டும்... எரிச்சலுடன் இருந்தவளை அந்த பேரம் உசுப்பி விட்டிருக்க வேண்டும்... இல்லாவிட்டால் அத்தனை ஆத்திரம் ஏன்?

வெடுக்கென்று தலை நிமிர்த்தினவள் வண்டி ஓட்டியை முறைத்தாள்.

"இன்னாது! எட்டுச் சொளையா? உம் மாமியா வூட்டுலே கொடுப்பாங்க... போய் வாங்கிக்க... கேக்கறதைப் பாரு எட்டுச்

சொளை தர்றியானு, வாய் கூசாம?... வேகாத வெயில்லே கொத்தவால் சாவடிலேந்து பழத்தை அம்மாந்துட்டு கொடுத்து வாங்கி தூக்கிட்டு வந்து, யாவாரத்தைத் தொடங்கினா, கார்லே சம்முனு குந்திகினு எட்டு தர்றியானு நீ ஏன்யா கேக்கமாட்டே?... எட்டு, பத்துனு வாங்கி துட்டு சேத்து இன்னும் ரெண்டு கார் வாங்கிடுவே, கெட்டிக்காரன் தான், போ... போ..."

"இந்தாம்மா... நிறுத்து... நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே போனா என்ன அர்த்தம்? இஷ்டம் இருந்தா கொடு, இல்லைனா கட்டுப்படியாவாதுனு சொல்லு... அதவிட்டுட்டு அதிகப்படி பேச்சு எதுக்கு?"

தன் பங்குக்கு ஒரு கத்தல் போட்டுவிட்டு வண்டிக்காரர் சப்தத்துடன் காரைக் கிளப்பிக்கொண்டு போனார்.

நடந்து கொண்டே இருந்த பூமாவுக்குச் சிரிப்பு வந்தது.

'இப்படிப் பேரம் பண்ணி வாங்கியே இன்னும் இரண்டு வண்டி வாங்கிடுவே' என்று பழக்காரி சொன்ன விதமும் கார் ஓட்டியவரின் முகம் போன போக்கும் கண்முன் நிற்க மீண்டும் சிரிப்பு எழுந்தது.

மார்க்கெட்டின் கடைசியில் கறுப்பு உருண்டைகளாய் கமர்க்கட் நிரப்பப்பட்ட மரத்தட்டு, ஒரு கம்பத்தில் சுற்றப்பட்ட ரோஸ் மிட்டாய் சகிதமாக பூம்பூம் மிட்டாய்க்காரர் எதிரில் வந்தார்.

பூமா பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஒரு சிறுமி வேகமாக ஓடி வந்து காலணாவை அவரிடம் நீட்டினாள். காசைப் பையில் போட்டு மரத்தட்டைக் கீழே வைத்தபின் கம்பத்திலிருந்த ரப்பர் மாதிரி மிட்டாயை இழுத்து, கொஞ்சம் கிள்ளி, இரண்டு கைகளாலும் உருட்டி, பெண்ணின் கையில் ரிஸ்ட் வாட்ச் கட்டிவிட அவள் சந்தோஷத்தோடு எதிர்ப் பக்கமாய் ஓடிப் போனாள்.



கமர்கட் தட்டை எடுத்துக்கொண்டு மிட்டாய்க்காரர் நிமிர்ந்த வேகத்தில் நாலு உருண்டைகள் கீழே, மண்தரையில் விழுந்து உருள, 'அட, சீ' என்று சலிப்போடு குனிந்து அவற்றைப் பொறுக்கி மண் இல்லாமல் ஊதி, தட்டில் வைத்த பின் வியர்வை பெருகிய முகத்தையும், கையையும் வேட்டியிலேயே அவர் துடைப்பதைக் கவனித்தபடி நடந்த பூமாவுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

இந்த அழுக்குக் கையால்தானே அடுத்து வரும் குழந்தைக்கு மிட்டாய் எடுத்துக் கொடுப்பார்?

கீழே விழுந்த கமர்க்கட்டைத்தானே அடுத்து வரும் குழந்தை கையில் கொடுப்பார்?

தத்....

இந்த மாதிரி சுகாதாரம் இல்லாமல் தாங்களும் இருந்து கொண்டு, மற்றவர்களையும் தங்கள் செய்கையால் பாதிக்கும் பழக்கத்தை நம் மக்கள் என்று விடப் போகிறார்கள்?

சுத்தமாக இருந்தால் பாதி வியாதிகளை அடியோடு அடக்கி அழித்து விடலாம் என்பது இந்த மனிதர்களுக்கு ஏன் புரிவதில்லை?

தனக்காகவும் தெரியாது... சொன்னாலும் புரியாது....

எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்து விட்ட இந்த ஆறு மாசமாய் சேவாதளத்திலிருந்து குழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகப் போய் சுகாதாரத்தைப் பற்றி எவ்வளவோ சொல்லியாகி விட்டது. ஹூம்.... என்ன ப்ரயோஜனம்? யாராவது காதில் வாங்கிக் கொண்டால்தானே?

மக்களுடைய அறியாமை மனசில் வருத்தத்தை உண்டாக்க, அதை உணர்ந்துகொண்டே கால்களை அகலமாக வைத்து பூமா நடக்க முற்பட்டபோது வலது கால் செருப்பில் ஆணி நறுக்கென்று குத்தித் தொந்தரவு செய்தது.

INDRA LENDING LIBRARY
162, Goundampalayam Road,
Edayarpalayam,
COIMBATORE-641 025

நின்றாள்.

காலை வெளியே எடுத்து செருப்பை உற்று பார்த்தாள்.

கட்டை விரலை வைக்கும் இடத்தில் இரண்டு நாட்க கவே அந்த ஆணி ரொம்பத்தான் துன்புறுத்துகிறது. இரண் தரம் பிய்ந்து, தைத்துவிட்டதை இன்னொருதரம் தைக்க மு யாது என்று சக்கிலி சொல்லி ஆணி வைத்து அறைந்திருந் தான் இப்போது வெளியே துருத்தித் தொல்லை கொடுக்கிற

சாலை ஓரமாய்க் கிடந்த கல்லை எடுத்து, நீட்டி கொண்டிருந்த ஆணியின் மண்டையில் நாலு தட்டுத் தட்டி பின் திரும்ப அதைக் காலில் போட்டுப் பார்த்தாள்.

ம்ம்... இப்போது பரவாயில்லை. அத்தனை உறுத்த இல்லை.

இன்னும் இரண்டு மாசங்களுக்காவது இதை வைத்து கொண்டு ஒப்பேற்றி விட்டால் தேவலை.... அம்மாவுக் நல்லதாய் ரவிக்கை இல்லை எல்லாம் கிழிசல்... உடனடியா இரண்டு ரவிக்கையாவது தைக்க வேண்டும்.

ஒரு வேலை கிடைத்துவிட்டால் ரொம்ப சௌகர்யமா இருக்கும். ஆனால் கிடைத்தால்தானே?

அம்மாவும் ஒண்டியாய் எத்தனை நாளைக்கு உழைத் கொட்டுவாள்?

அம்மாவை நினைக்கையில் கண்களில் நீர் வரும்போ இருந்தது.

அம்மாவான, அம்மாவா அவள்?

எல்லாருக்கும் இப்படி ஓர் அம்மா அமைந் விடுவாளா?

எப்பேர்ப்பட்ட அம்மா!

அந்த அப்பாவுக்கு ஏற்ற அருமையான அம் அல்லவா?



அம்மாவை மனசுக்குள் நிறுத்தி சந்தோஷிக்கையில், இன்று வக்கீல் வீட்டுக்கு முறுக்கு சுற்றித் தருவதாகச் சொல்லி இருப்பதும், அதற்காகக் காலையிலேயே அம்மா அரிசியைக் களைந்து ஊற வைத்ததும், நினைவுக்கு வந்தது.

அட ராமா! பத்து மணிக்குள் வீடு திரும்பி அம்மாவுக்கு மாவு பிசைய, அடுப்பில் போட்டு எடுக்க கொள்ளவென்று ஒத்தாசை பண்ண எண்ணியதை எப்படி மறந்து போனேன்?

குற்றம் பண்ணிவிட்ட தினுசில் மனசு குறுகுறுக்க, பூமா ஓட்டமும் நடையுமாக நடந்து பத்தாவது நிமிஷம் வீட்டுப்படி ஏறினாள்.

உள்ளே நுழைந்தவளை எண்ணெய்ப் புகை, அரிசி மாவு வேகும் மணம் வரவேற்றது.

சமையல் அறை, சாப்பாட்டு அறை, கூடம் என்று எல்லாமாக இருந்த அந்த ஒற்றை அறையில் ஏகமாய் புகை சூழ்ந்திருந்தது.

ஒரு பக்கமாய் ஞானம். பக்கத்தில் எரியும் அடுப்பில் எண்ணெய் வாணலி. இந்தப் பக்கம் பிசைந்த மாவு, விரிக்கப்பட்ட வெள்ளைத் துணியில் வட்ட வட்டமாய் முறுக்குகள்.

அம்மா கேட்காமலேயே 'நாழியாயிடுத்தும்மா' என்று முனகின பூமா, செருப்பை ஓரமாகக் கழட்டி வைத்து, பின்கட்டுக்குச் சென்று கிணற்றடியில் கை, கால் அலம்பிக் கொண்டு அம்மாவின் பக்கத்தில் வந்து நின்றாள்.

"தள்ளிக்கோம்மா... அப்படி உட்கார்ந்துண்டு நீ சுத்து நா போட்டு எடுக்கறேன்..."

"நீ சாப்பிடேன் பூமா. கார்த்தாலே வெறும் வயிறோட போனவதானே..."

"நீ சாப்பிட்டாச்சாம்மா?"

"இன்னும் இல்லே... வக்கீலாத்துலேந்து சொல்லி அனுப்பிச்சா, மத்தியானம் இரண்டு மணிக்குள்ள முறுக்கு வேணும்னு. ஆச்சுனு போட்டு எடுத்துட்டா, கொடுத்து அனுப்பிடலாம்..."

"அப்ப, முடிச்சுட்டு, நானும் உன்னோடயே சாப்பிட றேம்மா...."

"பசிக்கலியா பூமா..."

பூமா பதில் சொல்லாமல் அடுப்படியில் உட்கார்ந்தாள். அம்மா சுற்றி வைத்து, ஈரம் இழுக்கப்பட்டு, உலர்ந்திருந்த முறுக்குகளை லாவகமாய் எடுத்து, கோணிப் போகாமல் எண்ணெயில் போட்டாள்.

"வாயில துளி போட்டுண்டு பாரேன்... உப்பு சரியாயிருக்கானு..."

பூமா வெந்துவிட்ட முறுக்குகளில் ஒன்றை எடுத்து உடைத்து, வாயில் போட்டு மென்றாள்.

பசித்த வாய்க்கு பெருங்காய, ஜீரக, வெண்ணெய் மணந்த முறுக்கு மகா ருசியாக இருந்தது.

"ம்ம்... ஜோர்... நீ பண்ணறதுக்குக் கேக்கணுமாம்மா?"

ஞானம் புன்னகைத்தாள்.

"நன்னா இருந்தா, இரண்டு முறுக்கையாவது எடுத்து வைச்சிண்டு தின்னு பூமா... உனக்குப் பசிக்கும்..."

சில நிமிஷங்கள் பேசாமல் காரியத்தில் ஈடுபட்ட பூமா 'அம்மா' என்றாள் மெதுவாக.

"ம்?"

"இன்னிக்கு சேவா தளத்துலே ஆத்மா மாமாவ பார்த்தேன்."



ஆத்மா, சுந்தரேசனுக்கு ரொம்ப வேண்டியவர். சுதந்திரத் துக்காகப் பாடுபட்டவர். சேவாதள அமைப்பில் முக்கியமான வர். எங்கு யாருக்கு உதவி தேவைப்பட்டாலும் அங்கு முதலில் வலியப் போய் நிற்பவர்.

"சௌக்கியமா இருக்காரா. பாத்து நாளாச்சு..."

"ம்... டெல்லிலேந்து இரண்டு நாள் முன்னாலதான் வந்தாராம்... வந்தும்மா..."

எதையோ சொல்ல மகள் தயங்குகிற மாதிரி தோன்ற ஞானம் தலை நிமிர்ந்தாள்.

"என்னம்மா?"

"இல்லே... வந்து... வர்ற நாலாம் தேதிலேந்து பதினைஞ்சு நாளைக்கு குவாலியர்லே சேவாதளம் நிர்வாகப் பயிற்சி முகாம் நடத்தப் போறதாம், வந்து.... வந்து... 'நீ போறியா பூமா, நான் ஏற்பாடு பண்ணறேன். இந்த ட்ரெய்னிங் நாளைக்கு உனக்கு ரொம்ப உபயோகமா இருக்கும். செலவெல்லாம் எங்களுக்குத்தான்; ஒத்தை ரூபா உனக்கு செலவு இல்லே'ன்னார். 'அம்மாவை கேட்டுச் சொல்றேன் மாமா'னு வந்திட்டேன்..."

முறுக்கு சுற்றுவதை நிறுத்திவிட்டு ஞானம், பெண்ணை உற்று நோக்கினாள்.

அப்பா மாதிரியே பெண்.

நாட்டுக்கு உழைக்க வேண்டும். மற்றவர்களுக்காகப் பாடுபட வேண்டும் என்று பேசும்போது அவர் கண்களும் இப்படித்தான் விரிந்து, பளபளவென்று ஜொலிக்கும்.... ஆயிரம் கனவுகளை, அபிலாஷைகளை அந்தக் கண்களும் முகமும் காட்டும்...

அவர் சாகவில்லையா?

இதோ நான் உன்னோடு இருந்து கொண்டே இருக்கிறே னடி, உன் பெண் ரூபத்தில் என்று சூசகமாய் உணர்த்து கிறாரா?

"ஆத்மா மாமா சொன்னா, அது நிச்சயம் நல்ல காரியமாதான் இருக்கும்... கிடைக்கிற சந்தர்ப்பத்த அம்மாவ தனியா விட்டுட்டு எப்படிப் போறதுனு நினைச்சு கோட்ட விடாம கண்டிப்பா போயிட்டு வாம்மா... உங்கப்பா இரு திருந்தா, முதல்லே உன்னை அனுப்பிட்டுத்தான் மறுவே பார்ப்பார். நாளைக்கே மாமாகிட்ட சொல்லிடு..." பேசிக்கொண்டே போனவள் கட்டினவன் நினைவு எழுந் நெஞ்சை அடைத்துக் கொண்டதில் கண்கள் விறுவிறுவென் கலங்கிப் போக, 'புகை கண்ணை எரிக்கிறது' என்று முன தான் அழுவதை மகள் உணராதிருக்க வேண்டி, தலையை குனிந்து கொண்டாள்.

## 6

அந்தச் சேரி ரொம்ப அசிங்கமாய் இருந்தது. காலையி சாப்பிட்ட உணவை வயிற்றிலிருந்து வாய்க்குக் கொண்டுவர செய்யும் அளவுக்கு அசுத்தமாய் இருந்தது.

நெருக்கமாய், ஒன்றோடு ஒன்று கட்டிப்பிடித்து கொண்டு உட்கார்ந்திருந்த குடிசைகள், அவற்றின் முன்ன லும் பின்னாலும் பக்கவாட்டிலும் ஓரடி அகலத்துக்கு கறுப்பாய், தண்ணீர் சகதியாக மாறிவிட்ட சாக்கடைக நொய் நொய் என்று அடிவயிற்றிலிருந்து சப்தமிட்டப இங்கும் அங்கும் வாலை ஆட்டிக் கொண்டு ஓடி, சற்று மு தூங்கி எழுந்த பிள்ளைகள் செய்திருந்த அசுத்தத்தை ஓ வாயாகத் தின்றுவிட்டு இன்னும் வேண்டும் பசிக்கிற என்கிற தவிப்பில் சாக்கடையில் விழுந்து புரண்டு எழு பன்றிகள், முழு அம்மணமாய்த் திரிந்த பிள்ளைக



போனால் போகிறது என்று அரசிலை மட்டும் கட்டிக் கொண்டு செம்பட்டை முடியுடன் நின்ற பெண் குழந்தைகள், முதல் நாள் இரவு போட்ட சமாசாரத்தின் போதை இன்னும் தெளியாமல் குடிசை வாசலில் கயிற்றுக் கட்டிலில் வேட்டி அவிழப் புரண்டு 'என்ன அரவம் அது?' என்று கேட்கிற தினுசில் சிவந்த விழிகளை லேசாகத் திறந்து பார்த்த ஆண்கள், ஈர விறகை வைத்துக்கொண்டு எரியாத ஆப்ப அடுப்புகளுடன் மன்றாடும் பெண்கள்.

சேரியின் துவக்கத்தில் இருந்த குழாயடியில் நசநச வென்று கூட்டம். பானையை முதலில் வைத்தது யார் என்று பேச்சு எழுந்ததன் காரணமாக ஊரில் உள்ள ஆண்பிள்ளை ஒருவன் பேர் விடாமல் சொல்லி, 'அவனோடு நீ படுத்தது எனக்குத் தெரியாதா?' என்று நீளமாய் ஒருவர் மேல் ஒருவர் குற்றம் சாட்டும் அளவுக்குப் போய்விட்ட சண்டை.

இரவு பெய்திருந்த மழையால் சொதசொதத்திருந்த தரையில் கவனத்துடன் கால்களை ஊன்றி நடந்த கமலம் அரைவினாடி நின்று, பின்னோடு வந்த பூமாவைப் பார்த்தாள்.

"இந்தச் சூழ்நிலையையும் இவங்க பேச்சையும் தாங்கிக்கறது ரொம்ப கஷ்டமாயிருக்கா?"

நுனிக் கொசுவம் சேற்றில் பட்டுவிடாமல் லேசாக அதைத் தூக்கிப் பிடித்தபடி நின்ற பூமா, பதில் ஏதும் சொல்லாமல் சின்னதாய் புன்னகைத்தாள்.

"சேரிக்கு இன்னிக்குத்தானே முதல் முறையா வர்றே. கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்கும்... போகப் போகப் பழகிடும்... ரொம்பவும் தாங்க முடியாம இருந்தா, வெளியே ரோடுலெ போய் நில்லு... நா வேலைய கவனிச்சிட்டு வந்திடறேன்... என்ன?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லே ஸிஸ்டர்" என்று பூமா சொல்ல, மேற்கொண்டு எதும் பேசாமல் கமலம் திரும்பி நடந்தாள்.

கமலம் அங்கு அடிக்கடி வந்துபோகும் நபர் என்பதை சேரிக்குள் நுழைந்த உடனேயே பூமாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

"இன்னிக்கும் முட்டாய் கொணாந்திருக்கிறாயா?" என்று கண்களை விரித்துக்கொண்டு கேட்டது ஒரு பிள்ளை.

"வூட்டுல அவுரு வாந்தி வாந்தியா எடுக்குறாரும்மா... என்ன மருந்து கொடுக்க? அப்பால குடிசைக்கு வாறியா?" என்றாள் சாணிக்கூடையுடன் நடந்த பெண் ஒருத்தி.

"வந்துட்டாளுகடிம்மா... குதிரை மாதிரி நடந்துக் கிட்டு ஆம்புளை கணக்கா நம்மளை வெரட்ட வந்தட்டாளுக... போது போய் விடிஞ்சாப் போதும் வந்திருவாளுங்களே!" என்று குனிந்து ஆப்ப அடுப்பை ஊதிக்கொண்டே வயசான கிழவி ஒருத்தி சலித்தாள்.

எல்லாவற்றுக்கும் "இன்னிக்கும் மிட்டாய் உண்டு, சமத்தா நா சொல்றதைக் கேட்டா" என்றும்.

"வாந்தி எடுக்கிறானா? ஏன்? நேத்து எங்க போனா என்ன சாப்பிட்டான்? சரி... சரி... நீ போ, நா வரேன்" என்றும்,

"நா வந்து போனா உனக்கு என்ன பாட்டி? வாடிக்கைக்காரன் குந்தி இருக்கான் பாரு... ஆப்பத்தை ஊத்தி வியாபாரத்தை கவனிக்கிற வழியைப்பாரு" என்றும் சிரிப்புடன் பதில் சொன்ன கமலம் ஒரு குறிப்பிட்ட குடிசை வந்ததும் அதன் திண்ணையில் உட்கார்ந்து 'பூங்காவனம்' என்று குரல் கொடுத்தாள்.



ஒரு நிமிஷத்தில் உள்ளே இருந்து முக்கிக் கொண்டும் முனகிக் கொண்டும் நிறை மாச கர்ப்பிணி ஒருத்தி வெளியில் வந்தாள்.

"என்ன பூங்காவனம் எப்படி இருக்குறே? இரண்டு நாள் முந்தி உம் புருஷன் செண்டருக்கு வந்தப்ப புது மாத்திரைங்க கொடுத்து அனுப்பினேனே சாப்பிட்டியா? ம்... இப்படி பக்கத்துலே உக்காரு... கண்ணைப் பார்க்கலாம்...."

திண்ணையில் பூங்காவனத்தை இருத்தின கமலம் எழுந்து, அவள் கண்ணருகில் குனிந்து பார்த்தாள்.

கண்களில் வெள்ளைப் பகுதிகளில் பழுப்பு நிறப் புள்ளிகள் ஏகமாய்க் காணப்பட்டன. பளபளப்பை இழந்து ஒரு புழுதித் திரையால் போர்த்தப்பட்ட மாதிரி கண்கள் மங்கலாக இருந்தன.

"மாலைக்கண், டிப்பிகல் கேஸ். கண் எப்படி பழுப்பா பூத்துப் போயிருக்கு பாரு..." அருகில் நின்ற பூமாவிடம் கமலம் பேசினாள்.

"காலைலே கொஞ்சமா தெரியற கண், சாயங்காலம் ஆக ஆக சுத்தமாத் தெரியாம போயிடும். இருட்டிடுச் சின்னா டோடல் ப்ளைண்ட்னஸ்தான். சத்தான சாப்பாடு இல்லாதவங்க நடுவிலே இந்த வியாதி சகஜம்; அதுவும் கர்ப்பமாயிருக்கிற பெண்ணுனா கேட்கவே வேணாம், ஒரு வயித்துக்கே இவங்களால ஒழுங்கா சாப்பிட முடியறதில்லே, அப்புறம் வளர்ற குழந்தைக்கும் சேத்து சாப்பிடுனா எங்கே போவாங்க... ம்"

இதற்குள் திண்ணையில் கூட்டம் கூடிவிட்டது. எதிர் வீட்டு பக்கத்து வீட்டுப் பெண்கள், ஏழெட்டுக் குழந்தைகள்.

"பூங்காவனம், உன் புருஷன் எங்கே?"

"டேசனுக்குப் போயிருக்காரு... பொளுதுக்குதான் வருவாரு..."

பூங்காவனத்தின் புருஷன் செண்டிரல் ஸ்டேஷனில் ஒரு போர்ட்டர் என்பது கமலத்துக்குத் தெரிந்த விஷயம்தான்.

"கீரை நிறைய சாப்பிடணும்னு சொன்னேனே சாப்பிடுறியா?"

"ம்..."

"என்ன ம்...? சும்மானாச்சும் சொல்லாதே... நித்தமும் கண்டிப்பா நீ கீரை சாப்பிடணும், வெறும் மாத்திரை, ஊசி பத்தாது... புரியுதா?"

"சரிங்க"

"பிரசவத்துக்கு இன்னும் நாள் இருக்கு. நா சொல்லற படி நீ கேட்டு நடந்தா, பிள்ளை பிறக்கறதுக்கு முன்னே கண்ணைச் சரி செய்துடலாம், என்ன பூங்காவனம்?"

"சரிங்க"

சில மாத்திரைகளின் பெயர்களைக் கமலம் சொல்ல, பூமா பையிலிருந்து அவற்றை வெளியில் எடுத்து எப்படி எவ்வளவு சாப்பிட வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தாள்.

அதே சேரியில் இருந்த மற்ற வீடுகளைக் கவனித்து விட்டு, பக்கத்து சந்தில் அவர்கள் நுழைந்த போது, சூரியன் உச்சிக்கு வரட்டுமா என்று கேட்க ஆரம்பித்து விட்டான்.

சிலர் இவர்களைக் கண்டதும் 'ஆமா, உங்களுக்கு வேற வேலை இல்லை' என்று சலித்துக் கொண்டதும், சிலர் இவர் களைச் சந்திக்கப் பிடிக்காமல் ஓடி ஒளிந்ததும், இன்னும் சிலர் தங்களுக்கு உதவி செய்வதற்காகவே இவர்கள் வந்திருப் பதைப் புரிந்துகொண்டு அன்போடு பேச முன் வந்ததும் பூமாவுக்குப் புது அனுபவமாய் இருந்தன.



ஒவ்வொரு குடிசையிலும் தப்பாமல் "யார் இந்த அம்மா?" என்று கேட்டார்கள்.

"புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்காங்க" என்று கமலம் சொன்னதும் ஆளை ஏற இறங்கப் பார்த்தார்கள்.

"அப்ப, உன்னை மாதிரி இந்த அம்மாவும் இனி வாரம் இரண்டு தபா இங்க வருமா?"

"ம்..."

"வந்து மருந்து மாயம்பத்தி எல்லாம் சொல்லுமா?"

"ம்..."

"பாத்தா தம்மாத் தூண்டு இருக்கு, இதுக்கு என்ன தெரியும்?"

கிழவன் ஒருத்தன் சந்தேகத்தோடு கேள்வி கேட்க, கமலம் சிரித்தாள். பிறகு "என்ன தெரியும்னு நாளாக ஆக நீயே தெரிஞ்சிப்பே தாத்தா" என்றாள்.

ஒரு குடிசையில் அத்தனை பிள்ளைகள் கையிலும் ஏகமாய் சிரங்கு இருப்பதையும், அதை மறைக்க அம்மாகாரி குழந்தைகளை 'உள்ளே போ' என்று விரட்டுவதையும் கமலம் பார்க்க நேர்ந்தபோது இது நாழிகை அவளிடம் காணப்பட்ட சிரிப்பு சட்டென்று மறைந்து போனது.

"ஏய்... யார் இங்கே... ராக்காயி... உம் பிள்ளைங்கதானே இதுங்க? வா இப்படி... முன்னால வா... ஆமா. பசங்க கைலே இத்தனை சிரங்கு பரவுர வரைக்கும் நீ என்ன பண்ணிட்டு இருந்தே? ம்? போன மாசம் சேரியிலே இருந்த சிரங்கை ஒட்டுக்க ஒழிக்க நாங்க என்ன பாடு பட்டோம்னு உனக்குத் தெரியும் இல்லே? வீடு வீடாப் போய், சிரங்குக்கு மருந்து போட்டு, வீட்டுக்கு மருந்து தெளிச்சி, துணிகளைக் கொதிக்க வைச்சி என்ன பாடுபட்டோம்னு உனக்குத் தெரியும் இல்லே?

இப்படிப் பிள்ளைங்க உடம்புலே சிரங்கு வர்ற அப்புறம்? இப்படிப் பிள்ளைங்க உடம்புலே வேடிக்கையா பார்த்திட்டு வரைக்கும் நீயும் உன் புருஷனும் வேடிக்கையா பார்த்திட்டு இருந்திங்க? உங்களுக்குத் தானாவும் புரியாது, சொன்னாலும் புரியாது... வந்த உடனேயே செண்டருக்கு வந்து மருந்து போட்டுக்க வேண்டியதுதானே? நானா தேடிவந்து, எங்க காட்டுன்னாத்தான் காட்டறதா? ஒருத்தனுக்குச் சிரங்கு வந்தா நிமிஷத்துலே சேரிபூரா பரவிடும்னு படிச்சுப் படிச்சுச் சொல்லி இருக்கோம் இல்லே?"

ராக்காயி ஒரு மூலையாய் நின்று என்னமோ முணுமுணுத்தாள்.

"என்ன மொணமொணன்றே? பண்ணற தப்பு உங்களுக்குப் புரியாது. ஆனா நா திட்டறது மட்டும் நல்லா புரியும். அதானே? சரி... சரி — பசங்களை இப்படி வெளிச்சத்துக்குக் கொண்டு வா... ம்... நல்ல வேளையா அதிகமா பரவலை. கையிலே மட்டும்தான் இருக்கு... செண்டருக்கு மத்தியானமா இட்டுகிட்டு வர்றியா? ஆயாவவிட்டு தேய்ச்சு கழுவி மருந்து போடச் சொல்றேன். இல்லே, நீயே கழுவி மருந்து போடறதுன்னா சொல்லு ஆயிண்ட் மெண்ட் கொடுத்துட்டுப் போறேன்."

ராக்காயி யோசித்துக்கொண்டு நிற்க பூமா பேசினாள்.

"நா வேணா சுத்தம் பண்ணி மருந்து போட்டுமா ஸிஸ்டர்?"

"நீயா" என்கிற ஆச்சர்யத்துடன் கமலம் அவளை ஏறிட்டாள்.

"செய்வியா?"

"ம்..."

பூமா பையைத் திண்ணையில் வைத்தாள். ஒரு குண்டா வென்னீர் போட்டுக் கொண்டுவரும்படி ராக்காயியை பணித்தாள்.



வெந்நீர் வந்ததும், சிரங்கு இருந்த பிள்ளைகளை வரிசையாக நிற்க வைத்து, சோப்பு போட்டுக் கைகளைக் கழுவி விட்டாள். மேல் பொறுக்கு போக அழுந்தத் தேய்த்த போது வலியில் அழுத பிள்ளைகளைக் கதை சொல்லி, பராக்குக் காட்டி, சமாதானம் செய்து, மிட்டாய்களை ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து, சிரங்கு இருக்கும் இடங்களில் ஆயிண்ட் மெண்டைப் பக்குவமாகப் பூசினாள்.

"இன்னிக்குக் கழுவி மருந்து போட்டாச்சு. இனிமே மூணு நாளைக்கு இரண்டு வேளையும் மருந்து மட்டும் போட்டுட்டு வந்தா போதும். இந்த மாத்திரைகளை, சாப்பாடு ஆனதும் கொடுக்கணும். நாலாம் நாள் பசங்களை வெந்நீரிலே குளிப்பாட்டி, அவங்க துணிமணிகளை வெந்நீர்லே கொதிக்க வைச்சு, வீட்டையும் இந்த மருந்து தெளிச்சு துடைக்கணும். அடியோட சிரங்கை ஒழிக்கணும்னா நீங்க அத்தனை பேரும் நாங்க சொல்லறதைக் கவனமா கடைப்பிடிக்கணும்... என்ன, புரியுதா?"

கும்பலாய் நின்றவர்கள் சரி என்று ஒட்டு மொத்தமாய்த் தலை ஆட்ட, கமலமும் பூமாவும் அலுவலகத்தைப் பார்க்கக் கிளம்பினார்கள்.

மூர் மார்க்கெட் பின்னால் இருந்த ஹெல்த் செண்டர் கட்டடத்தை அவர்கள் அடையும்போது மணி இரண்டு என்றது.

கை கால்களைக் கழுவிக்கொண்டு மதிய உணவு டப்பாவுடன் உட்கார்ந்த நிமிஷத்தில் இன்னும் பத்து நாட்கள் போனால் ஹெல்த் செண்டரில் சேர்ந்து ஒரு மாசமாகி விடும்; முதல் சம்பளம் வாங்கும் நாள் வந்து விடும் என்ற நினைப்பு பூமாவினுள் எட்டிப் பார்த்தது.

ஹெல்த் செண்டரில் அவள் சேர்ந்தது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி.

குவாலியர் ட்ரெயினிங் முகாமுக்குப் போய் விட்டு வந்து நாலு நாள் போல ஆன அளவில் வீடுதேடி ஆத்மா வந்தார்.

குவாலியர் பயிற்சி முகாம் பற்றிப் பேசிக் கொண்டிருந்த வர் சட்டென்று "நீ ஹெல்த் செண்டர் பற்றிக் கேள்விப் பட்டிருக்கியோ பூமா" என்று கேட்க, அவள் இல்லை என்றாள்.

"லண்டன்ல பெக்ஹாம் ஹெல்த் செண்டர்னு ஒரு ஸ்தாபனம் இருக்கு. அதை மாதிரியா வைச்சுண்டு இந்தியாவிலேயும் அந்த வகையான ஆஸ்பத்திரிகளை உருவாக்கனும்னு லார்ட்வேவல் தெரியுமா, அவர் மனைவி ஆசைப்பட்டு, முதல் முறையா, பரீக்ஷார்த்தமா மெட்ராஸ்லே ஹெல்த் செண்டரை ஆரம்பிச்சிருக்கார். ஆறுமாசம் ஆறது. இதுலே இரண்டு டாக்டர், எட்டு ஆர்கனைஸர், உதவியாளர், கம்பௌண்டர், ஆயா எல்லாரும் உண்டு. சேரிகள்லே சுகாதாரத்தைப் புகுத்தறதுதான் இந்த ஹெல்த் செண்டரோட நோக்கம். ஓரணா கொடுத்தா, ஒரு குடும்பத்தை மெம்பரா சேர்த்துண்டு, அதுக்கு வைத்தியம், சுகாதாரம்னு அத்தனையும் இலவசமா கொடுக்கறா..."

ஓரணாவுக்குக் குடும்பம் முழுவதும் இலவசமாக வைத்தியமா?

பூமாவுக்கு நம்புவது கஷ்டமாக இருந்தது.

"இப்படிச் செய்யக் கட்டுப்படியாகுமா மாமா?"

"ஆகாதுதான். கார்ப்பரேஷன் அத்தனை செலவையும் தாங்கிக்கறது... சேரி மனுஷா முன்னேறணும்னா, வேற வழி என்ன சொல்லு?"

ஒரு நிமிஷம் பேசாமல் இருந்துவிட்டு ஆத்மா தொடர்ந்தார். "ஹெல்த் செண்டர்லே இருக்கிற டாக்டர் ரமணன் எனக்கு வேண்டியவர். இப்ப ஆர்கனைஸர் வேலைக்கு ஆள் தேவைப் படறதாம். 'தொண்ணூறு ரூபா



சம்பளம். ஒன்பதுலேந்து அஞ்சுவரைக்கும் வேலை... பதினைஞ்சு நாள் ட்ரெயினிங். அப்புறமா சேரிக்குக் கூட போக வேண்டி வரும்... பொறுப்பான, அன்பான குணம் கொண்ட பெண்களா தேடிண்டு இருக்கோம்'னு அவர் சொன்னப்போ குவாலியர்லே நீ முதல் உதவி கோர்ஸ் படிச்சதும், சீக்கிரமா ஒரு வேலைல சேரணும்னு சொன்னதும் ஞாபகத்துக்கு வந்தது. உனக்கு சம்மதம்னா இந்த வேலைக்கு உன்னை நான் சிபாரிசு பண்ணறேன். ஆனா... வந்தும்மா... அசிங்கம், அருவருப்பு பாக்கறவாளுக்கு இந்த வேலை சரிப்படாதுன்னு எனக்குத் தோணறது. நீ என்ன நினைக்கிறே? பூமா?"

தொண்ணூறு ரூபாய் சம்பளம்!

அடேயப்பா!

இருக்கும் நிலைக்கு இது வெள்ளம் அல்லவா?

சேரிக்குப் போக வேண்டி வந்தால் என்ன?

ஏழை ஜனங்களிடம் பழகவேண்டி இருந்தால் என்ன?

அப்பா அன்றே அவர்களை இழுத்து அணைத்துக் கொள்ளவில்லையா?

'இவா உடம்பிலேயும் சிவப்பு இரத்தம்தான் ஓடறது பூமா' என்று சொல்லவில்லையா? 'இந்தியாவின் இதயம் கிராமத் துலே இருக்குனு மகாத்மா சொல்றார். அதோட சேரிகளையும் சேர்த்துச் சொல்லணும்னே நா நினைக்கிறேன்' என்று கூறவில்லையா?

அப்புறம் அசிங்கம் என்ன, அருவருப்பு என்ன?

ம்ஹூம், ஒண்ணும் இல்லை.

பூமா அம்மாவைப் பார்த்தாள். 'உன் இஷ்டம் ஜமாய்' என்று சொல்கிற புன்னகையோடு அம்மா இருப்பது புரிந்தது.

"கோணல், வக்ர மனசை பார்க்கறப்பதான் அருவருப்பா இருக்கு; மத்தபடி வேற எதுவுமே எனக்கு அசிங்கமா தோணறதில்லை மாமா... நீங்க உடனே இந்த வேலைக்கு ஏற்பாடு பண்ணா நா சந்தோஷப்படுவேன்" என்றபோது அவள் குரல் பிசிறில்லாமல் தெளிவாக வெளிப்பட்டது.

# 7

"பூமா"–

காலையில் அம்மா பிசைந்து கொடுத்திருந்த டிபன் டப்பாவோடு உட்கார்ந்த பூமா பார்வையை நிமிர்த்தினாள்.

"ம்"–

"என்ன கொண்டு வந்திருக்கே? இன்னிக்கும் தயிர் சோறுதானா?

கமலத்தின் கேள்விக்கு பூமா சிரிப்போடு ஆமாம் என்று தலை ஆட்டினாள்.

"நித்தமும் எப்படித்தான் சலிக்காம தயிர் சோத்த நீ சாப்பிடறியோ! எனக்கு உள்ள இறங்காது... இந்தா... நா பூரி கிழங்கு கொண்டு வந்திருக்கேன். ரெண்டு எடுத்துக்க..."

"வேண்டாம் ஸிஸ்டர்... இந்த சாதமே எனக்கு ஜாஸ்தி..."

"சொன்னாக் கேளு பூமா... ம்ம்... பிடி..."



உரிமையோடு கமலம் நீட்டிய பூரிகளை வாங்கி டப்பா மூடியில் வைத்துக் கொண்டாள்.

சில நாட்களாகத் தான் பூமாவுக்குக் கமலத்தோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

கமலம் ஸீனியர் ஆர்கனைஸர்.

இவள் கத்துக்குட்டி. வேலைக்குச் சேர்ந்து இருபதே நாட்கள் ஆன கத்துக்குட்டி ஆர்கனைஸர்.

வயசிலும் கமலம் இவளைவிட பெரியவள் தான். முப்பதுக்குக் குறையாது, நிச்சயம்.

முதல் பதினைந்து நாட்கள் செண்டரில் என்னென்ன பிரிவுகள் உள்ளன; அவை எப்படி யெப்படி இயங்குகின்றன; மெம்பர் சேர்ப்பது எப்படி; செண்டருக்கு வரும் நபர்களுக்கு சிகிச்சை, அறிவுரை அளிப்பது எவ்வாறு என்ற பயிற்சிகள் நடந்தன. பிறகு சேரிக்குப் போய் வருவது, அதுபற்றி ரிபோர்ட் தயாரிப்பது போன்ற விவரங்களை பூமா அறிந்து கொள்வதற்கும், கமலம் பணியாற்றிய யூனிட்டில் ஓர் ஆர்கனைஸர் இந்த வேலை பிடிக்கவில்லை என்று திடுமென்று நின்று விடுவதற்கும் சரியாக இருக்கவே, கமலத்தோடு வேலை பார்க்கவென பூமா அனுப்பப்பட்டாள்.

முதல் இரண்டு, மூன்று நாட்கள் சேரி போகும் வேலை இல்லை; செண்டருக்குள்ளேயே சரியாகப் போய் விட்டது. இன்றுதான் முதல் தடவையாகச் சேரி விஸிட்.....

"பூமா..."

வாய் நிறைய தயிர் சாதத்தைப் போட்டுக் கொண்ட பூமா, அதை விழுங்கிவிட்டு "ம்?" என்றாள்.

"இதுக்கு முன்னாலே நீ டாக்டர் யார்கிட்டயாவது வேலை பார்த்திருக்கியா?"

"ம்ஹூம்"

"வீட்டுலே நோயாளிங்க, பசங்களைக் கவனி
அனுபவம் உண்டா?"

"ம்ஹூம்"

"நிஜமாவா? அப்ப, அத்தனை லாவகமா குழந்தைக
க்ளீன்பண்ணி, மருந்துபோட நீ எங்க கத்துக் கிட்டே
கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் வேலை செய்ய உன
யார் கத்துத் தந்தாங்க?"

கமலம் சொல்வதைப் புரிந்துகொள்ள பூமாவுக்குச்
வினாடிகள் ஆயின.

ஓ! சேரி குழந்தைகளின் சிரங்குகளுக்கு மரு
போட்டதைச் சொல்கிறாளா?

கமலத்தின் பாராட்டு மனசுக்கு சந்தோஷத்தைத்
பூமா வெட்கத்தோடு சிரித்தாள்.

"என்ன ஸிஸ்டர்... சின்ன விஷயத்தைப் போயி நீ
பெரிசு படுத்திண்டு..."

"இது சின்ன விஷயமே இல்லே பூமா... நா இங்
வேலைக்கு வந்து மாசம் ஆறாவுது. இதுக்கு முன்ன
ப்ரைவேட் டாக்டர் ஒருத்தர்கிட்ட வேலை பாத்து அனுப
மிருந்த என்னையே இந்த சேரியும், இந்த அழுக்கும் மு
சில நாட்களுக்கு 'என்னடா இது'ன்னு நினைக்க வைச்சி
இதுவரைக்கும் பத்துப் பதினைந்து பேர் ஆர்கனை
வேலைக்கு இங்க சேர்ந்திட்டாங்க. செண்டர்லே வே
பாக்குற வரைக்கும் ரொம்ப திறமையா உழைப்பாங்க
ஒருநாள் சேரிப் பக்கம் போயிட்டாக்கூட போதும், 'அம்
நம்மால இந்த அசிங்கத்தைத் தாங்க முடியாது'
ஓடிடுவாங்க... ஆனா நீ வயசுலே ரொம்ப சின்னவளானாலு
கொஞ்சம் கூட அருவருப்பு படாம அந்தப் பசங்ககிட்
அன்பா நடந்துக் கிட்டப்போ நா ஆச்சரியப் பட்டுத்தா
போயிட்டேன்....'



மேலுக்காக இல்லாமல் ஆத்மார்த்தமாகவே கமலம் பாராட்டுகிறாள் என்பது புரிந்ததும் பூமாவின் சந்தோஷமும், வெட்கமும் அதிகமாயின.

உடனே பதில் சொல்லாமல் சாதத்தை நுனி விரலால் அளைந்தவள், மெதுவாகப் பேசினாள்.

"சின்ன வயசுலேந்தே சேவாதளத்துலே ஸோஷியல் ஸர்வீஸ் பண்ணி எனக்குப் பழக்கம் ஸிஸ்டர். அதுவும், போன மாசம் குவாலியருக்கு ட்ரெயினிங்க்குக்காகப் போனப்போ நா நிறைய விஷயங்கள் கத்துண்டேன். முதல் உதவி, செல்ஃப் டிஸிப்ளின் பத்தி எல்லாம் தினமும் க்ளாஸ் எடுத்துச் சொல்லிக் கொடுத்தது எனக்கு ரொம்ப உதவியா இருந்தது..."

குவாலியர் பயிற்சி முகாம் பற்றி பூமா கூறினதைக் கமலம் கவனமாகக் கேட்டுக் கொண்டாள்.

"சேவாதளமும், இந்த முகாமும் உனக்கு உதவி பண்ணி இருக்கலாம், நா இல்லேன்னு சொல்லலை. ஆனா உன் இரத்தத்துலேயே சமூக சேவை கலந்திருக்கறதுதான் நிஜம் பூமா.... நீ யாரோட மக? சுதந்திர வீரர் சுந்தரேசன் ஸாரோட மக இல்லியா? நீ இங்கே சேர்ந்த உடனேயே பெரிய டாக்டர் இந்த விவரத்தை எனக்குச் சொல்லிட்டார்.... அவரோட முதிர்ச்சி.... விவேகம், உழைப்பு, அன்பான குணம் எல்லாம் உனக்கு அப்படியே வந்திருக்கு... உங்கப்பாவை மனசுலே நினைச்சிட்டா, நீ இப்படி இருக்கிறது எனக்கு ஆச்சரியமா இல்லேதான்..."

அப்பா பேரைக் கேட்டதும் சட்டென்று பூமாவின் கண்கள் கலங்கிப் போயின.

"நீங்க என்னமோ பெரிசு பெரிசா சொல்றேள் ஸிஸ்டர். அவருக்குப் பெண்ணாப் பிறந்த ஒரு பெருமையைத் தவிர

வேறு ஒண்ணும் என்கிட்ட இருக்கிறதா நா நினைக்கலை. அப்பாவோட சிந்தனை, பேச்சு நடத்தை எல்லாம் இந்த தேசம், இந்த தேச மக்களைப் பத்தித்தான் இருக்கும். அன்பைக் கொடுக்கத் தெரியாதவன் மிருகத்துக்குச் சமம்னு சொல்லு வார். அடுத்தவனை உடன் பிறந்தவனா நினைச்சுட்டா, கோபம் இல்லே, சண்டை இல்லே, பொறாமை இல்லேனு சொல்லறதோட அவர் நின்னதில்லே. செய்கைலேயும் காண்பிச்சார். அவரோட என்னை கம்பேர் பண்ணறது சரியில்லே ஸிஸ்டர். அந்தப் பக்குவம் வர எனக்கு இன்னும் பல வருஷம் ஆகும்..."

கமலம் டிபன் பாக்ஸை மூடி வைத்தாள்.

"உனக்கு வேணா நா உன்னை உங்கப்பாவோட ஒப்பிட்டது அதிகமா தோணலாம். ஆனா, எனக்கு நிச்சயமா அப்படித் தோணலை. இந்தச் சின்ன வயசுலேயே இல்லாத வங்க, ஏழை, அசிங்கம் பிடிச்சவங்கங்கிற பாகுபாடெல்லாம் பாக்காம நீ சேரி ஜனங்ககிட்ட அன்போட பழகறது எனக்கு ரொம்பப் பெரிய விஷயமாத்தான் படுது. எனக்கு வயசு முப்பத்து ரெண்டாவுது பூமா.... இதுக்குள்ளார கேவலமான ஜனங்களை நா நிறையப் பார்த்திட்டேன். பழகிட்டேன். எங்கம்மா சின்ன வயசிலேயே என்னை விட்டுட்டுச் செத்துட்டா. சின்னம்மா வந்தா. அவளுக்கு உறுமத்தான் தெரியுமே தவிர, சிரிக்கத் தெரியாது. தான், தன் சுகம்தான் அவளுக்கு ரொம்ப முக்கியம். பதினெட்டு வயசுலே என்னைக் கட்டி வைச்சாங்க... என் புருஷன் 'இவ மூக்கு நல்லா இல்லே'னு கட்டின மறுமாசமே வீட்டுக்குத் திருப்பி அனுப்பிச்சிட்டார். மூக்குப் பிடிக்கலைன்னு ஒரு மாசம் முன்னாலியே சொல்லி இருந்தா கல்யாணம் அது, இதுனு அத்தனை அமர்க்களம் பண்ணி இருக்க வேண்டாம். ஊர் ஜனங்களும் சின்னம்மாவும் சேர்ந்துக்கிட்டு ஒரு நிமிஷம் அக்கடானு உட்கார விடாம வாழா வெட்டி, வாழா வெட்டினு கரிச்சுக் கொட்டினாங்க.... சரி, இனியும்



தண்டச்சோறா இருக்க வேணாம்னு நர்ஸ் ட்ரெயினிங் படிச்சேன்... பிரைவேட்டா டாக்டர்கிட்ட வேலைக்கும் போனேன்.... அப்புறமா போன வருஷம்தான் இந்த செண் டர் பத்திக் கேள்விப்பட்டேன். பணம் காசு கொறைச்சலா கிடைச்சாலும் பரவாயில்லை. அன்புக்காக ஏங்கற மனுஷங்களுக்கு அன்பு கொடுத்து ஒண்ணுமே தெரியாதவங் களுக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லறது உத்தமமான வேலைனு மனசுக்குத் தோண, வந்திட்டேன். வாழ்க்கைலே இது வரைக்கும் நா பாத்த மனுஷங் களெல்லாம் வேற மாதிரி இருக்கறப்போ, இந்தச் சின்ன வயசுலே நீ மட்டும் வேற மாதிரி இருக்கிறது எனக்கு ஆச்சரியமா இல்லாம வேற எப்படி இருக்கும் சொல்லு?"

கமலத்தின் குரல் தழதழக்கிற மாதிரி தோன்ற பூமா எழுந்து அவள் அருகில் சென்றாள்.

என்ன சொல்லி அவளைத் தேற்றலாம் என்று புரியாமல் விழித்துவிட்டு, மூலையில் இருந்த பானை ஜலத்தில் ஒரு டம்ளர் மொண்டுவந்து 'இதைக் குடித்து கொஞ்சம் ஆஸ்வாஸப் படுத்திக் கொள்ளுங்கள்' என்ற தினுசில் நீட்டினாள்.

தண்ணீரைக் குடித்த கமலம் அரை நிமிஷம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பின் "மொத்தத்துலே அந்தச் சேரி ஜனங்க கொடுத்து வச்சவங்க..." என்று முனகினபடி எழுந்தாள்.

மதியம் பூராவும் காலை சேரி விஸிட் பற்றின ரிப்போர்ட் தயாரிப்பதிலும், செண்டர் தேடிவந்த நபர்களுக்கு மருந்து கொடுப்பதிலும், சுகாதாரம் என்றால் என்ன என்று விளக்குவதிலும் போயிற்று.

இரண்டு நாள் கழித்து திரும்ப தூளைமேடு சேரிக்கே கமலமும், பூமாவும் சென்றார்கள்.

அகப்பட்ட சேரி ஜனங்களை ஓரிடத்தில் கூட்டி இப் நா சொல்லறதை கவனமா கேட்டா உங்க வீட்டுப் பக களுக்கு இனிப்பு கிடைக்கும்' என்று சொல்லி டாய்லட் பற் கமலம் விளக்க ஆரம்பித்தாள்.

"தெரு மூலையிலே பொதுக் கழிவிடங்கள் கட் வைச்சிருக்கறதை ஏன் உபயோகப்படுத்த மாட்டேங்கறீங்க புரியலை. கேட்டா அந்தப் பீங்கான் ஓட்டையைப் பார்த் எங்க புள்ளைங்க பயந்துக்கிடுதுனு சொல்றீங்க. பெரியவங் நல்லவிதமா அதை உபயோகப்படுத்தினா, தானா பசங்களு உபயோகப்படுத்த மாட்டாங்களா, என்ன? இப்ப இங் வர்றதுக்கு முன்னால அந்தக் கட்டடத்துக்குள் நுழைஞ் பார்த்தேன். இரண்டு கக்கூஸ் மேலேயும் தகரம் போட் மூடிட்டு, சாமான்களை அடுக்கி இருக்கு. யார் வேலை அது ம்? சுத்தமா இருங்க, சுத்தமா இருங்கனு சொல்லி சேரிக்கு சேரி கக்கூஸ் வசதி செஞ்சி கொடுத்தா, நீங்கள்லாம் பொறுப்பு இல்லாம நடந்துகிட்டா எப்படி? ம்?..."

அதட்ட வேண்டிய சமயம் அதட்டி, கெஞ்ச வேண்டி நிமிஷம் கெஞ்சி நீளமாய் கமலம் லெக்சர் அடித் நாழிகையில் பூமா பையன்களின் சிரங்குக் கைகளை ஆராய்ந்தாள். தலைவலி ஜுரம் என்று சொல்லிக் கொண் வந்த நபருக்கு மாத்திரை கொடுத்தாள். மூக்கு ஒழுகி ஒழு மூக்குக்கும் மேல் உதடுக்கும் நடுவில் இருந்த பாக புண்ணாகிக் கிடந்த குழந்தைகளை அருகில் அழைத் மூக்கைச் சுத்தம் பண்ணி வாஸலின் தடவி விட்டாள் "ஜலத்துலே நிக்காதீங்கோ" என்று சொல்லி ஜலதோஷத்துக் மாத்திரை கொடுத்தாள்.

திரும்ப அவர்கள் அலுவலகத்துக்குப் புறப்பட்டபோ திருட்டு முழி முழித்துக்கொண்டு கிட்டத்தில் வந்த வாலிப ஒருவன் கமலத்தின் காதில் ஏதோ முணுமுணுக்க அவ புருவம் முடிச்சு முடிச்சாகச் சுருங்க நின்றாள்.



"நிச்சயமா தெரியுமா?" என்று கேட்டு அந்த வாலிபன் தலை ஆட்டின பின், 'வா பூமா' என்று அடுத்த சந்தைப் பார்க்க நடந்து, எருமை மாடுகள் கட்டி இருந்த ஒரு குடிசையின் முன் நின்றாள்.

மழையின் சகதி போதாதென்று, இரண்டு எருமை மாடுகள் குடிசையின் பக்கவாட்டை துவம்சம் பண்ணி இருந்தன. கணுக்கால் அளவுக்குச் சேறு... மூத்திர, சாணி நாற்றம். காதில் ரீங்காரமிட்ட கொசுக்கள்....

குடிசையின் வாசலில் வேப்ப இலை கொத்தாகச் செருகி இருந்தது.

"யாரு உள்ளே? வெளியே வா."

கமலம் அதட்டலாய்க் குரல் கொடுத்தும் உள்ளே இருந்து யாரும் வரவில்லை.

கமலம் இன்னும் உரக்க அழைத்தாள்.

"இப்ப நீ வரப்போறியா, இல்ல நா உள்ளே வரட்டுமா? ஆள் உள்ளார இருக்கிறது எனக்குத் தெரியும்... மாணிக்கம், சின்னக் கண்ணு... வாங்க வெளிலே..." இப்போது பெயர் சொல்லியே கமலம் அழைக்கவும், மெதுவாக ஒரு பெண்மணி வாசல் படியிடம் வந்தாள்.

"என்ன பண்ணிக்கிட்டு இருந்தே சின்னக்கண்ணு? ஒரு நாழியா கூப்பிடறது கேக்கலை?"—

"அடுப்புலே வேலையா இருந்தேன்... அதான்..."

ரவிக்கை அணியாமல், தலை சீவாமல், மஞ்சள் கயிறும், வெள்ளிக் காப்புமாக நின்ற அந்தப் பெண்ணிடம் ஒரு படபடப்பு காணப்பட்டது.

"எதுக்கு வேப்பிலை சொருகி வைச்சிருக்கே, சின்னக் கண்ணு?"

"அ.. அது.. பையனோட ஆத்தா வெளையாடறா அதான்..."

"எத்தனை நாளா?"

"இப்பத்தான் இரண்டு நாளா..."

"பொய் சொல்லக்கூடாது சின்னக்கண்ணு. பத்து நாளா உம் மகனுக்கு அம்மை போட்டிருக்கறதை ஏன் மறைக்கறே?"

"அய்யோ... நிசமா இப்பத்தான் ரெண்டு நாளா..."

"சரி... தள்ளு... உள்ள வந்து பையனைப் பாக்கறேன்..."

சின்னக்கண்ணு பதறினாள்.

"அ? வேணாம்... உள்ளார வர வேணாம்... ஆத்தாக்கு புடிக்காது..."

"ஆத்தா ஒண்ணும் சொல்லமாட்டா, நீ நகரு..."

வாசல் படியில் சின்னக்கண்ணு குறுக்காக நின்று கொண்டாள்.

"இன்னிக்கு எறங்கிடிச்சி... நாளைக்கு தலைக்கு ஊத்திடுவேன்... நீ என்ன தீட்டோ, குத்தமோ... உள்ளார வரவேணாம்..."

கமலம் தீர்க்கமாகச் சின்னக்கண்ணை ஏறிட்டுப் பார்த்தாள். அப்புறம் அழுத்தமாக, ஆனால் இதமாகப் பேசினாள்.

"பையனுக்குப் பெரியம்மை போட்டிருக்குனு நா கேள்விப்பட்டேன்.... உடனே அதுக்கு வைத்தியம் பண்ணனும் சின்னக்கண்ணு... இல்லாட்டி, உன் மகன் உசிருக்கே ஆபத்தாயிடும். நல்லதைச் சொன்னா உங்களுக்கு ஏன் புரியமாட்டேங்குது? நகரு... நா உள்ளே வந்து பார்க்கணும்..."



"வேணாம்... நீ வர வேணாம்... ஆத்தாளுக்குக் கோபம் ஜாஸ்தியா பூடும்..."

சின்னக்கண்ணு தடுக்கத் தடுக்க, அதை லட்சியம் செய்யாமல் கமலம் செருப்பை அவிழ்த்துவிட்டு உள்ளே நுழைய பூமாவும் தொடர்ந்தாள்.

குடிசையின் மூலையில் நாலு வயசுப் பையன் ஒருவன்.

கிட்டத்தில் போனபோது பையன் நினைவு இல்லாமல் கிடப்பது புரிந்தது.

கை, கால், முகம், உடம்பு பூராவும் கொப்புளங்கள். மொச்சைக் கொட்டை மொச்சைக் கொட்டையாய் அம்மைக் கொப்புளங்கள். ஊசி குத்த இடமில்லாமல் வெடித்திருந்த நீர் கொப்புளங்களைப் பார்க்கும்போது வயிற்றில் என்னமோ பண்ணியது.

பெரியம்மைதான் நிச்சயம்.

உடனடியாகக் குழந்தையை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும். இல்லாவிட்டால் குழந்தைக்கு ஆபத்து. சேரியில் உள்ள மற்றவர்களுக்கும் ஆபத்து.

மேற்கொண்டு எதுவும் பேசாமல் செண்டருக்கு ஆள் அனுப்பி டாக்டரை வரவழைத்தார்கள்.

"அய்யோ... வாணாம், வுட்டுடு எம்புருசன் கூட இல்லியே, நா என்னா பண்ணட்டும்? ஆத்தாளுக்குக் கோபம் வந்துடப் போவுதே...." என்று அலறிய சின்னக் கண்ணை லட்சியம் செய்யாமல் பிள்ளையை வண்டியில் ஏற்றினார்கள். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

"ஸிஸ்டர்... சாப்பிட வரலியா?"

"ம்... எனக்குப் பசிக்கலை நீ சாப்பிடு பூமா..."

"அந்தப் பையனை நினைச்சு வருத்தப்படறேளா? சரியாயிடும் கவலைப் படாதீங்கோ."

கமலம் பெருமூச்சு விட்டாள்.

"இப்படித்தான் இரண்டு மாசம் முன்னாலே கூவத்துக்குப் பக்கத்துலே இருக்கிற சேரிலே பெரியம்மை கண்டு மறைச்சு வைச்சிருந்த பெண் குழந்தையை வலுக்கட்டாயமா ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன். முத்தின கேஸ் மறு நாளே தவறிடுச்சு. அதுக்கப்புறம் அந்தப் பக்கம் போனாலேயே கொலைகாரி வரா பாருனு பக்கம் பக்கமா ஜனங்க ஏசினாங்க... இவங்க நலனுக்காகத்தான் நாம பாடு படறோம்ன்றது இவங்களுக்கு என்னிக்குப் புரியும் பூமா?"

கமலத்தின் தவிப்பும், ஆதங்கமும் மனசை ஏகமாய் பிராண்ட அன்றைக்கு விடு திரும்பினதும் இதுநாள் வரை தனக்காகக் கடவுளிடம் எதுவும் வேண்டிக் கொண்டிருந்திராத பூமா குளித்து ஸ்வாமி படத்துக்குக் கீழ் அமர்ந்து விஷ்ணு ஸகஸ்ரநாமத்தை பக்தியுடன் பாராயணம் செய்து 'கடவுளே, அந்தப் பையனை நல்லபடியா ஆக்கிவிடு. கமலத்தை இன்னொரு முறை பழிக்கு ஆளாக்காதே' என்று மனசார வேண்டிக் கொள்ளவே செய்தாள்.

## 8

"ம்... அப்புறம்?"

"அப்புறம் என்னம்மா? எங்க இரண்டு பேருக்கும் ரொம்ப கஷ்டமா போயிடுத்து. வெளியிலே கொஞ்சம்கூட காண்பிச்சுக்காம, அசட்டுச் சிரிப்பு சிரிச்சுண்டு 'வேலை இருக்கு, வரோம்'னு சொல்லிட்டுக் கிளம்பிட்டோம்."



சிரித்துக்கொண்டே பேசியதில் பூமாவுக்குப் புரை ஏறியது.

"மெதுவாம்மா... மெதுவா... ஒண்ணு பூராத்தையும் சொல்லிட்டுச் சிரி, இல்ல சிரிச்சுட்டுச் சொல்லு...."

வெண்கலப்பானையிலிருந்து அரிசி உப்புமாவை கரண்டியால் கிண்டி எடுத்தவாறு ஞானம் பேசினாள்.

பூமாவுக்கு அரிசி உப்புமாவின் அடிக் காந்தல் என்றால் ரொம்பப் பிடிக்கும். தோசை மாதிரி வெண்கலப் பானையின் அடியில் ஏடு கட்டிப் போகும் உப்புமாவை விரும்பிச் சாப்பிடுவாள் என்பதால், சுருணையால் பானையைச் சாய்த்துப் பிடித்து, தோசை திருப்பியால் காந்தலை நெம்பி எடுத்தாள்.

"கை கால் அலம்பிண்டியா? உட்காரு, சூடு ஆறுறதுக்கு முன்னால சாப்பிடு... தொட்டுக்கத் தொக்குப் போடட்டுமா? இல்லை சர்க்கரைதானா?"

"இரண்டும்!" —பூமா தட்டின்முன் உட்கார்ந்தாள்.

அன்றைக்கு ஹெல்த் செண்டரில் ஆனாலும் கூத்து அதிகம்தான்.

காலையில் இவள் அலுவலகத்தில் நுழைந்ததுமே கமலம் கிட்டத்தில் வந்து பரிதாபத்தோடு நின்றாள்.

"என்ன ஸிஸ்டர்!"—

"வகையா நாம இரண்டு பேரும் மாட்டிக்கிட்டோம் பூமா—பெரிய டாக்டர் சேரி ஜனங்களுக்கு இன்னிலேந்து பேமிலி பிளானிங் பத்தி எடுத்துச் சொல்லணும்னு சொல்லிட்டார்."

குடும்பக்கட்டுப்பாடு பற்றியா!

நாங்களா?

பூமாவுக்கு ரொம்ப வெட்கமாக இருந்தது.

நம் நாட்டுக்கு இந்தப் பிரசாரம் ரொம்ப அத்தியாவசி மானதுதான்.... ஆனாலும்?

பயிற்சியில் இதைப் பற்றிச் சொல்லித் தந்ததும் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொன்னதும் வாஸ்தவம்தான் என்றாலும், இன்னொரு பெண்ணிடம்போய் குடும்பக் கட்டுப்பாடு பற்றி... அதுவும்... கல்யாணமாகா நானா?...

"வந்து ஸிஸ்டர்... நீங்க போய் சொன்னாக்கூட ஏத்துப்பா... ஆனா நா சொன்னா.... வந்து..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதம்மா, 'பூமாவையும் கூடக் கூட்டிட்டுப் போ.... அவளைக் கண்டா சேரி ஜனங்களுக்கு ரொம்பப் புடிக்கும்'னு டாக்டர் சொன்னப்புறம் மறு அப்பீல் ஏது?"

புறப்பட்டார்கள்.

சேரியைப் பார்க்க நடந்தபோது என்ன பேசுவது, எப்படி ஆரம்பிப்பது என்ற சந்தேகம் எழ, கமலத்திடம் அவற்றைப் பற்றிக் கேட்டாள்.

"என்னை இன்னிக்கு மட்டும் தனியா விட்டுடாதீங்கோ ஸிஸ்டர்... உங்க கூடவே நானும் நின்னுக்கறேன்... இன்னும் கொஞ்ச நாள் போனபிறகு, தனியா கிளாஸ் எடுக்கக்கூட நா ரெடி... ஆனா இன்னிக்கு மட்டும் வேண்டாம்... ப்ளீஸ்"

பரிதவிக்கும் பூமாவைப் பார்த்தால் கமலத்துக்குச் சிரிப்பு வந்தது.



"வீணா அவஸ்தைப் படாதே பூமா. 'பசங்களை ஏன் ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டேங்கறீங்க, ஏன் சத்தான ஆகாரம் கொடுத்து வளர்க்க மாட்டேங்கறீங்க'னு ஆரம்பிச்சு, நைஸா இரண்டு வார்த்தை குடும்பக் கட்டுப் பாட்டைப் பத்தியும் சொல்லிட்டு வந்திடலாம், என்ன?"—

பூமா சரி என்று தலையை ஆட்டினாள்.

இதுநாள் வரை சுத்தம், சுகாதாரத்துக்கு முக்கியத்துவம் அளித்து வந்த சென்டர் இனிமேல் தையல் கிளாஸ், பேமிலி பிளானிங் பிரசாரம் போன்றவற்றையும் செய்யத் தீர்மானித்துவிட்டதால் கமலத்துக்கும் இது பற்றிப் பேசுவது இதுதான் முதல் அனுபவமாம்: சொன்னாள்.

தூளைமேடு சேரியை அடைந்தார்கள். கோவணம் நிர்வாணம் என்று திரிந்த குழந்தைகளை மரத்தடியில் கூட்டினார்கள். மூக்கு ஒழுகலைத் துடைத்தார்கள். கண்ணில் விழுந்த முடியை ஒதுக்கச் சொல்லி வரிசையாய் உட்காரச் செய்தார்கள்.

காந்தி பற்றின குட்டிக் கதை ஒன்றைப் பூமா சொன்னாள். பின் பாரதியாரின் 'ஒளி படைத்த கண்ணினாய்' பாட்டின் முதல் நாலு அடிகளைப் பாடி பசங்களைத் திருப்பிப் பாடச் சொன்னாள்.

பாட்டு கிளாஸ் முடிந்தது.

கமலம் முன்னால் வந்து நின்று கொண்டாள்.

"ஓதாமல் ஒரு நாளும்" என்று அவள் சொல்லி நிறுத்த "இருக்க வேண்டாம்" என்று குழந்தைகள் கோரஸாய் முடித்தன.

"ஒருவரையும் பொல்லாங்கு?"

"சொல்ல வேண்டாம்..."

"கூழானாலும்?"—

"குளித்துக்குடி"—

"கந்தையானாலும்?"—

"கசக்கிக்கட்டு"—

கீச்சுக் குரலில் கத்தின குழந்தைகளைக் கமலம் ஊன்றிப் பார்த்தாள்.

"படிக்காம இருக்கிறது தப்புனு புரியுது இல்லே? அப்ப பள்ளிக்கூடத்துக்கு ஏன் நீங்க யாரும் ஒழுங்கா வர மாட்டேங்கறீங்க? ம்?... குளிக்காம கூழு குடிக்கிறது கூட தப்புனும், கிழிசல் ஆனாலும் துவைக்காம கட்டறது நல்லது இல்லேனும் அழகா சொல்றீங்க... ஆனா உங்களிலே ஏன் ஒருத்தர் கூட குளிக்கிறதில்லே, சுத்தமா துவைச்சு உடுத்தற தில்லே? ம்?.....

குழந்தைகள் பேசாமல் இருந்தார்கள்.

அத்தனை பேரிலும் பெரியவர்களான சொக்கம்மா வையும், முத்தையனையும் கமலம் எழுப்பி நிற்க வைத்தாள்.

"வயசு என்ன ஆவுது உங்களுக்கு? தெரியாதா? சரி, அத விடு... பள்ளிக்கூடத்துக்கு ஏன் நீங்க போகமாட்டேன் நீங்க? ஒழுங்கா குளிச்சு, சுத்தமா நீங்க இருந்தா மத்த பிள்ளைங்களும் உங்களைப் பாத்துக்கிட்டாவது நல்லது கெட்டதைக் கத்துப்பாங்க இல்லே?... நாங்களும் ஒவ்வொரு ட்ரிப் இங்கே வரப்பவும் கரடியா கத்தறோம்.... ஏன் காதுலே வாங்க மாட்டேன்றீங்க? ம்?"...

சொக்கம்மா தைரியமாப் பதில் பேசினாள்.

"இஸ்கோலுக்குப் போகணும்னா ஆயா அடிக்குது..."

"குளிக்கணும்னா, தண்ணி இல்லே போடானு அம்மா வெரட்டுது" – என்றான் முத்தையன்.

இப்போது மத்த பிள்ளைகளுக்கும் தைரியம் வந்து விட்டது.



"எங்க வூட்டுலேயும்தான்... எங்க வூட்டுலேயும்தான்" என்று ஒன்றாய் கத்தின.

"சரி... சரி... உங்க பெரியவங்களை நா கேட்டுக்கறேன். இன்னிக்கு கிளாஸ் அவ்வளவுதான். மிட்டாய் வாங்கிட்டு நீங்க போங்க..."

"ஆளுக்கு நாலு ஆரஞ்சு சுளை மிட்டாய்களைக் கொடுத்து அனுப்பின பின், சேரியில் கொஞ்சம் நாட்டாண்மை செலுத்தக் கூடிய ஆப்பக்காரி ஆயாவைத் தேடிக்கொண்டு இருவரும் போனார்கள்.

பதினொரு மணி தறுவாய் ஆதலால் வியாபாரம் அத்தனை ஜரூராக நடந்து கொண்டிருக்கவில்லை.

"வந்துட்டீங்களா? எங்கடா ரெண்டு நாளா காணமேனு பார்த்தேன்" என்று ஆயா வரவேற்புக் கொடுக்க கிட்டத்தில் போய் அமர்ந்துகொண்ட கமலம் 'இப்ப என் திறமையைப் பாரு' என்கிற தினுசில் பூமாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள்.

"என்ன இருந்தாலும் உன் கை வாசனை தனிதான் ஆயா... சந்து முனைலே வர்றப்பவே கமகமன்னு வாசனை ஆளை இழுக்குது..."

கமலத்தின் பாராட்டு ஆயாவின் உச்சியைக் குளிர்ந்து போக வைத்துவிட்டது வெளிப்படையாகத் தெரிந்தது.

"அய்யோ... என்ன இன்னிக்கு ஐஸ் வைக்கிறே?– இரண்டு ஆப்பம் தரேன், துண்றியா?"—

"வேணாம் ஆயா... வயிறு முட்ட இப்பத்தான் சோறு தின்னிட்டு வர்றோம்" என்ற கமலம் "சேரிப் பொம்பளைங்களைக் கூட்டு ஆயா, கொஞ்சம் பேசணும்" என்றாள்.

ஆயா கமலத்தையும் பூமாவையும் ஏற இறங்கப் பார்த்தாள். பின் "யாருடி அது? செகப்பியா? இங்க வாடி!

போய் உங்க ஆத்தா, எதிர்வீட்டு பக்கத்துவூட்டு அக்கா எல்லாரையும் நா வரச் சொன்னேன்னு சொல்லி இட்டா... என்றாள்."

பத்துப் பெண்கள் கூடினார்கள்.

கால்மணியில் பத்துப் பெண்கள் கூடினார்கள்.

"கஷ்டப்பட்டு உன்பாடு என்பாடுன்னு இப்பத்தான் சேரிலேந்து சிரங்கை ஒருவழியா ஒழிச்சிருக்கோம். பிள்ளைங்க அசுத்தமா இருந்தா திரும்ப நொடிலே அது வந்துடும். பசங்களை ஏண்டா குளிக்கலைன்னு கேட்டா, தண்ணி இல்லே, ஆயாதான் குளிக்கவேணாம்னு சொல்லிடுச்சின்னு சொல்லுதுங்க... தேய்ச்சு குளிப்பாட்டி, வயித்துக்குச் சத்தான சாப்பாடு போட்டு வளர்த்தாத்தானே குழந்தைங்க நாளைக்கு நோய் நொடி இல்லாம இருக்கும்? அத விட்டுட்டு..."

கமலத்தை முடிக்கவிடாமல் குறுக்கே பாய்ந்தாள் ஒருத்தி.

"ஏதோ முடிஞ்சப்போ கவனிச்சுக்கலாமே தவிர இதுங்களோடேயே மன்னாடிக்கிட்டு நின்னா வீட்டு வேலையப் பாக்கறது யாரு? வேலைக்குப் போய் சம்பாரிச்சுக்கிட்டு வர்ற புருஷனை கவனிப்போமா, வூட்டு வேலையப் பாப்பமா இல்லே, இதுங்களோட லோல் படுவமா, சொல்லு?"

"சரி, அத விடு. பிள்ளைங்களை ஏன் ஸ்கூலுக்கு அனுப்ப மாட்டேங்கறீங்க? அதுங்க படிக்க ஆசைப் படறப்ப தடுக்கறது சரியா?"—

"ஆசைப்பட்டா ஆச்சா? அதுங்களுக்குப் படிப்பு எங்க ஏறுது?"—

"அனுப்பிச்சாத்தானே தெரியும், ஏறுமா, ஏறாதானிட்டு?"—

"ஆங்! நீ சொல்லுவே சுளுவா அனுப்புனிட்டு.... இங்க இருந்தாலும் ஆப்பக்கடையைப் பார்க்கலாம். சாணி



பொறுக்கிட்டு வந்து தட்டி நாலு காசு சம்பாரிக்கலாம்... தீழ்க்கடை புள்ளைங்களைப் பார்த்துக்கலாம். எம்மாம் வேலை இருக்குது? அத்த வுட்டுட்டு இஸ்கோலுக்கு வந்து அதுங்க என்ன பண்ணப் போவுது?"—

தாட்டியாய் இருந்த பெண் பேசினதை மற்றவர்கள் ஒருசேர ஆமோதித்தார்கள்.

எதிர்பார்த்திருந்த விதத்தில் பேச்சு போக, டக்கென்று கமலம் மண்டையில் தட்டினாள்.

"இதுக்குத்தான் வதவதனு பிள்ளைங்களை பெத்துக்காதீங்கனு சொல்லறது. ஆறு எட்டுனு வருஷத்துக்கு ஒன்னா பெத்துகிட்டா, அவஸ்தை யாருக்கு? உங்களுக்குத்தானே! ஒண்ணு, இரண்டுனு நிறுத்திகிட்டா, நாளைக்கு பசங்களை நல்லா படிக்க வைக்கலாம், நல்ல துணி எடுத்து உடுத்தலாம், வயிறாரச் சாப்பிடலாம், வேலை வேலைனு இடுப்பு ஒடிய லோல்பட வேணாம்... என்ன புரியுதா?"

"அதுக்காவ என்ன பண்ணணும்னு நீ சொல்றே? பொறந்திட்ட குழந்தைகளைக் கழுத்த நெரிச்சுப் போட்டுடச் சொல்றியா?"—

கேள்வி கேட்டவளின் குரலில் கோபம் கலந்திருந்தது.

"அப்படியா செய்யச் சொல்றோம்? பிறக்காமத் தடுக்க எத்தினியோ வழி இருக்கு... தெரியுமா?"

"அடி ஆத்தி! மரம் வைச்சவன் தண்ணி ஊத்த மாட்டானாங்காட்டியும்! அவ அவ புள்ளை பொறக்காதானு அரச மரத்தைச் சுற்றி வர்றா... நீ என்னடான்னா புள்ளை பெத்துக்காதேனு தகிரியமா சொல்றியே! நாளைக்கு அதுங்க தானே எங்களுக்குச் சொத்து?"—

சுற்றி நின்ற பெண்கள் கையைத் தட்டி முகவாயில் வைத்துக் கொண்டார்கள். முகத்தைச் சுளுக்கினார்கள்.

'போங்கடி போக்கத்த பெண்டுகளா' — என்று அலட்சியமாய்ப் பார்த்தார்கள்.

"நா சொல்லறதை நீங்க தப்பா புரிஞ்சிகிட்டா என்ன பண்றது! நா என்ன சொல்றேன்னா..."

ஆரம்பித்தவளை ஆப்பக்கார ஆயா தடுத்து நிறுத்தினாள்.

"இரு... இரு... நீ என்னமோ சொல்லப் போறேன்னிட்டு இவங்களை எல்லாம் கூட்டியாரச் சொன்னா, இப்ப திடுக்கினுட்டு வேற என்னமோ பேசறியே! இது நல்லா இல்லே தாயி... போன வாரம்கூட சில ஆம்பிளைங்களை கூட்டி வைச்சிக்கிட்டு ஒரு டாக்குடரு இந்த மாதிரிதான் பேசினாராம். என்ன பேச்சுனு இதை யெல்லாம் பேசறிங்களோ எனக்குப் புரியலை... ஆமா, இம்மாம் பேச்சு பேசறியே, நா கேக்கறத்துக்குப் பதில் சொல்லேன்.... உனக்கு கண்ணாலம் ஆயிடுச்சா?"—

கமலம் தயக்கத்துடன் 'ம்ஹூம்' என்றாள்.

"அந்தக் குட்டிக்கு?"—

"இன்னும் இல்லே..."

"நா பத்து பெத்து வளர்த்தவ; இந்த முனியம்மா ஏழு பெத்தவ.... அஞ்சலைக்கு ஆறு புள்ளை.... இவளுக்கு நாலு... இத்தினி பெத்து வளர்த்த எங்க முன்னால, கண்ணாலம் கூட ஆவாத பொட்டச்சிங்க நீங்க ரெண்டு பேரும் வந்து நின்னுக்கிட்டு, இத்தனை பேச்சுப் பேசறீங்களே இது நாயமா? நா தெரியாமத்தான் கேக்கறேன், புருஷன் சுகம் பத்தி உனக்கு என்னா தெரியும்? இல்லே பிரசவ வலியோ, பிள்ளைக்கு பால் கொடுக்கற சுகமோ உனக்கு என்னா புரியும்? ம்? போ போ... வேலையத்துப் போயி இன்னொரு தபா இந்தப் பேச்சை இங்க எடுக்காதே... அப்பால நாங்க பொல்லாதவங்களா ஆகிடுவோம்... ஆமா..."



முகத்தைக் கொண்டு எங்கே வைத்துக் கொள்வது என்று புரியாமல் தவித்துப் பறந்து அசட்டுச் சிரிப்போடு செண்டருக்கு வந்து சேர்ந்ததை விவரமாக அம்மாவிடம் பூமா சொல்லி முடித்ததும் இருவருக்கும் சிரிப்பு தாளமாட்டாமல் பீறிக்கொண்டு கிளம்பியது.

"நல்ல பொண்கள் நல்ல வேலை..." என்று சொன்ன படியே வெண்கலப் பானையைத் தேய்க்கப் போட எழுந்து ஓரடி வைப்பதற்குள் யாரோ தள்ளி விட்ட மாதிரி ஒரு பக்கமாய் ஞானம் சாயவே, ஒரே தாவலில் அம்மாவை பூமா தாவிப் பிடித்துப் கொண்டாள்.

"என்னம்மா?"—

"ஒண்ணுமில்லே..."

"தலையைச் சுத்தி, விழப்பாத்திட்டு ஒண்ணுமில்லேனு சொல்லறியே!"

அம்மாவின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கி முத்தத்தில் போட்ட பூமா, அவள் கையைப் பிடித்து நாற்காலியில் உட்கார வைத்தாள்.

"என்ன பண்ணுறது, சொல்லேம்மா?"—

"ஒண்ணுமில்லே... ரெண்டு நிமிஷம் போனா சரியாயிடும்..."

"அப்ப, ஏற்கனவே இப்படித் தலை சுற்றல் வந்திருக்கா?"

"......"

"சொல்லும்மா"—

"ம்... லேசா... கொஞ்ச நாளா... அப்பப்ப கண்ணை மறைக்கிறது..."

சூடாக காபி கலந்து அம்மா கையில் கொடுத்துவிட்டு "கொஞ்ச நாழி படுத்துக்கோ" என்றவள். தனக்குத் தானே ஏதோ யோசித்துக் கொண்டிருந்துவிட்டு அரை மணி கழித்து "ஆத்மா மாமாவைப் பாத்திட்டு வரேன்ம்மா" என்று புறப்பட்டாள்.

நல்ல வேளையாக அவர் வீட்டில் இருந்தார்.

இருட்டுகிற சமயத்தில் வந்தவளைப் பார்த்து ஆச்சரியப் பட்டுப் போனார்.

"என்ன பூமா?"–

அம்மாவின் தலை சுற்றலைப் பற்றி அவரிடம் சொன்ன பூமா "விடாம தோண்டித் துருவினப்புறம் கொஞ்ச நாளாவே இப்படி இருக்குனு சொல்றா. டாக்டர் யாராவது பார்க்கலாமா? வேணா ஹெல்த் செண்டருக்குக் கூட்டிட்டு போய் ரமணன் கிட்ட காட்டட்டுமா? நீங்க என்ன சொல்றேள்?" என்றாள்.

கலங்கிக் கொண்டு பேசும் பூமாவை அனுசரணையோடு ஆத்மா ஏறிட்டார்.

"அனாவசியமா கவலைப்படாதே... அம்மாவுக்குப் பயப்படும்படி ஒண்ணும் இருக்காது... பிளட் பிரஷர் இருந்தாக்கூட இப்படித்தான் ஆளை மயக்கும். நா நாளைக்கு மதுரைக்குப் போறேன், நாலு நாளிலே வந்துடுவேன். எனக்குத் தெரிஞ்ச பையன் இங்க மயிலாப்பூர்லியே பெரிய டாக்டராயிருக்கான். நா வந்தப்புறம் அம்மாவை கூட்டிட்டுப் போய் காட்டி, தலைலேந்து கால் வரை செக்அப் பண்ணச் சொல்லிடலாம்... வீணா செண்டருக்கு அம்மாவை அலைக்கழிப்பானேன்..."

அதுவும் சரிதான். செண்டரில் அத்தனை வசதி போதாதுதான்...



இரண்டு நாளில் சம்பளம் வேறு வந்துவிடும். தாராளமாய் செலவு பண்ணி டெஸ்ட் செய்யலாம்....

நாலு நாள் தாமதிப்பதால் ஒன்றும் ஆகி விடாது என்ற நினைப்பிலும் 'சரி' என்று சொல்லி பூமா திரும்பினாலும் 'இவர்கள் என்ன சொல்வது. நான் என்ன கேட்பது?'– என்று ஞானத்தின் தலைச் சுற்றல் திமிராய் வாலாட்டியதில் சரியாக இரண்டாம் நாள் அந்தச் சம்பவம் நடந்தது.

INDRA LENDING LIBRARY
162, Goundampalayam Road,
Edayarpalayam,
COIMBATORE-641 025.

# 9

அன்றைக்குச் சம்பள தினம்.

பணம் வரப் போகும் குஷி அத்தனை பேர் முகத்திலும் தெரிந்தது.

வேலை வேலை என்று உயிரை விடும் கமலம்கூட மதியச் சாப்பாட்டின்போது "அரை நாள் லீவு போட்டுட்டு சினிமா போகலாமா பூமா?" என்றதும் சின்னதாகச் சிரித்து 'வேண்டாம்' என்று பூமா தலையாட்டினாள்.

"ஏன்? போனா என்னவாம்? உங்கம்மா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. என்னோடதானே வரே. அப்புறம் என்ன? பராசக்தி படம், பூமா... சிவாஜி கணேசன்னு புதுசா ஒத்தர் பிரமாதமா நடிச்சிருக்காராம்.... வாம்மான்னா..."

"மன்னிச்சிடுங்கோ ஸிஸ்டர்... நாளைக்கு வேணா அம்மாகிட்ட சொல்லிட்டு வந்துடறேன். போலாம்...."

கமலம் ஏமாற்றத்தோடு நகர்ந்துவிட்டாள்.

அரை மணியில் ஒவ்வொருவராக அழைத்து சம்பளத் தைப் பட்டுவாடா செய்தார்கள்.

முழுசாகத் தொண்ணூறு ரூபாயைப் பத்து ரூபா நோட்டுகளாகக் கைப் பையில் வைத்தபோது பூமாவுக் ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

எத்தனாம் மாச சம்பளம் இது?

விரல் விட்டு எண்ணியபோது எட்டாவது என் புரிந்தது.

பிரமாதமாக வாரிக் கொட்டிவிட முடியாவிட்டாலு இந்தத் தொண்ணூறு ரூபாயின் வருகை வீட்டுக்கு அம்மாவுக்கும் பல விஷயங்களில் உதவியாக இருப்ப நிஜம்தான்.

பணத்தைப் பையில் வைத்து விட்டு, ஒரு நிமிஷ மேஜையில் சாய்ந்து உட்கார்ந்தபோது முதல் மாச சம்ப வாங்கின நாள் ஞாபகத்துக்கு வந்தது.

அன்றைக்கு அவளிடம் காரணமில்லாமல் என்னடே படபடப்பு.

முதல் முதல் சுய சம்பாத்தியத்தைக் கையில் வாங் போகிறோம் என்றா?

அம்மாவின் பளுவை நாம் குறைக்க ஆரம்பி விட்டோம் என்றா?

இல்லை இரண்டுமே தானா?

சம்பளப் பணத்தை வாங்கிக்கொண்ட நிமிஷத்தில் ம துள்ளிய துள்ளலில் விழியோரங்களில் ஜலம் கட் கொண்டது.

அந்தக் கை நடுக்கமும், ஈர விழிகளும் புதுசாக இரு 'என்ன பூமா எனிதிங் ராங்?' என்றார் டாக்டர் ரமண



"இ... இல்லே டாக்டர்... நத்திங்" என்று கிசுகிசுப்பாய்ச் சொல்லி விட்டு ஸீட்டுக்கு வந்தாள்.

பொருந்தி உட்கார்ந்து ரிப்போர்ட் எழுத முடியும் என்று தோணாததால் அரைமணியில் திரும்ப டாக்டர் முன் போய் நின்றாள்.

"எஸ்"

"உடம்பு சரியில்லாத மாதிரி இருக்கு.... பர்மிஷன் போட்டுட்டு வீட்டுக்குப் போகலாமா டாக்டர்?"

டாக்டர் புரிந்து கொண்டு சரி என்று தலை ஆட்டினார்.

பையோடு கிளம்பிய பூமா தண்ணித்துறை ஆஞ்சனேயர் கோயிலுக்குச் சென்றாள்.

பூட்டியிருந்த கதவின் முன் நின்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள். கைவண்டிக்காரனிடம் ஒரு சீப்பு மலைப்பழத்தை வாங்கிக்கொண்டு, முண்டகக் கண்ணி அம்மன் கோயில் தெருவிலிருந்த ஆத்மாவின் வீட்டுக்குப் போனாள்.

வேளை கெட்ட வேளையில் வந்து நின்றவளைப் பார்த்து ஆத்மாவுக்கு ஆச்சர்யம்.

"என்ன பூமா இது. மணி மூணுதான் ஆறது.... அதுக்குள்ள வந்திட்டே! இன்னிக்கு வேலைக்குப் போகலியா?"

பதில் பேசாமல் பழத்தையும், பணக் கவரையும் அவரிடம் கொடுத்தாள். விழுந்து நமஸ்கரித்தாள்.

"சம்பளம் வாங்கிட்டியாமா?... சந்தோஷம். ஆமா, என்கிட்ட ஏன் கொண்டு வந்து தரே? அம்மாகிட்டக் கொடும்மா..."

எதிரில் மண்டியிட்டு அமர்ந்த பூமா, முழங்கால்களி முகத்தைப் புதைத்துக்கொண்டு மெள்ள விசு ஆரம்பித்தாள்.

இரண்டு நிமிஷம்போல அவளை அழவிட்ட பி ஆத்மா மெதுவாக "பூமா" என்று அழைத்தார்.

"உன் அவஸ்தை எனக்குப் புரியறதும்மா... பதினே வயசுச் சின்னப் பொண்ணா இருந்தாலும் மகா பெ மனுஷி மாதிரி குடும்பப் பொறுப்பைச் சுமக்க மு வந்துவிட்ட உன் மனசை என்னால நன்னா புரிஞ்சி முடியறது. இப்ப நீ இப்படி அழறதுக்குக் காரணம் உனக் புரியலையோன்னோ? என்னமோ மனசைப்பாடு படுத்து அதைத் தாங்க மாட்டாம கலங்கறே... அதானேம்மா விஷய

மனசுக்குள் எட்டிப் பார்த்துத் துழாவின மாதிரி மா பேசவும் பூமா 'ஆமாம்' என்று தலை ஆட்டினாள்.

"கார்த்தாலேந்தே நச்சு நச்சுனு ஓர் அவஸ்தை மா அது என்னனு எனக்கு விளக்கத் தெரியலை. சம்பளத்தை கையிலே வாங்கினதும் அது ஜாஸ்தியாயிடுத்த சென்டர்லியே இருந்தா அத்தனை பேர் முன்னாலை அழுதுடுவேனோனு பயமா போயிடுத்து... பர்மிஷ கேட்டுண்டு வந்துட்டேன்."

"வேற ஒண்ணுமில்லே பூமா... இத்தனை வருஷ அம்மா தனியா சிரமப்படறதைப் பார்த்து நீ உள்ளுக்குள் மருகிண்டு இருந்திருக்கே... ஐயோ நம்மால இவ கஷ்டத்தை குறைக்க முடியலையேனு அவஸ்தைப் பட்டிருக்கே. இன்னி அந்த வேதனைக்கு வடிகால் கிடைச்ச உடனே அ நிம்மதியை உன்னால் தாங்கிக்க முடியலை. விஷ அவ்வளவுதான். எப்பவுமே ரிலீஃப் கிடைக்கறப்போ கண்ணுலே இப்படித்தான் மளமளனு வேதனையெல்லா பிரவாகமா இறங்கும்... இன்னும் சித்த நாழிலே துக்



மறைஞ்சு சந்தோஷம் மட்டும் ஜிலுஜிலுனு இருக்கும்.... நீ வேணா பாரேன்..."

சின்னக் குழந்தைக்கும் புரிகிற மாதிரி ஆத்மா இதமாகப் பேசினதில் பூமா வெகு சீக்கிரமே தன்னைத் தேற்றிக் கொண்டாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு 'தாங்ஸ்' மாமா என்றபோது அப்பாவைக் கண்டு மகள் சிரிக்கிற அன்பான சிரிப்பொன்று அவள் அதரங்களில் மின்னியது.

"தாங்ஸ் எதுக்கும்மா? நீ யாரு? என் சுந்தரேசனோட பொண்ணு இல்லையா? உனக்கு நல்லது கெட்டதுன்னா அதுலே எனக்கு பாத்தியதை இல்லையா?... ம்?... ஒண்ணு மட்டும் சொல்றேன். நன்னா கவனத்துலே வைச்சிக்கோ பூமா- ஊர் இருக்கு பாரு, அது எப்போதும் எந்தவிதமாகவும் பேசும்... நீ யாருக்கு பயப்படறியோ இல்லையோ உன் மனசுக்குக் கண்டிப்பா பயப்படணும்... அது தப்பு, ரைட்டுனு சொல்லறதை ஏத்துண்டு புத்திசாலித்தனமா நடந்துக்கணும். அப்புறம், வெளிலே ஒரு வேலைக்குனு வந்தப்புறம், மனுஷாளை சந்திக்கறதுக்கோ, இல்லை சந்தர்ப்பம், சூழ்நிலைய எதிர் நோக்கறதுக்கோ நீ கலங்கவே கூடாது. தைரியமா, கஷ்டநஷ்டம் அத்தனையும் எதிர்த்துச் சமாளிக்க நீ எப்பவும் தயாரா இருக்கணும். 'அட, அவ பொம்பளை, வீக்கர் செக்ஸ்'னு யாரும் உன்னை ஒரு விரல் காட்டிச் சொல்ல நீ இடம் தரக் கூடாது. மனசுக்குள்ளே ஆயிரம் வேதனை, பிரச்சினை இருக்கலாம். ஆனா அதை இரண்டாம் பேர் தெரிஞ்சுக்கற மாதிரி நடந்துக்கறது மட்டும் கூடவே கூடாது. எதுவானாலும் கண்கலங்காம ஏத்துண்டு விவேகியா, யதார்த்தமா இருக்கப் பழகிக்கணும். என்ன பூமா புரியறதாம்மா?"

பூமாவுக்குப் புரிந்தது.

"சரி இப்போ சொல்லு.... இந்தப் பணத்துக்கு என்னென்ன செலவு யோசிச்சு வைச்சிருக்கே?"

"அம்பது ரூபாய் அம்மாகிட்ட கொடுத்துடப் போறேன் மாமா.... அப்புறம்..."

"பாக்கிய பாங்கிலே போட்டுச் சேமிக்கப் போறியா?"

"ம்ஹூம்..."

"உனக்குப் புடவை வாங்கிக்கப் போறியா?"

"ம்ஹூம்..."

"எனக்குத் தெரியலை நீயே சொல்லும்மா..."

"முதல்லே கிளாஸ்கோ மல் வாங்கி அம்மாக்கு நாலு ரவிக்கை தைக்கணும். மாத்துப் புடவை இல்லாம கஷ்டப்படறா.... அதனால் கூடவே ஒரு உறையூர் புடவை வாங்கணும். கால்ல சேத்துப் புண் வந்திருக்கு.... அதுக்கு சைபால் வாங்கணும். அப்புறம் வெயில், மழைனு பாக்காம இவாத்துக்கும், அவாத்துக்கும் ஓடறா.... அதனால நல்லதா ஒரு குடை வாங்கணும்..."

பூமா பட்டியல் போட்ட நிமிஷத்தில் 'என்ன பெண் இவள்' என்று ஆத்மாவின் உள்ளம் சிலிர்த்துப் போயிற்று.

சொன்னதோடு நிற்காமல் ஞானம் தடுத்ததையும் காதில் போட்டுக் கொள்ளாமல் பூமா அத்தனையும் நிறைவேற்றித் தானே செய்தாள்?

அடுத்து வந்த மாதங்களில் அம்மாவின் தொண தொணப்பு தாங்காமல் ஒரு வாயில் சேலை, ஒரு ஜதை செருப்பு என்று மட்டும் சில்லறையாய் தனக்காக வாங்கிக் கொண்டாள். கூடவே பத்தோ இருபதோ — எவ்வளவு சேர்க்க முடியுமோ, அவ்வளவு சேமிக்கவும் தொடங்கினாள்.



இப்போது மேஜையில் சாய்ந்து யோசிக்கையில் எழுபத்து நாலோ, ஐந்தோ சேர்ந்திருப்பதைப் பூமாவால் கணக்குப் போட முடிந்தது.

இந்தப் பணத்தில் என்ன பண்ணலாம்?

அம்மா வெறும் கையோடு இருக்கிறாள், ஒரு ஜதை வளை பண்ணிப் போடலாம் என்றால்... மூன்று பவுனுக்கு நூற்று ஐம்பது ரூபாய்போல வேண்டும். இப்போதைக்கு இது நடக்காது...

ராத்திரி கொசுக் கடியால் தூங்க முடியாமல் அம்மா அவதிப்படுகிறாளே, ஒரு டேபிள் ஃபேன் வேணுமானால் வாங்கலாமா?

அட, இது நல்ல யோசனையாய் இருக்கிறதே...

ஆத்மா மாமாவிடம் 'நல்லதாய் செகண்ட் ஹாண்ட் டேபிள் ஃபேன் கிடைத்தால் சொல்லுங்கள் மாமா' என்று சொல்லி வைக்கலாமா.

திடுமென்று பூமாவுக்கு அம்மாவின் தலை சுற்றல் பற்றி நினைப்பு வந்தது.

ஆ! எப்படி அதை மறந்து போனேன்?

முதலில் டாக்டரிடம் அம்மாவைக் கூட்டிப் போக வேண்டும்.

கண்களையும் டெஸ்ட் செய்யச் சொல்லி கண்ணாடி தேவையென்றால் வாங்கிப் போட்டுக் கொள்ளச் சொல்ல வேண்டும்.

ஆத்மா மாமா ஊரிலிருந்து வந்ததும் அவரைச் சந்தித்து டாக்டரிடம் போவது பற்றிப் பேசவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்ட பின், வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

மாலையில் அவள் வீட்டு வாசற்படி ஏறும்போது பக்கத்துப் போர்ஷன் அம்பி, "அக்கா உங்கம்மா கீழே விழுந்துட்டா, தெரியுமா?" என்றான்.

அம்பியின் குரல் கேட்டு அவனுடைய அம்மா வெளியில் வந்தாள்.

"வந்துட்டியாடி யம்மா... நல்ல வேளையா நா பின் கட்டுக்குப் போனேனோ, உங்கம்மாவ பார்த்தேனோ... அலங்க மலங்க அவ கிடந்த கிடப்பைப் பார்த்து ஒரு நிமிஷம் பயந்துட்டேன் போ...."

"ஏ... என்னாச்சு மாமி"—

"மத்தியானமா கிணத்தடிக்குப் போயிருக்காபோல இருக்கு... பாசி வழுக்கி மொட்டுனு விழுந்திருக்கா.... விழுந்த வேகத்துலே மண்டைல அடிபட்டுதோ என்னமோ அப்படியே பிரமிச்சுப் போயிட்டா. பின்னாலியே நா வந்தேனா... 'என்னடீ ஞானம்'னு கத்திண்டு ஓடிப்போய் தூக்கினேன். செத்த நாழி பேச்சு வார்த்தை இல்லாம இருந்ததுலே நா பயந்திட்டேன். உள்ள அழைச்சுண்டு வந்து படுக்க வைச்சு, சூடா காபி கலந்து கொடுத்தேன். போ... போய் பாரு..."

பூமா படபடப்போடு உள்ளே ஓடினாள்.

ஞானம் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தாள்.

"என்னம்மா?"—

"ஒண்ணுமில்லே பூமா..." ஞானத்தின் குரல் ரொம்ப சன்னமாக இருந்தது. முகம் சாம்பல் பூத்திருந்தது. உதடுகள் லேசாக நீலம் பாரித்து இருந்தது. கண்கள் இரண்டும் ஜிவுஜிவுவென்று சிவந்திருந்தன.

"அழுதியாம்மா? அடி நன்னா பட்டுடுத்தா?"



"அப்படியொண்ணும் இல்லே... கிணத்தடிக்குப் போனப்போ கிறுகிறுன்னு வந்தது... அதுதான் தெரியும். இப்போ தலைக்குள்ளே விண் விண்ணுங்கறது... ஊமைக் காயமா பட்டிருக்குமோ என்னமோ?"

"டாக்டர்கிட்டப் போயிட்டு வரலாம் வரயா?"—

"பார்ப்போம்... இன்னிக்கு ரொம்ப அசதியா இருக்கு... வேணா நாளைக்குப் போலாம்...."

பூமா எழுந்து டீ போட்டு தான் குடித்துவிட்டு அம்மாவுக்கு அரை லோட்டா பால் கொண்டு வந்தாள்.

ஒரு வாய் குடித்தபின் ஞானம் 'வேண்டி இருக்கலை' என்று வைத்துவிட்டாள்.

சாதம் வடித்து, மிளகு ரசமாக வைத்தவள் "சாப்பிடறியாம்மா? இல்லே கரைச்சுக் கொண்டு வரட்டுமா?" என்றபடி அம்மாவை எட்டுமணி சுமாருக்கு எழுப்பினாள்.

எழுந்து உட்கார முயற்சித்த ஞானத்தின் கண்கள் இன்னும் சிவந்து போயிருந்தன. உடம்பில் ஏகமாய் வியர்வை.

அம்மாவின் முகமும், பார்வையும் சரியாக இல்லாத மாதிரி பட, பூமா 'என்ன இது' என்று பயந்து போனாள்.

"என்னம்மா?... என்ன பண்றது?"—

"தலை வலிக்கறது பூமா... உள்ளுக்குள்ளே யாரோ உட்கார்ந்துண்டு குடையற மாதிரி வலிக்கிறது..."

"ரசம் சாதமா குடிக்கிறியா? தலைவலி மாத்திரை வேணா தரட்டுமா?"

"ஒண்ணுக்குப் போகணும் போல இருக்கு..."

அம்மா எழுந்திருக்க பூமா உதவினாள். நடப்பதற்கு ஏதுவாக தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

வைக்கவில்லை.

ஞானம் இரண்டடி வைக்கவில்லை.

"தாயே... பரமேஸ்வரி..." என்று குரல் கொடுத்தவள் இரண்டாக மடிந்து விழுந்தாள்.

கொளகொளவென்று வாந்தி.

வலிப்பு வந்த மாதிரி உடம்பில் ஒரு துடிப்பு...

வாய் ஓரத்தில் நிமிஷத்தில் நுரை...

கண்ணில் செருகல்...

"அம்ம்... மா... ஆ..."

பூமா பதறினாள்.

"எ.... என்னம்மா... என்ன பண்ணறதும்மா... மாமி.. அம்பி.... யாராவது ஓடி வாங்களேன்... அம்மா... ஆ..."

பூமா கத்திய கத்தலில் பக்கத்துப் போர்ஷன்காரர்கள் ஓடிவந்தார்கள். ஞானத்தைத் தாங்கிப் பிடித்துப் படுக்க வைத்தார்கள்.

அம்பி சைக்கிளை எடுத்துக் கொண்டு டாக்டரைக் கூட்டிவர ஓடினான்.

கால் மணியில் டாக்டர் வந்தார்.

"கீழே விழுந்ததுலே உள்ளுக்குள்ளே அடிபட்டிருக்கும்னு தோணுது... ஜி. எச்...சுக்கு கொண்டு போறதுதான் நல்லது... அவங்க எக்ஸ்ரே எடுத்து என்ன கோளாறுனு திட்டவட்டமா கண்டுபிடிச்சுடுவாங்க..."

டாக்ஸி கொண்டு வந்தார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனார்கள். எமர்ஜென்ஸி கேஸாக அட்மிட் செய்தார்கள்.



"எக்ஸ்ரே இப்ப எடுக்க முடியாது. காலைலேதான்" என்று சொல்லி ட்யூட்டி டாக்டர் ஊசி போட்டார். நர்ஸை அழைத்து க்ளூகோஸ் ட்ரிப் கொடுக்கச் சொன்னார்.

இரவு முழுவதும் அம்மாவை விட்டு இந்தண்டை அந்தண்டை பூமா நகரவில்லை.

அரை மணிக்கொருதரம் கிட்டத்தில் குனிந்து 'அம்மா' என்பாள். ஞானம் 'ம்' என்று தீனமாகப் பதில் கொடுத்ததும் 'அம்மாவுக்கு நினைவு இருக்கிறது. பயப்பட ஒன்றும் இல்லை' என்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டு நகர்வாள்.

## 10

மறுநாள் விடிவதற்குள் ஞானத்தின் நிலைமை மோசமாகிப் போனது.

'ம்' என்பது நின்று போயிற்று. கை, கால்கள் ஸ்வாதீனத்தை இழந்த மாதிரி தூக்கிப் போட்டால் தொப்பென்று விழுந்தன. மூச்சு ஒருவித சிரமத்துடன் வெளிவருவது போலத் தோன்றியது.

இரண்டு மூன்று டாக்டர்கள் மாறி மாறிப் பரிசோதித்தார்கள்.

விழிகளைத் திறந்து டார்ச் அடித்துப் பார்த்தார்கள். மூட்டுக்களை டொக் டொக்கென்று ரப்பர் சுத்தியால் தட்டினார்கள். தலையை உருட்டினார்கள். இன்னும் என்னென்னவோ செய்தார்கள். அப்புறமாய் ஸ்ட்ரெச்சரில் தூக்கிப் போட்டு எக்ஸ்ரே எடுக்கக் கொண்டு போனார்கள்.

அத்தனையும் பார்த்துக் கொண்டு அறையில் ஓரமாக பூமா நின்றிருந்தாள்.

"என்ன டாக்டர் எங்கம்மாவுக்கு என்ன ஆயிற்று" என்று கேட்டால், பயப்படக்கூடிய விதத்தில் அவர்கள் எதையாவது பதிலாகச் சொல்லிவிடலாமோ என்று அச்சப்படுகிற மாதிரி வாயைத் திறக்காமல் ஒரு பக்கமாய் நின்று கொண்டிருந்தாள்.

'தனியா சின்னப் பொண்ணு என்னடிம்மா பண்ணுவே' என்ற அங்கலாய்ப்புடன் இரவு முதல் கூடவே தங்கின பக்கத்துப் போர்ஷன் மாமி மட்டும் டாக்டர் தலையைக் கண்டாலேயே 'என்ன டாக்டர்? ஞானத்துக்கு இப்ப எப்படி இருக்கு டாக்டர்?' என்று தொணதொணாப்பாள். "சொல்றோம்மா... பூரா பரிசோதனையும் செஞ்சி முடிச்சாத்தானே விளக்கமா சொல்ல முடியும்?" என்று பதிலுக்கு டாக்டர் பொறுமையுடன் கூறுவதை, பூமாவிடம் திருப்பிச் சொல்வாள்.

விடிந்ததும் இன்னொரு போர்ஷன்காரர், பிளாஸ்கில் காபியுடன் வந்து நின்றார். சற்றைக் கெல்லாம் மற்ற ஒண்டுக் குடித்தனக்காரர்களும் ஒவ்வொருவராக வந்து 'உங்கம்மா எப்படி இருக்கானு ஆத்துலே கேட்டுண்டு வரச்சொன்னா- குழந்தைகளை ஸ்கூலுக்கு அனுப்பணும் இல்லாட்டா அவளே வந்திருப்பா' என்று சொன்னபடி வந்து எட்டிப் பார்த்து விட்டுத் திரும்பினர்.

யாருக்கும், எதுவும் பதில் சொல்லாமல் பூமா மௌன மாக அமர்ந்திருந்தாள்.

விடாமல் நச்சரித்தால் மட்டும் "ஒண்ணும் தெரியலை மாமா—எக்ஸாமினேஷன் ஆனப்புறம்தான் சொல்லுவா" என்று சொன்னாள்.

ஹெல்த் செண்டருக்கு போன் பண்ணி விஷயம் இப்படி என்று சொல்லிவிட்டதால், பத்து மணிக்கு டாக்டர் ரமணன், கமலம், இன்னும் ஓரிரு ஆர்கனைஸர்கள் கும்பலாக வந்து சேர்ந்தனர்.



நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக டாக்டர்களைத் தேடிப்போன ரமணன் அரை மணி கழித்து திரும்ப வந்து பூமாவின் பக்கத்தில் நின்றார்.

"என்ன டாக்டர்?"—

"ம்... வந்து—" டாக்டர் ரமணனின் தயக்கம் பூமாவின் குடலை முடிச்சுப் போட்டுக் கொள்ள வைத்தது.

"எதுவானாலும் மறைக்காம சொல்லுங்கோ டாக்டர்.... ப்ளீஸ்—"

"ஐம் ஸாரி பூமா... டாக்டர்களுக்கே ஒண்ணும் தெளிவா புரிபடாத மாதிரி உங்கம்மா கேஸ் இருக்கு. எக்ஸ்ரே வெட்ஃபிலிம் வந்திடுச்சி... பார்த்த வரைக்கும் எலும்பு முறிவு எங்கயும் இருக்கறதா தெரியலை. கீழே விழுந்த அதிர்ச்சியிலே உள்ளுக்குள்ளே ஹெமரேஜ் ஆகி இருக்கலாம்னே டாக்டர்கள் நம்பறாங்க— நேத்து ராத்திரி ஆட்மிட் ஆனப்ப, காது கேட்குற சக்தியும், கண் பார்வையும், பெட்டரா இருந்திச்சினு டயூட்டி டாக்டர் சொன்னாராம். ஆனா இப்ப அப்படி இருக்குறதா தோணலை... நா பாத்த வரைக்கும் உடம்புலே பெராலிஸிஸ் மெதுவாக ஸெட் ஆகுதோனுகூட தோணுது... தலைலே உள்ளுக்குள்ளே இரத்தப் போக்கு இருந்திச்சின்னா, அந்த இரத்தம் உறைய உறைய இரத்தக் கட்டி உண்டாயிடும். இது, இரத்தப் போக்கு பெரிசாயிகிட்டே வந்தா மூளையோட செயல் பாதிக்கப்பட்டு உடம்பின் ஒவ்வோர் அங்கமும் பாதிக்கப் படும்... ராத்திரி உங்கம்மா இருந்ததுக்கும், இப்ப இருக்கறதை யும் வைச்சி பாக்கறப்போ இரத்தக் கட்டியோட பாஸிபிலிடி தான் ஜாஸ்தியா இருக்கு... ஐம் ஸாரி பூமா.... ரியலி ஸாரி..."

சுற்றி வளைக்காமல், பூசி மெழுகாமல் தான் கேட்டு கொண்டதற்காக டாக்டர் ரமணன் உள்ளது உள்ளபடி பேசிவிட்டதை அத்தனை சுலபமாய்ப் பூமாவால் ஜீரணிக்க முடியவில்லை.

இரத்தக் கட்டியா? அது நாழியாக ஆக பெரிசாகிக் கொண்டே வருவதால் மூளையும், மற்ற அங்கங்களும் பாதிக்கப் படுகின்றனவா?

பாரிச வாயுவின் அறிகுறிகள் தோன்றி இருக்கின்றனவா

கண் பார்வையும், கேட்கும் சக்தியும் மந்தித்து வருகின்றனவா?

அதான் இரவு 'அம்மா' என்றால் 'ம்' என்றவள் இப்போது ஜடமாக இருக்கிறாளா?

சலனமில்லாமல் இருப்பது பாரிச வாயுவின் அரவணைப்பாலா?

இதற்கெல்லாம் வைத்தியம் செய்ய முடியாதா?

மூளையின் எந்தப் பாகத்தில் இரத்தப் போக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்ய முடியாதா?

ஏன், திரும்பத் திரும்ப 'ஐம் ஸாரி, ரியலி ஸாரி' என்கிறார்?

பூமா, டாக்டர் ரமணனைக் கெஞ்சுகிற பார்வையால் பார்த்தாள்.

"செலவைப் பத்திக் கவலைப்பட வேண்டாம்னு சொல்லி தேவையான வைத்தியத்தைப் பார்க்கச் சொல்லுங்கோ டாக்டர். ஸ்பெஷல் வார்டுக்கு மாத்தணுமா? ஆயிரக் கணக்கிலே செலவழிக்கணுமா? நா ரெடி..... எனக்கு என் அம்மா வேணும் டாக்டர்... அவளைக் காப்பாத்தறதுக்கு



அவளைப் பழையபடி என் அம்மாவா மாத்தறதுக்கு என்னென்ன செய்யணுமோ அதை உடனடியாகச் செய்யச் சொல்லுங்கோ, டாக்டர்.... ப்ளீஸ்.... ப்ளீஸ்...."

தொடர்ந்து பேச முடியாதபடி பூமாவின் குரல் மூடிக் கொண்டது. கண்ணோரங்களில் நீர் முத்தாகப் பளிச்சிட்டது.

கமலம் அவள் தோளை ஆதரவாய்த் தட்டிக் கொடுத்தாள்.

டாக்டர் ரமணன் கால் மாறி கால் வைத்து இருப்புக் கொள்ளாமல் தவித்தார்.

'நீ சொல்லாமலேயே இங்கே டாக்டர்ஸ் தேவையான வைத்தியத்தை செஞ்சிகிட்டுதான் இருக்காங்க, பூமா.... அன்ஃபார்ச்சுனேட்லி, இதுக்கு மேலே எதுவும் செய்ய முடியாத ஒரு கேஸா உங்க அம்மா இருக்கிறதுதான் வருத்தம் தர்ற விஷயம். மூளைக்குள்ள என்ன இருக்குன்னு துருவிப் பாக்குற அளவுக்கு இன்னும் நம்ம கிட்ட வசதி இல்லே... ஒண்ணும் இல்லே, தைரியமா இருனு சொல்லி பொய்யா உனக்குச் சமாதானம் சொல்ல எனக்குச் சம்மதமில்லே. யு ஆர் எ வெரி பிரேவ் கேர்ள். எதையும் தாங்கிக்கிட்டு, பிராக்டிகலா இருக்குற சுபாவம் உனக்கு இருக்கறதைப் புரிஞ்சிக்கிட்டுத்தான் நான் இத்தனை வெளிப்படையாப் பேசறேன், ஐம் ஸாரி பூமா... இனிமே எதுவுமே சொல்றதுக்கு இல்லே... நிமிஷத்துக்கு நிமிஷம் அடங்கிகிட்டே போயிடலாம்னுதான் தோணுது... நீ எல்லாத்துக்கும் பிரிபேர்டா இருக்கறது நல்லது. ஆமா, ஆத்மா எங்கே? உன் கூடவே இருந்து மாரல் சப்போர்ட் கொடுக்காம அவர் எங்க போயிட்டார்? மருந்து ஏதாச்சும் வாங்க கடைக்குப் போயிட்டாரா?... ம்?"

டாக்டர் ரமணன் பேசிய எதையும் காதில் வாங்கும் நிலையில் பூமா இல்லை.

சிகிச்சை அளிக்க முடியாத ஓர் இக்கட்டில் அம்மா இருக்கிறாள் என்ற நினைப்பு ஒன்றுதான் பூதமாக நெஞ்சில் பரவி இருந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக க்ஷீணமடைந்து விடுவாளா?

மயங்கின கண்ணைத் திறந்து திரும்ப 'பூமா' என்று அழைக்காமல் அப்படியே போனாலும் போய் விடுவாளோ?

அடிவயிற்றில் பட்டாம் பூச்சிகள் ஏராளமாகப் பறக்க பூமா மலங்க மலங்க விழித்தாள். உதடுகளை அழுந்தக் கடித்து கிழித்துக் கொண்டு எழுந்த அழுகையை அடக்க முயற்சித்தாள்.

அம்மா.... அம்மா....

நீயும் போய்விட்டால் அப்புறம் எனக்கு யார் இருக்கிறார்கள் அம்மா?

இல்லை.... நீ போகக் கூடாது...

உன்னைப் போக விடமாட்டேன்....

பூமா சட்டென்று டாக்டர்.... ரமணனின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"ப்ளீஸ்... டாக்டர். எதுவும் பண்ணற நிலைல அம்மா இல்லேனு சொல்லி ஒதுக்கிடாதீங்கோ டாக்டர்... அம்மா இல்லாட்டா எனக்கு யாருமே இல்லே டாக்டர்... ஏதாவது பண்ணுங்கோ டாக்டர்.... எ... எனக்கு எங்கம்மா வே... வேணும்... டாக்டர்..."

பூமா உடைந்து போனாள்.

இதோ வந்து விடுகிறேன் என்று மூலையில் நின்று பயமுறுத்தின நிமிஷத்தை நினைத்துப் பயந்து போனாள்.



சின்னக் குழந்தைபோல டாக்டரின் கைகளில் முகத்தைப் பதித்துக்கொண்டு விசும்பினாள்.

"நா என்ன பண்ணுவேன்? எனக்கு ஒண்ணுமே புரியலையே" என்று திரும்பத் திரும்பச் சொல்லிப் பரிதவித்தாள்.

"ஆத்மா மாமாகூட இல்லே... இந்தச் சமயம் பார்த்து மதுரைக்குப் போயிட்டார். எனக்கு வேற யாருமே இல்லே டாக்டர். எங்கம்மாவை நா எப்படிக் காப்பாத்துவேன்? ஐயோ.. எப்படியாவது அம்மாவைக் காப்பாத்திடமாட்டேனா."

பூமாவின் பரிதாபம் அங்கு இருந்தவர்களையும் தொற்றிக் கொள்ள, கமலம் குனிந்து புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டாள். டாக்டர் ரமணன் கண்ணில் ஊறிய நீரை உதற இரண்டு தரம் கண்களைச் சிமிட்டிச் சமாளித்தார்.

"ஷ்.. பூமா... வாட் ஈஸ் ஆல் தீஸ்? தைரியமா இருப்பேனு நினைச்சித்தானே நிலைமையை அப்படியே மறைக்காமச் சொன்னேன்? என்னம்மா இது! ஷ்... கண்ட்ரோல் யுவர்செல்ப். ஆத்மா இல்லாட்டா என்ன? இப்ப நாங்க எல்லாம் இல்லியா? உன்னைத் தனியா விட்டுட்டு நாங்க போயிடுவமா? தைரியமா இரும்மா..."

கொஞ்சம் கொஞ்சமாய் பூமா அடங்கினாள். நிலைமை இதுதான் என்று புள்ளி குத்தின பிறகு நடக்க முடியாததற்காக ஆதங்கப்படுவதில் என்ன லாபம் என்று நினைத்துச் சமாளித்துக் கொள்ள முயன்றாள்.

"ஏதாவது சாப்பிட்டியா இல்லியா? நா இங்க இருக்கேன், நீ வேணா வீட்டுக்குப் போய் குளிச்சி, சாப்பிட்டுட்டு வரியா?"

கமலம் கேட்டபோது வேண்டாம் என்று பூமா மறுத்து விட்டாள்.

டாக்டர் ரமணன் சொல்லி டிபன் காரியரில் ம
உணவு வந்ததைக்கூட தொடப் பிடிக்காமல் 'எனக்குப் ப
இல்லே... விட்டுடுங்கோ' என்று ஒதுக்கிவிட்டாள்.

'இரவு தாண்டுவது கஷ்டம்' என்று ஆஸ்பத்
டாக்டர்கள் தீர்மானமாகச் சொன்ன பிறகு, முதல் முறை
அண்ணா ராகவனின் நினைவு பூமாவுக்கு எழுந்தது.

ஆயிரம் இருந்தாலும் அண்ணா அம்மாவின் பிள்ளை
அவனிடமிருந்து விஷயத்தை மறைப்பது தவறுதானே?

அம்மா, பிள்ளை நடுவில் வேண்டாத சன்
எத்தனையோ இருக்கலாம், நாலு வருஷமாகப் பேச்
வார்த்தை இல்லாமல் இருந்திருக்கலாம்... அதற்கா
அதற்காக?

அப்பா இறந்தபோது கொள்ளிபோட பிள்ளையா
லட்சணமா வா ராகவா... வந்து உன் கடமையைச் செய்து
என்று அம்மா எத்தனை வேண்டினாள்?

பெத்த தகப்பனாருக்குக் கொள்ளி போட, பிள்
மறுத்துவிட்டதில் எத்தனை வருந்தினாள்?

"புத்'ங்கற நரகத்துலே விழாம பெத்தவா
காப்பாத்தறதுனாலதான் 'புத்ரன்'னு பேரே வந்துதா
'புத்'ங்கற நரகத்துக்குப் போகாம இருக்க வேண்டி, கொள்
வைச்சு அந்த நெருப்பு ஜ்வாலை மூலமா புத்ரனு
நெய்ப்பந்த வெளிச்சம் மூலமா பேரன்களும் பெத்தவாளு
ஸ்வர்கத்துக்கு வழி காட்டணும்னு பெரியவா சொல்லுவா
ஆனா நா பெத்த புத்ரன்?...'

அப்பா செத்துப்போய் சில நாட்கள் ஆகி, தனி
குடித்தனம் துவங்கிவிட்ட சமயத்தில் ரொம்ப தாங்கமாட்
மல் போய்விட்ட நிமிஷத்தில் அம்மா அரற்றினதற்கு அர்த்
உண்டு என்றால் இப்போது அந்தப் பிள்ளையை அம்மாவி



கடைசி நிமிஷத்தில் கிட்டத்தில் இருக்கப் பண்ண வேண்டுமோ?

மாலை நான்கு ஆவதற்குள் பூமா ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

கண்மூடி, சொரட்டு சொரட்டென்று மூச்சு விட்டுப் படுத்திருக்கும் அம்மாவிடம் சென்றாள்.

முகத்தில் விழுந்திருந்த முடியைக் காதுக்குப் பின்னால் தள்ளி, ஒட்டியிருந்த கன்னங்களைப் பாசத்தோடு தடவிக் கொடுத்தாள்.

மற்றவர்கள் 'சாயங்காலமா வரோம்' என்று சொல்லிப் போய் விட்டாலும் தான் மட்டும் லீவு போட்டுவிட்டுக் கூடவே இருந்த கமலத்திடம் சுருக்கமாக விவரத்தைச் சொல்லி "அண்ணாவைப் பார்த்து விவரத்தைச் சொல்லிட்டு வந்துடறேன் ஸிஸ்டர்... தயவு செஞ்சு அதுவரை அம்மாவைப் பார்த்துக்கோங்கோ... ஓடி வந்துடறேன்" என்று கூறிக் கிளம்பினாள்.

ராகவனின் வீட்டை அவள் அடையும்போது அவர்கள் வெளியில் போகக் கிளம்பிக் கொண்டிருப்பது புரிந்தது.

"அண்ணா"....

சன்னமாகக் குரல் கொடுத்தவளை நிமிர்ந்து பார்த்த ராகவனின் முகத்தில் ஒரு கணம் கலக்கம்.

வரவேற்று பேசலாமா, இல்லை சாரதாவைக் கூப்பிட்டு விடலாமா என்று யோசித்துக்கொண்டு நிற்கையிலேயே "நாழி யாச்சு... படம் ஆரம்பிச்சுடப் போறான். என்ன பண்றேள்? வீட்டைப் பூட்டாம. மச மசனு நின்னுண்டு?" என்றபடி வாசலுக்கு வந்த சாரதா சடக்கென்று நின்றாள்.

ஏற இறங்கப் பார்த்து ஆளைப் புரிந்து கொண்டு "யா என்ன வேணும்?" என்றாள் அதட்டலாய்.

"நாந்தான் மன்னி..."

சாரதா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"நாந்தான்னா, யாரு? புரியலையே?"

பூமா இனியும் தாங்க இயலாது என்கிற அவசரத்துட அண்ணா பக்கம் திரும்பினாள்.

"அண்...ணா... அம்மா நேத்துக் கீழே விழுந்துட்டா ஆஸ்பத்திரிலே சேர்த்திருக்கு... கண்ணைத் திறக்காம படு துண்டு இருக்கா... நீ கிட்ட இருந்தா ஆறுதலா இருக் மண்ணா... எனக்கு ரொம்ப பயமா இருக்குண்ணா அ...அண்ணா"

நாலு வருஷங்களாகப் பார்க்காத அண்ணனை பார்ப்பதும் அவனோடு பேசுவதும் வேதனையை அதிகமாக் பூமா அழ ஆரம்பித்தாள்.

ராகவன் வாயைத் திறக்கவில்லை. பெண்டாட்டி பக்க திரும்பி நின்றவன் பார்வையைப் பூமியில் படரவிட்டான்

சாரதா முன்னால் வந்து நின்று கொண்டாள்.

"என்னடீ.... சந்தியா வேளைலே வாசப்படிலே நின்னுண்டு நீலிக் கண்ணீர் விடறே? நாங்க நன்னா இருக்கறது உனக்குப் பிடிக்கலையா? ம்? அண்ணாவாம் அம்மாவாம்... பெரிசா சொந்தம் கொண்டாடிண்டு வந்துட்டா... நீயும் வேண்டாம், உன் உறவும் வேண்டாம்னு அவ போனப்போ இந்தச் சொந்தம் எங்கே போயிருந்ததாம் கேக்கறேன்... 'பெத்தவளை வைச்சுக்க வக்கு இல்லா தொரத்திட்டான்'னு இவர் மேலே ஊர் பழிபேசினப்போ இந்த உறவெல்லாம் எங்க ஒளிஞ்சுண்டு இருந்ததாம்



அம்மாவும், பொண்ணுமா, வீட்டு ஆம்பிளையை மதிக்காம நடந்துண்டதும் இல்லாம, அபவாதத்துக்கும் ஆளாக வைச்சிட்டு, இப்ப அண்ணானு குலாவல் என்ன வேண்டியிருக்கு! மானம் உள்ளவளா இருந்தா அப்படியே திரும்பிப் போயிடு. ஆமா! மீறி உறவு கொண்டாடிண்டு உள்ளே வந்தேன்னா காலை முறிச்சு வெந்நீர் அடுப்புலே வைச்சுடுவேன்... சொல்லிட்டேன். இங்க பாருங்கோ... அவ மாமாலம் பண்ணறதுலே மயங்கி அம்மா, தங்கைனு புறப்படறதா இருந்தா, இந்த நிமிஷத்தோட உங்களுக்கு நா பொண்டாட்டி இல்லே... சொல்லிட்டேன்... திமிர் பிடிச்ச பொம்மனாட்டிகளுக்கு உடம்பு சரியில்லாமப் போனா மட்டும் உறவு வேணுமாக்கும்... எதுக்கு இந்த வேஷம்? அத்தனையும் துட்டுக்கு... அதானே? பணம் காசு வேணும்னா வாயத் திறந்து கேக்கறதை விட்டுட்டு, பந்தம் பாசம்னு நாடகம் ஏன் போடணும்? அம்மாவாம்... அண்ணாவாம்... தூத்தேறி திமிர் பிடிச்ச நாய்"... மேற்கொண்டு ஒரு வார்த்தைகூட கேட்க முடியாத தினுசில் பூமா காதுகளைப் பொத்திக்கொண்டு அண்ணாவைப் பரிதாபமாக ஏறிட்டாள்.

அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா? எந்த ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறது? எப்படி இருக்கிறாள்? டாக்டர் என்ன சொல்கிறார்?

ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை?

ம்ஹூம்... ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை.

பெண்டாட்டிதான் முக்கியம் என்று சொல்லிக்காட்டுகிற மாதிரி ராகவன் வீட்டைப் பூட்டினான், "வா நாழியாறது" என்றான். கிளம்பி விட்டான்.

அவ்வளவுதான்... அவ்வளவேதான்...

த்தூ... இவர்களெல்லாம் மனிதர்களா?

பூமா வெகுண்டு போனாள்.

'பார்ஸிகாரா ரொம்ப உசந்த விஷயம் ஒண்ணை பண்ணறாம்மா... செத்துப் போனப்புறம் உடம்பை வீணாக் காம கழுகுகளுக்கு திங்கப் போட்டுடறா... அந்த மாதிரி எல்லா ரும் உடம்பை எந்த நல்ல காரியத்துக்காவது கட்டாயம் பயன் பட கொடுக்கணும்னு ஒரு சட்டம் போட்டு வைச்சா எத்தனை நன்னா இருக்கும்?' என்று என்றோ அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வர, அன்று மாலை ஏழு மணி அளவில் ஞானத்தின் மூச்சு இறுதியாக நின்றபோது "மெடிகல் படிக்கிற பையன்களுக்கு உபயோகமாக இருக்க எங்கம்மா உடம்பை நீங்க ஆஸ்பத்திரியிலேயே எடுத்துக்கறேளா டாக்டர்?" என்று மிகுந்த ப்ரயத்தனத்தோடு பூமா கேட்ட நிமிஷத்தில்தான் நெருஞ்சி முள்ளில் நெஞ்சத்தைப் போட்டுப் புரட்டி எடுத்த வலி முதல் முறையாக அவளுக்கு எழுந்தது.

# 11

பூட்டைத் திறந்து பூமா உள்ளே காத்திருக்கும் தனி மையை எதிர்நோக்க பயப்படுகிற மாதிரி சில வினாடிகளுக்கு அப்படியே நின்றாள். அப்புறம் மெதுவாகக் கதவைத் தள்ளிக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

போர்ஷன் இருட்டாக இருந்தது; கும்மென்று புழுக்கமாக இருந்தது. மனுஷ நடமாட்டமே இல்லாததால் பிரேதம் மாதிரி எந்தவித சலனமும் இல்லாமல் இருந்தது.

கைப்பையைப் பெட்டியின் மேல் வைத்தவள் ஜன்ன லைத் திறந்து விட்டாள். மெலிதான வெளிச்சம் அறைக்குள் பரவ, அந்த அரைகுறை வெளிச்சம் மனசுக்கு இதமாக இருக்க, விளக்கைப் போட்டு அந்த இதத்தைக் கலைக்க விருப் பம் இல்லாதவள்போல ஜன்னல் திண்ணையில் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.



அம்மா இல்லாமல் முழுசாய் இரண்டு மாசங்களை ஓட்டி விட்டோம் என்ற நினைப்பு தொண்டையில் பந்தாக அடைத்தது.

அம்மா இருந்தால் அறை இப்படியா இருக்கும்?

சாயங்காலம் வேலையிலிருந்து திரும்பும்போது வீடு இப்படியா இருக்கும்?

பெருக்கித் துடைக்கப்பட்டுப் பளிச்சென்று இருக்கும். ஸ்வாமி அலமாரியில் அரைச்சாண் உயரத்துக்கு நிற்கும் வெங்கல ஜோதியில் முத்துப்போல சுடர் பளபளக்கும்; சந்தனம், இல்லை மட்டிப்பால் ஊதுபத்தியின் மணம் வாசலி லேயே ஆளை வரவேற்கும்; கூடவே இரவு சமையலுக்காக அம்மா செய்திருக்கும் ரசத்தின் மணம், வறுத்து அரைத்த துகையலின் வாசல், காற்றில் கலந்திருக்கும்...

அப்புறம் காத்திருக்கும் அம்மா... முகம் அலம்பி, கீறாக நெற்றியில் விபூதி இட்டு, கோடலி முடிச்சும், வாய் நிறையச் சிரிப்புமாகக் காத்திருக்கும் அம்மா...

கடவுளே... அந்த மாதிரி அம்மாவை விட்டு எப்படி என்னால் பிரிந்து வாழ முடிந்தது?

அதுவும் முழுசாய் இரண்டு மாசம்...?

தொண்டை அடைப்பு அதிகமாக திண்ணையில் ஒருக்களித்து உட்கார்ந்து, முழங்கால்களில் முகத்தைப் பதித்துக் கொண்டாள் பூமா.

யார் வீட்டிலோ பையன் ஒருவன் எட்டாம் வாய்ப் பாட்டை உரக்க மனப்பாடம் செய்வது கேட்டது; கூடவே 'அசோக சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில்' என்று சரித்தி ரத்தை வாய்விட்டுப் படிக்கும் ஒரு சிறுமியின் குரல்... இவை இரண்டுக்கும் பின்னணியில் கரஹரப் பிரியாவைக் கரகர

வென்று பாடும் ரேடியோ... எங்கோ எதற்கோ சண்டை போடும் ஒரு உச்சஸ்தாயி த்வனி...

சட்டென்று பூமாவுக்கு வாய்விட்டு அழுதால் தேவலை போல இருந்தது.

ஹோ என்று கதறிக் கதறி அழுது நெஞ்சில் கல் உருண்டையாய் உட்கார்ந்திருக்கும் வேதனையைக் குறைத்தால் தேவலை போல இருந்தது...

அழுகையா? அதுவும் கதறிக் கதறியா? எங்கே?

ராகவன் முன்னால் நின்று 'அண்ணா, கூடவே வாண்ணா... அம்மாவை வந்து பாருண்ணா... நீ வந்தா எனக்குத் தெம்பா இருக்குமண்ணா' என்று கேவி, கெஞ்சி, அழுதாளே, அதுதான் பூமா அப்படி விம்மி வெடித்துக் கடைசியாக அழுத அழுகை. அதற்கப்புறம் ஏனோ ஒரு சொட்டு ஜலம்கூட கண்ணிலிருந்து இறங்கவில்லை.

தங்கையின் வேதனை, அம்மாவின் அவலம், சூழ்நிலையின் கனம் என்று எதையும் புரிந்து கொள்ளாமல் மனைவியின் தலைப்புதான் பெரிசு என்று அவளோடு சினிமாவுக்கு அண்ணா புறப்பட்டதும், மனசு வெகுண்டுபோன அந்தக் கணத்தில் உள்ளுக்குள் அணை கட்டித் தடுத்துவிட்ட மாதிரி அவள் கண்ணீர் திடுமென்று நின்றது.

'ச்சே இவனும் ஒரு பிள்ளையா'— என்று நெஞ்சம் கொதித்த கொதிப்பில் கண்ணுக்குள் இருந்த ஈரம் எல்லாம் சுக்காக வற்றிப் போய்விட்டதா?

இவர்களெல்லாம் மனிதர்கள்தானா— என்று பதறிய பதறலில் உள்ளம், பாறையாய் இறுகிப்போய் விட்டதோ? அப்படித்தான் இருக்க வேண்டும்... இல்லாவிட்டால் அம்மா



வின் சடலத்தை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொடுத்தபோதும், ஒண்டுக் குடுத்தனக்காரர்கள் 'அம்மாடி! உன்னைத் தனியா விட்டுட்டுப் போக அவளுக்கு எப்படிம்மா மனசு வந்தது?' என்று புலம்பியபோதும். ஆடாமல் அசையாமல் ஜடம் மாதிரி உட்கார்ந்திருப்பது அவளுக்கு எப்படிச் சாத்தியமாயிற்று?

மறுநாள் ஆத்மா அரக்கப் பரக்க வந்து நின்ற போதும் பூமா கத்தவில்லை, குதிக்கவில்லை...

"அய்யோ பூமா... கடவுளே, நான் என்னம்மா சொல்லுவேன்? அய்யோ, தாங்க முடியலையேம்மா... ரெண்டு நாள் மதுரைக்குப் போயிட்டு வர்ரதுக்குள்ள இப்படியோர் இடியைத் தூக்கிப் பகவான் போட்டுட்டாரேம்மா..." என்று துண்டை வாயில் திணித்துக் கொண்டு பரிதவித்தபோது அவள் விட்டத்தை வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள்— அவ்வளவுதான்...

அன்றைக்கும் அதற்கு மறுநாளும் ஆத்மா அங்கேயே இருந்தார். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகராமல், உனக்கு நான் இருக்கிறேன் என்று தெரிவிப்பதுபோல அவள் கூடவே இருந்தார்.

குடுத்தனக்காரர்கள் சமைத்துக் கொண்டு வந்ததை பூமாவைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினார். 'வேண்டாம் மாமா' என்றதால், ஸ்டவ் பற்ற வைத்து, தெரிந்தவரைக்கும் தானே காபியோ, டீயோ கலந்து வந்து கொடுத்தார். ராத்திரி நேரத்தில் வாசல் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு நாற்காலியோடு நாற்காலியாய் அழுந்திப் பழி கிடந்தார்.

மூன்றாம் நாள் காலையில் அவருக்கு முன் பூமா எழுந்தாள், குளித்தாள். பால் வாங்கிக் காய்ச்சி, காபி கலந்து அவர் முன் நீட்டினாள்.

"நீ எதுக்குமா சிரமப்படறே? இதெல்லாம் நா செய்ய மாட்டேனா?"

"இருக்கட்டும் மாமா... இன்னும் எத்தனை நாளைக்கு நீங்க எனக்காக அவஸ்தைப்படுவேள்? 'யதார்த்தத்தை எடுத்துக்கத் தெரியணும், நடக்கறதை தைரியமா எதிர் நோக்கக் கத்துக்கணும்'னு நீங்கதானே மாமா அடிக்கடி சொல்லுவேள்?"

அவள் குரலில் தெரிந்த வைராக்கியம் புதுசாகத் தெரிய, பதில் ஏதும் பேசாமல் ஆத்மா காபியைக் குடித்தார்.

"மாமா..."

"ம்?"—

"நா இன்னிலேந்து வேலைக்குப் போலாம்னு இருக்கேன்."

"இன்னும் இரண்டு நாள் போகட்டுமே பூமா... மனசு கொஞ்சமாவது ஆறவேண்டாமா? ரமணன் புரிஞ்சுப் பார்ம்மா..."

"ஆத்திலே இருந்தா திரும்பத் திரும்ப அம்மா ஞாபகமும், அண்ணாவோட நடத்தையும்தான் ஞாபகத்துக்கு வர்ரது. வேலைக்குப் போனா இதெல்லாம் மறந்து போகும்... அதான்—"

அவள் மன வேதனை புரிந்து ஆத்மா சும்மா இருக்க, அம்மா செத்த மூன்றாம் நாளே பூமா திரும்ப வேலைக்குப் போனாள்.

அன்று மாலை அவள் திரும்பியபோது திண்ணையில் ஆத்மா அவளுக்காகக் காத்திருந்தார்.

"ரொம்ப நாழியா காத்துண்டு இருக்கேளா, மாமா"

"ம்ஹூம்... இப்பத்தான் வந்தேன்...!"



உள்ளே போய், கை கால்களைக் கழுவி டீ போட்டு எடுத்துக் கொண்டு வந்து ஆத்மா முன்னால் பூமா அமர்ந்தாள்.

ஐந்து நிமிஷம் மௌனமாய்ச் சென்றது.

"பூமா..."

"என்ன மாமா?"

"நா வேணா ராகவனைப் போய் ஒரு நடை பார்த்துட்டு வரட்டுமா?"

'எதற்கு' என்கிற தினுசில் பூமா புருவங்களைத் தூக்கினாள்.

"வந்து... இனிமே உன் நிலை என்னங்கறதைப் பத்தி அவங்கிட்ட பேசிப் பார்க்கலாமோனு நினைச்சேன்..."

பூமா 'வேண்டாம்' என்று தலை ஆட்டினாள்.

"அண்ணானு ஒருத்தன் இருக்கறதையே நா மறந்துட்டேன் மாமா... அப்பா போனப்புறம் அவன் நடந்துண்ட விதத்து லேந்தே அவன் குணத்தை அம்மா சரியா எடை போட்டி ருந்ததை மறந்து நாந்தான் தப்புக் கணக்குப் போட்டுட்டேன். அம்மாவோட கடைசி நிமிஷத்துலே அவள்கிட்டே இருக்க ஆசைப்படலான்னு நினைச்சுண்டு அவன் ஸ்வபாவம் புரியாம அவன்கிட்டப் போய் நின்னேன். ஆயுசுக்கும் மறக்காதபடி அண்ணா எனக்குப் பாடம் கத்துக் கொடுத்துட் டான் மாமா... வேண்டாம், இனிமே அந்த அண்ணா உறவு எனக்கு உசிர் இருக்கிற வரைக்கும் வேண்டாம்... எங்கப்பா, அம்மாவுக்கு வேண்டாம்னு ஆன உறவு எனக்கும் இனிமே சத்தியமா வேண்டாம்... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்கோ, நா உங்களுக்குத் தெரியாததைப் பேசறதா நினைக்க வேண்டாம் மாமா... ப்ளீஸ்—"

ஆத்மா எழுந்து அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தார்.

INDIRA LENDING LIBRARY
162, ...
COIMBATORE-641 025

"சரி, அண்ணா வேண்டாம்... அப்புறம் இனிமே உனக்கு யார் துணை? எங்கே இருக்கப் போறே? என்னமா வாழப் போறே?... இதெல்லாம் யோசிக்க வேண்டாமா?... நா ஒண்ணு சொல்லட்டுமா பூமா? பேசாம என்னோட எங்காத்துக்கு வந்துடேன்... என் பொண்ணா என் கூடவே இருந்துடேன்... என்னம்மா?"

நடப்பதை நிறுத்திவிட்டு அதீதமான கவலை, பாசத்துடன் குனிந்து பேசும் ஆத்மாவைப் பூமா நிமிர்ந்து பார்த்தாள்.

ஆத்மா கட்டை ப்ரும்மச்சாரி... தம்பி வீட்டில் முன் அறையில் பந்தபாசம் என்று எந்த கொண்டாட்டமும் இன்றி, தான் உண்டு, தன் தேச வேலை உண்டு என்று வசிப்பவர். தம்பி பெரிய சம்சாரி. ஏகப்பட்ட குழந்தைகள். கைக்கு வருவது வாய்க்குப் போதவே சிரமப்படும் குடும்பம்...

இவர்களுடன் நானா?

ம்ஹூம்.. இது சரிப்படாது...

மாமாவின் தம்பி குடும்பத்துக்கு நான் சுமையாகலாம். முக்கியமாய், ப்ரும்மச்சாரி மாமா பேருக்கு என்னால் பிற்காலத்தில் ஏதாவது களங்கம் உண்டாகலாம்... எதற்கு வீண் வம்பு?...

பூமா சன்னமான குரலில் பேசினாள்.

"நா இங்கேயே, இந்தப் போர்ஷனிலேயே இருந்துட்டா என்ன மாமா? எல்லோரும் பழகினவா... இரண்டு நாளா கணக்குப் போட்டுப் பாத்தேன்... சிக்கனமா குடுத்தனம் பண்ணினா வர்ற சம்பளத்தை வைச்சுண்டு நா ஒண்டியா வாழமுடியும்னுதான் தோணறது மாமா..."



அடுத்து வந்த நாட்களில் ஆத்மா, மற்ற குடுத்தனக் காரர்கள் பூமாவிடம் எப்படி எப்படியோ பேசிப் பார்த்தார்கள்.

'தனியாக ஒரு பெண்ணால் வசிக்க முடியுமா? அதுவும் பத்தொன்பது வயசுப் பெண்ணால்? தொண்ணூறு ரூபாய் போதுமா? நாளைக்கு உடம்புக்கு வந்தால் கவனிக்க ஒருவர் வேண்டாமா?' என்று ஆரம்பித்து 'நல்ல மாப்பிள்ளையாகக் கிடைத்தால் பார்க்கலாமா? கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா? ஆயிரம் இருந்தாலும் கல்யாணம் பண்ணிக் கொண்டு புருஷனுடன் வாழ்வது தானே ஒரு பெண்ணுக்கு அழகு'— என்பது வரை ஓயாமல் விவாதித்துப் பார்த்தார்கள்.

ஒன்றுக்கும் பூமா அசைந்து கொடுக்கவில்லை.

"என்னால் தனியா இருக்கமுடியும், என் பேர்ல எனக்கு நம்பிக்கை இருக்கு" என்றாள்.

'தொண்ணூறு ரூபாய் என் தேவைகளுக்கு எதேஷ்டம்'— என்றாள்.

'தலைவலி, உடம்பு வலினு படுத்துண்டா நீங்க கவனிச்சுக்க மாட்டேளா?' என்றாள்.

கடைசியாய் "கல்யாணம்ங்கற பேச்சை மட்டும் எடுக்காதீங்கோ. அது இந்த ஜன்மத்திலே இல்லே. சின்ன வயசிலேயே முடிவாகிப் போன சமாசாரம்... இது... அப்பா அம்மாக்குக்கூட என் மனசுலே நா இப்படித் தீர்மானிச்சுட்டது தெரியும்... என் குடும்பம், என் குழந்தை, என் பணம்ங்கற வலைலே சிக்காம பிறத்தியாருக்காக நா வாழ விரும்பறேன். எல்லாரும் புரிஞ்சிக்கோங்கோ... இனிமே இந்தக் கல்யாணப் பேச்சு கண்டிப்பா வேண்டாம்" என்றாள் தீர்மானமாக...

அப்புறம் இந்த இரண்டு மாசமாய் அவளிடம் யாரும் எதுவும் பேசியதில்லை.

ஆத்மா மட்டும் ரமணனிடம் சொல்லி அவ
சம்பளத்தை முப்பது ரூபாய் அதிகரிக்கச் செய்தார்
ஊரிலிருந்தால் அன்றாடம் அவள் வீட்டுக்கு வந்து
'எப்படிம்மா இருக்கே, ஏதாவது வேணுமா?' என்று தப்பாம
கேட்டார்.

இத்தனை நாட்களை நிம்மதியாகக் கழித்துவிட்ட
பூமாவுக்கு இப்போது ஒரு வாரமாய் ஒரு புது தொந்தரவு
முளைத்திருக்கிறது.

பின் கட்டு போர்ஷன்காரர்...

மனைவி பிரசவத்துக்காகப் பிறந்தகத்துக்குப் போய்
விட்டதில் தனித்து இருக்கும் மனிதர்.

வலிய வந்து பேசுகிறார், மார்பில் பார்வையை ஓட
விடுகிறார். சமயம் கிடைத்தால் கிணற்றடியில் சொம்பை
நீட்டும் போதும், பேப்பர் வேணுமா என்கிறபோதும் கையைத்
தொட்டுக் கொடுக்கிறார். அதுவும் இரண்டு நாளாய் இந்த
அசிங்கம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது— 'உனக்காக
வாங்கினேன்' என்று திருநெல்வேலி அல்வா, லாலா கடை
பக்கடாவை நீட்டுகிறார். ராத்திரி எல்லாரும் படுத்த பிறகு
பேச வருகிறார்...

என்ன இதெல்லாம்?...

இல்லை... உள் நோக்கம் நன்றாக இல்லை... மனைவி
திரும்பி வர நாலு மாசம் ஆகும் என்பதை நினைத்தால்
கொஞ்சம்கூட நன்றாக இல்லை...

"பூமா..."

ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்திருந்தவள் திரும்பினாள்.

அவர்தான்... அந்தப் பின்கட்டு இளிச்சவாயர்தான்...

"இருட்டுலே என்ன பண்றே...? காபி சாப்பிட்டியா?"
கிட்டத்தில் அவர் வந்ததும் பூமா இறங்கி நின்று கொண்டாள்.



"மூஞ்சி ஏன் வாடி இருக்கு? தலையை வலிக்கிறதா?
ஜுரம் கீரம் இருக்கா என்ன?"—

கரிசனத்துடன் பேசியபடி நெற்றியைத் தொட்டுப் பார்க்க
அவர் கை நீண்டது.

பூமா அவசரமாய்த் தள்ளி நின்றாள்.

"என் கிட்ட என்ன பயம் பூமா? மூஞ்சி அலம்பிண்டு
வரயா? போய் ஹோட்டல்லே காபி, டிபன் சாப்டுட்டு
வரலாம்... வேண்டாம்னா எங்காத்துக்கு வா. புதுசா டிகாஷன்
இறக்கி, பால் காச்சி வைச்சிருக்கேன்... டிகிரி காபியா கலந்து
தரேன்... வாயேன் பூமா..."

"....."

இப்போது மனுஷர் குரலை ரொம்பத் தழைய விட்டார்.

"எதிராத்து மாமி கோயில் உபன்னியாசத்துக்குப்
போயிருக்கா.... பக்கத்தாத்துலே ஒட்டு மொத்தமா
கல்யாணத்துக்குப் போயிருக்கா... பயப்படாம வா பூமா..."

பூமா சுவர் ஓரமாய் நகர்ந்து விளக்கைப் போட்டாள்.

"நேத்திக்கு மவுண்ட் ரோடு வழியா வந்துண்டு இருந்தப்ப
ஒரு கடைலே நீல கலர்லே ஒரு புல் வாயில் புடவை
பார்த்தேன் பூமா... நீ கட்டிண்டா பேஷா இருக்கும்னு
தோணித்து... என்ன பூமா ஆத்துக்கு வரயா? காபி
கலக்கட்டுமா? புடவை வேணுமா? நீ புத்திசாலி— உனக்குப்
புரியும்... என்ன பூமா?"

மனுஷர் தெளிவாக மனசில் உள்ளதைக் கோடி காட்ட
பூமா அதிர்ந்து போனாள்.

யாரும் இல்லாமல் மாட்டிக்கொண்டு விட்டோம் என்பது
புரிய 'நீங்க போங்கோ; நா மூஞ்சி அலம்பிண்டு வரேன்'
என்று சின்னச் சிரிப்புடன் சொல்லி அவரை அனுப்பிவிட்டு

அவர் அந்தப் பக்கம் போனதும் பையை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டு வேகமாய்த் தெருவில் இறங்கி நடந்தாள்.

நேராக ஆத்மா மாமா வீட்டுக்குச் சென்று, ரொம்ப நாட்களாகவே கமலம், 'தனியா ஏன் இருக்கணும்? நானும் தனியா இருந்து அவஸ்தைப் படறேன். பேசாம என்னோட வந்திடு... இரண்டு பேருமா ஒருத்தர்க் கொருத்தர் துணையா இருந்திடலாம்' என்று சொல்லி வருவதையும் வீட்டின் நிலைமையையும் விளக்கி, அவர் சம்மதத்தைப் பெற்றவள், மறுநாளே சாமான்களை ஒழித்துக்கொண்டு கமலத்தின் போர்ஷனுக்குக் குடியேறினாள்.

செண்டருக்கு வரும் பெண்களுக்குச் சொல்லித்தரவென கற்றுக் கொண்ட தையல் தொழிலை வீணாக்காமல், மாலை நேரங்களில் சுற்று வட்டாரப் பெண்களுக்குக் குறைந்த கூலியில் ரவிக்கை, உள்பாவாடை, குழந்தைகள் சட்டை தைத்துக் கொடுப்பதிலும் புத்தகங்கள் படித்து அறிவை வளர்த்துக் கொள்வதிலும் புரியாத பாடங்களை அக்கம் பக்கத்துக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் பொழுதைச் செலவழித்ததில் அடுத்து வந்த வருஷங்கள் பூமாவைப் பொறுத்தவரையில் ரொம்ப நிம்மதியாக ஓடி மறைந்தன.

## 12

**ந**ரை...

காதுக்குப் பக்கத்தில் வெள்ளியாய்ப் பளபளத்த நரை.

அவிழ்ந்த கூந்தலோடு, கண்ணாடிக்கு எதிரில் குனிந்து வகிடு எடுக்க முனைந்தவளின் கண்களில் அந்த நரை முடிகள் விழ, அப்படியே நின்று நுனி விரலால் அவற்றை நீவி விட்டவள்.



விஸ்டம் கிரே ஹேர்...

விளையாட்டுத் தனத்துடன் இருப்பவர்களிடம், உனக்கு வயதாகி விட்டது; இனிமேலாவது பொறுப்புடன் இருக்க முயற்சி செய், என்று காதில் முணுமுணுக்கும் விவேக நரை முடி....

ஆனானப்பட்ட தசரத சக்கரவர்த்தியிடமே 'இன்னும் எத்தனை நாட்கள் இந்த நாட்டை ஆளும் ஆசையுடன் இருக்கப் போகிறாய்? ராமனுக்குப் பட்டம் கட்டும் உத்தேசம் உண்டா, இல்லையா?' என்று தன் தோற்றத்தின் மூலம் கேட்டு ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கியதாகப் பெரியவர்கள் சொல்லும் விவேக நரை...

இப்போது எனக்கு எந்தப் பொறுப்பை ஞாபகப் படுத்த இது காதருகில் தோன்றி இருக்கிறது?

மயிரைப் பின்னுக்குத் தள்ளி, அழுந்த வாரிக் கொண்டையைப் போட்டபோது மனோன்மணி இந்த விவரம் தெரிந்தால் சந்தோஷப்பட்டுக் கொள்வாள் என்ற நினைப்பு எழ, பூமா சின்னதாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

மனோன்மணி அவளோடு வேலை பார்க்கும் டீச்சர். கிட்டத்தட்ட எட்டு வருஷங்களாய்ப் பழக்கம்.

"முதல் நாள் உங்களைப் பாக்கறப்போ எப்படி இருந்தீங்களோ, அப்படியேதான் இன்னிக்கும் இருக்கீங்க... அது என்ன ரகசியம் பூமா, எனக்குச் சொல்லித்தரக் கூடாதா?"

ஒருவித ஆற்றாமை கலந்த பாராட்டை மனோன்மணி வெளிப்படுத்தும் போதெல்லாம் பதில் ஏதும் சொல்லாமல் பூமா சிரிப்பாள்.

"என்ன சிரிக்கிறீங்க? நா சொல்லறது தப்பா ரைட்டா, சொல்லுங்க... நா இந்தப் பள்ளிக் கூடத்திலே வேலைக்குச்

சேர்ந்து எட்டு வருஷமாச்சு... வேலைக்கு வந்த அன்னிக்கு ஏற்கெனவே இந்த ஸ்கூல்ல வேலை செய்து அனுபவம் உள்ளவங்கங்கிற முறைலே சுத்திக் காமிக்க அழைச்சிட்டுப் போனீங்களே. நினைப்பு இருக்கா? அன்னிக்கு நீங்க வெள்ளைலே பச்சை ப்ரிண்ட் போட்ட காட்டன் சேலை உடுத்திக்கிட்டு இப்ப போட்டிருக்கீங்களே இதே மாதிரி கொண்டையோட இருந்தீங்க... நிஜமா சொல்றேன், வருஷம் எட்டாகியும் நீங்க அன்னிக்கு நா பாத்த பூமாவாதான் இருக்கீங்க... அதே உடல்வாகு, அதே இளமை, அதே சிரிப்பு, அதே முகம்... எல்லாம் அதேதான்... குணம் மாறாம இருக்கிறது பெரிசு இல்லே, பூமா. ஆனா உருவம் கடுகத்தனைகூட மாறாம இருக்கிறதுதான் ஆச்சர்யம்! வயசானதுக்கு அடையாளமா ஒரு பருமன், லேசா கிழட்டுத்தனம்? ம்ஹூம்... ஒண்ணும் இல்லே... அட ஒரு நரையைக் கூடக் காணோமே... என்ன அதிசயம்டா இது! அது என்ன மாயமோ மந்திரமோ தெரியலை... சொல்லத்தான் மாட்டேங்கறீங்க..."

மனோன்மணியின் ஆதங்கத்தில் அர்த்தம் இருக்கவே செய்தது.

பூமாவை விட மனோன்மணி ஒரு வயசு சின்னவள் என்றால் நம்புவது கஷ்டம்தான். தாட்டியான உடம்பு, நாலு படி ஏறினால் மூச்சை இரைக்க வைக்கும் ஊளைச் சதை வகிடுக்கு இரண்டு பக்கமும் தாராளமாய்ப் பளபளக்கும் நரை....

மனோன்மணியிடம் 'இங்கே பாருங்க மனோ.... எனக்கு நரைக்கத் துவங்கிடிச்சி...' என்று சொல்லி காதோர நரை முடிகளைக் காட்டினால் அவள் முகம் எப்படி மலரும் என்று கற்பனை பண்ணியபடியே பூமா முகத்தில் லேசாக பௌடரைப் பூசி, சின்னதாகக் கறுப்பு சாந்தினால் பொட்டு வைத்துக் கொண்டாள்.



முதல்நாள் இரவு இஸ்திரி போட்டு வைத்திருந்த புடவையை எடுத்து, பிரித்துக் கொசுவிய நிமிஷத்தில் கண்ணாடியில் பெட்டிகோட், ரவிக்கையுடன் நின்ற உடம்பு பிரதிபலிக்க "மனசைப் பொறுத்து மட்டுமில்லாம உடம்பு விஷயத்திலேயும் நீ ரொம்பக் கொடுத்து வைச்சவ பூமா... சிக்குனு உருவிவிட்ட மாதிரி உடம்பு இயற்கையா அமைஞ்சிருக்கறதால, எந்தவிதச் சிரமம் எடுத்துக் காட்டியும் பளிச்சினு எப்பவும் உன்னால இருக்க முடியுது..." என்று கமலம் அடிக்கடி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

கமலம்...

விகல்பம் இல்லாமல், மனசில் தோன்றியதை அப்பட்டமாக வெளியில் பேசிய கமலம்... 'மனுஷனை மனுஷனா மதிக்க, முதல்லே ஜாதி பேதங்களை நாம மறக்கணும் – நீ பிராமணத்திங்கறதை மறந்திடு. நா முதலியார் வகுப்பைச் சேர்ந்தவங்கிறதை மறந்திடுறேன். இரண்டு பேரும் மனுஷ ஜாதி. இது நினைப்புலே இருந்தாபோதும்' என்ற கமலம் யாருக்கும் பயப்படாமல் தன்னம்பிக்கையுடன், துணிச்சலுடன் தனியாக வாழக் கற்றுக்கொடுத்த கமலம்... 'சந்தர்ப்பம் கிடைக்கறப்ப அதை நழுவ விடறது முட்டாள்தனம், இப்ப உனக்கும், எனக்கும் வசதி இருக்கு, நேரமும் இருக்கு; அதை வீணாக்காம தெரியாத விஷயங்களைக் கத்துக்கலாம் வா' என்று சொன்னதோடு நிற்காமல் மாலை நேரங்களில் குக்கரி க்ளாஸ், பொம்மை இதர கை வேலை பண்ணும் வகுப்பு என்று அத்தனைக்கும் தன்னோடு அழைத்துச் சென்று தேர்ச்சி பெற வைத்த கமலம்... அவளோடு ஒன்றாக இருந்த வருஷங்கள்தான் எத்தனை அமைதியானவை? சந்தோஷமானவை?

எத்தனை வருஷங்கள் அவை?

ஐம்பத்தைந்தில் அம்மா போனாள். இரண்டு மாசத்துக்கெல்லாம் கமலத்தோடு தங்கப் போயாகிவிட்டது, நிர்வாக

இயலாமை காரணமாக ஒன்பது வருஷங்கள் கழித்து ஹெல்த் செண்டரை மூடின பிறகு, ப்ரைவேட்டாக டாக்டர் ரமணனிடம் இரண்டு பேரும் நர்ஸாக வேலை பார்த்தது ஒண்ணரை வருஷம்... ரமணன் ஹார்ட் அட்டாக்கில் இறந்ததும், இங்கும் அங்குமாய்ச் சில்லறை வேலை பார்த்தது ஒரு வருஷம்... அப்புறம்தானே கமலம் ஆல் இண்டியா மெடிகல் இன்ஸ்ட்டிடியூட்டில் வேலை பார்க்க டில்லிக்குப் போனாள்... ஆக, கமலத்துடன் வாழ்ந்தது மொத்தம் பன்னிரண்டு வருஷங்களா?

கமலம் டில்லிக்குப் போனபிறகு, தொடர்ந்து நர்ஸ் வேலை பார்க்க விருப்பம் இல்லாமல், என்ன செய்யலாம் என்று பூமா யோசித்துக் கொண்டிருக்கையில் வகையாய் இந்தத் தனியார் பள்ளி வேலை, தெரிந்தவர் மூலம் அவளைத் தேடி வந்தது.

"பெரிசா படிச்சிருக்காட்டி பரவாயில்லே... பல வருஷங்களா உங்களோட பழகினதுலே உங்க குணம் எங்களுக்குப் பிடிச்சிருக்கு... கைவேலை நிறைய தெரிஞ்சி வைச்சிருக்கீங்க. சரளமா இங்கிலிஷ், ஹிந்தி பேசறீங்க... ஸெகண்ட் ஸ்டாண்டர்டுக்கு இதுக்குமேல க்வாலிபிகேஷன் எதுக்கு?"

பூமா அதிகம் யோசிக்கவில்லை. குழந்தைகளோடு பொழுதைக் கழிப்பது இதமாக இருக்கும் என்று தோன்ற பள்ளியில் உடனே சேர்ந்துவிட்டாள். தனியார் பள்ளி என்பதால் எல்லாமாக நானூறு ரூபாய் சம்பளம்.

மாலை நேரங்களை வீணாக்காமல் அக்கம் பக்கத்துப் பெண்களுக்கு பெயிண்டிங், தையல், குக்கிங் க்ளாஸ் நடத்தினதில் மாசத்துக்கு நூற்று அம்பதிலிருந்து இருநூறு வரை வருமானம் வர, ஒற்றை ஆளுக்கு அந்த அறுநூறு ரூபாய் வெள்ளமாக இருந்தது.

மாம்பலத்தில் பள்ளி. அதிர்ஷ்டவசமாய் பக்கத்திலேயே ஒரு அவுட் ஹவுஸ். நூற்றுப்பத்து ரூபாய் வாடகைக்குக்



கிடைத்தது. இத்தனை வாடகையில் இந்த வீடு அவசியமா— என்று கொஞ்சம் யோசித்தாள், மாலை நேர வகுப்புக்களை எடுக்க, நாலு பேர் வந்து போக இது தேவைதான் என்று முடிவுக்கு வந்து, அவுட் ஹவுசில் குடியேறினாள்.

வேலைக்குச் சேர்ந்த மாசம் ஸ்கூல் ப்யூன் திடுமென்று லாரியில் மாட்டிக்கொண்டு சாக, ஒண்டியாக முழித்துக் கொண்டிருந்த அவன் தாயாரைத் தன்னோடு அழைத்துக் கொண்டு வந்து, அவளைத் தனக்கும், தன்னை அவளுக்கும் துணையாக்கிக் கொண்டாள்.

பெருக்கி, துடைத்து, சமையலில் கூடமாட ஒத்தாசை செய்வது எல்லாம் இந்த ஒன்பது வருஷங்களாகத் தாயிதான். இதற்காக முதல் மாசம் இருபது ரூபாயைச் சம்பளமாக அவளிடம் பூமா நீட்டியபோது தாயி அடிபட்டுப் போனாள்.

"மனுஷங்க யாரும் இல்லாம தவிச்சிட்டிருந்த அனாதைய வீட்டுக்குக் கூட்டிவந்து, பெத்த தாயாராட்டம் நீ வச்சிருக்கிறப்ப, உன்கிட்ட கை நீட்டி நா காசு வாங்கறது நியாயமா?"— என்று குரல் செருமகேட்டு, மறுத்துவிட்டாள்.

புடவை உடுத்தி, பள்ளிக்குத் தேவையான புத்தகங்கள், கைப்பை, குடையை எடுத்து வைத்தபின் பூமா சமையல் கட்டுக்கு வந்தாள்.

"தட்டு போடறியா, தாயி..."

"அப்பவே வைச்சிட்டேன்... நீ உக்காரு... ஆமா, அந்தப் பையன் சம்பத் வாசலிலே நிக்கிறானே, பாத்தியா?"—

சாப்பிட உட்காராமல் பூமா வாசலுக்கு வந்தாள்.

வாழை மரத்திடம் நின்று நகத்தால் பட்டையை கீறிக் கொண்டிருந்த சம்பத் இவளைப் பார்த்து கிட்ட வந்தான்.

"என்ன விஷயம் சம்பத்?"

"...."

"சும்மா சொல்லு.... அப்பாக்கு உடம்பு சரியில்லையா? மருந்து ஏதாவது வாங்கணுமா?"—

சம்பத் அடுத்த தெருவில் இருக்கும் பையன். அம்மா கிடையாது. அப்பா மட்டும்தான். கூடப் பிறந்தவர்கள் நாலு பேர். இவன்தான் மூத்தவன். அப்பா விறகுத் தொட்டி ஒன்றில் கணக்கு எழுதி கொண்டுவரும் நூற்று நாற்பது ரூபாயில் ஆறு ஜீவன்கள் காலத்தைக் கழிக்க வேண்டும். இதில் அப்பாவுக்கு யானைக்கால் தொல்லை வேறு. மாசத்தில் மூன்று நாள் ஜுரமாகப் படுத்து விட்டால், அதற்கு அந்த விறகுத் தொட்டி மகானுபாவர் சம்பளத்தைப் பிடித்துக் கொண்டு விடுவார்.

சம்பத் நல்லவன், சமர்த்து, நேர்மையானவன். படிப்பில் சுட்டி என்று பூமாவுக்கு அவனிடம் பிடித்தம் உண்டு. அடுப்புக்கரி வாங்க முன்பொரு தடவை விறகுத் தொட்டிக்குப் போனவள் உடம்பு முடியாத அப்பாவுக்கு பார்த்தியாக, பள்ளி இல்லாததால் வேலைக்கு வந்திருந்தவனைச் சந்திக்க நேர்ந்தது.

அதிலிருந்து தன்னால் முடிந்த உதவிகளை அவ்வப் போது கட்டாயம் பூமா செய்து வருகிறாள். பள்ளிச் சம்பளம் கட்ட, புத்தகம் மருந்த வாங்க... இப்படி...

"சொல்லுப்பா.... என்ன விஷயம்?"—

"வந்து, காவேரி வயசுக்கு வந்திட்டா.... அவளுக்கு வந்து– வந்து... நல்லதா ஒரு தா... தாவணிகூட..."

மேலே பேச முடியாததுபோல சம்பத் தலையைக் குனிந்து கொண்டான்.



முதன் முதலாய் பெரியவளாகி இருக்கும் தங்கைக்கு ஒரு தாவணி வாங்கிக் கொடுக்க முடியாத கையாலாகாத் தனம் அவனை வாட்டுவதை, அந்தக் கூனிப்போன உடம்பு சொல்லியது.

பூமா ஒரு நிமிஷம் அப்படியே நின்றாள். பின் உள்ளே போய் சுமாரான புடவை ஒன்றை எடுத்து வந்து அவனிடம் கொடுத்தாள்.

"இதைக் கிழிச்சு இரண்டு தாவணியா போட்டுக்கச் சொல்லு.... நா சாயங்காலமா புதுசு வாங்கிண்டு வரேன்... என்ன?"—

பதில் பேசாமல் சம்பத் வாங்கிக் கொண்டான்.

என்னவெல்லாமோ சொல்ல ஆசைப்படுகிற தினுசில் உதடுகள் துடித்தன. கண்கள் லேசாகச் சிவந்து கலங்கின.

பூமா கிட்ட வந்து தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

"இதுக்கெல்லாம் உணர்ச்சி வசப்பட்டா எப்படி சம்பத்? அதுவும் ஒரு ஆம்பிளை? ம்?... நோ... நோ தைரியமா இரு... எல்லாம் நல்லபடி நடக்கும்.... சரி, உள்ளே வாயேன். நா சாப்பிட உட்கார்ந்தேன். நீயும் என்கூட ஒரு வாய் சாப்பிட்டுட்டுப் போயேன்..."

சம்பத் அவளைப் பின்தொடர்ந்தான். வாய் திறக்காமல் தாயி பரிமாறினதைச் சாப்பிட்டான். "தாங்க்ஸ் மாமி" என்று மட்டும் முணுமுணுத்துவிட்டு, புறப்பட்டுப் போனான்.

பூமாவுக்கு நித்தமும் ஒன்பதிலிருந்து, ஒரு மணிவரை தான் பள்ளி. அதன்படி அன்றும் ஒரு மணிக்குப் பள்ளியி லிருந்து வெளியே வந்தவள் நேராகப் பாண்டி பஜாரைப் பார்க்க நடந்தாள். கட் பீஸ் கடை ஒன்றில் வெளிர் நீலம்,

மஸ்டர்ட் கலர்களில் இரண்டு வாயில் தாவணிகளையும், வேறு சில சாமான்களையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் அவள் நுழைந்தபோது, மணி மூன்று அடிக்கப் பத்து நிமிஷம் என்றது. மூன்றுக்கு ஜூஸ் கிளாஸுக்கு பெண்கள் வந்து விடுவார்களே!

பரபரப்புடன் முகம், கை, கால்களைக் கழுவி, தாயி கொடுத்த டீயைக் குடித்தாள்.

பத்து நிமிஷங்களில் ஒருவராய் இருவராய் வந்து பெண்மணிகள் கூடினதும் க்ளாஸ் ஆரம்பமானது.

"நல்லதா க்ரேப்ஸ் கிடைச்சிது, அதனால இன்னிக்கு க்ரேப் ஜூஸ் பண்ணறதை சொல்றேன். எழுதிக்குங்க. ஜூஸ்– ஒரு லிட்டர், சர்க்கரை– இரண்டு கிலோ, தண்ணீர்– ஒரு லிட்டர், ஸிட்ரிக் ஆஸிட்– நாலு டீஸ்பூன், கலர்–ராஸ்பரி சிவப்பு; சோடியம் பென்ஸோயேட்–1 1/4 டீஸ்பூன்... தேவையான சாமான்கள் இவ்வளவுதான். இப்ப செய்முறை சொல்றேன்... தடிமனான தோல் உள்ள கறுப்பு திராட்சைகளை வாங்கி, காம்பில்லாம அலம்பி, பாத்திரத்துலே போட்டு ஒரு டம்ளர் தண்ணிவிட்டு, அடுப்புலே வைத்து பத்து நிமிஷம் கொதிக்க வைத்து, மத்தால கடைஞ்சு துணிலே சாறை வடி கட்டி அளந்துக்கணும். மிக்ஸி இருந்தா அதுலே சாறு எடுக்கலாம். சர்க்கரையைப் பார்த்திரத்தில் போட்டு, பாக்கி தண்ணியை விட்டு ஸிட்ரிக் ஆஸிடை கலந்து கொதிக்க விடணும். ஒரு கொதி வந்ததும் வடி கட்டி ஆற வைக்கணும். கொஞ்சம் ஜூஸில் எஸென்ஸ், கலர், சோடியம் பென்ஸோயேட்டை கலந்து ஆறின பின் எல்லாவற்றையும் ஒண்ணா கலந்து சுத்தமான பாட்டில்லே எடுத்து வைக்கணும்... புரிஞ்சுதா?"

சொன்னபடி ஜூஸை செய்முறையில் பூமா செய்து காட்ட மற்றவர்கள் குறிப்புகளை எழுதிக் கொண்டார்கள்.

தயாரான ஜூஸை கலந்து ருசி பார்த்துக் கொண்டிருந்த போது வைதேகி "சாதாரணமான நாலு லேடீஸ் ஒண்ணா



சேர்ந்தா வம்புதான் அடிப்பாங்க. ஆனா பூமாவோட சகவாசம் கிடைச்சதுலேந்து நீங்க உருப்படியா காரியம் பண்ணறீங்க–னு எங்க மாமியார் நேத்து ரொம்ப பாராட்டினாங்க பூமா..." எனவும் மற்றவர்கள் அதை ஆமோதிப்பது போல தலை அசைத்தார்கள்.

"நீங்க அன்னிக்கு ஒரு நாள் சொன்ன மாதிரி இப்பல்லாம் அடிக்கடி எதிர் வீட்டு குருட்டுப் பாட்டிக்கு கதைப் புஸ்தகம் படிச்சிக் காட்டறேன் அவங்களுக்கு சந்தோஷம், எனக்கும் ரொம்ப திருப்தி பூமா..."

லீலா இதைச் சொன்னதும் தலை நரைத்து, முன் மடிவைத்துக் கட்டிக் கொண்டிருந்த அன்னம்மா லேசான யோசனையுடன் பேசினார்.

"கொஞ்ச நாளாகவே எனக்குள்ள ஓர் ஆசை பூமா... சும்மா இப்படி வாரத்துக்கு மூணு தரம் கூடி சில விஷயங்களைக் கத்துக்கிட்டுப் போறதோட நிக்காம, இன்னும் ஆக்க பூர்வமா ஏதாவது நாம செய்ய முயற்சி பண்ணா என்னன்னு தோணறது. உங்க பழக்கம் கிடைச்ச பிறகு நாங்க நிறைய மாறி இருக்கிறது எங்களுக்கே புரியறது...: சின்னச் சின்ன விஷயங்களிலே பிறருக்கு ஒத்தாசை பண்ண நாங்க காத்துக்கிட்டிருக்கோம். ஆனாலும், இல்லாத பசங்களுக்கு வாரச் சாப்பாடு போட, ஸ்கூல் பீஸ் கட்ட, இலவசமா பாடம் சொல்லித்தர, ஹாஸ்பிடல்களுக்குப் போயி அனாதைகளுக்கு ஆறுதல் சொல்லிட்டு வர இன்னும் என்னவெல்லாமோ நீங்க பண்ணறீங்களே, அதுலே நாங்களும் பங்கு கொண்டா என்ன பூமா? ம்?... உங்ககூடச் சேர்ந்து நாங்களும் முடிஞ்சதைச் செய்ய ஆசைப்படறோம்... இதைத் தனித் தனியா பண்ணறதை விட, நாம அத்தனை பேரும் ஒண்ணா சேர்ந்து பெரிசா ஏதாவது சாதிச்சா என்ன? எனக்குத் தெரிஞ்சவங்ககிட்ட இது பத்திப் பேசினேன். எல்லாருமே 'ஆஹா... செய்யலாமே'னுதான் சொல்றாங்க... நா என்ன சொல்லவரேன்னு

புரியுதா, பூமா? என்ன லீலா, செல்லா, நீங்களு சொல்லுங்களேன்..."

அடுத்த வந்த ஒரு மணியில்— குழுமி இருந்த பதினொ பெண்மணிகளும் உணர்ச்சிவசப்பட்டு, நிஜமான சிரத்தை யுடன் 'மாசத்துக்கு இரண்டு புதன் கிழமைகள் கூடலாம் மூன்று ரூபாயைச் சந்தாவாக வைக்கலாம். வீட்டு வேலைக் கெடாதபடி, குடும்பத்துக்கு எந்த விதத்திலும் அசௌகரிய உண்டாகாதபடி நேரத்தை ஒதுக்கிக்கொண்டு பிறருடை துக்கத்தை, துன்பத்தை இல்லாமையை ஒழிக்க நம்மா முடிந்தவரை பாடுபடலாம்'— என்று பூமா கூறியவற்றை ஒருமனதாக ஏற்றுக்கொள்ள, அன்று, அங்கு அபயா சாரிட் க்ளப் ஜனித்தது.

# 13

அடுத்து வந்த முதல் புதன்கிழமை அன்று அபயா சாரிடி கிளப்பில் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருந்த பதினே பெண்களும் பூமாவின் வீட்டில் சரியாகப் பிற்பகல் இரண் மணிக்குக் கூடினார்கள்.

மாசத்தின் முதல், மூன்றாம் புதன் கிழமைகளி யாருடைய குடும்ப வேலைக்கும் இடைஞ்சல் இல்லா தினுசில் பிற்பகல் இரண்டிலிருந்து நாலுவரை கூடுவதெ றும், வீட்டிலோ, வெளியிலோ 'ஹா' லேடீஸ் கிளப்பா என் ஏளனமாய் கண்களை விரிக்கும்படி எந்த மெம்பரும் நட கொள்ளக்கூடாது என்றும், செய்யும் எந்தக் காரியமும் சமூ பிரச்னையையும் சமுதாயத் தொண்டையும் அடிப்படையா கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் உறுதிமொ எடுத்துக்கொண்டபின் தலைவியாகப் பூமா, செயலாளரா



செல்லா, பொருளாளராக வைதேகி, கமிட்டி மெம்பர்களாக அன்னம்மா, லீலா, சுமதி, ஈஸ்வரி, நஸ்மா ஆகியோரை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து விட்டு எதுவும் முறையோடு இருக்க வேண்டி ஸொஸைடி ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸில் மறுநாளே அபயா சாரிடி கிளப் பெயரை பதிவு செய்தார்கள்.

முதல் மாத சந்தா பணத்தைப் பாங்கில் கணக்கு ஆரம் பித்துப் போட்டுவிட்டு, மூன்றாம் புதன் அன்று ஏற்கனவே ஜெனரல் ஹாஸ்பிடலில் ஏற்பாடு செய்திருந்தபடி வயதான அன்னம்மா, உண்டாயிருந்த சுமித்ராவைத் தவிர பாக்கி பதினைந்து அங்கத்தினர்களும் இரத்த தானத்தை இலவச மாகக் கொடுத்து அபயாசாரிடி க்ளப் செய்ய இருக்கும் ஏராள மான நற்பணிகளுக்கு 'சுக்லாம் பரதரம்' கொட்டினார்கள்.

மேற்கொண்டு ஒரு சில மாதங்கள் போவதற்குள் அங்கத்தினர்களின் எண்ணிக்கை நாற்பத்து இரண்டாக உயர, ஒவ்வொரு மாதமும் திட்டமிட்டு, சிறப்பாக அவர்கள் இயங்கத் துவங்கினார்கள்.

பள்ளிகள் திறக்கும் சமயமாதலால், ஏழைக் குழந்தைகள் மூவருக்குப் பள்ளி ஆசிரியரின் சிபாரிசுடன் சம்பளம் கட்டினார்கள். இருபத்து இரண்டு மாணவ மாணவிகளுக்கு புஸ்தகங்களை இலவசமாக வழங்கினார்கள். வி.எச்.எஸ். ஆஸ்பத்ரிக்கு வரும் ஏழைகளில் சிலருக்கு மதிய உணவுக்காக உதவ வேண்டி ரூபாய் நூறை அளித்தார்கள். அங்கத்தினர்களின் டாக்டர் கணவர்கள் இருவரின் உதவியோடு மாம்பலம் சேரியில் ஞாயிறு அன்று இலவச வைத்திய முகாம் நடத்தினார்கள். ஒரு சுதந்திர தினத்தன்று செவிட்டு, ஊமை பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு விருந்து அளித்து, யாருமில்லாத அனாதைகளாக அன்புக்கு ஏங்கிய குழந்தைகளோடு முழுசாக ஒரு பகலைக் கழித்து 'நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு' என்று செயலால் நிரூபித்துக் காட்டினார்கள்.

முக்கியமாக ஒரே ஒரு தடவை கடனே என்று ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டு, பின் அந்தப் பக்கம் தலை வைத்துக்கூட படுக்காமல் சில சமூக அமைப்புகள் இருப்பது போல அல்லாமல் அடிக்கடி இரத்ததானம் செய்து, ஏழை மக்களுக்கு இலவசமாய் மருந்துகள் கொடுத்து, அனாதை இல்லங்களுக்குத் தொடர்ந்து க்ளப் சார்பாக மட்டும் இல்லாமல் தனிப்பட்ட ரீதியில்கூட விஜயம் செய்து உண்மையான சமூகப் பணியில் ஆர்வம் காட்டினதில், பிறந்த ஒரு வருஷத்துக்குள் அபயா சாரிடி க்ளப் ஒரு தனிச்சிறப்புடன் சென்னையில் பிரபலமானது நிஜம்.

இப்போதெல்லாம், பூமாவுக்கு ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் போதவில்லைதான்.

ஐந்தரைக்கு எழுந்து, சொந்த வேலைகளைக் கவனித்து முடிப்பதற்குள் வாசலில் வைத்தியத்துக்கு, கல்யாணத்துக்கு, படிப்புக்கு என்று சொல்லிக்கொண்டு நாலைந்து பேர் நிற்பது வழக்கமாகிவிட்டது.

அவர்களைக் கவனித்து அனுப்பிவிட்டுப் பள்ளிக்குப் போய் ஒண்ணரை மணிக்கு வீடு திரும்பி, சாப்பிட்டு முடிப்பதற்குள் செயலாளரோ பொருளாளரோ க்ளப் விஷயமாக ஏதாவது கேட்டுக்கொண்டு வந்து விடுவார்கள்.

பாங்குக்குப் போக வேண்டிய ஜோலி இருக்கும். இல்லாவிட்டால் டாக்டர்களைச் சந்திக்க ஆஸ்பத்திரிகளுக்கு. அதுவும் இல்லாவிட்டால் அட்மிஷனுக்காக அனாதை இல்லம், பள்ளி என்று எங்காவது போய் வரவேண்டிய அலுவல் கட்டாயம் இருக்கும்.

நடுநடுவில் க்ளப்பின் உண்மையான உழைப்பைப் பற்றிக் கேள்விப்பட்டு நல்லிதயம் படைத்தவர்கள் 'கொஞ்சம் வீட்டுக்கு வந்துவிட்டுப் போக முடியுமா? எங்களால்



இயன்ற உதவியை உங்கள் மூலம் செய்ய விரும்புகிறோம்' என்று சொல்லி அனுப்பினால் அங்கும் போக வேண்டிய வரும்.

"என் பிள்ளை இறந்த நாள் வருகிறது. அவன் நினைவு நாள் அன்று நூறு ஏழைகளுக்குச் சாப்பாடு போட விரும்புகிறேன். ஏற்பாடு பண்ண முடியுமா?" என்றும்,

"இந்த வருஷம் வியாபாரத்தில் ஓரளவு லாபம் வந்திருக்கிறது. அதில் ஒரு பங்கை ஏதாவது நல்ல காரியத்தில் செலவிட ஆசைப்படுகிறேன், என்ன செய்யலாம்?" என்றும்,

"என் கணவர் பிழைத்து எழுந்தால் வெயில் காலத்தில் இரண்டு இடத்தில் தண்ணீர்ப் பந்தல் வைப்பதாக வேண்டிக் கொண்டிருந்தேன். இந்தாருங்கள் இருநூறு ரூபாய். ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டையாக ஏதோ என் சக்திக்கு தகுந்தது. தயவு பண்ணி ஜனங்கள் கூடும் நல்ல இடமாகப் பார்த்து ஒரு மாசத்துக்கு நீர் மோர் கொடுக்க ஏற்பாடு பண்ணுங்கள்" என்றும்.

"பெண்ணுக்குச் செவ்வாய் தோஷம், வரன் குதிரவேயில்லை. நல்ல இடமாக அமைந்தால் கூடவே ஓர் ஏழைப் பெண்ணுக்கும் கல்யாணம் பண்ணுவதாக சங்கல்பம் பண்ணிக் கொண்டிருந்தேன். தை மாசம் பத்தாம் தேதி முகூர்த்தம். உங்களுக்குத் தெரிந்த ஏழை யாராவது இருந்தால் சொல்லுங்கள். செலவோடு செலவாய் ஜாம் ஜாம் என்று நடத்தி விடலாம்" என்றும், தனிப்பட்ட நபர்கள் கேட்டுக் கொண்ட அத்தனைக்கும் பூமாவும் அபயா சாரிடி க்ளப்பின் மற்ற அங்கத்தினர்களும் சிரித்த முகத்தோடு ஈடு கொடுத்தார்கள்.

பிள்ளையின் திதி அன்று அன்னதானம் செய்ய விரும்பியவருக்காக வாலாஜாபாத் தீனபந்து அனாதை ஆஸ்ரமப்

பிள்ளைகளுக்கு வடை, பாயஸத்தோடு சாப்பாடு போட ஏற்பாடு பண்ணினார்கள்.

வியாபாரத்தில் லாபம் வந்த நபரைத் திருப்தி செய்ய பால மந்திர் குழந்தைகளுக்குப் படுக்கை பாய் வாங்கித் தந்தார்கள்.

சிவா விஷ்ணு கோயில், சைதாப்பேட்டை சின்னமலை சர்ச், ஆயிரம் விளக்கு மசூதி ஆகிய இடங்களில் வெயில் தகிக்கும் சித்திரை மாதம் தண்ணீர்ப் பந்தலைப் போட்டு, காலை பத்திலிருந்து மாலை மூன்றுவரை அங்கத்தினர்கள் ஷிப்டில் வேலை பார்த்து நடந்து சென்ற மக்களுக்குக் குளிரக் குளிர தாகத்துக்கு நீர்மோர், தண்ணீர் கொடுத்து, பக்தர்களின் மனசைக் குளிர வைத்தார்கள்.

பணம் காசு இல்லாத பெண் ஒருத்தியின் திருமணச் செலவை ஏற்க முன் வந்த செல்வந்தரிடம் பேசுகிறபடி பேசி ஒன்றுக்குப் பதிலாக இரண்டு ஏழைப் பெண்களுக்குக் கல்யாணத்தைப் பண்ணினார்கள்.

மொத்தத்தில் பணம் கொடுத்தவர்களைத் துளிக்கூட ஏமாற்றாமல் கணக்குக் காட்டி, கொடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடித்ததில் ரொம்ப சீக்கிரமே அபயா சாரிடி கிளப் ஓர் ஆலமரமாகத் தழைத்து வளர்ந்தது. அண்டியவர்களுக்கெல்லாம் தப்பாமல் நிழல் கொடுக்க அது முற்பட்டதில் இப்போது அதன் அங்கத்தினர்களின் எண்ணிக்கை இருநூற்றுப் பத்து. இதில், செயலால் எதுவும் செய்ய இயலாத வெளி ஊர், ஏன், வெளிநாட்டு அங்கத்தினர்கள்கூட அடக்கம்.

“நீங்கள் ரொம்ப உயர்வான காரியம் பண்ணறீங்க. உடம்பால எங்களால் உங்களோட சேர்ந்து உழைக்க முடியாட்டாலும், பணம் கொடுக்கறதுலயாவது நாங்க கொஞ்சமா பங்கெடுக்கலாம் இல்லியா? ப்ளீஸ், மறுக்காதீங்க...”



க்ளப்பின் சிறப்பான நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு, ஒரு அங்கத்தினரின் வெளிநாட்டு உறவினர் வலிய பண உபகாரம் பண்ண வந்த அன்றும், பிற்பாடு சமயம் கிடைக்கும்போதும் பூமா அங்கத்தினர்களிடம் மனம் நெகிழ்ந்து பேசினது உண்டுதான்.

“உண்மையான உழைப்புக்கு என்னிக்குமே தோல்வி கிடையாது: இதை நீங்கள்லாம் நன்னா புரிஞ்சிக்கணும். ஏமாத்தணும்ன்ற எண்ணம் இல்லாம சத்தியமா நாம உழைக்கிற உழைப்புதான் நம்மை, நம்ம க்ளப்பை, தனிச்சு நிக்க வைச்சிருக்கு. என்னிக்கும் இந்தப் பேரை நாம காப்பாத்திக்கறதுலே விழிப்போட இருக்கணும்”—

அலுவல்களும், நடவடிக்கைகளும் ஏகமாக அதிகரித்து விட்ட பிறகு அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒன்று கூடிப் பேசி, பூமாவின் இல்லத்தில் க்ளப் பெயரில் ஒரு டெலிபோனைப் பொருத்தினார்கள்.

பூமாவுக்கு இதில் அத்தனை விருப்பம் இல்லை.

“எதுக்கு இந்த போன் இங்கே? தேவையானா அடுத்த தெருவில் இருக்கிற “பூத்”லே போய் பேசமாட்டேனா? அவசரம்னா செக்ரட்டரி செல்லா வீட்டுக்குப் போய் பேசிடறேன்... இது அனாவசியம்...”

“நோ... நோ.... யு...ஆர் ராங் பூமா... கிளப் பேர்ல ஒரு போன் இருக்கிறது நல்லதுதான். தேவையானவங்க நம்மோட தொடர்பு கொள்ளவும், நாம— முக்கியமா நீங்க— இங்க அங்க அலையாம பேசிக்கவும் இது அவசியம் இங்க தேவை...”

செல்லாவும், வைதேகியும் அடித்துப் பேசினபின் பூமா மறுக்கவில்லை. ஆனால் டெலிபோனுக்குப் பக்கத்தில் அன்றே ஒரு காலி சாக்லெட் டப்பாவை வைத்து அதன் மேல்

'போனை உபயோகிப்பவர்கள் ஐம்பது காசை இதில் போடவும்' என்று எழுதி ஒட்டினாள்.

"போன் இருந்தா அவசியத்துக்கு யாராவது பண்ண றேன்னு வருவாங்க. கொடுக்க மாட்டேன்னு சொல்ல முடியாது. இப்படி எழுதி வெச்சிட்டா தானா காசை போட் டுட்டுப் போயிடுவாங்க..." என்று விளக்கம் கொடுத்ததோடு நிற்காமல் என்றாவது அதிசயமாய் சொந்த வேலையாய் தான் அந்த டெலிபோனை உபயோகித்தால்கூட உடனடியாக ஐம்பது காசை அந்தப் பெட்டியில் போட்டு, தானே நேர்மை யான நடத்தைக்கு ஒருமுன் உதாரணமாக அவள் திகழ்ந்ததில் கிளப் மெம்பர்களுக்கு ஏகப் பெருமை.

அன்றைக்கு ஆடிட்டரோடு உட்கார்ந்து வரவு செலவு பாலன்ஸ் ஷீட்டை தயாரித்தபோது, செலவு போக, கிட்டத் தட்ட ஏழாயிரம் ரூபாய் கணக்கில் இருப்பது தெளிவாக, மதியம், வருடாந்தர ரிப்போர்ட் தயாரிக்கவென கமிட்டி கூடியதும் பூமா இது குறித்துப் பேச்சு எடுத்தாள்.

"உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல நியூஸ். போன வருஷம் போல இல்லாம இந்த வருஷம் இப்ப, நம்ப க்ளப் பாலன்ஸ்லே கிட்டத்தட்ட ஏழாயிரம் ரூபாய் இருக்கிறதாக காலைல ஆடிட்டர் பாலன்ஸ் ஷீட் தயாரிச்சுக் கொடுத்தப்போ தெரிய வந்தது. பல உதவிகளைச் செய்த பிறகும் வருஷக் கடைசிலே ஏழாயிரம் ரூபாய் மிஞ்சி இருக்கிறது, எதிர்பாராமல் சில இடங்களிலிருந்து நமக்கு வந்த பல்க் டொனேஷன்களாலே தான். வி ஆர் தேங்க்ஃபுல் டு ஆல் தோஸ் டோனர்ஸ். அவர் கள் அத்தனை பேரின் எதிர்பார்ப்புகளும் பொய்க்காமல் இருக்க அபயா சாரிடி கிளப் இனிமே இன்னும் அதிகமான விழிப்பு, துடிப்போட செயல்படணும். இந்த வருஷம் இது வரை யாருமே செய்யாத ஒரு புது திட்டத்தை நாம அரங் கேற்றணும்னு நான் ஆசைப்படறேன். இது விஷயமா எல்லா மெம்பர்ஸ்க்கும் ஐடியாக்கள் கொடுக்கச் சொல்லி ஸர்குலர்



அனுப்புங்க. அடுத்த மீட்டிங்கில் இது பத்தி கண்டிப்பா விவாதிக்கலாம். இப்படி முதல்ல உடனடி செலவுகளைக் கொஞ்சம் பாத்துடலாமா? இந்தச் செலவுகள்போக பாக்கி என்ன பணம் இருக்கும்னு உத்தேசமா தெரிஞ்சிட்டா, மெம்பர்ஸ் கிட்ட இத்தனை பணம் ஒதுக்க முடியும். அதனால் இப்படி பிளான் பண்ணலாம்னு கரெக்டா சொல்லலாம். வைதேகி, இம்மிடியேட் செலவுகள் அதன் பட்ஜெட் பத்தி விவரம் சொல்றீங்களா?"

"பின்னி ஷோ ரூம்லே துணி எடுக்கணும்... டிஸ்கவுண்ட் போக மொத்தம் ஆயிரத்து நூறு அல்லது இருநூறு ஆகும் போல தோணுது. முப்பத்து ஏழு குழந்தைகளுக்கு — நல்லா படிக்கற ஏழை ஸ்டூடன்ஸ்ஸா பாத்து நாலு ஸ்கூல்லேந்து தேர்ந்தெடுத்தோம் பாருங்க. அவங்களுக்கு யூனிஃபார்ம் தைக்க இந்தத் துணி தேவைப்படுது."

"கூலி சேர்த்திட்டீங்களா?"

"இன்னும் இல்லே... இது வெறும் துணி காஸ்ட்தான்..."

"சரி, அந்த சுகுமாரன் கேஸ் என்னாச்சு? விசாரிச்சிங் களா செல்லா?"—

"ஓயெஸ்— நேத்துக்கூட ஆர்த்தோபிடிக் சென்டருக்குப் போய் டாக்டரை சந்திச்சேன்... பூனா ஆர்ட்டிஃபிஷியல் லிம்ப் சென்டருக்கு எழுதிட்டாராம்... பத்து பதினைந்த நாளிலே பணம் தேவைப்படலாம்ன்னார்."

"ஹௌமச்"—

"சரியா தெரியலை... நானூறுலேந்து ஐநூறு வரை ஆகலாமாம்..."

சுகுமாரன் போலியோவினால் பாதிக்கப்பட்ட எட்டு வயசுப் பிள்ளை. தந்தை கிடையாது. ஸ்டெனோவாக இருக்கும் தாய். உறவு என்று யாரும் இல்லாதவர்கள். செயற்கை கால் பொருத்தப்பட்டால் புத்திசாலியான சுகுமாரன் பள்ளிக்குப் போய் படித்து, வளமான வாழ்க்கை வாழ முயற்சி பண்ணலாம்.

"பிச்சம்மா பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகி இருக்கு பூமா... தாலியும் கூரைப் புடவையும் கொடுத்து உதவணும்..."

"ம்..."

"வி.எச்.எஸ்.லே ஏழைகள் மதிய உணவுக்கு நம்ம கான்ட்ரிப்யூஷன் கொடுக்கணும். செல்விக்கு பாலமந்திர்லே அட்மிஷனுக்கு முயற்சி பண்ணணும்... அப்புறம்!... முக்கியமானதை விட்டுட்டு என்னென்னவோ சொல்றேனே... அந்த ராமநாதன் வந்திருந்தார் பூமா... 'கௌரிக்கு ஜி.எச்.லே ஹார்ட் ஸர்ஜரி பண்ண ஒப்புக்கிட்டாங்க, ஆனா குறைந்த பட்சம் இரண்டாயிரமாவது என் கை விட்டுச் செலவாகும்னு தோணுது... உங்க உதவியைத்தான் மலையா நம்பிக்கிட்டு இருக்கேன்'னு காலைல வந்து அழுதிட்டுப் போனார்... கூடவே ப்ளட்டுக்கு ஏற்பாடு பண்ணும்படியும் கேட்டுக்கிட்டார்..."

கௌரி பன்னிரண்டு வயசு துருதுரு பெண், மூக்கும் முழியும் வெடுக்கென்ற பேச்சுமாய் ஆளை மயக்கும் பெண். போன வருஷம் ஹ்ருதய ஆபரேஷன் நடந்தது. க்ளப்புக்கு ஏறக்குறைய ஆயிரம் ரூபாய் செலவு. இப்போது இரண்டாவது கொஞ்சம் பெரிசு.

"கௌரியோட இரத்தம் லேசுல கிடைக்காத க்ரூப் ஆச்சே! நம்ப மெம்பர்லே யார் அந்த க்ரூப் விசாரிச்சீங்களா?"



"அனுராதாவும், மிஸஸ் மோஸஸும் அந்த க்ரூப்தான். அனு ஊர்லே இல்லே... மிஸஸ் மோஸஸுக்கு ஜாண்டிஸ் வந்து ஒரு மாசம்தான் ஆறது. ஷி கான்ட் கிவ் ப்ளட்..."

"அப்ப என்ன பண்ணலாம்?"

எழுந்து இப்படியும் அப்படியும் நடந்து பூமா நின்றாள்.

"என்னிக்கு ஆபரேஷன், வைதேகி?"—

"அடுத்த வெள்ளிக்கிழமை..."

"ரைட்... அப்ப நமக்கு அஞ்சு நாள் டைம் இருக்கு... நீங்க ராமநாதன் கிட்ட பணத்தை நாம கொடுத்துடறதா சொல்லிடுங்க... அனுராதா எந்த ஊருக்குப் போயிருக்காங்கனு கேட்டு, தந்தி கொடுக்க முடியுமானா கொடுங்க... 'இன்ன க்ரூப் ரத்தம் தேவைப்படறது. முடிஞ்சவங்க ஜி. எச். சுக்கு வாங்க'னு வார்ட் நம்பர், கூடவே, நம்ம க்ளப் டெலிபோன் நம்பரும் கொடுத்து ஒரு விளம்பரம் போடறேன் எனக்கென்னவோ இதுக்கு நிச்சயம் பலன் இருக்கும்னுதான் தோணறது. ஸிம்பதியும், உதவற குணமும் இன்னும் நிறையப் பேர்கிட்ட இருக்கு. எங்கே போறது, எப்படிச் செய்யறதுனு புரியாமத்தான் பாதி நல்லவங்க சும்மா இருக்காங்க."

மேற்கொண்டு கமிட்டியில் தீர்மானிக்க வேண்டிய விஷயங்களைப் பேசி முடித்துவிட்டு அவரவர் கிளம்பிப் போனபின், பதைக்கிற வெயிலைப் பொருட்படுத்தாமல், "லட்சுமி, யாராவது போன் பண்ணா, நா ஹிந்து ஆபீஸ் வரைக்கும் போயிருக்கறதா சொல்லு" என்று மத்தியான வேளையில் கடிதப் போக்குவரத்து, க்ளப் டைப்பிங் போன்ற வேலைகளைக் கவனிக்கவென அமர்த்தப்பட்டிருக்கும் பகுதி நேர டைப்பிஸ்ட் லட்சுமியிடம் சொல்லிக் கொண்டு, பூமா குடையுடன் தெருவில் இறங்கி நடந்தாள்....

# 14

பாரதி சிவலிங்கத்தை வரவேற்பதற்காகச் செல்லா ராமசாமியின் வீடு சின்னதாக அலங்காரம் பண்ணிக் கொண்டிருந்தது.

ட்ராயிங் கம் டைனிங் ஹால் சுத்தமாக ஒழிக்கப்பட்டு, பெரிசாய் இரண்டு ஜமுக்காளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கமாய் மேஜை, இரண்டு நாற்காலிகள். பாரதி சிவலிங்கத்துக்கு ஒன்று, பூமாவுக்கு ஒன்று. டைனிங் ஹால் ஓரமாய் நீளமான மேஜை, அதில் சாப்பிடத் தயாராக வடை பூரி, சன்னா, கேக், மலைப்பழம், தண்ணீர் டம்ளர்கள், காபிக்காகக் காத்திருந்த காலிக் கோப்பைகள்.

ஹாலில் ஒரு பக்கமாக இருபது மாணவ மாணவிகள் வரிசையாக அமர்ந்திருந்தார்கள். அவர்களோடு விறகுத் தொட்டியில் கணக்கராகப் பணிபுரியும் சம்பத்தின் அப்பாவும் ஒரு செவிட்டு ஊமை பிள்ளையும் இருந்தனர்.

எந்த நிமிஷமும் பாரதி சிவலிங்கத்துடன் பூமா வந்து விடலாம்.

அங்கத்தினர்கள், சுமார் நூறுபேர், சின்னச் சின்ன குழுக்களாக நின்று கடைசி நிமிஷ ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

வந்தவர்களை வரவேற்க, வாசல் புல்வெளியில் நின்றிருந்த வைதேகியுடன் சிலர்...

சந்தன மாலையைப் பிரித்துச் சிக்கு இல்லாமல் இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருந்த லீலாவைச் சுற்றிச் சிலர்.



காபிக்கு சர்க்கரை போதுமா என்று சமையல் கட்டில் ருசி பார்த்த செல்லாவோடு சிலர்...

பூ ஜாடியில் சாய்ந்துவிட்ட பூக்களைச் சரி செய்த ஈஸ்வரி, பூமா படிக்க வேண்டிய ரிபோர்ட் தயாரா என்று கவனித்த சுமதி, ஐஸ் வாட்டரை கண்ணாடி டம்ளர்களில் ஊற்றிய அன்னம்மா... இன்னும் இங்கும் அங்குமாய் ஒன்றுமே செய்யாவிட்டாலும் பரபரப்புடன் தங்களுக்குள்ளேயே பேசிக் கொண்டு நடந்த அங்கத்தினர்கள்.

"நீ பாரதி சிவலிங்கத்தைப் பார்த்திருக்கியா?"

"ம்ஹூம்... நீ?"

"ஓ யெஸ்... இரண்டு தரம் அவங்க பேச்சைக் கூட கேட்டிருக்கேன். ரொம்ப மென்மையா பேசுவாங்க... ஆனா கருத்தெல்லாம் ஆணி அடிச்சாப்ல இருக்கும். ஒரு தரம் பால பவன் திறப்பு விழாலே ஸோஷியல் சர்வீஸ் பத்திப் பேசினாங்க பாரு... அடேயப்பா... பிரமாதம் போ... 'பத்துக் கமிட்டிலே மெம்பராயும் நாலு போர்டுலே வைஸ் ப்ரஸிடெண்டாவும் இருந்துகிட்டு, தினம் ஒரு மீட்டிங்குக்குப் போய் டிபன் காபி சாப்பிட்டு, வாய் ஓயாமல் பேசி, பேசினதை உடனே மறந்து போறவங்களைவிட, ஏதாவது ஒரு அமைப்புலே தன்னைச் சம்பந்தப்படுத்திக்கிட்டு அந்த அமைப்புக்காகச் சிரத்தையோட, தீவிரமாக உழைக்கறது ரொம்ப மேல்'னு சொல்லி, அன்னிக்கு அங்க கூடியிருந்த ஸோ கால்ட் சோஷியல் சர்வீஸ் செய்யற பெண்கள் சிலருக்குச் சரியான டோஸ் விட்டாங்க...."

"நாலு அமைப்புகளோட தொடர்பு வெச்சிருக்கறதுலே என்ன தப்பு? திறமை உள்ளவங்களால அத்தனைக்கும் ஈடு கொடுக்க முடியாதா என்ன? ஏன் இப்ப பாரதி சிவலிங்

கத்தையே எடுத்துக்கோயேன்... வெல்ஃபேர் போர்ட் சேர்மன் இவங்கதான்... கூடவே வேற பொறுப்புலேயும் இல்லாமயா இருப்பாங்க?"

"அவங்களைப் பத்தி உனக்குச் தெரிஞ்சது அவ்வளவு தான். பாரதி கொள்கைலே ரொம்ப அழுத்தமானவங்க... மினிஸ்டர் பதவிகூட வேண்டாம். சமூக நல போர்ட் தலைமைப் பதவி ஒண்ணு மட்டும் போதும்னு தீர்மானமா சொல்லிட்டவங்க... தெரியுமா? அவங்க டெடிகேஷன் யாருக்கும் வராதும்மா?..."

"நம்ம பூமாவுக்குக் கூடவா?"

இவர்கள் பேச்சைக் காதில் வாங்கியபடி அருகில் வந்த அன்னம்மா கேட்க, பாரதி சிவலிங்கத்துக்காக வக்காலத்து வாங்கிய அங்கத்தினர் சிரித்தார்.

"அ.... அது..."

"பதில் சொல்லத் தெரியாம, முழிக்காதே. ஊருக்கெல்லாம் பாரதி சிவலிங்கம் எவ்வளவு உயர்வோ அத்தனை உயர்வு நமக்கு நம்ம பூமா... பாரதி டெடிகேட் வொர்க்கர் தான், நா இல்லேனும் சொல்லலை, ஆனா பணம் காசு இருக்குறவங்க சோஷியல் சர்வீஸை ஒரு பொழுது போக்கா எடுத்துக்கிட்ட இந்த நாள்ல சாதாரண நிலைலே இருந்துகிட்டு என்னேரமும் பிறத்தியாரோட சுக, துக்கங்களையே நினைச்சுக்கிட்டு, அதுக்காகவே வாழ்ந்துக்கிட்டு பூமா மாதிரி இருக்கறவங்க ரொம்ப அபூர்வம்தானே?"

இப்போது அவர்களைச் சுற்றிக் கூட்டம் கூடிப் போனது.

"ஹியர் ஹியர் அன்னம்மா.... நீங்க சொன்னதெல்லாம் நூத்துக்கு நூறு சரி...."

"பாரதி சிவலிங்கத்துக்கும் பூமாவுக்கும் சின்ன வயசிலேந்தே ஒருத்தரை ஒருத்தர் தெரியும்ங்கறாங்களே நிஜம் தானா?"



"ஆமாம். சிவலிங்கம், பூமா அப்பா சுந்தரேசன் மாதிரி ஒரு தேசபக்தர்; சுதந்திரத்துக்காகப் பாடுபட்டவர். நேருஜிக்கு ரொம்ப தோஸ்த்துனுகூட சொல்லுவாங்க.... நல்ல வசதியான குடும்பத்துலே பிறந்தாலும், கல்யாணம் வேண்டாம்னு பாரதி சொல்லிட்டு நாட்டுக்கே தன்னை அர்ப்பணிச்சுக் கிட்டாங்களாம், பூமா மாதிரி. ரொம்ப வருஷம் முன்னால சேவா தளத்துலே பூமாவும் இவங்களும் ஒண்ணா வேலை பார்த்தது உண்டாம்..."

"அப்படீன்னா, நம்ப க்ளப் ஆரம்பிச்ச உடனேயே இவர்களை இப்ப மாதிரி ஒரு மீட்டிங்குக்குக் கூப்பிட்டிருக்கலாமே."

"க்ளப் நல்லா பேர் எடுத்த பிறகு வெல்ஃபேர் போர்ட் சேர்மனை கூப்பிடறதுதானே நியாயம்? முதல்லியே கூப்பிட்டா, அனாவசியமா சிபாரிசுக்கு போறாப்பல இல்லே இருக்கும்? பூமா குணம் தெரிஞ்சும் இப்படிக் கேக்கறீங்களே?

"லேடீஸ்... பேசினது போறும்... வந்து உட்காருங்க... வாசல்லே கார் வந்துடுத்து" செல்லா கைகளைத் தட்டி சப்திக்க, அவசரமாக அங்கத்தினர்கள் கலைந்தார்கள்.

பாரதி சிவலிங்கத்துக்குப் பூமாவைக் காட்டிலும் ஏழெட்டு வயது அதிகமாகவே இருக்கலாம்.

கதர்ப் புடவை, காதில் பொட்டாய் தங்கத்தோடு, கையில் வாட்ச், தலை நிறைய நரை. நல்ல சிவப்பு, மெலிதான உடம்பு, வாய் சிரிக்கும்போது கூடவே சிரிக்கும் கண்கள்....

பாரதி சிவலிங்கத்திடம் ஒரு அலாதி அழகு இருந்தது. வயசானதும், நாமும் இந்த மாதிரி கம்பீரத்துடன் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று பிறரை ஏங்க வைத்த அழகு, கண்டவுடன் எழுந்து நிற்க வைக்கிற மரியாதையைத் தூண்டும் அழகு....

கமிட்டி மெம்பர்களின் அறிமுகம் ஆனபிறகு, டிபன்களைத் தட்டில் எடுத்துக்கொண்டு ஆங்காங்கே நின்று பேசியபடி சாப்பிட்டார்கள். காபி குடித்ததும் கூட்டம் துவங்கியது.

க்ளப்பில் செய்த சந்தன மாலையை அவருக்கு அணிவித்து பூமா வரவேற்றுப் பேசினாள்.

பாரதி சிவலிங்கத்துடன் தனக்குப் பல வருஷங்களாக எப்படிப் பழக்கம் என்பதை விளக்கிய பின், அபயா சாரிடி க்ளப்பின் நடவடிக்கைகளைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகப் பேசினாள்.

"இந்த வருஷம் கையில் பண இருப்பு எதிர்பார்த்ததுக்கு அதிகமாகவே இருப்பதால் புதுசாய், இதுவரை யாரும் செய்யாத திட்டமாய் ஏதாவது பண்ண வேண்டும் என்று நாங்கள் விருப்பப்பட்டோம்... பல நாட்கள் யோசித்து விட்டு 'புக் பாங்க்' ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறோம்... ஏற்கனவே மருந்து பாங்க், பழைய துணிமணி பாங்க் என்ற திட்டங்களை நடத்தி வருவதை உங்களுக்கு இப்போது சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பிட்ட சில டாக்டர்களை மாதத்துக்கு ஒரு முறை சந்தித்து அவர்களிடம் உள்ள இலவச சாம்பிள் மருந்துகளைச் சேகரித்து ராமகிருஷ்ணா மடத்துக்குத் தொடர்ந்து தருகிறோம். இதே போல மூன்று மாசங்களுக்கு ஒருமுறை வீடு வீடாகச் சென்று பழைய துணிகளை வாங்கி ஸ்ரீனிவாஸ காந்தி நிலையம், சென்னபுரி அன்னதான சமாஜம் போன்ற அமைப்புகளுக்குக் கொடுத்து வருகிறோம். இந்த விதத்தில் நாங்கள் ஆரம்பித்திருக்கும் இன்னொரு திட்டம் இந்த 'புக் பாங்க்'. படிப்பை முடித்து விட்ட குழந்தைகளின் புத்தகங்களைச் சேகரிப்பதோடு, இரண்டாயிரம் ரூபாயை இந்த புக் பாங்கிற்காக ஒதுக்கிப் புது புத்தகங்களை வாங்கி இருக்கிறோம். புத்தகங்கள் தேவைப்படும் ஏழை மாணவ மாணவிகள் இவற்றை இலவசமாக உபயோகித்து



விட்டு, ஆண்டின் இறுதியில் பத்திரமாகத் திருப்பித் தந்து விடலாம். புக் பாங்கில் இதுவரை முப்பத்துநாலு குழந்தைகள் மெம்பராகச் சேர்ந்திருக்கிறார்கள். இன்றைக்கு இங்கு வந்திருக்கும் குழந்தைகளுக்குப் புத்தகங்களை வழங்கி இந்தத் திட்டத்தைத் துவங்கி வைக்குமாறு மதிப்பிற்குரிய பாரதி சிவலிங்கத்தை வேண்டுகிறேன்...

வந்திருந்த மாணவ மாணவிகளுக்குப் புத்தகங்களையும், சம்பத்தின் அப்பாவுக்குக் கண்ணாடியையும், செவிட்டுத்தனத்தால் ஊமையாக இருக்கும் குழந்தைக்கு ஹியரிங் எய்டையும் வழங்கியபின் பாரதி சிவலிங்கம் சின்னதாக உரையாற்றினார்.

"தானம் செய்வது ரொம்ப சுலபம்... யார் வேண்டுமானாலும் தானம் செய்யலாம். பணமோ, பொருளோ கொடுத்து விட்டு அதோடு பொறுப்பு முடிந்து நகர்ந்து விடலாம். ஆனால் சேவை என்பது அப்படி அல்ல. பாத்திரம் அறிந்து தானம் செய்ய வேண்டும். பின் அந்த தானத்தால் அவனுக்கு ஆதாயம் இருக்கிறதா, அவன் வாழ்க்கை மேம்பட்டு விட்டதா என்றெல்லாம் தொடர்ந்து பொறுப்புடன் கவனிக்க வேண்டும். இதுதான் சேவையுடைய நோக்கமே. தான, தருமத்தையும், சேவையையும் சிலர் ஒன்றாகக் கருதுகிறார்கள். இது தவறு. சேவை என்பது இன் பார்ன். ஒருவர் பிறக்கும் போது அவர் இரத்தத்தோடு கலந்து பிறக்கும் உணர்வு. இதை உண்டாக்க முடியாது. சேவை செய்ய முன் வருபவர்களுக்குத் தன்னலம் இருக்கக் கூடாது. அவர்கள் பிரதிபலனை எதிர்பார்க்கக் கூடாது. முக்கியமாய் ஜாதி, மதம், அரசியல் வெறி இவர்களுக்கு இருக்கக் கூடாது. குடும்பத்தில் ஈடுபட்டுக் கொண்டு சமூக சேவை செய்வது என்பது ரொம்ப கஷ்டமான விஷயம். இரட்டைப் பொறுப்பை நிர்வகிக்கும் திறமை உள்ளவர்கள் மட்டுமே இதில் இறங்க முடியும். சிரத்தை இல்லாமல், இது பெருமையாய்ப் பீற்றிக் கொள்ளக்கூடிய விஷயம். இதனால் விளம்பரம் கிடைக்கும் என்று சிலர்

செயல்படுவதால்தான் கதைகளிலும் சினிமாக்களிலும் சோஷியல் சர்வீஸ் செய்யும் பெண்மணியின் பிள்ளை பாலுக்காக அழுவது போலவும், வீட்டில் ஒட்டடை தொங்குவது போலவும் சித்தரித்துவிடுகிறார்கள். சமூக சேவை, குடும்பம் இரண்டில் ஈடுபட்டவர்கள் 'கத்தி முனையில் நடக்கும் வேலை இது' என்று புரிந்துகொள்ள வேண்டும். விழிப்பு, சிரத்தையோடு செயல்பட்டாலும்கூட அனாவசிய வம்பு வரும், பொறாமை வரும், திடமில்லாத போட்டி மனப்பான்மை உண்டாகும். உண்மையான சமூக சேவகி இதையெல்லாம் புன்னகையுடன் ஒதுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அபயா சாரிடி க்ளப்பைச் சார்ந்த நீங்கள் வித்தியாசமானவர்கள். குடும்பம், சமூக சேவை இரண்டிலும் தங்கள் எல்லைகளை மீறாமல் திறமையோடு செயல்படுகிறீர்கள் என்பது ரொம்பவும் சந்தோஷம் தரக்கூடிய செயல்..."

தொடர்ந்து அபயாவின் நல்ல செயல்கள் பற்றியும் தலைவி பூமாவைப் பற்றியும் நிறையவே பாரதி சிவலிங்கம் பேசினார்:

"பூமாவை நான் பல வருஷங்களாக அறிவேன். என்றாலும் இன்றுவரை என்னிடம் ஒரு சின்ன உதவிக்காகக்கூட அவர் வந்து நின்றதில்லை. இப்போதும்கூட எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமலேயே என்னை இங்கு அழைத்திருக்கிறார் என்பதை அடித்துக் கூற முடியும். ஆனாலும் வெல்பேர் போர்ட் சேர்மன் என்ற தகுதியில் உங்களிடம் சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். 'அபயா' இன்னும் எவ்வளவோ சாதிக்க வேண்டும் என்பது என் ஆசை. இப்படி ப்ளட் பாங்க், புக் பாங்க், கல்யாணச் செலவு, படிப்புச் செலவு என்பதோடு மட்டும் நிற்காமல், இன்னும் பெரியதாய், ரொம்ப பெரியதாய் நீங்கள் எதையாவது சாதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். உங்கள் தலைவிக்கும் உங்களுக்கும் ஆற்றல் இருக்கிறது. தன்னலம் கருதாத மனப்பான்மை இருக்கிறது— என்பதையெல்லாம் நினைத்துப்



பார்த்த பிறகே இந்த வார்த்தையை நான் சொல்கிறேன். அபயா சாரிடி பெரிய அளவில் தீவிரமாகச் செயல்படத் தொடங்கினால் வெல்பேர் போர்ட் அதற்கு எல்லாவிதத்திலும் வேண்டிய உதவிகளைச் செய்ய முன் வரும்... இது நிச்சயம்— யோசியுங்கள்."

பாரதி சிவலிங்கம் புறப்பட்டுப் போன ரொம்ப நேரம் ஆன பிறகும் அங்கேயே அமர்ந்து அங்கத்தினர்கள் தங்களுக்குள் விவாதித்தார்கள்.

பெரிய திட்டம் ஒன்றைத் தீட்டினால் நம்மால் நடத்த இயலுமா?

லட்சக்கணக்கில் பணம் தேவைப்படுமே... திரட்ட முடியுமா?

வெல்பேர் போர்ட் முழுக்க முழுக்க உதவி செய்யாது... ஓரளவுக்குத்தான் உதவும்.... பாக்கி முக்கால் பங்கை நாமே பார்த்துக்கொள்ள வேண்டுமே, சரிப்படுமா?

முடியுமா? சரிப்படுமா என்று பயந்தால் எப்படி?

துணிந்து முயன்று பார்த்தால்தானே முடியுமா, முடியாதா என்று புரியும்?

அபயா சாரிடி க்ளப்பை ஆரம்பித்தபோது யாராவது நினைத்தோமா— இப்படி கிடுகிடு என்று வளர்ந்து, இத்தனை உயர்வாய்ப் பேர் வாங்கி விடுவோம் என்று?

அது மாதிரிதான் இதுவும்... வெல்ஃபேர் போர்ட் சேர்மன் லேசில் வாய் திறந்து பாராட்டுபவர் அல்லர்; பாராட்டுதலோடு நிற்காமல் 'புதுசாய், பெரிசாய் ஆரம்பியுங்கள், நான் இருக்கிறேன்' என்று ஊக்கம் வேறு கொடுத்திருக்கிறார் என்றால், நம் மீது ஏகமாய் நம்பிக்கை வைத்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்? அவருக்கு நம்மீது இருக்கும் நம்பிக்கைகூட நமக்கு நம்மிடம் இல்லாவிட்டால் எப்படி?

பூமா இருக்கிறார் தலைமை தாங்கி அழைத்துச் செல்ல... அப்புறம் என்ன?

என்ன இருந்தாலும் முடியுமா?

குடும்பத்திலும் ஈடுபட்டுக் கொண்டு, சமூக சேவையிலும் அகலக் கால் வைப்பது சாத்தியமா!

மாட்டிக்கொண்டு முழிக்கக் கூடாதே...

இருக்கிற நல்ல பெயரையும் கெடுத்துக் கொள்ளக் கூடாதே...

முடியுமா?...

விடாமல் தொடர்ந்து வந்த நாட்களிலும் அங்கத்தினர்கள் ஒருவரோடு ஒருவர் கூடிப் பேசி அடுத்த புதன் கூட்டத்திலும் இதுபற்றி விவாதித்தபோது க்ளப்பின் இளைய தலைமுறையி னர் முடியும் என்று சிலிர்த்துக் கொண்டு எழ, பின்னாலேயே மற்றவர்களும் முடியும், நம்மால் செய்ய இயலும், நாடு போற்றும்படி ஆக்க பூர்வமாக எதையாவது சாதிக்க முடியும் என்று உறுதியாகச் சொன்னார்கள்.

சரி... முடியும்...

சாதிக்கலாம்...

ஆனால், எதை?

அனாதை இல்லம்?

வேலை பார்க்கும் பெண்களுக்கான விடுதி?

முதியோர்கள் காப்பகம்?

எது?

# 15

**எ**ன்ன செய்யலாம்?

பால பவன்?

அனாதைக் குழந்தைகள் இல்லாமா?

பிறந்த உடனேயே தாய் இறந்தோ, அல்லது விட்டுவிட்டு ஓடியோ போவதனால் அனாதையாகிவிடும் சின்னஞ் சிறுசுகளை எடுத்து அரவணைத்து வளர்க்கும் காப்பகத்தை ஆரம்பிக்கலாமா?

தளிரான குழந்தைகளை நன்றாகப் பேணி வளர்த்து. தத்துக் கொடுத்து, அந்தக் குழந்தைகளுக்கு நல்லதொரு வீடு, அப்பா, அம்மா உற்றோரை ஏற்படுத்தும் நற்பணியைச் செய்யலாமா?

சட்டென்று பூமாவுக்குச் சில வருஷங்களுக்குமுன் அவளுடைய எழுத்தாள சினேகிதி அமெரிக்கா, கானடா எல்லாம் போய்விட்டு வந்து கூறின வார்த்தைகள் நினைப் புக்கு வந்தன.

"சில அனாதை ஆஸ்ரமங்களை அங்கே பார்த்தேன் பூமா... அம்மம்மா, அது ஓர் அலாதி அனுபவம், வீடுகள் மாதிரியே சுத்தமான இல்லங்கள். ரோஜாப்பு, ரோஜாப் பூவாய் திடமான அழகான குழந்தைகள். பேச்சும், பழக்கமும் ஒரு நல்ல குடும்பத்துக் குழந்தைகள் போலவே இருக்கிறதால், அனாதை இல்லத்துப் பசங்களைப் பார்க்கிறோம்ங்கற எண்ணமே உண்டாகலை. வதவதனு குழந்தைகளைச் சேத்துக் காம, ஒவ்வோரு இல்லத்துக்கும் இத்தனைதான்னு வரையறை

வைச்சு, சிரத்தையோட வளர்க்கப்படற அந்தக் குழந்தைகளை விரும்பித் தத்து எடுத்துக்கறாளாம்... நம்ப நாட்டுலேயும் ஏன் இப்படியும் தத்துக் கொடுக்க அனாதை ஆஸ்ரமங்களைத் தனியா பராமரிக்கக் கூடாது? மூக்கொழுகலும், அசிங்கமுமாய் குழந்தைகள் நின்னா யாருக்கு தத்து எடுக்க ஆசை வரும்? ம்? அக்கறை, டிடிகேஷன், பணம் இருந்தா இது சாத்தியம் தானே பூமா?"

அந்த எழுத்தாள சினேகிதி இந்தியாவில் எங்கோ, யாரோ ஏமாற்றுப் பேர்வழி ஆஸ்ரமம் நடத்துவதைப் பார்த்திருக்க வேண்டும். அதுதான் இந்த வேதனை, புலம்பல்.

இல்லத்துக்கு அன்பளிப்பாக வரும் பால் டின்களையும் இதர பொருள்களையும் கால் விலையில் விற்று பணம் சம்பாதித்துவிட்டு, குழந்தைகளை, மூக்கொழுக, எலும்பும் தோலுமாய் நிற்க வைத்திருக்கும் ஒரு காப்பகத்தை கண்டிருக்க வேண்டும்... அதுதான் இந்த ஏக்கம், ஆற்றாமை...

அருமையான பாலபவன்கள் இப்போது நம் நாட்டில் இல்லாமல் இல்லை.

மஞ்சு பாஷிணியின் பாலமந்திர், அன்பையும் பரிவையும் தன் அஸ்திவாரமாகக் கொண்டு நாடு போற்றும் ஸ்தாபனமாக இன்று வளர்ந்திருக்கும் பாலமந்திர்.

திருப்பராய்த்துறையில் இயங்கும் ராமகிருஷ்ண ஆஸ்ரமம்... அடேயப்பா... அங்கிருக்கும் சுத்தமும், எளிமையும், அடக்கமும் சாதாரண மற்ற பள்ளிக் குழந்தைகளுக்குக்கூட வருவது கஷ்டம்தான்.

எஸ்.ஓ.எஸ். வில்லேஜ்— வீட்டுக்கு பத்துக் குழந்தைகள் என்று தேர்ந்தெடுத்து, ஒரு அம்மாவையும் விசாலமான வீடு வசதி என்று அத்தனையும் கொடுத்து பிரமாதமாகப் பிள்ளைகளைப் பேணும் இல்லம்....



இது போல எத்தனையோ, வேலூரில், கோயம்புத்தூரில், திருச்சியில்....

வேண்டாம்.... அனாதை ஆஸ்ரமத்தை ஆரம்பிக்க வேண்டாம்... ஏற்கனவே இங்கும் அங்கும் கடுகு சிதறின மாதிரி ஏராளமான நல்ல, சுமாரான இல்லங்கள் தோன்றி நடந்து வருகின்றன, அதனால் நாம் ஆரம்பிப்பதும் நூற்றில் ஒன்றாக இருக்குமே தவிரவும், அலாதியானதாய், வித்தியாசமானதாய், அத்தனையிலிருந்தும் தனித்து நிற்பதாய் இருக்காது...

ஸோ...?

வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்?

வேலை பார்க்கும் ஏழைப்பெண்கள், நாதியற்றவர்கள் பாதுகாப்பாகத் தங்க ஒரு விடுதி?

இதைத் துவங்கலாமா?

ஏனோ, எடுத்த எடுப்பிலேயே பூமாவுக்கு இந்தத் திட்டத்தின்மேல் அத்தனை பிடிப்பு உண்டாகவில்லை.

ஹாஸ்டல் கட்டி, பணம் வசூலித்து, பெண்களை இருக்கச் செய்வதை அலாதியான சமூக சேவை என்று எப்படிச் சொல்ல முடியும்?

பணம், காசு இருக்கும் எவரும் ஒரு வியாபார நிமித்தத்துக்காக ஹோட்டலையும் இதர கட்டடங்களையும் கட்டி வாடகைக்கு விடுவதற்கும் இதற்கும் என்ன பெரிய வித்தியாசம்?

சரி—ஏழை, அனாதைப் பெண்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கிறது என்பது நிஜம்தான். ஆனாலும்?

வாடகை வாங்காமல், இலவசமாகவா அவர்களுக்கு அறைகளைத் தருவோம்? ம்ஹூம் இல்லை, நிச்சயமாக.

சம்பாதிக்கும் பெண்கள்; அவர்களால் ஓரளவு பணத்தைச் செலவழிக்க இயலும். தவிரவும் பணம் கொடுத்து உபயோகிக்கும் பொருளின் அருமை அதிகமாகத் தெரியும் என்பதால் கண்டிப்பாக வாடகை வாங்குவோம்.

அப்படியானால் இதில் பிரமாதமான சமூக சேவை என்ன இருக்கிறது?

வியாபாரம் ஆகி விடுமோ?

நாங்களும் பலவீனங்கள் நிறைந்த மனிதப் பிறவிகளாக இருந்து நாளடைவில் மனம் மாறி 'அதிக வாடகை கொடுப்பவர்களுக்குத்தான் அறை' என்று வியாபாரம் செய்யும் அளவுக்குப் போய்விட்டால்?

இன்னொரு கஷ்டம்—

வயசுக்கு வந்த பெண்களில் அத்தனை பேரும் அடக்கமாய், அடங்கி இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. பாய் பிரண்ட் சிலருக்கு இருக்கலாம், வயசுக் கோளாறால் உணர்ச்சி வசப்பட்டுத் தப்புத்தண்டா செய்து விடலாம். இதனால் ஹாஸ்டலின் பெயர் கெடலாம்.

தேளை மடியில் கட்டிக்கொண்டு, கொட்டுமோ கொட்டுமோ என்று அவஸ்தை எதற்கு?

ம்ஹூம்... இந்தத் திட்டமும் வேண்டாம், நமக்குச் சரிப்படாது...

சரி, அடுத்து?

க்ரீஷ்... வைக்கலாமா?

வேலைக்குப் போகும் பெண்களின் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் இல்லம்?



இலவசமாக குழந்தைகளைப் பார்த்துக் கொண்டால்தான் மனசுக்குத் திருப்தி. ஆனால் தாய், தந்தை சம்பாதிக்கும்போது குழந்தையை இலவசமாகப் பார்த்துக் கொள்கிறேன் என்றால், இது நியாயமாகத் தோன்றவில்லையே...! எத்தனையோ இல்லாதவர்கள் இருக்கையில்— ஒரு வேளைச் சோற்றுக்கு வழி இல்லாமல் தவிப்பவர்கள் இருக்கையில் — ஓரளவு பணம் சம்பாதிப்பவர்களுக்கு இலவசமாக உதவி செய்வதில் பெரிய சாதனை என்ன இருக்கிறது? சம்பாத்தியம் குறைவாக உள்ளவர்களின் குழந்தைகளை இலவசமாகவும், சக்தி உள்ளவர்களிடம் அதுக்குத் தக்கபடியும் வசூல் பண்ணுவதும் சரி இல்லை... உன் குழந்தை மட்டம், என்னுடையது உசத்தி என்ற மனஸ்தாபத்தை இச்செயல் உண்டு பண்ணலாம்...

நோ... இதுவும் சரிப்படாது.

பிச்சைக்காரர்கள் இல்லம்?

தொழு நோயாளிகளுக்கு விடுதி?

ஹோ! இரண்டும் ரொம்பப் பெரிய ப்ராஜெக்ட்... விரலுக்குத் தக்க வீக்கமாக இல்லாமல் மாட்டிக்கொண்டு விழிக்க வைத்து விடுமளவுக்கு வலிமை உள்ள திட்டங்கள்.

தவிரவும், அரசாங்கம் ஏற்கனவே தீவிரமாகக் கவனத்தைச் செலுத்தும் விஷயங்கள் இவை.

வேண்டாம், இவை சரிப்பட்டு வராது... நிச்சயம்...

பிறகு?

வேறென்ன?

வாட் அபௌட் ஓல்ட் ஏஜ் ஹோம்?

அனாதை முதியோர்களுக்கென்று ஒரு இல்லம் ஆரம்பித்தால் என்ன?

அது என்னமோ ஆரம்பத்திலிருந்தே, அன்று பாரதி சிவலிங்கம் 'முதியோர் இல்லம்' என்ற வார்த்தையை உச்சரித்த கணத்திலிருந்தே மனசுக்குள் எதுவோ உறுத்தின மாதிரி, மூளைக்குள் எங்கோ மணி அடித்த மாதிரி, அடிவயிற்றில் யாரோ ஐஸ் கட்டியை வைத்த மாதிரி— பூமாவுக்குள் ஓர் உணர்வு.

உற்றார், உறவினரால் கைவிடப்பட்ட வயதான அம்மா, அப்பாக்கள்....

இவர்கள் தங்கள் கடைசி காலத்தை நிம்மதியாகக் கழிக்கவென ஒரு இல்லம்... இல்லை... இல்லை வீடு... 'எனக்கு யாருமே இல்லை'— என்று பரிதவிக்கும் வயோதிகரின் கண்ணீரைத் துடைத்து 'நான் இருக்கிறேன் வா' என்று அரவணைக்கும் வீடு...

ம்ம்ம்.... நினைப்பே நன்றாகத்தான் இருக்கிறது.

அதுசரி, முதியோர்களுக்கு ஒரு வீடு என்பதை நினைத்துப் பார்க்கும்போது மனசுக்குள் பறவைகள் ஏன் பறக்கின்றன?

நெருஞ்சி முள்ளாய் என்னமோ ஏன் உறுத்துகிறது?

பாரமாய் கல் மாதிரி உள்ளுக்குள் எதுவோ ஏன் கனக்கிறது?

ஏன்? ஏன்?

இந்தக் கேள்விகள் தோன்றிய பிறகு முதல் நாள் இரவு ஒருவித தவிப்புடன் தனியாய் அமர்ந்து யோசனை பண்ணினாள்.

அண்ணா ராகவனின் உதாசீனத்தால் அம்மா பட்ட வேதனைகளின் எதிரொலியா?

அடுப்படியில் அம்மா அவஸ்தைப்பட்டு, வெந்ததைப் பார்த்ததன் பிரதிபலிப்பா?



பிள்ளை கைவிட்டதும், நடுத்தெருவில் நாறிப் போகாமல் இருக்க அம்மா போராடிய போராட்டங்களின் மறுகுரலா?

அதுதான் அனாதையான, வயசானவர்கள் என்றால் நெஞ்சில் இந்த வலி உண்டாகிறது.

எப்போது எண்ணினாலும் வலி, பரபரப்போடு ஒரு இத்தையும் இது தந்ததைப் புரிந்துகொண்டு விட்டதால், ஒருதலைப் பட்சமாக நான் இருக்கக்கூடாது; என் சுய அனுபவத்தை வைத்துக்கொண்டு என் மனசுக்குப் பிடித்த மானதைச் செய்ய முன் வந்துவிடக் கூடாது; சமூகத்துக்கு எந்தத் திட்டம் அத்யாவசியமானது, சிறந்தது என்று பார்க்க வேண்டும். உடனடித் தேவை எது என்று அலச வேண்டும். அதனால் மற்ற திட்டங்களை எல்லாம் மஞ்சள் கண்ணாடி போட்டுக் கொள்ளாமல் நேர்மையாக அணுகிவிட்டு, சரிப் பட்டு வராவிட்டால் மட்டுமே இந்த முதியோர் விடுதியிடம் நெருங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, அதன்படியே ஆழ்ந்து யோசித்து, மற்றவர்களுடன் விவாதித்த வரைக்கும் வேறு எதுவும் தோதுப்படாது போகவே, கடைசியாக அடிமனதில் தள்ளி வைத்திருந்த முதியோர்கள் இல்லத்திடம் பூமா வந்தாள்.

வயதான அப்பா அம்மாக்களுக்கென்று ஒரு வீடு...

எப்படி இருக்க வேண்டும் இந்த வீடு? இதன் பராமரிப்பு?

சில நாட்கள் தீவிரமாக யோசனை பண்ணி, இந்தத் திட்டத்தில் ஒரு தனித்தன்மை இருப்பது உண்மைதான் என்பது புரிய, சென்னையிலும் மற்ற இடங்களிலும் உள்ள முதியோர் இல்லங்களின் பட்டியலை விசாரித்துத் தெரிந்து கொண்டு, ஒவ்வொன்றாகச் சென்று பார்த்து வந்தாள்.

முதலில், 'ஓ அதுவா, பிரமாதமான ஸ்தாபனம்' என்று ஒட்டு மொத்தமாக அனைவரும் பாராட்டிய 'லிட்டில் ஸிஸ்டர் ஆஃப் த புவர்' விடுதிக்குச் சென்றாள்.

ஹாரிங்டன் சாலையில் விஸ்தாரமான இடத்தில், மரங்கள் சோலையாய்ச் சூழ்ந்திருக்க இல்லம் இருந்தது.

சிரித்த முகத்தோடு ஒரு 'நன்' பூமாவுக்கு இடத்தைச் சுற்றிக் காட்டினார்.

தம்பதிகள் பிரியாமல் ஒன்றாகத் தங்கிக் குடித்தனம் பண்ணும் தனி காட்டேஜ்கள்...

அடுத்து, இந்தப் பக்கம் ஆண்கள், அந்தப் பக்கம் பெண்கள் தங்கும் பெரிய டார்மிடரி எனப்படும் கூடங்கள்...

ஒவ்வொருவருத்தருக்கும் தனித்தனிக் கட்டில், சின்ன அலமாரி...

நறுவிசாய்ப் படுக்கை, துளி அழுக்கு இல்லாத விரிப்புகள்...

நீண்டு அகன்றிருந்த சாப்பாட்டுக்கூடம். சின்ன சின்ன மேஜைகள், அதில் அவரவர் தட்டு, ஸால்ட் பெப்பர் குப்பிகளை வைக்க ட்ராயர்கள்.

இடம் படு சுத்தமாக இருந்தது. 'நன்'கள் ஓடி, ஓடி சிரித்த முகத்தோடு அலுக்காமல், சலிக்காமல் வேலை பண்ணுவது பார்க்க ரம்யமாக இருந்தது.

இருநூறு பாட்டி, தாத்தாக்களும் பிரார்த்தனை சொல்லிவிட்டு நிம்மதியாய், ரசித்து உணவை உண்டார்கள். பிறகு முடியாதவர்களுக்கு, முடிந்தவர்கள் சாப்பாடு எடுத்துப் போய் ஊட்டி உதவியபோது அந்த இருநூறு பேர் நடுவிலும் ஒரு சகோதரத்துவம் மின்னுவதை பூமாவால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.



கீழ்ப்பாக்கத்தில் உள்ள 'மெர்ஸி ஹோம்' ஆங்கிலோ இந்தியர்களுக்கென்று நடத்தப்படும் 'ப்ரெண்ட் இன் நீட்' ஹோம், கோவளத்தருகில் உள்ள 'செஸ்ஷயர் ஹோம்'.

பாண்டிச்சேரியில் நடக்கும் 'க்ளுனி ஸிஸ்டர்ஸ்' இல்லம், கடலூரில் உள்ள மிஷனரி இல்லம்...

அடுத்து வந்த பதினைந்து நாட்களில், மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு அன்றும் ஒவ்வொரு இல்லமாகப் பார்த்து வந்த பிறகு பெங்களூர், மைசூரில் 'தி லிட்டில் ஸிஸ்டர்ஸ் ஆஃப் த புவரி'ன் கிளைகள் இயங்குவதைக்கூட கைப் பணத்தைச் செலவழித்துக் கொண்டு போய் பூமா விசாரித்துக் கொண்டு வந்துவிட்டாள்.

கடைசியாக, மதுரையில் கில்ட் ஆஃப் ஸர்வீஸ் ஆண்களுக்காக மட்டும் நடத்தும் ராஜாஜி இல்லத்தையும் விடவில்லை.

அத்தனை விடுதிகளையும் பார்க்கப் பார்க்க, விவரங்களைத் தெரிந்து கொள்ளத் தெரிந்து கொள்ள பூமாவின் நெஞ்சுக்குள் உண்டாகியிருந்த பரபரப்பும், துடிப்பும் ஏகமாக வளர்ந்து போயின.

இதுதானா?

இந்தத் திட்டம் தானா?

நிச்சயமாய் இதேதானா?

'ச்சீ நீ வேணாம் போ' என்று பெற்ற குழந்தைகளாலும், மற்றவர்களாலும் விரட்டி அடிக்கப்பட்டு, தள்ளாத காலத்தில் நிம்மதி இல்லாமல், பாதுகாப்பு இல்லாமல், அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன செய்வோம் என்ற பரிதவிப்போடு, உடம்புக்கு வந்து படுத்துவிட்டால் நமக்கு யார் என்ற பயத்தோடு அல்லாடும் வயதானவர்களை இரண்டு

கரத்தாலும் அணைத்து 'நாங்கள் இருக்கிறோம் உங்களுக்கு' என்று கனிவாக, பரிவாக, இதமாகச் சொல்லக் கூடிய இந்த இல்லம்தானா?

பூமா தீர்மானித்து விட்டாள்.

# 16

**"எ**தனாலே அவ்வளவு தீர்மானமா அனாதைப் பெண்கள் முதியோர்களுக்கான இல்லம் ஆரம்பிக்கலாம்னு நீங்க சொல் நீங்க, பூமா? காரணங்களை நாங்க தெரிஞ்சுக்கலாமா?"–

"நிச்சயமா– அதையெல்லாம் தெளிவா சொல்லறதுக்குத் தானே இன்னிக்கு நாம கூடியிருக்கோம். கடந்த ஒரு மாசமா மெட்ராஸ¬லேயும், வெளி ஊர்கள்லேயும் உள்ள முதியோர் இல்லங்களைப் பார்த்து விசாரிச்சு இது விஷயமா கமிட்டிலே நாங்க நிறைய விவாதிச்சு, ஒரு மனசா இந்தத் திட்டத்தை ஆதரிக்கிறதால, மெம்பர்கள் உங்க அபிப்பிராயத்தையும் தெரிஞ்சுக்க விரும்பறது இந்தக் கூட்டத்தோட முக்கிய நோக்கம்..."

கூடியிருந்த எழுபத்து எட்டு மெம்பர்களும் கவனமாய்க் கேட்க, பூமா தொடர்ந்தாள்.

"எத்தனையோ திட்டங்கள் இருக்கும்போது, இந்த முதியோர் இல்லத்தைத் தேர்ந்தெடுக்கலாம்னு ஏன் சொல்லணும்னு நீங்க நினைக்கலாம்... வெல்... காலம் மாறிட்டு வருது... முன்னே இருந்த பழக்கவழக்கங்கள் இப்ப நமக்கெல்லாம் இல்லே... முன்பு கூட்டுக் குடும்பமா வாழ்ந்தோம். எந்த சுக துக்கத்தையும் சேர்ந்து தாங்கிக்கப் பழகினோம். ஆனா இப்ப அப்படி இல்லே... எல்லாருக்கும் அவங்க அவங்க மனைவி, கணவன், குழந்தை முக்கியமா... போயாச்சு.



பெத்தவங்களும் பெரியவங்களும் நிறைய குடும்பங்கள்லே வேண்டாதவங்களா ஆகத் துவங்கி விட்டது, விரைவிலேயே நம் நாட்டைப் பெருமளவிலே பாதிக்கப் போற பிரச்சினையா மாறிடுமோனு எனக்குப் பயமா இருக்கு..."

"பிரச்சினைனு எடுத்துக்கிட்டா, இது ஒண்ணுதானா பூமா? அப்படிப் பார்த்தா ஏழைக் குழந்தைங்க– வதவதனு பெருகி கிட்டுப் போற ஜனத்தொகையால அனாதையா தவிக்கிற குழந்தைங்கபாடு—பெரியபாடு இல்லையா?"

"பெரிசுதான். நான் இல்லேனு சொல்லலை... ஆனா இதைக் கவனிக்கப் பலர் புறப்பட்டு இருக்காங்க... அரசாங்கமும், தனியார்களும் நிறைய குழந்தைகள் காப்பகங்களை நல்ல முறையிலே நடத்திட்டு வராங்க..."

"அப்படிப் பார்த்தா, எத்தனையோ ஓல்ட் ஏஜ் ஹோம்ஸ் கூடத்தான் இருக்கு...'

"எத்தனையோ இல்லே, நாராயணி... மற்ற இல்லங்களோடு ஒப்பிடறப்போ, அதுலே கால்வாசிகூட இல்லே... வயதானவர்களுக்காக நடத்தப்படற இல்லங்களைப் பத்தி விரிவா பேசறதுக்கு முன்னால முதியோர்களோட ப்ராப்ளம்களைக் கொஞ்சம் சொல்லவிரும்பறேன். ப்ளீஸ் கேளுங்க.... அமெரிக்காலே ஒருத்தர் சம்பாதிக்கும்போதே வயசான காலத்துக்குனு தனியா அவரைக் கட்டாயமாப் பணம் சேர்க்க வைத்து, அரசாங்கம் தானும் அந்த மனிதருக்கு உதவறது... அதனால தன் முதுமைப் பொருளாதாரத்தைப் பத்தி அந்த நாட்டுக்காரங்க அத்தனை கவலைப்படறதில்லே... ஆனா இங்கே நாலு குழந்தைகளைப் பெத்த ஒருவரை எடுத்துக்கிட்டா, கடனை உடனே வாங்கிப் பிள்ளைகளைப் படிக்க வச்சி, பெண்ணுக்குக் கல்யாணத்தைப் பண்ணறதுக்குள்ள மனுஷன் விழி பிதுங்கிப் போயிடறது... அவர் ரிடையர் ஆகும் போது, கையிலே காலணா இல்லாம குழந்தைகளோட தயவை

எதிர்பார்க்கற நிலை... நா ஏற்கனவே சொன்னபடி கூட்டுக் குடும்பம் நசிச்சுக்கிட்டு வர்ற இந்த நாள்லே வயசானவங்க என்ன பண்ணுவாங்க? சொல்லுங்க? மேல்நாடு மாதிரி நமக்காக நாமே சேர்த்து வைக்கிற பழக்கமும் இல்லே, பழைய கூட்டுக் குடும்பமும் மறைஞ்சாச்சு... இப்ப இவங்க நிலை? பல குடும்பத்துலே வயசானவங்க இந்த இரண்டுங்கெட்டான் நிலைலேதான் இருக்காங்க.... என்ன லேடீஸ், நீங்க ஒத்துக்கறீங்க இல்லே?"—

சில அங்கத்தினர்கள் ஆம் என்று தலை ஆட்டினர்.

"முதுமைன்றது ஒரு விபத்தோ, இல்லை வியாதியோ இல்லே... ஐம்பது வயசுலேயிருந்து இதோ வரேன், இதோ வரேன்னு சொல்லிகிட்டே வருவது. திடீர்னு யாருக்கும் ஒரு நாள்லே முதுமை வர்றதில்லே... ஆனாலும் எத்தனை குடும்பத்துலே, எத்தனை வயசானவங்க, இதைச் சரியான கண்ணோட்டம், மனப்பக்குவத்தோட வரவேற்கத் தயாரா இருக்காங்க சொல்லுங்க?"—

சம்பூர்ணம் என்ற அங்கத்தினர் உட்கார்ந்தபடியே கேட்டாள்.

"ஆல்ரைட்... நீங்க சொல்றதெல்லாம் சரிதான்... ஆனா முதியோர் இல்லத்தை நாம துவங்கறதால, நாட்டுலே இன்னிக்கு உண்டாயிருக்கிற சூழ்நிலை மாறிடுமா? நம்மாலான உதவியா சில வயசானவங்களுக்கு ஆறுதல் தரலாமே தவிர வாட் அபௌட் அதர்ஸ்? இந்தப் பிரச்சினைக்குச் சரியான விடை என்ன பூமா?"—

பூமா சில கணங்கள் யோசித்தாள். அப்புறம் நிதானமாகப் பேசினாள்.



"வயசானவங்களும், இளைய தலைமுறையினரும் அவங்க அவங்க மனசை தயார் பண்ணிக்கிட்டு, சூழ்நிலையை விவேகத்தோடு எதிர்நோக்கக் காத்துக்கிட்டு, சுயநலம் இல்லாம வாழ முயற்சிக்கறதுதான் உண்மையான சொல்யூஷன்..."

"இது நடக்கக்கூடிய காரியமா?"—

"ஏன் நடக்காது? மனசாட்சிக்குப் பயந்து நேர்மையாக, அன்பா நடந்தா கண்டிப்பா நடக்கும்... இந்தப் பேச்சை இன்னொரு நாள் வைச்சிக்கலாம். இப்ப, இந்தப் பிரச்சினையால பாதிக்கப்பட்ட சிலருக்காவது நாம எப்படி உதவலாம்னு பார்க்கலாம்... ஏற்கனவே நடந்துக்கிட்டிருக்கிற முதியோர் ஹோம்ஸ் பத்தி நாராயணி கேட்டாங்க... விவரம் சொல்றேன், கேட்டுக்குங்க... நா இது வரைக்கும் சென்னைலேயும், மற்ற இடங்களிலேயும் பார்த்த இல்லங்கள் அத்தனையும் கிறிஸ்துவ மிஷினெரிகளால நடத்தப்படறவை... 'ப்ரண்ட் இன் நீட்' னு ஆங்கிலோ இந்தியர்களுக்காக இருக்குறதைத் தவிர, பாக்கி எல்லாத்திலேயும் கிரிஸ்டியன்ஸுக்கு ப்ரயாரிடி கொடுத்தாலும் எல்லா மதத்தவங்களும் இருக்காங்க... மதுரைலே இயங்கும் 'ராஜாஜி இல்லம்' ஒண்ணுதான் மிஷினெரி அல்லாதவர்களோட சம்பந்தப்பட்டது... கடந்த பதினைஞ்சு நாளா இந்த ஹோம்களை எல்லாம் பார்த்ததுலேந்து எனக்குள்ள ஒரு வேதனை. நம்ப நாட்டுலே, நம்ப ஜனங்களுக்காக, இன்னொரு நாட்டுலேந்து வந்தவங்க ஓயாம உழைக்கறாங்க, ஆனா நாம எண்ண பண்றோம்னு வேதனை... ஹிந்து மதத்தைச் சார்ந்தவர்கள் யாருமே இப்படி ஒரு இல்லத்தை ஏன் ஆரம்பிச்சு நடத்த முன்வரலைனு எனக்கு ரொம்ப வேதனை... மதர் தெரிஸா நமக்காக உழைக்கிற உழைப்புக்கு அர்த்தம் இருக்குன்னா, நாமும் அதுலே பங்கெடுக்கறதுதானே நியாயம்? அனாதைப் பெண் முதியோருக்கான, முதல் இல்லத்தைத் திறந்து, திறம்பட நடத்துற பெருமை, சந்தோஷம், நிறைவு நமக்கு — நம்ப கிளப்புக்கு வரணும்னு ஆசைப்

படறது தப்பா? பேராசையா? சொல்லுங்க? இதுல யாருக்காவது ஆட்சேபணை இருக்கா?"—

மெம்பர்களில் ஏழெட்டு பேர் எழுந்து நின்று 'இல்லை இல்லை' என்று கூவ, ஒட்டு மொத்தமாக அனைவரும் உணர்ச்சி வசப்பட்டிருப்பதைப் பூமாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

சிவகாமி என்ற மெம்பர் எழுந்தாள்.

"குறுக்குக் கேள்வி கேக்கறதா நினைக்காதீங்க பூமா... நீங்க எதுசெய்தாலும் தெளிவா யோசனை பண்ணிட்டு தான் செய்வீங்க, பிறர் நலனை மனசுலே வைச்சிட்டுத்தான் பேசுவீங்கனு தெரியும்... ஆனாலும் பெண்கள் முதியோர் இல்லம்னு குறிப்பா நீங்க சொல்றதுக்குக் காரணம்? கஷ்டம்ன்றது ஆம்பிளைக்கும்தானே? இரண்டு பேருக்குமே பொதுவா ஆரம்பிச்சா என்ன?"—

"அந்த பாஸிபிலிடியையும் நாங்க யோசனை பண்ணிட்டோம். இரண்டு சாராருக்கும் ஆரம்பிக்கறதுன்னா ஏகப்பட்ட முதலீடு வேணும். நமக்கு அது தாங்காது... தவிர பெண் முதியோர்களுக்குனு தனியா எந்த இல்லமும் எங்கேயும் நடத்தப் படறதா தெரியல்ல..."

தன் பேச்சு அங்கத்தினர்களைப் பாதித்து, அவர்களைச் சிந்திக்க வைத்துவிட்டதை உணர்ந்த மாதிரி பூமா சில நிமிஷங்களுக்கு மௌனமாக இருந்துவிட்டு மேலே பேசினாள்.

"ஏன் முதியோர் இல்லம் ஆரம்பிக்கணும்னு சொல்லிட்டேன்— இப்போது எந்த மாதிரியான வயசானவங்களுக்காகன்றதையும் கொஞ்சம் விளக்கிடறேன்... முதியோர் இல்லம் துவங்கறதைக் கமிட்டி ஏற்றுக் கொண்டதும், நான் டாக்டர் விவேகானந்தனைச் சந்திச்சேன். இவர் ஒரு ஜீரியாட்ரிக் ஸ்பெஷலிஸ்ட்... அதாவது முதுமை பற்றின நிபுணர். இவர் முதுமைனா என்ன, அதன் பாதிப்புகள் மனிதர்களிடம்



எப்படி எப்படி இருக்குனு சொன்னதை நீங்களும் தெரிஞ்சிக்கணும்..."

"வயசானவங்களைப் பத்தி விசேஷமா தெரிஞ்சிக்க என்ன இருக்கு பூமா? வயசானா கிழவனாகவோ, கிழவியாகவோ ஆயிடுவாங்க.... அப்புறம் செத்துடுவாங்க... அவ்வளவுதானே?"—

நிலைமை புரியாமல் வேடிக்கையாக ஸ்வர்ணா என்ற இளவயது அங்கத்தினர் பேச, மற்றவர்கள் அவளை 'ஷ்ஷ்... சும்மா இரேன், ப்ரெஸிடெண்ட் என்ன சொல்றார்னு கேப்போம்" என்று அடக்கினர்.

"இல்லே... ஸ்வர்ணா கேட்டது ரொம்ப சரி... இந்த மாதிரி குறுக்குக் கேள்விகள் கேட்டாத்தான், தெளிவா விவரங்களை விளக்க முடியும். இது நானும், கமிட்டி மெம்பர்களும் மட்டும் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லே.... நீங்க ஒவ்வொருத்தரும் சம்பந்தப்பட்டது.... ஸோ, எந்த சந்தேகத்தையும் கேட்டுடறது நல்லதுதான்..."

"நா தப்பா கேக்கலை... வந்து..."

"நீங்க குதர்க்கமா கேட்டதா நா நினைக்கலை ஸ்வர்ணா... உங்க மாதிரிதான் நானும் வயசானவங்களைப் பத்தி புதுசா என்ன தெரிஞ்சுடப் போறதுனு இருந்தேன்.... ஆனா, டாக்டர் சொன்ன விவரங்களைக் கேட்டு அசந்துதான் போயிட்டேன். சின்னக் குழந்தைகளும் வயசானவங்களும் ஒரே ரகம்னு டாக்டர் சொல்றார். குழந்தைங்க மத்தவங்களோட கவனிப்பு வேணும்னு எப்படி குறும்பு பண்ணறாங்களோ, நடந்துக்கறாங்களோ, அதே மாதிரிதான் வயசானவங்களுமாம்... எங்க தன்னை கவனிக்காம விட்டுடுவாங்களோங்கற பயம் கொஞ்சம் கொஞ்சமா வயசானவங்களுக்கு வந்துடுமாம். 'இதுதான் அவங்களோட பெரிய பலவீனம்... ஏதாவது ஒரு வியாதினு சொல்லுவாங்க அதை நாம விசாரிக்காம விட்டுட்டா, மனசுலே ஏக்கம் பிடிச்சுப் போயிடுவாங்க... அவங்களுடைய

எதிர்காலம் ஒரு பூஜ்யம். யாரைப் பற்றி நினைக்கிறது, யாருக்காக வாழணும்ன்ற கேள்விகளும். நான் இனி யாருக்கும் தேவை இல்லே, என்னால எந்த உபகாரமும் இல்லேன்ற எண்ணமும் தோணி அவங்களுக்குள்ளே ஒரு காம்ப்ளெக்ஸ்– தாழ்வு மனப்பான்மை உண்டாகி, பல பிரச்சினைகளுக்கு இதுவே காரணமாயிடுது'னு டாக்டர் சொன்னது ரொம்ப சரினு எனக்குப்பட்டுது..."

பூமா நிறுத்தினாள். யாராவது ஏதாவது கேட்பார்களோ என்று காத்திருந்துவிட்டு மேலே பேசினாள்.

"தாம்பத்தியங்கறது ரொம்ப அழகான, உயர்வான சமாசாரம்... முப்பது, நாற்பது வருஷங்கள் ஒருத்தரோட ஒருத்தர் வாழ்ந்த பிறகு, ஒருவர் இறந்திட்டா இன்னொருவருக்கு சூன்யம் ஏற்படறது நியாயம்தானே? இந்த வெறுமையோட நம்மை யார் இனி கவனிக்கப் போறாங்கன்ற ஏக்கமும் சேரும்போது, முதல்லே சொன்ன காம்ப்பௌக்ஸ் இன்னும் அதிகமாறது இயல்புதானே? என்ன மெம்பர்ஸ், யு அக்ரி வித் மீ?"

உன்னிப்பாகக் கேட்ட அங்கத்தினர்கள் தலைகளை அசைத்தார்கள்.

"சின்னக் குழந்தை கீழே விழுந்தா தூக்கறோம்.... ஆனா பெரியவங்க கீழே விழுந்தா திட்டறோம். 'கண்ணு இல்லே? ஒரு நிதானம் வேண்டாம்?'னு கோவிச்சுக்கிறோம்... வயசானவங்க நமக்குப் பாரமாயிட்டாங்களேனு சின்ன வயசுக்காரங்களுக்கு ஒரு எண்ணம் தோணறதுதான் இப்படி ஒரு வெறுப்பு எரிச்சல் உண்டாகக் காரணம்னு டாக்டர் சொல்றார்... யோசிச்சுப் பார்த்தப்ப இது ரொம்பச் சரினே தோணுது– வயசானவங்க திடகாத்திரமாக இருந்து பணம் உள்ளவங்களா



இருந்திட்டா கவலை இல்லை.... ஆனா இரண்டும் இல்லாமப் போயிட்டா அவங்கபாடு திண்டாட்டம்தான்... பணத்தால உதவ முடியாத பெரியவங்க உடம்பாலயாவது உதவணும்னு சின்னவங்க எதிர்பார்க்கறாங்க.... இந்த விஷயத்துலே ஆண்கள் பாடு கொஞ்சம் தேவலை. பால் கூப்பன் வாங்கி, ரேஷன் க்யூலே நின்னு, பேரக் குழந்தைகளை ஸ்கூல்லே விட்டு கூட்டி வந்து– இப்படிப் பல வேலைகளை ஆண்கள் பெண்களைவிட சுலபமாகச் செய்துடுவாங்க... பல ஆண்களுக்குப் பென்ஷன் தொகை வேற வரதால தங்க செலவுக்குப் பணம் வைச்சிகிட்டு மிகுதியை குடும்பத்துக்காக செலவழிக்கறதுகூட அவங்களுக்குச் சாத்தியமாறது... ஆனா வயசான பெண்கள்? பல குடும்பங்களிலே இவங்களாலே வெளிலே போய் மனநிம்மதியை ஆம்பிளை மாதிரி தேட முடியாது... மிஞ்சிப் போனா பக்கத்து வீடு, எதிர் வீடு, கோயிலுக்குப் போய் வம்படிப்பாங்க... அவ்வளவுதானே...? வேற எதுவும் செய்ய முடியாத இயலாமையோட தொண தொணனு லேடீஸ் பேசறப்ப, இளைய தலைமுறைக்கு எரிச்சல் வருது... அதனால வயசான பெண்கள் சுலபத்துலே வேண்டாதவங்களா ஆயிடறாங்கனு டாக்டர் சொல்றார்... அனாதைப் பெண்கள் முதியோர் இல்லத்தைத் துவங்க ணும்னு நா விரும்பறதுக்கு இதுவும் ஒரு முக்கியமான காரணம்தான்..."

மேடைப் பேச்சாளர் மாதிரி ரொம்ப நாழிகை பேசிவிட்டோமோ என்ற எண்ணம் திடுமென எழ, பூமா பேச்சை நிறுத்திவிட்டு மணியைப் பார்த்தாள்.

மூணரை....

நாழியாகிவிட்டது....

"முதியோர் இல்லம் ஆரம்பிக்கற ஆசை என்னை ஏகமா ஆட்டிவைக்கறதால உணர்ச்சி வசப்பட்டு ரொம்பப் பேசிட்டதா நினைக்கிறேன்... போர் அடிச்சிருந்தா, ஐம் ஸாரி மெம்பர்ஸ்... மனசுலே என்னென்னவோ கொந்தளிக்கறது... கோர்வையா பேசக்கூட என்னால முடியலை... இன்னிக்கு இவ்வளவு போதும்... எல்லாரும் வீட்டுக்குப் போய் யோசிச்சுட்டு, அடுத்த கூட்டத்துலே வெளிப்படையா உங்க கருத்துக்களைச் சொல்லுங்க...."

பூமா பேசி முடிப்பதற்குள் அன்னம்மா மெதுவாக எழுந்து நின்றார்.

"நா ஒரு நிமிஷம் பேசலாமா?" என்று அனுமதி வாங்கிக் கொண்டு பேசினார்.

"சில வருஷங்களுக்கு முன்னாலே கல்கத்தாவுக்குப் போயிருந்தப்போ, மதர் தெரிஸாவை சந்திச்சுப் பேசற பாக்கியம் கிடைச்சது. அவர் நடத்தற 'நிர்மல் ஹ்ருதயம்' ஹோம் ஃபார் டையிங் — சாகிறவர்களுக்கான இல்லம் - பார்த்துட்டு வந்தப்புறம் பத்து நாளைக்கு மனசு ஏகமா வேதனைப்பட்டது. ரோடுலே சாகற வியாதிக்காரனைத் தூக்கி வந்து, துடைச்சு சுத்தமா படுக்க வைச்சு, 'உனக்கு நாங்க இருக்கோம்'னு அன்பு காட்டி, நிம்மதியா சாவை அரவணைக்க வைக்கற உன்னதமான காரியத்தைப் பார்த்ததுலேந்து அந்த மாதிரி நாமும் ஏதாவது பண்ண மாட்டமான்னு நா தவிச்ச தவிப்புக்கு பூமாவோட தலைமையிலே இன்னிக்கு வழி பிறந்திருக்குனே நினைக்கறேன். உங்க எல்லாரையும் விட வயசுலே பெரியவள்ங்கிற தோரணையிலே முதுமைலே அடி எடுத்து வைச்சிட்டவங்கற தகுதியோட இந்தத் திட்டத்தை நாம மனப்பூர்வமா ஏத்துக்கணும்னு கேட்டுக்கிறேன்..."



அன்னம்மாவின் குரல் சட்டென்று கம்மிப் போக அத்தனை அங்கத்தினர்களும் அந்த உணர்ச்சியால் பீடிக்கப் பட்ட மாதிரி எழுந்து நின்று, அவர் முடிவே தங்களுடையதும் என்று சொல்வதுபோல உற்சாகமாகக் கையைத் தட்டத் துவங்கினார்கள்.

# 17

**எ**ந்தத் திசையில் அடி எடுத்து வைக்கப் போகிறோம் என்பது தெளிவாகி விட்டதால் பூமாவும் இதர கமிட்டி மெம்பர்களும் மீண்டுமொரு முறை சென்னையிலும், மற்ற இடங்களிலும் உள்ள முதியோர் இல்லங்களுக்குப் போய் வந்தார்கள்.

இல்லங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றன, உத்தேச மாய் ஒரு இல்லத்துக்குத் தேவையான முதலீட்டுப் பணம் எவ்வளவு, பிறகு மாதா மாதம் தேவைப்படுவது எவ்வளவு. இந்தப் பணத்தை அவை எவ்வாறு சம்பாதித்தன, பண உதவிக்கு யாரை அணுக வேண்டும், அதன் வழிமுறை என்ன, மற்றும் முதியோர் சம்பந்தமாக இன்னும் என்னென்ன தெரிந்து கொள்ள வேண்டும். இல்லம் நடத்துவதில் உள்ள நிர்வாக கஷ்டங்கள் என்னென்ன — என்று ஒன்று விடாமல் முடிந்தவரை அத்தனையும் அறிந்து விளக்கமாக ரிப்போர்ட் தயாரித்து, அதை நாலு பிரதிகளாக டைப்செய்து அங்கத்தினர் களிடம் கொடுத்து படித்து விஷயங்களைப் புரிந்து கொள்ளச் சொன்னார்கள்.

அடுத்து வந்த கூட்டங்களில் நல்லது, கெட்டதை ஆராய்ந் தார்கள். முடியும், முடியாததைத் தெரிந்து கொண்டார்கள். இது வேண்டும், அது வேண்டாம் என்று குறிப்பு எடுத்தார் கள். செய்ய வேண்டிய காரியங்களைப் படிப்படியாக விவாதித்துத் தீர்மானித்து, காரியத்தில் இறங்கினார்கள்.

"முதல்லே நம்ம புது ப்ராஜெக்டுக்கு, பொருத்தமாக ஒரு பேர் செலக்ட் பண்ணணும். மெம்பர்ஸுக்கு ஸர்குலர் அனுப்புங்க... யாருக்கு என்ன பேர் தோணினாலும் வெளிப்படையா சொல்லலாம்னு..."

"இன்னிக்கு அனுப்பிடறேன்... அடுத்தது?"—

"உடனடியா கவனிக்க வேண்டியது எவ்வளவு பணம் தேவை, அதை எப்படிச் சேகரிக்கப் போறோம்ன்றதுதான்..."

"ரைட்; வைதேகி, பட்ஜெட்டை உத்தேசமா போட்டுப் பாக்கறேன்னு சொன்னீங்களே, ரெடியா?"

"ஏதோ முயற்சி பண்ணி இருக்கேன். எந்த அளவுக்கு இது சரினு நீங்க எல்லாரும்தான் சொல்லணும்... மத்த இல்லங்களை முன் உதாரணமாக எடுத்துக்கலாம்னா, அது ஒவ்வொண்ணும் ஒவ்வொரு டைப்லே இயங்குது. சிலருக்கு வெளிநாட்டுலேந்து ரெகுலரா பணம் வருது. சிலருக்கு மிஷினெரி கான்ட்ரிபூஷன் தொடர்ச்சியா இருக்கு... அதனால எந்த இல்லத்தையும் முன் மாதிரியா பண விஷயத்துலே எடுத்துக்காம, அன்னிக்கு பூமாவும் நானும் ஆடிட்டரோட டிஸ்கஸ் பண்ணி பார்த்த விதத்துலே ஒரு பட்ஜெட் வொர்க் பண்ணி வைச்சிருக்கேன்... சுமார் அம்பது வயசானவங்களை பராமரிக்கற விடுதியைக் கட்ட, இரண்டு ஏக்கரா நிலம் இருந்தா தாராளமா இருக்கும்... இது பத்தாயிரமாயும் இருக்கலாம், இல்லை லட்சமாயும் இருக்கலாம்... எங்கே விடுதியைக் கட்டப் போறோம்? ஊருக்குள்ளயா, வெளிலையான்றதைப் பொறுத்து நிலத்தோட விலை இருக்கும். அடுத்தது கட்டிடம், இன்றைய விலைவாசிப்படி சுமாரா ஒண்ணே முக்காலிலிருந்து, இரண்டு லட்சம் வரை இதுக்குத் தேவைப்படும். பர்னிச்சர்கள்— அதாவது அத்யாவசியமான கட்டில், பீரோ கிச்சன் சாமான்கள், மற்றவை எல்லாத்துக்கும் ஒரு லட்சம் ஒதுக்கணும்... தேவையான சாமான்களைச் சில்லறையாகவோ, மொத்தமாகவோ டொனேஷனாக வாங்க முயற்சித்தாலும்



கூட, உடனடியா வள்ளிசா ஒரு லட்சமாவது கையில் நீங்க வைச்சிருந்தாத்தான் திட்டமிட்டபடி நிலம் வாங்கி, இதர காரியங்களைப் பண்ணுவது சாத்தியம்னு ஆடிட்டர் சொல்றார்... ஐ அக்ரி வித் ஹிம்... முதல் அடியை எடுக்கறத்துக்கு முன்னால பணம் வசூல் பண்ணிடணும், இது முக்கியம்..."

"ஒரு லட்சமா! அடேயப்பா... அவ்வளவு பணத்தை அபயா சாரீடி க்ளப்பால புரட்ட முடியுமா?"—

நஸிமா சந்தேகப்பட, கமிட்டி மெம்பர்கள் அதே பாவனையுடன் பூமாவை ஏறிட்டார்கள்.

"ரொம்ப பெரிய தொகைதான். ஆனாலும் நம்மால அது திரட்டிட முடியும்னே நா நினைக்கிறேன். இது விஷயமா சில பாயிண்டுகளைக் குறிச்சு வைச்சிருக்கேன், படிக்கிறேன் கேளுங்க...."

பூமா கைப்பையிலிருந்து ஒரு சின்ன குறிப்புப் புத்தகத்தை எடுத்தாள்.

"முதல் ஸ்டெப் — ஸ்டேட் அண்ட் சென்ட்ரல் வெல்ஃபேர் போர்டுக்கு நம்ம க்ளப், அதன் நடவடிக்கைகள், புதுசா ஆரம்பிக்கிற ப்ராஜெக்ட் பத்தி விளக்கமா சொல்லி 'உங்க உதவி எங்களுக்குத் தேவை'னு எழுதணும்..."

"எழுதிட்டா உடனே உதவி கிடைக்குமா பூமா?"— சின்னக் குழந்தைபோல சுமதி கண்களை விரித்துக்கொண்டு கேட்டதும் பூமா தோள்களைக் குலுக்கினாள்.

"உடனே கிடைக்குமா, கிடைக்காதானு தெரியலை. முடிஞ்சா சேர்மன் பாரதி சிவலிங்கத்தை நா சந்திக்கறதா இருக்கேன். அதுக்கப்புறம்தான் தீர்மானமா எதுவும் சொல்ல முடியும். ஸ்டெப் டூ—ஹெல்பேஜ் இந்தியானு ஒரு வெளி நாட்டு ஸ்தாபனம் இருக்கு. இதோட விளம்பரங்களை நா

அடிக்கடி பேப்பர்லே பார்க்கிறேன். இந்த ஸ்தாபனத்தோட தொடர்பு கொண்டு அவங்க எந்த விதத்திலாவது நமக்கு உதவுவாங்களானு முயற்சிக்கணும்..."

செல்லா அவசரமாய்க் குறுக்கிட்டாள், "வாட் எ கோயின்ஸிடன்ஸ்! இன்னிக்குக் கார்த்தாலதான் என் ஹஸ்பெண்ட் ஹெல்பேஜ் இந்தியா கண்டிப்பா உங்களுக்கு உதவும், உங்க கமிட்டிக்குச் சொல்லுனு சொன்னார். நானே இது விஷயமா பேசறதா இருந்தேன்... நீங்க சொல்லிட்டீங்க."

செல்லாவின் கணவர் ராமசாமி, சென்னை முன்னணி வக்கீல்களில் ஒருவர். விஷய ஞானம் உள்ளவர். அபயா சாரிடி க்ளப்பிடம் நல்ல ஈடுபாடு உண்டு. அவ்வப்போது இலவசமாக க்ளப்புக்குத் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குவது அவர்தான்.

"வெரிகுட். இன்னிக்கே அவங்களுக்கு லெட்டர் போட்டுடலாம்... லெட் அஸ் ஹோப் ஃபார் தி பெஸ்ட்... கடைசியா ஒரு குட்டி பிளான்... நம் கையே நமக்கு உதவின்ற தினுசுலே ஒரு ரூபாய் டிக்கெட்டுகளைக் கொண்ட புத்தகங்களை அச்சிட்டு, நம்ம மெம்பர்ஸ்கிட்ட கொடுத்து வீட்டுக்கு வந்து போற விருந்தாளிங்ககிட்டேயிருந்து டொனேஷனா ஒவ்வொரு ரூபாயா வசூல் பண்ணச் சொன்னா என்ன? ஒரு ரூபாய்ன்றது யாராலும் சுலபமா கொடுக்கக் கூடிய தொகைதான். தவிரவும் அபயா சாரிடி க்ளப் அங்கத்தினர்கள் டிக்கெட் புக்கோட தெருவிலே கண்டபடி சுத்தினாங்க, தானம் கேட்டு தொந்தரவு பண்ணறாங்கன்ற பேரெல்லாம் வராம தடுக்கறதோடு, மெம்பர்களுக்குத் தாங்களும் இந்த ப்ராஜெக்ட்லே பங்கு கொண்டோம்ங்கற திருப்தியையும் உண்டாக்கலாம். நீங்க என்ன சொல்றீங்க? இந்த பிளான் தப்பா, ரைட்டா... ப்ளீஸ் டெல் மீ."



பூமா கூறின திட்டத்தில் குறை ஏதும் இருப்பதாகக் கமிட்டி மெம்பர்கள் நினைக்காததால் டிக்கெட் புத்தகங்களை அச்சுக்குக் கொடுக்கும் பொறுப்பை வைதேகியும், ஹெல்பேஜ் இந்தியாவுக்குக் கடிதம் எழுதும் வேலையைச் செல்லாவும் ஏற்றுக் கொண்டபின் கூட்டம் கலைந்தது.

மறுநாள் மதியம் பள்ளியிலிருந்து வந்ததும், சமூக நல அமைப்புக்குக் கடிதங்களை எழுதிப் போஸ்ட் செய்து விட்டதால் பாரதி சிவலிங்கத்தோடு தொடர்பு கொண்டு அவர் ஊரில் அதிருஷ்டவசமாய் இருக்க, அப்பாயிண்ட்மெண்ட் பெற்று கடிதத்தின் ஒரு பிரதியோடு பூமா அவரைச் சந்திக்கச் சென்றாள்.

பாரதி தலைவியாக இருப்பது சமூக நல அமைச்சரவையின் கீழ் இயங்கும் ஒரு ஸ்தாபனம். இதன் தலைமைச் செயலகம் டில்லியில் இருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் இது சமூக நலத்திற்கு என்று இரண்டிலிருந்து மூன்று கோடி வரை மொத்தமாக ஒதுக்கி ஒவ்வொரு மாநிலத்துக்கும் இத்தனை என்று பிரித்துக் கொடுத்து, அனாதை இல்லங்கள், பால்வாடி, மருத்துவ மனைகள், மறுவாழ்வு விடுதிகள், ஊனமுற்றோர் இல்லங்கள், தாய் சேய் நலத்திட்டம் என்று சமூகத்தின் தேவைகளைக் கவனிக்கும் பாரதி சிவலிங்கம் பூமா நீட்டிய கடிதத்தைப் படித்தார், கூறியவற்றைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டார்.

"நாங்க போட்டிருக்கறது ரொம்பப் பெரிய திட்டம்... எங்களால தனியா சமாளிக்க முடியாது. வெல்ஃபேர் போர்டோட உதவி எங்களுக்குக் கிடைச்சுதுன்னா சௌகரியமா இருக்கும்."

பேசிய பூமாவை பாரதி அனுசரணையுடன் ஏறிட்டார்.

"நிச்சயமா கிடைக்கும் பூமா... உங்க சிரத்தையும், உழைப்பும் எங்க கவனத்துக்கு எப்பவோ வந்தாச்சு.... ஆனா உடனே பண உதவியை நீங்க எதிர்பார்க்கறது சரியில்லே.

முதல்லே அப்ளிகேஷன் ஃபாரம் வாங்கி ஸ்டேட் போர்டுக்கு அப்ளை பண்ணுங்க. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொகைகளுக்கு டில்லிலேந்துதான் அனுமதி வரணும். எங்க பிரதிநிதிகளை அனுப்பி ரிப்போர்ட் தயாரிக்கச் சொல்லி, அதைத் தீர விசாரிச்ச பிறகே எந்த டொனேஷனுக்கும் அனுமதி தருவோம். உங்களையும், உங்க க்ளப்பையும் எனக்குத் தனிப்பட்ட முறைலே தெரியும்னாலும், எதுவுமே முறையா நடக்கறதுதானே நியாயம்? கட்டடம் கட்டி, இல்லத்தை நீங்க துவங்கிடுங்க, பிறகு அதன் நிர்வாகத்திற்காக எங்களால உதவ முடியும். பர்னிச்சர், ஆட்கள் சம்பளம், சாப்பாடு, இதர பராமரிப்பு எல்லாத்துக்குமா என்ன ஆகும்னு நினைக்கிறீங்களோ அந்தத் தொகையை மேட்சிங் க்ரான்டோடு அதாவது நீங்க ஐம்பதாயிரம் கேட்டா அதோடு ஐம்பதாயிரம் சேர்த்து லட்சத்துக்குச் செலவு காட்டணும். பண உதவிக்கு அப்ளை பண்ணுங்க... நீங்க தயாராயிட்டா, எங்க உதவி உடனே உங்களுக்குக் கிடைக்கப் பண்ணுவது என் பொறுப்பு... என்ன பூமா?"

நேராக செல்லா வீட்டுக்குப் போய், வைதேகி, மற்றவர்களையும் அங்கு வரச் சொல்லிவிட்டு பூமா விவரத்தைச் சொன்னாள்.

"வெறுங்கையை வைச்சிக்கிட்டு நாம முழம் போடத் துவங்கினா அதுக்கு வெல்ஃபேர் போர்ட் உதவி கிடைக்காது. இல்லம் ஆரம்பிக்கிற வரைக்கும் நாம வேறு ஏற்பாடுதான் பண்ணணும்... பேப்பர்லே விளம்பரம் கொடுத்தா என்ன? நம்ம திட்டத்தை விளக்கும் சின்ன புத்தகங்களை அச்சிட்டு பெரிய பெரிய கம்பெனி, பணக்காரர்களுக்கு அனுப்பி நன்கொடை கேட்டா என்ன? இனியும் சும்மா இருக்கக் கூடாது. ஏதாவது பண்ணணும். வைதேகி, அந்த டிக்கெட் புக்லெட் ஆர்டர் கொடுத்திட்டீங்களா? எப்ப ரெடியாகுமாம்? வர்ற புதன் மீட்டிங்லே மெம்பர்ஸ் கிட்ட புக்ஸை கொடுத்திட்டா தேவலை...."



ஏன் பூமா... ஏதாவது கலை நிகழ்ச்சி வச்சா என்ன? நல்லதா ஏற்பாடு பண்ணினா பணம் வசூல் ஆகாது?"

"ம்ம்... செய்யலாம்... ஆனா என்ன கலை நிகழ்ச்சி? செலவுபோக வசூல் ஆற மாதிரி அது இருக்க வேண்டாமா?"

"வாட் அபௌட் ஸ்டார் நைட்? என் ஹஸ்பண்ட் கிட்ட இதுபத்தி பேசினேன். ஃபிலிம் ப்ரொட்யூஸர், பினான்ஷியர்ன்ற முறைலே அவருக்கு பல சினிமா நட்சத்திரங்களைத் தெரியும்... கமல், ரஜினி, ஸ்ரீப்ரியா, வாணிஜெயராம் எல்லாரும் ஹெல்பிங் டென்டன்ஸி உள்ளவங்கதானாம். இவங்கல்லாம் கலந்துக்கற மாதிரி ஈஸியா ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு பண்ண முடியும்னே அவர் சொல்றார்..."

பூமா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

அடடே... இந்த எண்ணம் ஏன் முன்னாலேயே தோன்றவில்லை?

ஜமாய்த்து விடலாமே...

உற்சாகத்தோடு பூமாவும், மற்றவர்களும் சம்மதிக்க சீக்கிரமே நட்சத்திர இரவு குறித்து விவரங்களைச் சொல்லுவதாகச் சுமதி கூறினாள்.

மறுநாள் சமஸ்கிருத பண்டிட் மகள் காயத்ரி மூலம் இல்லத்துக்கு அருமையான பேர் கிடைத்தது.

சாந்தி சதன்...

நிம்மதியின் இருப்பிடம்...

வெரிகுட்...

வயதான அம்மாக்களின் வீட்டுக்கு இதைவிடப் பொருத்தமான பேர் அமைய முடியுமா?

அடுத்த ஒரு வாரத்தில் ஆபட்ஸ்பரியில் 'நட்சத்திர இரவு' நடப்பது உறுதிப்பட்டது.

எஸ்.வி. சேகர், வொய்.ஜி. மகேந்திரா ஆளுக்கொரு குட்டி நாடகம். ஸ்ரீப்ரியா தன் அக்காவுடன் நடனம். வாணி ஜெயராம் பஜன்ஸ் அரை மணிக்கு... கமல், ரஜினி கெஸ்ட் அப்பியரன்ஸ்....

சுமதியின் கணவர் படு அமர்க்களமாக நிகழ்ச்சியை அமைத்திருந்தார்.

அபயா சாரிடி க்ளப் அங்கத்தினர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு டிக்கெட்டுகளும், போஸ்டர்களும் அச்சடிக்கும் பொறுப்பு, உணவு, விளையாட்டு, கடைகளை அமைக்கும் பொறுப்பு, இதர ஏற்பாடுகள் பொறுப்பு என்று ஒவ்வொன்றின் பொறுப்பையும் ஒவ்வொரு குழு ஏற்றது.

தஸரா விடுமுறையாக இருந்ததால், பள்ளி வேலை இல்லாமல் க்ளப் வேலையை ஈடுபாட்டுடன் கவனிப்பது பூமாவுக்கு சௌகர்யமாக இருந்தது.

இதன் நடுவில் லண்டனிலிருந்து ஹெல்பெஜ்– இந்தியா ஸ்தாபனத்திலிருந்து 'எங்கள் பிரதிநிதி வருகிற வாரம் சென்னைக்கு வருவார், அவரோடு உங்கள் பிரச்சினையைக் கலந்து ஆலோசியுங்கள்' என்று கடிதம் வந்துவிட குறிப்பிட்ட நாளில் செல்லா, வைதேகியுடன் பூமா அவரைச் சந்திக்கச் சென்றாள்.

ஹெல்பேஜ்– இந்தியாவின் பிரதிநிதி தங்கமான மனுஷனாக இருந்தார்.

சிரித்த முகத்தோடு ஊக்கம் அளிக்கும் வகையில் பேசினார்.

"உங்கள் நோக்கமும், செயலும் ஆரோக்கியமாக இருப்பது எங்களுக்குப் புரிகிறது. உங்களுக்கு எங்கள் உதவி தேவை என்றால் சில அடிப்படைக் காரியங்களை நீங்கள் செய்து முடிக்க வேண்டும். முதலில் பெயரைத் தேர்ந்தெடுத்து,



அதைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். நிலத்தை வாங்கி அதையும் இல்லத்தின் பெயரில் பதிவு செய்ய வேண்டும். ஒரு கட்டிட நிபுணரை அழைத்து முறையாக உங்களுக்குத் தேவையான விதத்தில் வரை படம் தயாரிக்கச் சொல்லி அந்தக் கட்டிடத்துக்குத் தேவையான பணத்தை, பகுதி பகுதியாகப் பிரித்துக் குறிப்பிடச் சொல்லுங்கள் அஸ்திவாரத்தில் தொடங்கி இறுதிவரை ஆகும் செலவுகளைத் தெளிவாகக் குறிப்பிடுவது அவசியம். இந்த வரைபடத்தையும், பட்ஜெட்டையும் எங்களுக்கு அனுப்பி விட்டால் ஆவன செய்வோம்... முக்கியமாய் இன்னொன்று. இல்லத்தின் பெயரில் பாங்க் கணக்கு இருக்க வேண்டும். நாங்கள் கட்டிடத்துக்குத் தேவையான பணத்தைப் பாங்கில்தான் கட்டுவோம்... ஆறுமாசம் உங்களுக்கு அவகாசம் தந்தால், அதற்குள் நான் குறிப்பிட்டவைகளைத் தயார் செய்து கொண்டு விடுவீர்கள் அல்லவா?"–

ஒரு நிமிஷம் பூமாவுக்கோ, மற்றவர்களுக்கோ எதுவும் பேச வாயே எழும்பவில்லை.

ரொம்ப மன்றாட வேண்டியிருக்குமோ, பண உதவி கேட்டுக் கெஞ்ச வேண்டியிருக்குமோ, என்ன எடுத்துச் சொல்லியும் உங்களை நாங்கள் எப்படி நம்புவது? மன்னிக்கவும்... எந்த உதவியும் செய்வதற்கில்லை என்று மறுத்து விடுவார்களோ– என்ற கலக்கத்துடன் இருந்ததால் ஆறு மாசத்தில் நாங்கள் கேட்ட விதத்தில் நீங்கள் தயாரானால் உதவி ரெடி என்று பச்சைக் கொடி காட்டப்பட்டதும் தலைகால் புரியாத பிரமிப்பில் அவர்கள் ஆழ்ந்தது நிஜம்.

சரி, பெயர் தயார்– அதை ரிஜிஸ்டர் பண்ணவேண்டும்... அப்புறம்? நிலம் வாங்க வேண்டும்.

ப்ளான் தயார் பண்ண வேண்டும்.

பாங்க் அகௌண்ட் ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வளவுதானே....

ஹோ! இவற்றை நொடியில் செய்து விடலாமே...

நட்சத்திர இரவின் மூலம் கிடைப்பதிலிருந்து நிலம் வாங்கிவிட முடியாதா?

முடியும்....

பிளான் தயாரிப்பது?

அதுவும் நிமிஷத்தில் முடிந்து விடாதா?

முடியும்....

ஹெல்பேஜ்– இந்தியாவின் பிரதிநிதியைச் சந்தித்து விட்டு வெளிலே வந்தபோது, இதோ நிலம் வாங்கி விடுவோம், இதோ உதவிப் பணம் வந்துவிடும்... இதோ முதியோர் இல்லம் தயார்– என்ற அதீதமான கற்பனையில் அபயா சாரிடி க்ளப்பைச் சார்ந்த அந்த மூவரும் லயித்திருப்பதை மலர்ந்திருந்த அவர்கள் முகங்களிலிருந்து ரொம்ப நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

## 18

"எந்த ஏரியாலே உங்களுக்கு நிலம் வேணும்?"–

பூமாவும் லீலாவும் 'விஸ்வகர்மா ரியல் எஸ்டே சொந்தக்காரரர் முன் உட்கார்ந்திருந்தனர்.

விஸ்வகர்மாவின் ஆபீஸ் கட்டிடம் தடபுடலாய் ஏ.ஸி. வெனிஷியன் ப்ளைண்ட்ஸ், சௌகர்யமான சோபாக்கள் கார்பெட் என்று ஷோக்காக இருந்தது.

"ஏ.ஜி'ஸ் ஆபீஸ்லே இந்த விஸ்வநாதன் ஆறு வருஷம் முன்னால் க்ளார்க்கா இருநூறு ரூபாய் சம்பளம் வாங்கிட்



இருந்தார். என்னமோ வேளை. ரியல் எஸ்டேட்டில் புகுந்தவர், இன்னிக்கு ஊர் லட்சாதிபதிகள்லே ஒருத்தரா இருக்கார், ஆட்டை தூக்கி மாட்டுலே போடற பேச்சு சாதுர்யம் உண்டு, பிழைச்சுக்கிட்டார்...."

நுங்கம்பாக்கத்தில் இருந்த விஸ்வகர்மா அலுவலகத்துக்கு வரும் முன்னரே விஸ்வநாதனின் பழைய கதையை லீலா சொல்லி விட்டாள்.

எந்த ஏரியாவிலேயா?

பூமா லீலாவைப் பார்த்தாள்...

"நல்லதா எந்த இடமானாலும் சரிதான்? ரொம்ப ஜன நெருக்கடி உள்ள இடம் வேண்டாம், அதே சமயத்துல பஸ் போக்குவரத்து கிட்டக்க இருக்கற இடம் கிடைச்சா தேவலை நுங்கம்பாக்கம், சாந்தோம்.... இப்படி சென்ட்ரா இருந்தா ரொம்ப சந்தோஷம்..."

பேசினவளை 'நீ என்ன பைத்தியமா' என்று கேட்கிற தினுசில் விஸ்வநாதன் ஏறிட்டார்.

"இரண்டு ஏக்கர் நிலம் வேணும்னு சொல்றீங்க. நுங்கம்பாக்கம், சாந்தோம்லே இருந்தா சந்தோஷம்னும் சொல்றீங்க. இங்கெல்லாம் க்ரௌவுண்ட் என்ன விலை விக்குது தெரியுமா? ஒரு லட்சத்துலேந்து ஒண்ணரை லட்சம் வரை... ஓர் ஏக்கராவுக்கு பதினெட்டு க்ரவுண்ட். அப்ப இருபதிலேந்து இருபத்து அஞ்சு லட்சம் ஓர் ஏக்கர் நிலத்தோட கிரயமே ஆகும்ன்றதைப் புரிஞ்சிக்கிட்டு பேசறீங்களா, இல்லே?....

என்னது?

ஒரு க்ரவுண்ட் விலை ஒரு லட்சமா?

மொத்தம் இருபத்து ஐந்து லட்சமா?

அம்மாடி....

இது என்ன பகல் கொள்ளை?

பூமா அதிர்ந்து போனது தெளிவாக, விஸ்வநாதன் பெரிசாய் சிரித்தார்.

"நினைச்சேன்... நீங்க விவரம் புரியாம ஏக்கர் அது இதுனு பேசறீங்கன்னு நினைச்சேன். இப்பல்லாம் முழுசா ரெண்டு க்ரவுண்டை வாங்கறதுகூட கஷ்டம் தெரியுமா? ரெண்டு க்ரவுண்ட் இருந்தா அதை இரட்டை விலை கொடுத்தாவது வாங்கி எட்டு, பத்து பிளாட்டுகளா கட்டி உடனே காசு பண்ண எங்களை மாதிரி ரியல் எஸ்டேட் காரங்கதான் தயாரா இருக்கமே.... அப்புறம் எங்கேயிருந்து ஒரு ஏக்கரும், அரை ஏக்கரும் கிடைக்கும்?"

ஜோக் அடித்ததாக நினைத்துக்கொண்டு அவர் சிரிக்கவும் பூமாவுக்கு லேசாக எரிச்சல் தோன்றியது. கொஞ்சம் தன் அறியாமையை நினைத்துக் கோபமும் எழுந்தது.

"சரி, இப்ப நீங்க என்ன சொல்றீங்க? எங்களுக்கு எதுக்காக நிலம் தேவைப்படுதுனு உங்ககிட்ட ஏற்கனவே சொல்லிட்டேன். இப்ப என்ன செய்யலாம்னு சொல்றீங்க."

விஸ்வநாதன் மேஜையிலிருந்து ஒரு ப்ளூப்ரிண்டை எடுத்துப் பிரித்தார்.

"அருமையான நிலம் ஒண்ணு அண்ணா நகர்லே இருக்கு... கார்னர் ப்ளாட்... முழுசா ஒண்ணரை க்ரவுண்ட்.. பர்ஸ்ட் கிளாஸ் ரோடு– ஸ்வீட் வாட்டர். இந்தப் பக்கம் மார்க்கெட், அந்தப் பக்கம் பஸ் ஸ்டாப். அமைதியான இடம். நீங்க இல்லம் கட்ட ஏத்த லொகாலிடி, க்ரவுண்டு முப்ப தாயிரம் கேக்கறான். நா இருபத்தைஞ்சுக்கு முடிச்சு தரேன்.



என்கிட்டேயே ஆர்கிடெக்டும், கண்ராக்டரும் இருக்காங்க... பத்து நாள்லே ப்ளான் அப்ரூவல் வாங்கி வேலையைத் தொடங்கிடலாமே... இப்ப என்ன அக்டோபரா? மூணுமாசம் எக்ஸாக்ட்லி மூணுமாசம்... தையிலே க்ரஹப் பிரவேசம் வைச்சுக்கலாம்... என்ன?

மூச்சு விடாமல் நீளமாக அவர் பேசியபோது பூமாவின் எரிச்சல் அதிகமானது.

ஒண்ணரை க்ரவுண்டில் பர்ஸ்ட் க்ளாஸ், விசாலமான காற்றோட்டமான கட்டிடத்தை மூணு மாசத்தில் கட்டுவாரா?

எப்படி இருக்கும் அது?

மூக்கோட்டை, மூக்கோட்டையாய் அறைகளும், காற்று வசதியே இல்லாத நெருக்கமுமாய் எப்படி இருக்கும் அது?

ஏக்கரா கணக்கில் நிலம் வேண்டும், வயதானவர்களுக்கு இல்லம் கட்ட என்று சொல்லியும் இப்படி ஒண்ணரை. ஒண்ணேமுக்கால் க்ரவுண்டில் பர்ஸ்ட் கிளாஸ் கட்டிடம் என்று இந்த மனுசன் ஏன் சவடால் அடிக்கிறார்?

கஷ்டப்பட்டு முகத்தில் சிரிப்பைத் தவழவிட்டுக் கொண்டு பூமா எழுந்தாள்.

"கமிட்டிலே தீர்மானம் பண்ணிட்டு சொல்றோம்..."

"விலைவேணா இன்னும் இரண்டாயிரம் குறைக்கப் பார்க்கட்டுமா?"

"நா சொல்றேன்..."

"கிரவுண்ட் இருபதாயிரம்னா முடிக்கட்டுமா? அது வேணாம்னா அசோக் நகர்லே ஒரு ஒண்ணேகால் க்ரவுண்ட் இருக்கு.... அதை சீப்பா முடிச்சித் தரட்டுமா?"

INDIRA LENDING LIBRARY
162, Gowmaralayam Road,
Edayarpalayam,
COIMBATORE-641 025

"தாங்க்ஸ் மிஸ்டர் விஸ்வநாதன், நான் போன் பண்ணறேன்..."

வெளியில் வந்தார்கள்.

அடுத்துச் சென்ற இன்னும் இரண்டு நிலத் தரகர்களிடமும் இதே அனுபவம் எழ, பூமா கொஞ்சம் சோர்ந்து போனாள்.

ஆழம் தெரியாமல் காலை விட்டோமே?

நிலவிலை இப்படி எக்கச்சக்கமாய் ஏறி இருப்பதை ஏன் நாங்கள் உணரவில்லை?

இது என்ன அசட்டுத்தனம்?

நிலத்துக்கு முப்பதிலிருந்து நாற்பது வரை என்று பட்ஜெட் போட்டது எத்தனை மடத்தனம்?

'நட்சத்திர இரவு' மூலம் செலவு போக நாற்பத்து மூவாயிரம் கிடைத்ததை வைத்துக் கொண்டு நிலம் வாங்குவது ரொம்ப சுலபம் என்று எண்ணியது மகா மண்டுத்தனமாக இருக்கிறதே!

அன்றிரவு செல்லா வீட்டில் ராமசாமியிடம் இந்த விவரங்களைச் சொன்னபோது அவர் சிரித்தார்.

"மெட்ராஸை என்னனு நினைச்சுக் கிட்டீங்க? கடந்த இரண்டு வருஷமா ரியல் எஸ்டேட் விலைகள் மூணு, நாலு மடங்கு ஏறிப் போயிருக்குத் தெரியுமா?... ஐம்பதாயிரத்துலே ஸிடிக்குள்ளே ஒரு க்ரவுண்ட் கூட உங்களால வாங்க முடியாது. கொஞ்சம் தள்ளிப்போனா என்ன? தாம்பரம், பூந்தமல்லி, மஹாபலிபுரம்னு ஊருக்கு வெளிலே பார்த்தீங்கன்னா, கண்டிப்பா உங்க பட்ஜெட்ல நிலம் கிடைக்கும். போய்வர்ற சிரமம் உங்களுக்கு இருக்கலாம். ஆனா இந்த மாதிரி இல்லங்களை ஊருக்கு வெளிலே நிம்மதியான சூழ்நிலைலே அமைக்கறதைத்தான் நா வரவேற்கிறேன்..."



ராமசாமியின் பேச்சில் நியாயம் இருக்க பூமா பதில் பேசாமல் இருந்தாள்.

"வேணா, நாளைக்கு என் க்ளார்க்கை ரியல் எஸ்டேட் ஆபீஸ்களுக்கு அனுப்பி, எங்கே யார்கிட்ட நிலம் இருக்குனு விசாரிக்கச் சொல்லட்டுமா?"

பூமா வேண்டாம் என்று அவசரமாய் தலை ஆட்டினாள்.

"நோ... நோ... நாங்களே பாத்துக்கிறோம், எங்க க்ளப் வேலைய உங்ககிட்ட தள்ளறது நியாயம் இல்லே... முடியலைனா உங்க உதவிக்கு கண்டிப்பா வருவோம். தாங்க்ஸ் எ லாட்..."

ஊருக்கு வெளியில் விஸ்தாரமாக நிலம் எங்கே காலியாக இருக்கிறது என்பதை ரிஜிஸ்திரார் அலுவலகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம் என்று யாரோ சொல்ல இரண்டு நாள் கழித்து, பள்ளி விட்டு மதியம் வந்ததும் சைதாப்பேட்டை பதிவு அலுவலகத்தை நோக்கி பூமா போனாள்.

உஸ்மான் ரோடு, அண்ணா சாலையில் முட்டிக் கொள்ளும் இடத்துக்கருகில் அந்தக் கட்டடம் இருந்தது.

என்றைக்கோ அடித்த மஞ்சள் சுண்ணாம்பு.... பழசாய், மந்தமாய், இருந்த அறைகள்....

இரண்டு மணி நேரம் போல முன் வராந்தாவில் நின்று காத்தபின், தனக்குத் தேவையான விவரங்களைப் பூமாவால் சேகரிக்க முடிந்தது.

முதலில் கார்ப்பரேஷனுக்கு 'எங்களுக்கு இன்ன காரியத்துக்கு இன்ன அளவு நிலம் தேவைப்படுகிறது. டவுன் பிளானைப் பார்த்துக் காலி நிலங்களைக் குறிப்பிடுங்கள்' என்று லெட்டர் போட வேண்டுமாம்.... ஊருக்கு வெளியில் நிலம் இருக்கிறது

என்றால் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கும் எழு... வேண்டுமாம்...

அப்புறம், சில நாட்கள் கழித்து அந்தந்த ரிஜிஸ்திரா... ஆபீஸோடு தொடர்பு கொண்டால் டவுன் சர்வேயர் கா... நிலங்களைக் காட்ட, அழைத்துச் செல்வாராம்.

நிலம் பிடித்தால் கலெக்டருக்கும், வருவாய்த்துறை அலுவலகத்துக்கும் விண்ணப்பிக்க வேண்டுமாம்...

பூமாவுக்குத் தலையைச் சுற்றியது.

எந்தக் காலத்துக்கு இதெல்லாம் நடப்பது?

எப்போது இல்லம் கட்டி முடித்துக் கனவை நனவாக்கு வது?

மறுநாளிலிருந்து பூமாவுக்கு மத்தியானங்களில் இதே ஜோலிதான்.

கமிட்டி மெம்பர்கள் மாறி மாறி அவளுடன் சேர்ந்து அலைந்தார்கள்.

நித்தமும் ரிஜிஸ்திரார் ஆபீஸில் பழி கிடந்து, டவுன் சர்வேயருடன் வெயில் அத்தனையும் தலையில் வாங்கி கொண்டு ஊரைச் சுற்றி வந்தார்கள்.

நிலம் பிடித்துக் கிட்டப் போனால் 'இது மின்சா... வாரியத்துக்குத் தேவைப்படுது; கார்ப்பரேஷன் ஸ்கூல் கட்ட ஒதுக்கி இருக்கு' என்று பதில் சொல்லுவார்கள்.

இல்லையென்றால் தனியார் நிலமாக இருந்தால் யானை விலை, குதிரை விலை என்று விலை ஏகமாய்ப் பயமுறுத்தும்.

மொத்தத்தில் முழுசாய் மூன்று மாசம் நாய் அலைச்சல் அலைந்தும் ஒரு இடம்கூட உருப்படியாய்த் தேறவில்லை.

பூமாவின் அலைச்சலுக்குப் பலன் இல்லாமல் போனதில் மெம்பர்களுக்கு ரொம்ப வருத்தம்.



"இப்படி அலையறாங்களே... உடம்பு என்னத்துக்கு ஆவும்?" என்று வேதனைப்பட்டார்கள்.

"இவங்க உழைப்புக்காகவாவது சட்டுனு ஒரு நிலம் குதிரக் கூடாதா?" என்று ஏங்கினார்கள்.

தங்களுக்குள் ஏதோ பேசித் தீர்மானித்துவிட்டு, அன்று கமிட்டி மெம்பர்கள் மூலம் அவர்கள் பூமாவை நெருங் கினார்கள்.

"பூமா... நாங்க ஒண்ணு சொன்னா நீங்க கோவிச்சுக்கக் கூடாது..."

பீடிகை பலமாக இருக்க, பூமா புன்னகையோடு 'என்ன' என்றாள்.

"இல்லே வந்து..."

"சொல்லுங்க.... ஏன் இப்படி தயங்கறீங்க"

"நீங்க அலையற அலைச்சலைப் பாத்தா எங்களுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு பூமா... அதனால..."

"அதனால?"

"ஸ்கூலுக்குப் போயிகிட்டு, க்ளப்புக்காகவும் அலையறது அதிகமாக படுது..."

"அதனால?"

"கோவிச்சுக்கக் கூடாது பூமா... உங்க மேலே உள்ள அக்கறையால சொல்றோம். பேசாம ஸ்கூல் வேலையை விட்டுடுங்க... அவங்க குடுக்குற சம்பளத்தை நீங்க க்ளப்புக்கு உழைக்கிற உழைப்புக்கு சம்பளமா க்ளப் கொடுத்திடட்டும்... ப்ளீஸ்... பூமா..."

சில நிமிஷங்களுக்குப் பூமா மௌனமாய் இருந்தாள். அப்புறம் சன்னமாய்ப் பேசினாள்.

"சமூக சேவையா நினைச்சு நா க்ளப்புக்காக உழைக்கறது உங்களுக்குப் பிடிக்கலையா? நிம்மதியோட ஒரு ஆத்ம திருப்தியோட உழைக்கிற உழைப்புக்குக் காசைக் கொடுத்து, அதை வேலையா மாத்திடாதீங்கோ... நா செய்யறது ஸோஷியல் சர்வீஸ், நாட் வொர்க்—புரியுதா? தயவு செய்து இன்னொரு முறை இப்படிப் பேசிடாதீங்க.... உங்க அக்கறைக்கு நா நன்றி சொல்றேன். பட் நோ மோர்... உங்களுக்கு ஏதாவது பணம் கொடுக்கணும்னு தோணித்துன்னா க்ளப்புக்கு கொடுங்க... நம்ம புது ப்ராஜெக்டுக்கு ரொம்பப் பணம் தேவைப்படுது... ஓ.கே. லேடீஸ்?" — இது விஷயமாக திரும்ப வாய் திறந்து அவளிடம் பேச யாரும் துணியவில்லை.

அன்றைக்குத் தபாலில் ஹெல்பேஜ்— இந்தியா அலுவலகத்திலிருந்து கடிதம் வந்திருந்தது.

"மூன்று மாதங்கள் ஆகிவிட்டன; ஏன் உங்களிடமிருந்து தகவல் ஏதும் வரவில்லை?"— என்று கேட்டிருந்தார்கள்.

உதவி பண்ணப் போகிறவர்களிடமிருந்து இப்படியொரு நினைவூட்டுக் கடிதம் வந்ததும் பூமாவின் தவிப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

இவர்களுக்கு என்ன பதில் எழுதுவது?

எத்தனை முயன்றும் நிலம் எதுவும் சரியாக அமைய வில்லை என்பதை எப்படித் தெளிவுபடுத்துவது?

நம்புவார்களா?

அல்லது ஈடுபாடு போதாது என்று எண்ணி விடுவார்களோ?

'சரி, இவர்களுக்குச் சிரத்தை இல்லை; ஸோ, நிதி உதவி வேண்டாம்' என்று தீர்மானித்து விடுவார்களோ?

ஐயோ கடவுளே...



இப்போது என்ன பண்ணுவது?

பரபரப்புடன் தொடர்ந்து வந்த நாட்களில் மத்திய சோஷியல் வெல்பேர் போர்ட், மாநில பொதுத்துறை, நிதித்துறை மந்திரிகள், சென்னை கலெக்டர் ஆகியோருக்கு விண்ணப்பங்களை அனுப்பினாள். கவர்னர், முதல் அமைச்சரை நேரில் சந்தித்து மனு கொடுத்தால் ஜரூராய் காரியம் நடக்கும் என்ற நம்பிக்கையில் ராஜ்பவனுக்கும் கோட்டைக்கும் மாறிமாறிப் படை எடுத்தாள்.

எண்ண பண்ணி என்ன?

மேற்கொண்டு ஒரு மாசம் போனதே ஒழிய நிலமும் அகப்படவில்லை; மண்ணாங்கட்டியும் அகப்படவில்லை.

இதனடுவில் நாலு மாசமாய் அங்கத்தினர்கள் தங்கள் பங்குக்கு ஒரு ரூபாய் டிக்கெட்டுக்களை விற்றுப் பணம் சேகரித்ததில், சற்றும் எதிர்பாராமல் ஒன்பதாயிரத்து ஐந்நூற்று நாலு ருபாய் சேர்த்து விட்டதுதான் கொஞ்சம் மனசுக்குச் சமாதானத்தைத் தந்த சமாசாரம்.

இதுவும், பத்திரிகைகளில் எழுதி அதன் வாயிலாகச் சேர்ந்த டொனேஷன் பணமும் நட்சத்திர இரவு சம்பாதித்துத் தந்த பணமும் கணிசமாக கையில் இருக்க, இந்தப் பணம் தந்த தைரியத்தில் அந்தப் புதன் அன்று அபயா சாரிடி க்ளப், நிலம் கிடைக்கத் தாமதமாவதால் இனியும் நாட்களைக் கடத்தாமல் உடனடியாக ஒரு வாடகை வீட்டில் சாந்தி சதனத்தைத் துவங்குவது, கையிருப்பைக் கவனமாகச் செலவு செய்து, இல்லத்தினை நடத்திக் கொண்டே வெல்ஃபேர் போர்டை நிதியுதவி கேட்பது, நிலத்தைத் தீவிரமாகத் தேடி அலைந்து வாங்கி விடுவது... என்ற முடிவுக்கு வந்தது.

சாந்தி சதனத்தை வாடகை வீட்டில் ஆரம்பிப்பது என்பதைத் தீர்மானித்து விட்டதால், தாற்காலிகமாக நிலம்

தேடுவதை விட்டுவிட்டு பூமாவும், மற்றவர்களும் வாடகைக்கு வீடு தேடும் வேட்டையில் இறங்கினார்கள்.

ஆரம்பத்தில் பத்திலிருந்து பதினைந்து அம்மாக்களை மட்டும் வைத்து இல்லத்தைத் துவங்கினால், அவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதற்குள் எப்படியாவது சொந்தக் கட்டிடத்துக்குப் போய் விடுவோம், அதனால் இப்போதைக்கு நாலு பெரிய அறைகளைக் கொண்ட தனிவீடாகப் பார்த்தால் போதுமானது என்ற எண்ணத்தில் வீடு தேடும் படலத்தில் ஈடுபட்டவர்களுக்குத் துவக்கத்திலேயே அதிர்ச்சி.

"வீடா? வயசானவர்களை வைத்து இல்லம் நடத்தவா? ஸாரி எங்களுக்கு இஷ்டம் இல்லை" என்றார்கள்.

ஏன் இஷ்டம் இல்லையாம்?

"வயசானவங்கன்னா, அடிக்கடி சாவு விழுமே... நோ-முடியாது," என்றார்கள்.

"வயசானவங்க வீட்டை அசிங்கம் பண்ணிடுவாங்க-நீங்க வேற இடம் பாருங்க" என்றார்கள்.

இங்கும் அங்கும் அலைந்து திரிந்தவர்களுக்கு 'ஸாரி, கொடுக்கறதில்லிங்க' என்ற வார்த்தைகளையே தொடர்ந்து எங்கும் கேட்டபோது இனி என்ன செய்யப் போகிறோம் என்ற வருத்தம் உண்டானதில் ஆச்சர்யம் என்ன?

## 19

"பூமா"

ஸ்கூலுக்கு விடுமுறை நாள் என்பதால் கொஞ்சம் நிதானமாக எண்ணெய் தேய்த்துக் குளித்து, இரண்டாக



குப்புற மடிந்து நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்தவள் நிமிர்ந்தாள்.

மைலாப்பூரிலிருந்து வரும் மெம்பர் ஜானகி.

"என்ன ஜானா... இந்த கார்த்தால வேளைல?... வாங்க வாங்க..."

"ஐம் ஸாரி டு டிஸ்டர்ப் யூ பூமா... முக்கியமான விஷயம் பேசிட்டா தேவலைனு தோணறது.... அதான் வந்தேன்..."

"வாங்க ஜானா, உள்ள வந்து உட்காருங்க..."

ஜானகி செருப்பை அவிழ்த்து வைத்துவிட்டு, கூடை நாற்காலியில் அமர்ந்தாள்.

"சொல்லுங்க... என்ன விஷயம்?"

"நாம ஹோம் ஆரம்பிக்கத் தீர்மானிச்சிட்ட விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு போயிடிச்சி. அதனால 'என்னை சேர்த்துக்கோ, உன்னை சேர்த்துக்கோ'னு நிறைய பேர் தொந்தரவு பண்ண ஆரம்பிச்சுட்டா..."

முடியை ஒரு தட்டித் தட்டி, தளர்த்திக் கோடாலி முடிச்சுப் போட்டபடியே பூமா "நியூஸ் பரவறது நல்லதுதானே ஜானா.... விளம்பரம் நமக்கும் அவசியம்தானே...." என்றாள்.

"அதுக்குச் சொல்ல வரலை பூமா... எங்கப் பக்கத்து வீட்டுலே ஒரு கேஸ்.... அந்தப் பாட்டியம்மா ரொம்ப பாவம்.... நேத்துக்கூட என் கையப் புடிச்சுக்கிட்டு 'என்னை இங்கேயிருந்து அழைச்சிட்டுப் போயிடு... ஏதோ இல்லம் ஆரம்பிக்கப் போறீங்களாமே, அதுலே சேர்த்திடு'னு அழுதாங்க. ராத்திரி தூங்க முடியலை. அவங்களைப் பத்தி உங்க கிட்டச் சொல்லி, என்ன பண்ணலாம்னு கேட்க வந்தேன்...."

பூமா பதில் பேசாமல் அமர்ந்திருக்க ஜானகி மேலே பேசினாள்.

"அந்தப் பாட்டி பேரு நவநீதம். திருவண்ணாமலைப் பக்கம் சொந்த ஊர்... இரண்டு பசங்களைப் பெத்துட்டு மனைவியை இழந்திட்டவரைக் கட்டிக்கிட்டாங்களாம். வழக்கமா சின்னம்மா தான் மூத்த பசங்களை படுத்துவான்னு சொல்லுவாங்க... இந்த நவநீதம் கேஸ்லே நேர்மாறா. வேலைக்காரி மாதிரி அப்பாவும் பிள்ளைகளும் இவளை நடத்தியிருக்காங்க. நடுநடுவிலே இவங்களுக்கு அபார்ஷன் நிறைய ஆனதுலே உடம்பு கெட்டுப் போச்சாம். ஸோ, அதுவேற கஷ்டம்... மூத்த பையன் சுமாரா படிச்சு எட்டுநூறு ரூபா சம்பளம் வாங்கறான். இளையவன் அரபு நாட்டுக்குப் போய் கை நிறையச் சம்பாதிக்கிறான்... புருஷன் இறந்தப்புறம் நவநீதம் போக்கிடம் இல்லாம மூத்த மகன் கிட்டேயே தங்கிட்டாங்க... அவனுக்குத் தான் இவங்களைக் கண்டா ஏற்கனவே ஆகாதா.... இவங்க கை, காலை வைச்சிகிட்டு உபயோகமா இருந்தவரைக்கும் கொஞ்சம் பரவாயில்லை... வியாதி வந்து படுத்தப்புறம் நிலைமை ரொம்ப மோசம்.... அந்தப் பிள்ளையாகட்டும் அவன் பொண்டாட்டி, நாலு குழந்தைகளாகட்டும் சதா கரிச்சுத்தான் கொட்றாங்க.... இவங்க தலை யெழுத்து ஒரு வருஷமா படுத்த படுக்கையா வேற ஆயிட்டாங்க... பின் கட்டுலே பாத்ரூம் போற வழிலே கையகல இடம் உண்டு. அங்கு தான் படுக்கப் போட்டிருந்தாங்க.... நேத்து எங்கயோ கல்யாணம்னு வாசக் கதவை பூட்டிக்கிட்டு எல்லாரும் ஒட்டு மொத்தமா கிழவியை தனியா முன் வராந்தாலே படுக்க வைச்சு, வேலைக்காரிய ஒரு வேளை வந்து பேருக்கு பாத்துக்கச் சொல்லிட்டுப் போயிட்டாங்க.... 'அந்தக் கிழவியை வந்து பாருங்கம்மா.... வயிறு பத்திகிட்டு எரியுது'னு வேலைக்காரி நேத்து மத்தியானம் சொன்னப்புறம் போய்ப் பார்த்தேன்.... ஹா... மகா கண்ணராவி.... போங்க.... அதான் இதுக்கு ஒரு வழி பண்ணாட்டி எப்படினு ஓடி வந்தேன்..."



"பாட்டிக்கு வயது எத்தனை ஜானா?"

"அது இருக்கும் ஈசியா எழுபது..."

"என்ன உடம்பாம்?"

"சர்க்கரை வியாதியோட, எக்கச்சக்கமா ஆஸ்த்மாவும் இருக்கு...."

"ம்ம்"

பூமா எழுந்து ஜன்னலிடம் போய் நின்றாள்.

மஞ்சளாகத் தக்குனூண்டு குருவி ஒன்று செம்பருத்திப் பூக்களின் அடியில் உட்கார்ந்து அலகால் பூவைக் குத்தித் தேனைக் குடித்தது.

ஒரு காக்காய் மெதுவாக நடந்து பவழமல்லிச் செடியிலிருந்து காய்ந்து கீழே விழுந்திருந்த குச்சியைக் குனிந்து அலகால் கௌவி தூக்கிவிட்டு என்னமோ நினைத்துக் கொண்டதைப் போல அதைக் கீழே போட்டு விட்டு, அருகில் கிடந்த இன்னொரு நீளக் குச்சியைத் தூக்கிக் கொண்டு பறந்து போனது.

கூடு கட்டப் போகிறதா?

அதுதான் இப்படிப் பொறுக்கிப் பொறுக்கி குச்சிகளைச் சேர்க்கிறதா?

பத்திரமாய் தங்க ஒரு வீடு, வயிறு நிறைய உணவு, பறவையாயிருந்தால் என்ன, மனுஷனாக இருந்தால் என்ன, குடியிருக்கப் பாதுகாப்பான ஒரு இடமும், வயிற்றுப்பாடும் எல்லாருக்கும் ஒன்றுதானே?

இருக்கும் இடத்தில் பாதுகாப்பு இல்லை என்று தோன்றிவிட்டால் அப்புறம் பயம்தான்.... வேதனைதான்....

"இந்தப் பாட்டி மேலேயும் கொஞ்சம் தப்பு இருக்கலாம்னு நா நினைக்கிறேன். பூமா... அந்த மருமகள் எப்ப

வாவது என்னோட பேச வந்தா. இவங்க மேலே ஆயிரம் புகார் சொல்லுவா... 'வாயை அடக்கத் தெரியாத மனுஷி; இந்த வயசிலேயும் நாக்குக்கு விதவிதமா வேண்டியிருக்கு. சின்னப் பசங்களுக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போடக்கூட முடியாதபடி ரேழிலே படுத்துக்கிட்டு 'என்ன பண்ணறே? எண்ணை வாசனை வரதே... பக்கடாவா?... எனக்கு நாலு குடேன்'னு சதா நச்சரிக்கும்; எல்லார் வீட்டுலேயும்தான் மாமியார் இருக்காங்க... ஆனா, என் தொல்லை பெரிய தொல்லை'னு அந்த மருமக புலம்பி நா நிறைய கேட்டுட்டேன்..."

"சரி– இப்ப என்ன பண்ணலாம்னு சொல்றீங்க ஜானா?"

"ஹோம் எப்ப ஆரம்பிக்கறதா இருக்கோம் பூமா?"

"உடனே ஆரம்பிக்கணும்னுதான் ஆசை... ஆனா, இடம் ஒண்ணும் சரிப்பட்டு வரமாட்டேங்கறதே."

"இல்லே... எப்ப ஆரம்பிச்சாலும் இந்தப் பாட்டிக்காக ஓர் இடம் ஒதுக்க முடியுமா பூமா... ரொம்ப பாவப் பட்ட கேஸ்..."

"நா ஒருத்தியா டிஸைட் பண்ணற விஷயம் இல்லே இது... கமிட்டி முடிவெடுக்கணும்."

"எதுக்கும் நீங்க என்கூட ஒரு நடை வந்து அந்தப் பாட்டியப் பார்த்துட்டு வர முடியுமா... ப்ளீஸ்..."

பூமா அரை நிமிஷம் யோசித்தாள்.

திருவான்மியூர் பக்கம் நிலம் பார்க்கப் போக வேண்டிய வேலை இருக்கிறது. மணி இப்போது என்ன? எட்டா? போய் பாட்டியைச் சந்தித்துவிட்டு வந்து அப்புறமாய்ப் பத்து மணிக்கு மேல் திருவான்மியூருக்குப் போனால் என்ன?

கிளம்பினார்கள்.



பாட்டியின் நிலைமை பூமா எதிர்பார்த்ததைவிட நூறு மடங்கு மோசமாய் இருந்தது.

மாடிப்படி ஏறும் போதே, நாற்றம் ஆளை விரட்டி அடித்தது.

தாழ்வாரத்தின் ஓரமாய் சுருங்கி உலர்ந்துபோன பாட்டி.

கிழிசல் பாய், உடம்பில் பேருக்கு ஒரு புடவைத் துண்டு. பக்கத்தில் பெட்பேன், எச்சில் துப்ப மக்குக் கிண்ணம், அலுமினியத் தட்டு, டம்ளர், மண்பானையில் தண்ணீர். அருகில் ஓர் அலுமினிய குண்டானில் மோர்ச்சாதம். காகிதத்தில் காய்ந்த நார்த்தங்காய் துண்டங்கள்...

இருபத்துநாலு மணி நேரமாய் அங்கேயே படுத்து அங்கேயே கக்கூஸுக்குப் போனதில் ஈக்கள் ஏராளமாக மொய்த்துக் கொண்டிருந்தன. மோர்ச்சாதக் குண்டானில் சாரியாய் சிவப்பு எறும்புகள்.

நாற்றம்... நாற்றம், குமட்டும் நாற்றம்.

இவர்களைப் பார்த்ததும் பாட்டி அழ ஆரம்பித்து விட்டாள்.

"பன்னியிலயும் கேடு கெட்ட ஜென்மமா நா வாழ்ந்திட்டிருக்கேன், பாத்திங்களா? இந்த உடம்புலே உசிரு இன்னும் என்னத்துக்காக இருக்கோ, தெரியலையே... 'காலைல போய் சாயங்காலம் வந்திடுவோம்'னு பொய் சொல்லி, என்னை இங்கே படுக்க வைச்சிட்டுப் போயிட்டாங்களே– பெட்டியோட புறப்படறப்பவே எனக்கு சந்தேகம்தான்– வயசான காலத்துலே இப்படி கஷ்டப் படுத்தறாங்களே, நா என்ன பண்ணுவேன்? மூணு வேளையும் மோர் சோறை எப்படிம்மா தின்னறது? வாயிலே போட்டா, குளிரு நடுங்குதே... கை, நல்லா இருந்த வரைக்கும் இவங்களுக்காக வேண்டிய உழைப்பு உழைக்கலியா? இவனுக்கும் இவன் பெண்டாட்டிக்கும் வருஷக்

கணக்கா சமையக்காரியா சமைச்சுப் போடலியா? பிள்ளைப் பேறு பாக்கலியா? பிள்ளைங்களைக் குளிப்பாட்டி, ஸ்கூல்லே கொண்டு விட்டு, அவங்க காரியங்களைக் கவனிச்சு, அம்மா, எத்தனை வேலை பண்ணி இருக்கேன்...? இப்ப அதெல்லாம் நினைப்புலே இல்லாம இப்படி நடந்துக்கறாங்களே?... இந்த உசிரு, இன்னும் ஏன் கிடந்து அல்லாடுது! பொசுக்குனு போயிடக் கூடாதா? பிறந்த அன்னிலேந்து இன்னிவரை சுகம்னா என்னானு தெரியாத ஒரு ஜன்மம் நா... மொத்தத் துலே பாவி... மகாபாவி..."

குச்சிக் கையால் தலையில் அடித்துக் கொண்டு அழுதவ ளின் கையைப் பற்றி, "கவலைப்படாதீங்க... நாங்க உங்களுக்குச் சீக்கிரமே ஒரு வழி பண்ணறோம்" என்று சொல்லிவிட்டு பூமா வீட்டுக்கு வந்தாள்.

தாயி பரிமாறின சாப்பாடு உள்ளே இறங்க மறுத்தது.

இந்த மாதிரி வேண்டாமல் ஆகிவிடுகிறவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள்?

இவர்களுக்கெல்லாம் சாவுதான் விமோசனமா?

சரி, சாவு வருகிறவரைக்கும்?

இப்படி நவநீதா பாட்டியை வாசல் வராந்தாவில் படுக்க வைத்துவிட்டுப் போய் விட்டார்களே, அவர்களுக்கு மனசு உறுத்தாது?

ராத்திரி மழை பெய்து சாரல் அடித்தால் இந்தப் பாட்டி என்ன பண்ணுவாள்?

சாரலில் நனைந்து, குளிரில் நடுங்கி...

திடுமென்று பூமாவுக்கு களிமண்ணால் ஒரு பொம்மை செய்து அங்கு வைத்திருக்கிற மாதிரியும், மழையில் அது கொஞ்சம் கொஞ்சமாகக் கரைகிற மாதிரியும் ஒரு கற்பனை தோன்றியது.



பந்தபாசம், பசி, தாகம் என்று எதுவுமே காட்டாமல் நவநீதம் இருக்க வேண்டும் என்கிறவர்களைப் பொறுத்தவரை அந்தப் பாட்டி ஒரு களிமண் பொம்மைதானா?

அப்புறம் அது கரைந்தால் என்ன? இருந்தால் என்ன?

காலையில் கதவைத் திறந்து பார்த்து 'ஓ! பொம்மை கரைந்து விட்டதா? அதுவும் நல்லதுதான்'– என்று சந்தோஷப்படக் கூடச் செய்வார்களோ?

ஹோ–என்ன பயங்கரம் இது!

வேதனை மாறாத மனசுடனேயே பூமா திருவான்மி யூருக்குச் சென்றாள்.

மருந்தீஸ்வரர் கோயிலைத் தாண்டி, இடது பக்கமாய்த் திரும்பிக் கொஞ்சம் சென்றால் அந்த இடம் இருந்தது.

தொலைவில்– நீலக்கடல்– ஆனந்தமான காற்று– நிம்மதி தரும் நிசப்தம்....

இடம் பிடித்துப் போக, புரோக்கருடன் பூமா நேராக சொந்தக்கார சேட்டைச் சென்று பார்த்தாள்.

"அங்கெல்லாம் இப்ப க்ரவுண்டே ஐயாயிரம்னு போவுது.... எனக்கு அவ்வளவு ஆசை இல்லே தவிர நீங்க ஏதோ நல்ல காரியத்துக்காக வேணும்னு சொல்றீங்க, ஏக்கர் நாப்பதாயிரம்னு கொடுக்க நா ரெடி... ஒண்ணரை ஏக்கர் இருக்கு; அறுபதாயிரம் மொத்தமா கொடுத்திடுங்க....'

அறுபதாயிரமா?

முப்பதிலிருந்து, நாற்பதுக்குள் முடித்து விடலாம் என்று ஆசைப்பட்டது நடக்காதா?

இரண்டு நாளில் சொல்வதாகக் கூறிவிட்டு பூமா வெளியில் வந்தாள்.

"லட்ச ரூபா கொடுத்தாக்கூட இந்த மாதிரி இடம் இப்ப கிடைக்காது.... அவருக்கு நல்ல மனசு, அதான் கொடுக்க றேன்னு சொல்றார், விட்டுடாதீங்க...."

புரோக்கரிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தவளுக்காக செல்லா காத்திருந்தாள். அவளோடு சாந்தா ஸ்ரீனிவாசன் என்ற மெம்பர்.

"எங்க போயிட்டீங்க பூமா? பதினோரு மணிக்குப் போன் பண்ணப்ப, தாயி நீங்க திருவான்மியூருக்குப் போயி ருக்கிறதா சொன்னா. நில விஷயமாவா போனீங்க? என் கிட்டச் சொல்லி இருந்தா கார் எடுத்துக்கிட்டு நானும் வந்திருப்பேன்..."

பூமா வறட்சியாய்ச் சிரித்தாள்.

"சும்மா எல்லாரையும் எதுக்காகத் தொந்தரவு பண்ணணும் செல்லா?... நிலம் கிடைக்கப் போறது நிச்சயம்னா, சொல்லியிருப்பேன். வீண் அலைச்சலுக்கு கார் பெட்ரோல் செலவு எதுக்கு?"—

"நிலத்தைப் பார்த்தீங்களா?"—

"ம்ம்... நிலம் அருமையாத்தான் இருக்கு... ஆனா விலை ஜாஸ்தி... ஒண்ணரை ஏக்கருக்கு அறுபதாயிரம் கேக்கறார். இது ரொம்ப குறைச்சல்னு புரோக்கர் சொல்றார். ஆனாலும் நமக்கு இது ஜாஸ்திதானே?"

"மத்தியானம் கமிட்டி மீட்டிங்லே இதை டிஸ்கஸ் பண்ணி, கூடக் கொஞ்சம் ஆனா சமாளிக்க முடியுமான்னு யோசிக்கலாம். மீன்வொயில்... பூமா, இப்ப நாங்க வந்த



சமாசாரத்தைக் கேட்டா நீங்க நிச்சயம் சந்தோஷப் படுவீங்க. நம்ப சாந்தி ஸ்ரீனிவாசன் ஹாஸ் ஸம் குட் நியூஸ் ஃபார் யூ.. சொல்லுங்க சாந்தி...."

"வாடகை வீட்டுலே ஹோம் ஆரம்பிக்கிற விஷயமா நாங்க பேசிட்டு இருந்தப்ப, எங்க பேமிலி ஃப்ரெண்ட், லிபி யாலே இருக்கறவங்க, இப்ப ஒரு மாச லீவுலே வந்திருக்காங்க. அவங்களும் கூட இருந்தாங்க... வீடு கிடைக்காத பிரச்சினை பத்திச் சொன்னப்போ, 'அடையாறிலே எங்களுக்குச் சொந்த மான வீடு ஒண்ணைப் பூட்டி வைச்சிருக் கோம். பழசுதான் பிடிச்சா எடுத்துக்குங்க.... இரண்டு வருஷத்துலே நாங்க திரும்பி வந்தப்புறம்தான் வீடு எங்களுக்குத் தேவைப் படுது'னு சொன்னாங்க.. உடனே செல்லாவைக் கூட்டிக்கிட்டு அந்த வீட்டைப் போய் பார்த்தோம். நாட் பேட்.. நீங்க சரினா வாடகை பேசி முடிச்சுடலாம்..."

வீடு காத்தோட்டமா, விசாலமா இருக்கு பூமா.. தனி வீடு, கொஞ்சம் பழசுங்கறதைத் தவிர வேற குத்தம் இல்லே.. இருநூறு ரூபாய்தான் வாடகை. இட் ஈஸ் ஏ வெரி குட் பார்கெய்ன்"—

சட்டென்று பூமாவுக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. நவநீதம் பாட்டி நல்ல ராசிக்காரர்தான் என்று தோன்றியது.

"உங்களுக்குச் சரின்னா, எனக்கும் சம்மதம்தான். நீங்க வைதேகியோட போய் காண்ட்ராக்ட் கையெழுத்துப் போட்டிட்டு வந்திடுங்க.. நாளைக்கு நாம எல்லாரும் வீட்டைப் பார்த்து, ஏற்பாடுகளை ஆரம்பிச்சுடலாம்..."

அன்றைய பொழுது பூமாவுக்கும், அபயா சாரிடி க்ளப்புக்கும் ரொம்ப நல்ல பொழுதாகவே விடிந்திருக்க வேண்டும்.

வாடகைக்கு வீடு கிடைத்ததைவிட 'அவுட் ஆஃப் ப்ளூ' என்பார்களே அந்த தினுசில் மதியம் போன் செய்து 'மாமனார் உங்களைப் பார்க்கணும்னு சொல்றார்' என்று சுமதி சொல்ல, அன்று மாலையே சினிமா உலகில் பெரும் புள்ளியான அவரை பூமா சந்திக்க, சற்றும் எதிர்பாராத இனிய அதிர்ச்சியாய் அவர் நிலம் வாங்க தான் பணம் தருவதாகச் சொன்னாரே, அதுதான் ரொம்ப ரொம்பப் பெரிசு...

"உங்க க்ளப் நடவடிக்கை பத்தி எனக்கு அதிகம் தெரியாது. இரண்டு நாள் முன்னால சுமதியும் என் பிள்ளையும் பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டேன். மனசுக்கு உங்க திட்டம் பிடிச்சுப் போச்சு. சுமதிகிட்டே பூரா விவரத்தையும் விசாரிச்சேன். நிலத்தைத் தேடி அலயறீங்கனு சொன்னா. 'சரிம்மா நிலம் கிடைச்ச உடனே சொல்லச் சொல்லு. நம்ம அம்மா ஞாபகார்த்தமா அதுக்கான கிரயத்தை நாம கொடுக்கலாம்'னு சொன்னேன். வேளை கூடி வந்திருச்சு... இப்ப நிலம் கிடைச்சு, நீங்க வந்திட்டீங்க. சந்தோஷம்... இந்தாங்க அறுபதாயிரத்துக்கு செக்... உங்க இல்லம் அமோகமா நடக்க முருகனை வேண்டிக்கிறேன்..."

பெரியவர் செக்கை நீட்டின நிமிஷத்தில், ரொம்ப ரொம்ப வருஷங்கள் கழித்து இதம் பொங்குவதையும், அதன் விளைவாகக் கண்களில் நீர் திரள்வதையும் பூமா உணர்ந்தாள்.

## 20

பூமா எதிர்பார்த்த அளவுக்கு வீடு பழசாக இல்லை. தனி வீடு. காம்பௌண்ட் சுவர். நாலு மாமரங்கள். இரண்டு வேப்ப மரங்கள். நடுவில் வீடு. இந்தக் கோடிக்கும், அந்தக் கோடிக்குமாய் படிகள். ஏறியதும் வராந்தா. அடுத்துக் கூடம். பக்கத்தில் இரண்டு பெரிய அறைகள். சமையல்கட்டு, தாழ்வாரம், பாத்ரூம், கக்கூஸ்.



ஏ... அப்பா! உடனடி தேவைக்கு இது வெள்ளம் ஆயிற்றே!

சுண்ணாம்பு அடித்து, தோட்டத்துப் புதர்களை வெட்டி, பெருக்கி, வீட்டை ஒருதரம் சோடா போட்டு அலம்பி விட்டால் போதும்... குடியேறி விடலாம்...

ஈஸ்வரியின் கணவர் பில்டிங் காண்ட்ராக்டர் என்பதால் வெள்ளை அடிக்கிற ஆளைத்தேடி வேலை வாங்கும் பொறுப்பை அவள் ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு ஒத்தாசை செய்யும் பொறுப்பு லீலா, நஸீமாவிடம் விடப்பட்டது.

"எல்லாத்துக்குமா ஆயிரம் ரூபாய்க்கு மேல ஆகாம இருந்தா தேவலை... நாலு நாள்லே வீட்டைத் தயார் பண்ணிட முடியும் இல்லையா? எவ்வளவு சீக்கிரம் குடுத்தனத்தை ஆரம்பிக்கிறோமோ, அத்தனை நல்லது."

அன்று மதியம் வாடகை வீட்டில் இல்லத்தை துவங்குவதற்கான அத்யாவசிய சாமான்களை லிஸ்ட் போட்டார்கள்.

"அம்மாக்கள் இப்ப மூணு பேர் ரெடியா இருக்காங்க. வி.எச்.எஸ்.லே ட்ரீட்மெண்ட் எடுத்துக்கற சுந்தரம்மா, அஞ்சலையை ஹோம் ஆரம்பிச்ச உடனே சேர்த்துக்கறதா ப்ராமிஸ் பண்ணி இருக்கோம்... அப்புறம் ஜனா சொன்ன அந்த நவநீதம் பாட்டி. ஆக மொத்தம் மூணு பேர்... இப்போதைக்கு இவங்க தேவைகளோட இல்லத்தைத் தொடங்கினா போதும். அப்புறம் ஆள் சேரச்சேர சாமான்களை அதிகரிச்சுக்கலாம். சொந்தக் கட்டடத்துக்குக் குடி போறப்போ திட்டமிட்டு எல்லாத்தையும் வாங்கலாம்... என்ன சொல்றீங்க?"

"எஸ்.... நம்ம கிட்ட இருக்குற சாமான்களை வைச்சு ஹோமை ஆரம்பிக்கறது சிக்கனத்துக்குச் சிக்கனம், அலைச்சலும் இருக்காது. எங்க வீட்டு மாடிலே சில கயித்துக் கட்டில்கள் உபயோகிக்காம கிடக்கு.... அதோட நாள் கிழமைனா சமைக்கிற பித்தளைப் பாத்திரங்களையும் என்னால ஸ்பேர் பண்ண முடியும்..."

"பாத்திரங்கள், ஸ்டவ், தண்ணி வைச்சிக்க தகர ட்ரம் நா தரேன்..."

"என் தங்கை கல்யாணத்துக்கு வர்ரவங்களுக்குக் கொடுக்கறதுக்காக தைச்ச மெத்தை தலைகாணிகள் இருக்கு. நா கொடுக்கறேன்...."

இப்படித் தலைக்குத் தலை கொடுக்க முன் வந்த சாமான்களை வைத்துக் கொண்டு வருகிற வெள்ளிக் கிழமை நாள் நன்றாக இருப்பதால் இல்லத்தைத் துவங்கி விடலாம் என்று தீர்மானித்தார்கள்.

"யாரைக் கூப்பிட்டு 'இனாகரேட்' பண்ணச் சொல்லலாம்?"

"சீஃப் மினிஸ்டர்? சமூக நலத்துறை அமைச்சர்?..."

செல்லா "வேண்டாம்" என்று தலை அசைத்தாள்.

"நல்லபடியா சொந்தக் கட்டிடம் கட்டி பெரிசா விழா வைச்சிக்கறப்போ பெரிய தலைவர், அல்லது வி.ஐ.பி.யைக் கூப்பிடறது சரி; இப்ப வெளி மனுஷா எதுக்கு? ப்ரஸிடெண்ட் பூமாவையே குத்து விளக்கை ஏத்தச் சொல்லி இல்லத்தை நமக்குள்ளே அடக்கமா ஆரம்பிச்சுட்டா என்ன?"

இந்தக் கருத்தை மற்றவர்களும் மறுப்பின்றி ஏற்றுக் கொள்ள, வெள்ளி அன்று பூமா ஹோமைத் திறந்து வைப்பது முடிவானது.



மளிகை, இதர சாமான்களையும் மெம்பர்களே ஆளுக்குக் கொஞ்சமாய்த் தருவதாகச் சொல்லிவிட அந்தக் கவலையும் இல்லை.

'ஒரு க்ரூப்பாக ஹ என்ன செய்து கிழிக்கிறீங்க நீங்க?' என்று லேசான புருவத் தூக்கலுடன் அவ்வப்போது திருப்தியில்லாமல் கமிட்டி மெம்பர்களை தூஷிக்கும் மூன்று நான்கு அங்கத்தினர்கள் மட்டும் "எல்லாத்தையும் தனக்குள்ளேயே முடிவு எடுக்கறாங்க... ஆனாலும் இந்தக் கமிட்டி மெம்பர்ஸ் ரொம்பத்தான் நாட்டாண்மை பண்ணறாங்க... நாங்க மட்டும் பணம் கொடுக்கலியா? எங்க கருத்தைச் சொல்ல எங்களுக்கு மட்டும் உரிமை இல்லையா? எதுக்கு வீட்டோட பங்ஷன் வச்சிக்கணும்? என் வீட்டுக்காரருக்கு அத்தனை அரசியல்வாதிகளையும் நல்லாத் தெரியும். கூப்பிட்டா தயங்காம வருவாங்க.... ஜாம் ஜாம்னு நடத்தறதை விட்டுட்டு எதுக்காக இப்படி நமக்குள்ளே செய்யணும்? ஏதோ தில்லு முல்லு பண்ணத்தான் இப்படி குசுகுசுக்கறாங்க" என்று பேசித் திரிவதாகக் காதில் விழ, மறுநாள் காலை அந்த நால்வரையும் செல்லா தன் இல்லத்துக்கு அழைத்து, சுற்றி வளைக்காமல் நேரிடையாகவே கேட்டுவிட்டாள்.

"என்னமோ குறைபட்டுக்கறீங்களாம். என்ன விஷயம்?"

"குறையா? எங்களுக்கா? ஒண்ணும் இல்லையே?"

"பேசறதையும் பேசிட்டு இல்லேனு சொன்னா எனக்குப் பிடிக்காது சுந்தரி. நேத்து அன்னம்மாகிட்டே நீ என்ன சொன்னே?... ஞாபகப்படுத்திச் சொல்லு...."

"நா என்ன சொன்னேன்? இந்த பங்கஜம் எதுக்காக வீட்டோட பங்ஷன் வைக்கணும்... யாராவது அரசியல் தலைவர்களைக் கூப்பிடக் கூடாதானு கேட்டிருந்தா... எனக்கொண்ணும் தெரியாதும்மா..."

"சரி யார் என்ன சொன்னீங்கன்ற பேச்சு இப்ப வேண்டாம்... ஒண்ணு சொல்றேன் கவனமா கேட்டுக்கங்க... பூமாதான் துவக்கத்துலேர்ந்து வழிகாட்டியா இருந்திருக்காங்க. அவங்க யோசிச்சு எடுக்குற எந்த முடிவும் கரெக்டாத்தான் இருந்திருக்கு... அவங்க மேல எங்க அத்தனை பேருக்கும் பரிபூரண நம்பிக்கை இருக்கு.... உங்க யாருக்காவது அந்த நம்பிக்கை இல்லாமப் போனா, தாராளமா இந்த நிமிஷமே நீங்க க்ளப்புலேந்து விலகிக்கலாம். பிடிக்காம இருக்கணும்னு யாரும் உங்களை கம்ப்பெல் பண்ணலை.... இத்தனை வருஷமா அபயா சாரிடி க்ளப்பால முழுமையா காரியங்களைச் சாதிக்க முடியுதுன்னா அது அங்கத்தினர் நடுவுலே இருக்குற ஒத்துமையாலதான். அதைக் கெடுக்க யார் முனைஞ்சாலும் அந்த மெம்பர்ஸ் எங்களுக்குத் தேவை இல்லே... என்ன புரியுதா? ரெஸிக்னேஷனை ஸப்மிட் பண்ணிட்டு, எந்த க்ளப்லே உங்களுக்குப் பிடித்தமான, நம்பிக்கையான பிரஸிடெண்ட் இருக்காரோ, அங்க தாராளமா போய் சேருங்க..."

செல்லா கறாராகப் பேசிவிட, சின்னதாக அங்கத்தினர்களிடையே எழுந்த சலசலப்பு சட்டென்று அடியோடு அடங்கிப் போயிற்று.

செவ்வாய் காலை சுமதி மூலமாக வந்து இன்னோர் அம்மா ஹோமில் சேர்ப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பேர் மீனாபாய். வயசு அறுபத்து நாலு. செங்கல்பட்டு சொந்த ஊர்.

சின்ன வயசில் கல்யாணமானவள். 'நீ தொட்டா ஒட்டிக் கொள்ளும் கறுப்பு, தவிர கிட்டத்தில் வந்தால் வாய் நாறுகிறது!' என்று இவளைத் தள்ளி வைத்துவிட்டு புருஷன்காரன் இன்னொருத்தியை மணந்துகொண்டு விட்டான். மீனாபாய் பெற்றவர்கள் இருந்தவரைக்கும் அவர்களோடு



இருந்தாள். அப்புறம் தம்பியோடு. தம்பியும் அவள் மனைவியும் நல்லவர்களாய் அமைந்துவிட, இனி தனக்கு இதுதான் வீடு. இவர்கள்தான் எல்லாம் என்று வாழ முடிந்தது. தம்பி குழந்தைகளைத் தன் பிள்ளைகளாக எண்ணி வளர்த்தாள். பெண்ணுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆனதும் 'வாழாவெட்டியான எனக்கு எதுக்கு நகையும், நட்டும்! குழந்தைக்குப் போடு. கண்குளிரப் பார்க்கறேன்' என்று சொல்லி இரட்டை வடத்தைக் கழட்டித் தன் சீதனமாக மருமகளுக்குப் போட்டாள். செய்யும்போதும், போடும்போதும் எல்லாருக்கும் எல்லாம் இனித்திருக்கிறது. அப்புறம்தான் கசந்து விட்டது. தம்பி டயப்படீஸ் கோமாவில் சட்டென்று இறந்துவிட, பிள்ளையுடன் அம்மாவும் அத்தையும் தங்கச் சென்றதும் முணு முணுப்புகள் ஆரம்பித்திருக்கின்றன. அம்மாவை வைத்துக் கொள்வது பிள்ளைக்குப் பாரமாகப் படவில்லை. ஆனால் அத்தைதான் சுமையாகப் போய் விட்டாள். இரட்டை வட சங்கிலியைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு மினுக்கும் மருமகளுக்குக்கூட அத்தை வேண்டப்படாதவள் ஆகிவிட்டாள். அடிக்கிற அடியில் அம்மிக் கல்லும் நகரும் என்கிற தினுசில் வருஷம் ஆக ஆக பெண், பிள்ளை பேச்சைக் கேட்டுக் கொண்டு தம்பி பெண்டாட்டியும் மாறினதும் தொல்லைகள் அதிகமாயின.

'ஆதிநாள்லேருந்தே அப்பா அம்மாவுக்குப் பாரமா இருந்தது போதாதா? இப்ப நம்ம காலை வேற சுத்தணுமா?' என்றார்கள்.

'அப்பா இருந்த வரைக்கும் அக்காகாரினு நாட்டாண்மை பண்ணியாச்சு... இப்பவுமா?' என்றார்கள்.

'சனியன் நம் கழுத்தை அறுக்கிறது' என்றார்கள்.

'யார் யாருக்கோ சாவு வர்றது, இதுக்கு வரக் கூடாதா?' என்றார்கள்.

இன்னும் என்னென்னவோ சொன்னார்கள்.

அம்மா செத்த பிறகு மழை கொட்டு கொட்டென்று கொட்டிய ஒரு நாளில் குழந்தையின் பீடிங் பாட்டிலைக் கை தவறிக் கீழே போட்டு உடைத்துவிட்டாள் என்று தெருவில் தள்ளிக் கதவைச் சார்த்தும் அளவுக்கு விஷயம் போய் விட்டதாம்.

விவரத்தைக் கேள்விப்பட்டதும் மீனாபாயைக் கமிட்டி மெம்பர்கள் சென்று சந்தித்து, இல்லத்தில் சேர்ப்பதற்கு வேண்டிய அத்தனை க்வாலிபிகேஷன்களும் அவரிடம் இருக்க வெள்ளிக் கிழமை வந்து அழைத்துக் கொள்வதாகச் சொல்லி வந்தார்கள்.

இந்த அம்மாக்களை நல்ல முறையில் கவனித்துக் கொள்ள ஒரு மேட்ரன் வேண்டுமே, வாய்க்கு ருசியாகத் தாயின் பரிவுடன் சமைத்துப் போட ஒரு 'குக்' வேண்டுமே!

வி.எச்.எஸ்.ல் நர்ஸாக வேலை பார்த்து வந்த திலகா 'நா மேட்ரனா இருக்கேன்' என்று முன் வந்தாள்.

திலகா சின்ன வயசுக்காரி. முப்பது இருந்தால் அதிகம்.

"நல்ல வேலைய விட்டுட்டு எங்ககிட்ட வேலைக்கு வர்ற அளவுக்கு எங்களால சம்பளம் கொடுக்க முடியாதே, திலகா."

திலகா சிரித்தபடி பேசினாள்.

"எனக்குச் சம்பளம் பெரிசில்லே... நா ஒண்டிக் கட்டை. கொடுக்கறதைக் கொடுங்க... சந்தோஷமா வாங்கிக்கறேன்."

இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா!

நூற்று அம்பது ரூபாய் சம்பளம். சாப்பாடு, இடம், மருத்துவ உதவி இலவசம்.



திலகா சிரிப்பு மாறாமலேயே ஒப்புக் கொண்டாள்.

அங்கத்தினர் மைதிலி சமையல்காரியைத் தேடும் பொறுப்பை எடுத்துக் கொண்டு, திருவள்ளூருக்கு அருகில் சின்ன வயசில் விதவையாகி, அனாதையாகத் தவித்துக் கொண்டிருக்கும் முத்துலட்சுமியை அழைத்து வந்தாள்.

முத்துலட்சுமிக்கு முப்பத்து நாலு வயசு. குழந்தை, குட்டி, சொந்தம், பந்தம் எதுவும் கிடையாது.

'அனாதையா நின்னவளைக் கூட்டிட்டு வந்து, அம்மாக்களைக் கொடுத்து சொந்தம் பந்தத்தை தர்றேன்னு சொல்றீங்களே' என்று கூறி, ஐம்பது ரூபாய் சம்பளம், இடம், சாப்பாடு இலவசம் என்றதை சந்தோஷத்தோடு ஏற்றுக் கொண்டாள்.

புதன் அன்று திருவான்மியூர் நிலத்தை சாந்தி சதன் பேரில் ரிஜிஸ்தர் செய்தார்கள்.

பதிவான பத்திரத்தோடு சுமதியின் வீட்டுக்குச் சென்று அவள் மாமனார் கையில் பத்திரத்தைக் கொடுத்து, பூமா கைகூப்பி அவரை நமஸ்கரித்தாள்.

அன்று மாலை அலைந்து திரிந்துவிட்டு, ஓய்ந்து போய் வீட்டுக்குப் பூமா வந்தபோது நெருங்கலான ஓர் இளைஞன் அவளுக்காக காத்திருந்தான்.

அவன் பேர் ஷண்முகமாம்... அவன் தாயை ஹோமில் சேர்க்க முடியுமா என்று தெரிந்து போக வந்திருக்கிறானாம்.

பேசியவனை பூமா ஏற இறங்கப் பார்த்தாள்.

வத்தலான உடம்பு, கலைந்த தலைமுடி, குழியில் உட்கார்ந்திருந்த கண்கள், அழுக்கு ஷர்ட், பாண்ட்....

இல்லாதவனாகவே இருக்கட்டும், ஆனாலும் பெத்தவளை தான் உயிரோடு இருக்கும்போதே ஹோமில் சேர்த்துக்

கொள்கிறாயா— என்று கேட்க எத்தனை துணிச்சல் இருக்க வேண்டும்?

சுருசுருவென்று கோபம் எழ, பூமா "பிள்ளை நீங்க இருக்கறப்ப, எதுக்காக அம்மாவை இங்க சேர்க்கணும்னு சொல்றீங்க? ம்?" என்றாள்.

ஷண்முகம் ரொம்ப தழைந்த குரலில் பேசினான்.

"உங்களுக்குக் கோபம் வறது நியாயம்தான். நிலவரத்தைச் சொல்றேன். அப்புறம் நீங்களே முடிவு எடுத்துக்குங்க... நா எங்கம்மா நாயகிக்கு ஒரே பிள்ளை... அப்பா சின்ன வயசுலேயே செத்துட்டார். அம்மா ரொம்ப கஷ்டப்பட்டு என்னை வளர்த்தாங்க. நானும் அம்மா கீறின கோட்டைத் தாண்டாத பிள்ளையாத்தான் இருந்தேன். எஸ்.எஸ்.எல்.சி. முடிச்சிட்டு ஒரு கம்பெனிலே டைப்பிஸ்டா சேர்ந்தேன். சம்பளம் முன்னூத்து இருவது வந்தது. எங்கம்மா பாத்து வைச்ச பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டப் புறம்தான் தகராறு ஆரம்பிச்சது.... புஷ்பா கிட்டே நா பேசி, சிரிச்சா அம்மாவுக்கு கோபம் வந்திடும். தானே பரிமாறணும், சம்பளத்தை தன் கையிலே கொண்டு கொடுக்கணும்னு நினைப்பாங்க... அவங்க இஷ்டப்படிதான் நா நடந்துண்டேன் சொன்னா வெட்கங்க... ராத்திரி படுக்கப் போயிட்டா அம்மாக்கு பொறுக்காது.... நெஞ்சுவலி மூச்சு அடைப்புனு ஏதாவது சொல்லி கூப்பிடுவா. இதெல்லாம் புஷ்பாக்குப் பிடிக்காம இருந் திச்சு... 'பொறுத்துக்க'னு நா சொன்னதுக்காக, பொறுத்துக் கிட்டா. புஷ்பாவும் ஒரு துணிக்கடைலே வேலையா இருக்கா. குடும்பத்துக்கு அவ கொண்டு வர்ற நூத்து எண்பது ரூபா தேவைப்பட்டதால நா அவளை வேலையை விட்டு நிக்கச் சொல்லலை... கர்ப்பம் ஆகி, பிள்ளை பிறந்தப்புறம் நிலைமை மோசமாயிட்டது. 'இவ வேலைக்கு போறப்ப. இவ புள்ளைய நா ஏன் பாத்துக்கணும்? நா என்ன இவளுக்கு வேலைக்காரியா? என் புள்ளையை நா கஷ்டப்பட்டு வளக்கலையா? அந்தமாதிரி இவளும் வளக்கட்டுமே'னு அன்றாடம் அம்மா கூச்சல் போடத் துவங்கினாங்க... எப்பப்பாரு சண்டைதான்; ரகளைதான்... ஆபீஸ்லேந்து வீட்டுக்கு வந்தா ஒரே அமர்க்களமா இருக்கும். 'என்னம்மா இப்படி அன்னியமா பிரிச்சுப் பேசறே— இவன் உனக்கு பேரன்தானே? என் மகன் இல்லியா? கவனிச்சிக் கிட்டா என்ன?'னு அம்மா கிட்டச் சொன்னா, 'உனக்கு என்னைவிட அவ பெரிசாயிட் டாளா?'னு கத்தறாங்க... புஷ்பாவானா 'இனியும் இந்தக் கஷ்டத்தை என்னால பொறுக்க முடியாது... நானும் என் பிள்ளையும் தனியாபோயி எப்படியோ பொழச்சிக்க றோம்'னு சொல்றா... ஒரோரு சமயம் தற்கொலை கூட பண்ணிக்கிடலாமானு தோண்ற அளவுக்கு மனசு வெறுத்துப் போச்சு... இத்தனை கஷ்டம் போதாதுனு எனக்கு ஆறு மாசமா ஒரே வயித்துவலி. வேலைக்கு ஒழுங்கா போக முடியலை. அதனால வேலை போயிடுத்து. ஆஸ்பத்திரிலே காட்டினப்ப, 'அல்ஸர் வந்திருக்கு, ஆபரேஷன் உடனே பண்ணனும்'னு சொல்லிட் டாங்க.... ஒரு மாசம் நா ஆஸ்பத்திரிலே இவங்களை தனியா அடிச்சிக்க விட்டுட்டு எப்படி சேரறதுனு புரியலை... செலவு வேற ஏகமா ஆகும். அந்தப் பணத்துக்கு என்ன பண்ணப் போறேன்னு தெரியலை... குழம்பிக்கிட்டு இருந்தப்ப உங்க இல்லம் பத்தி கேள்விப் பட்டேன். ஆறுமாசம் எங்கம்மாவை உங்க ஹோம்லே. வைச்சிட்டீங்கன்னா, நா ஆபரேஷன் செய்து உடம்பு தேறி வேற வேலை தேடிக்கிட்டதும், உடனே அவங்களைத் திரும்ப அழைச்சிக்கிறேன், அதுவரைக்கும் தயவு பண்ணி..."

இது நாழிகை கோர்வையாகப் பேசி வந்த ஷண்முகம் திடுமென்று தரையில் குந்தி உட்கார்ந்தான்.

வயிற்றை ஒரு கையால் பிடித்துக் கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்தான்.

முதியோர் பிரச்சினைக்கு இன்றைய இளைய சமுதாயம் மட்டும், அவர்கள் சுயநலமிக்க போக்கும், தான், தன் சுகம் என்ற எண்ணம் மட்டும் காரணமில்லை. புரிந்து கொள்ள மறுக்கும் பெரியவர்களும்தான்.

காலத்துக்கு ஏற்ப வளைந்து கொடுக்கவேண்டும், நம் நிலைமையை உணர்ந்து ஒதுங்கிப் போகவேண்டும். என் பிள்ளை, என் பெண் என்று உரிமை கொண்டாடாமல் அனுசரித்துச் செல்ல வேண்டும் என்பதை முதியோர்கள் என்று உணரப் போகிறார்கள்?

கடவுளே...

வேதனையுடன் ஷண்முகத்தை அனுப்பிவிட்டு கமிட்டி மெம்பர்களிடம் பூமா பேசி அனுமதி வாங்கியதில் அந்த வெள்ளிக்கிழமை அடையாறில், அமைதியான காலை நேரத்தில் இல்லம் இயங்கத் துவங்கிய போது அதில் வசிப்பவர்களாகச் சுந்தராம்பா, அஞ்சலை, நவநீதம், மீனாபாய், நாயகி குடியேறினார்கள்.

## 21

"மிஸ்டர் ராமசாமிகிட்டே நாம வரிசைக்கிரமமா செய்ய வேண்டிய காரியங்களை விசாரிச்சிட்டீங்களா, செல்லா?"

"ஓ... யெஸ்... இதோ குறிச்சுக்கிட்டே வந்திருக்கேன்... முக்கியமா பண்ண வேண்டிய விஷயங்கள் இரண்டு. நம்ப நிலம் மைலாப்பூர் ரிஜிஸ்திரார் ஆபீஸ் கீழே வர்ரது. அங்கே ஒரு கிளார்க்கை அனுப்பி விசாரிச்சப்போ கலெக்டர், எம்.எம்.டி.ஏ. இவங்க இரண்டு பேர் கிட்டயும் கிளியரன்ஸ்



உத்தரவு வாங்கினாத்தான் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கலாம்னு தெரிய வந்தது..."

"கலெக்டர் அனுமதி எதுக்கு செல்லா? ஹோம் நடத்தலாம்னா?"—

"திருவான்மியூர், அது பக்கத்துலே இருக்கற கடற்கரையை நெருங்கின இடத்தையெல்லாம் டூரிஸ்ட் ஸ்பாட்டா அறிவிச்சிருக்காங்க... அங்கே இப்படியோர் இல்லம் நடத்தணும்னா அதுக்குக் கலெக்டர் அனுமதி வேணுமாம்..."

"எம்.எம்.டி.ஏ— சென்னை நகர விஸ்தரிப்பு அமைப்புதானே இது?"

"எஸ். இவங்ககிட்டயும் 'எங்களுக்கு இந்த நிலம் தேவை இல்லை'னு ஒரு கிளியரன்ஸ் வாங்கிடணுமாம்..."

"சரி. வாங்கிடலாம்.... அப்புறம்?"

"நிலத்துலே கட்டிடம் கட்டறதுக்கும், ஹோம் நடத்தறதுக்கும் நமக்கு எக்கச்சக்கமா பணம் தேவை. இதில் முக்கால்வாசி பணத்தைப் பெரிய மனுஷங்க, கம்பெனிலேந்து டொனேஷனாத்தான் வாங்குவோம். இந்த டொனேஷனுக்கு இன்கம்டாக்ஸ்லேந்து விலக்கு இருந்தா, பணத்தைக் கொடுத்து உதவுறவங்களுக்கு வரி மிச்சமாகும்... ஸோ, உடனடியா கட்டிடம் சம்பந்தப்பட்ட எந்த வேலையும் துவங்கறதுக்கு முன்னாலே, தீவிரமா பண வசூல்லே இறங்கறதுக்கு முன்னால, இந்த 'டாக்ஸ் எக்ஸம்ஷனை' வாங்கிடணும்"

"வரி விலக்கு கிடைக்கறது சுலபமா?"

"சுலபமோ கஷ்டமோ பண்ணித்தான் ஆகணும். வேற வழியில்லே... அரசாங்கத்தைப் பொறுத்த எந்த வேலை நிமிஷத்துலே நடந்துடும், சொல்லுங்க?... இதுக்கு அப்ளை பண்ணறதுக்குச் சில விஷயங்களை நாம தயார் செய்யணும்.

நிலத்தோட வரைபடம், பத்திரத்தோட நகல் இரண்டையும் பிரதிகள் எடுக்கணும். இவற்றோட ஆடிட்டர் தயாரிச்சுக் கொடுத்திருக்கிற பாலன்ஸ் ஷீட்டையும் சேர்த்து மூணு பிரதிகளை 'தமிழ்நாடு ஸர்க்கிள்—நம்பர் இரண்டு' அலுவலகத்துக்கு அனுப்பிச்சிட்டா, இது சம்பந்தமா ரிப்போர்ட்டை 'மெயின் ஆபீஸுக்கு அனுப்பு'னு கமிஷனர் உத்தரவு போடுவாராம். அங்கேயிருந்து நமக்கு செக்ஷன் 80 ஜி—கீழ் வரி விலக்கு கொடுக்கச் சொல்லிக் கடிதம் வருமாம்..."

"எத்தனை நாள்ல?"—

"அது தெரியாது... நம்ம சாமர்த்தியத்தைப் பொறுத்து இருக்கு..."

சாமர்த்தியம் மட்டும் இல்லை. ரொம்பப் பொறுமையும் தேவைப்பட்டது.

முதலில் கலெக்டர், எம்.எம்.டி.ஏ.யிடம் உத்தரவு வாங்குவதற்காக பீச்சில், போர்ட் ட்ரஸ்ட்டுக்கு எதிரில் உள்ள கலெக்டர் அலுவலகத்துக்கும், எழிலகத்துக்கும், கோட்டைக்கும் அலையாய் அலைந்தார்கள்.

இங்கே போனால், அங்கே போ என்றார்கள். அங்கே சென்றால், இங்கோ வா என்றார்கள்.

விடாப்பிடி, குரங்குப்பிடி என்பதுபோல சம்பந்தப் பட்டவர்களைப் பிடித்துத் தொந்தரவு பண்ணியதில் பத்து நாட்களில் கிளியரன்ஸ் கிடைத்தது.

அடுத்து, இன்கம்டாக்ஸ் ஆபீஸ் படையெடுப்பு வாஸ்தவமாகவே படையெடுப்புதான்.

பூமாவுக்குப் பள்ளி இருந்ததால் கமிட்டி மெம்பர்கள் மாறி மாறிச் சென்று எங்கள் அப்ளிகேஷன் என்னாயிற்று என்று தொணதொணத்தார்கள். பள்ளி முடிந்த பிறகு நித்தம்



மதிய நேரத்தில் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலேயே பூமா தவம் செய்தாள்.

சரியான கழுத்தறுப்புகள்— இவர்களை எத்தனை சீக்கிரம் அனுப்பிவிடுகிறோமோ அத்தனை நல்லது என்று இன்கம்டாக்ஸ் ஆபீஸில் நினைத்திருக்க வேண்டும்— இல்லாவிட்டால் அந்த வேகத்தில் காரியம் நடந்திருக்குமா?

மிஸ்டர் ராமசாமிகூட "என்னது! அதற்குள் எக்ஸம்ஷன் வாங்கிவிட்டீர்களா? மழைதான் கொட்டப் போகிறது!" என்று மூக்கில் விரலை வைத்தது நிஜம்.

நிலம் கைக்கு வந்து ஒரு மாசம் பூர்த்தி ஆவதற்குள் வாடகை வீட்டில் ஹோமை நடத்திக் கொண்டு, மற்ற காரியங்களையும் அபயா சாரிடி க்ளப் நிறைவேற்றிவிட்டதில், அடுத்த கட்டமாக நஸீமாவின் கணவர் கட்டிடத்தின் வரைபடம் தயாரிக்க அழைக்கப்பட்டார்.

ஒரு சின்ன வராந்தா, பக்கத்தில் ஆபீஸ் அறை, அடுத்து பெரிய கூடம், இரண்டு பக்கங்களிலும் பெரிசாய் நாலு படுக்கை அறைகள். தொடர்ந்து சாப்பாட்டு அறை, சமையல் கட்டு. பின்னால் நீளமாய் வராந்தா, அதில் தலா ஆறு குளியல் கக்கூஸ் அறைகள்.

போதுமா?

எதேஷ்டம் என்றாள் பூமா.

கட்டிடத்தின் வரைபடத்தை ஹெல்பேஜ்— இந்தியாவுக்கு அனுப்பி அவர்கள் தங்கள் திருப்தியைத் தெரிவித்த பிறகு, ஏழு பிரதிகளை எடுத்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி கட்டிடம் கட்டுவதற்கான அனுமதியை முறையாகப் பெற்றார்கள்.

நகர உச்ச வரம்புத் திட்டத்தால் இது பாதிக்கப் படாமல் இருக்கிறதா? ஹவுஸிங் போர்டுக்கோ, கார்ப்பரேஷனுக்கோ,

சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கோ ஏதாவது ஆட்சேபணை உள்ளதா?

நிலப்பட்டாவில் குறை ஏதும் இல்லையே?

இப்படி ஆயிரம் லொட்டு லொசுக்குகளைச் சமாளித்து நிலத்தின் எல்லைக்கோடு தீர்மானமாக ஸர்வேயரால் குறித்துக் கொடுக்கப்பட்ட பிறகு வருஷப் பிறப்பன்று இல்லத்தின் அம்மாக்களில் வயதானவளான சுந்தரம்மாவை வைத்து வீட்டுக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தை எளிமையாக நடத்தினார்கள்.

"நா எதுக்கு? எனக்கு ஒண்ணும் தெரியாதே... என் கை ராசியில்லாத கை– வேணாம் வேணாம்... விட்டுடுங்க" என்று பயந்து கெஞ்சிய சுந்தரம்மாவிடம் "எங்களைப் பொறுத்தவரை உங்க கை ராசியான கைதாம்மா... இல்லம் நன்னா நடக்கணும்னு வேண்டிக் கிட்டு செய்யுங்க" என்று பூமா உற்சாகம் கொடுக்க மெம்பர்களும் இதர அம்மாக்களும் சுற்றி நின்று இதமாய் கை தட்ட சுந்தரம்மா அடிக்கல்லை நாட்டினார்.

அடுத்து வந்த நாட்கள் பூமாவுக்கும், அபயா க்ளப்பைச் சார்ந்தவர்களுக்கும் ரொம்ப அலைச்சலைத் தந்த நாட்கள்.

மூன்று மாசம் பள்ளிக்கு லீவு போட்டுவிட்டு பூமா அயராமல் உழைத்தாள்.

ஹெல்பேஜ்–இந்தியா வகுத்துக் கொடுத்த திட்டங்களின் படி நகரின் ஒவ்வொரு பள்ளியும், கல்லூரியும் சாந்தி சதனத்துக்கு நிதி திரட்டும் பணியில் பங்கேற்றதில், பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்ததில், நல்லிதயம் படைத்த ஸ்தாபனங்களும், தனிப்பட்டவர்களும் இந்த இல்லத்தின் நோக்கத்தால் ஈர்க்கப்பட்டதில், கணிசமாகப் பணம் சேரத் துவங்கியது.



கட்டிடத்தைக் கட்டும் முழுச் செலவையும் ஹெல்பேஜ் இந்தியா ஏற்றுக் கொண்டு கிட்டத்தட்ட இரண்டு லட்ச ரூபாயை வழங்க முன் வந்ததில், ஆரம்பித்த நாளிலிருந்து தடங்கல் இல்லாமல் கட்டிடம் வளர்ந்தது.

பணம் இருந்தாலும், சாமான்கள் தட்டுப்பாட்டால் கட்டிடத்தின் வளர்ச்சி நின்றுவிடக் கூடாது என்று அபயா க்ளப் முனைப்பாக இருந்தது.

சிமெண்ட் கார்ப்பரேஷனுக்குச் சென்று தேவையான சிமெண்ட்டுக்கும் ஸ்டீல் அதாரிடி ஆஃப் இந்தியா அலுவலகத்திலிருந்து இரும்புக்கும், பெரும்பாடுபட்டு 'கோட்டா' வாங்கினார்கள்.

செங்கல், ஜல்லி, மணல் போன்ற இதர சாமான்களை விவரம் தெரிந்தவர்களின் உதவி, ஆலோசனையுடன் தடங்கல் இல்லாமல் கிடைக்க முன்னேற்பாடாய் வழி செய்தார்கள்.

கட்டிடத்தைத் துவங்கிவிட்ட ஒரு சில நாட்களிலேயே மெம்பர்களை விசேஷமாக பூமா ஒருநாள் கூட்டினாள்.

"நமக்குப் புதுசா இரட்டைப் பொறுப்பு வந்தாச்சு. வாடகை வீட்ல இயங்குற சாந்தி சதனத்தைக் கவனிக்கறது ஒண்ணு, திருவான்மியூர்லே நடக்கற கட்டட வேலையை கவனிக்கறது இன்னொண்ணு. குழப்பம் இல்லாம இரண்டையும் திறமையா எப்படிக் கவனிக்கலாம்னு யோசிச்சதுலே ஒரு வழி தோணி இருக்கு. இன்னிக்கு மொத்தம் எத்தனை பேர் வந்திருக்கீங்க? நூத்திப் பதினாறா? குட்... இப்ப நா சொல்லறதை நீங்க கவனமா கேட்கணும்– வாடகை வீட்டுலே நடக்கற சாந்தி சதனத்தோட தேவைகளை சில பிரிவா நா பிரிச்சிருக்கேன். சமையல், சுகாதாரம், தோட்டம், மருத்துவம், வெளிவேலை. இந்த அஞ்சு பிரிவையும் கவனிக்க மெம்பர்கள் தேவை. யார் யாருக்கு வீட்டை விட்டு வாரத்துக்கு இரண்டு தரம் அடையாறுக்குப் போய் குறிப்பிட்ட

வேலைகளைக் கவனிச்சுட்டு வரது சுலபமோ, அவங்க மட்டும் செல்லாகிட்ட பேரைக் கொடுங்க. இப்படி அரைநாள் போயிட்டு வரதால பெரியவங்க, மத்தவங்ககிட்ட யாருக்காவது திட்டு அல்லது மிஸ் அண்டர் ஸ்டாண்டிங் உண்டாகும்னா அவங்க, தயவு செய்து பேரைக் கொடுக்க வேண்டாம். ஒரு பிரிவுக்கு ஆறு பேர் இப்போதைக்குப் போதும்... யாருக்கு தோட்டத்துலே ஆர்வம் உண்டோ அவங்க தோட்ட க்ரூப், சமையல் ஈடுபாடு உள்ளவங்க சமையல் க்ரூப்னு பேர் கொடுக்கலாம். அடுத்து கட்டிட வேலைக் கண்காணிப்பு. அலைய முடிஞ்சவங்க, வெயில், மழைனு அலைஞ்சா உடம்பு தாங்கக் கூடியவங்க, வீட்டுலே எதிர்ப்பு இருக்காதுன்னு நினைக்கிறவங்க இதுக்கு பேர் கொடுங்க... நாம நினைக்கிற வேகத்துலே கட்டிடம் வளர்ந்ததுன்னா ஆறுமாசத்துக்கு இந்த வேலை இருக்கும்... சிமெண்ட் கார்ப்பரேஷனுக்கு சிமெண்ட் வரலைனா போகணும். செங்கல் வரலைனா சூளைக்குப் போய் பார்க்கணும். ஸைட்டுலே கால் கடுக்க நின்னு மேற்பார்வை செய்யணும். ஆக இது கொஞ்சம் கடுமையான உழைப்புதான். முடிஞ்சவங்க பேர் கொடுங்க. கமிட்டி மெம்பர்ஸூம், நானும் இது எல்லாத்தையும் கவனிச்சுக்கறதோட, புதுசா அட்மிஷன் ஆறவங்களைத் தேர்ந்தெடுக்கறது, பாங்க்குக்கு போய் வரது, பண வசூலுக்காக அலையறதுனு பாக்கி எல்லாத்தையும் கவனிச்சுப்போம்... நீங்க யாரும் உடனே பேரைக் கொடுக்க வேண்டாம், வீட்டுக்குப் போய் நல்லா யோசிச்சுட்டு, உங்க கணவர், மத்த பெரியவங்களையும் கலந்துட்டு, வர்ற புதன் கூட்டத்துலே பேரைக் கொடுத்தா போதும்..."

பூமா எதிர்பார்த்ததைவிட அங்கத்தினர்களின் ஆர்வம் அடுத்த புதன் அன்று அதிகமாகவே இருக்க 'முதலில் பேர் கொடுத்தவர்களைச் சம்பந்தப்பட்ட கமிட்டியில் போட்டுவிடலாம்; ஆறு மாசத்திற்கு இந்தக் கமிட்டிகள் இயங்கட்டும். நம் சொந்தக் கட்டடத்துக்குப் போய் விட்டால் திரும்ப



அத்தனையையும் கலைத்து, புதுசாக எல்லாரும் பங்கெடுக்கும்படி குழுக்களை அமைக்கலாம்' என்று கமிட்டி மெம்பர்கள் தீர்மானித்தார்கள்.

அடையாறு வீட்டுக்கும் சரி, ஸைட்டுக்கும் சரி எந்த அங்கத்தினரும் தனியாகச் செல்லக்கூடாது; இருவராகவோ, அல்லது கூட்டமாகவோ போக வேண்டும். நாளைக்கு 'என் மனைவி தனியாகப் போனாள். ஒரு ரவுடி அவளைத் தொடர்ந்தான்' என்ற அசிங்கமான பேச்சுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று அங்கத்தினர்களின் பாதுகாப்பை மனசில் வைத்துக்கொண்டு பூமா சொல்ல, மற்றவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இலவசமாக வந்த மளிகைச் சாமான்களைத் தவிர தேவையான பால், காய்கறிகளை வாங்கி அன்றாடம் 'மெனு' சொல்லி, வாரத்துக்கு இரண்டுமுறை சாந்தி சதனுக்கு விஜயம் செய்து சமையல் 'டிபார்ட்மெண்டை சமையல் கமிட்டி கவனித்ததுபோல, தோட்டம் சுற்றுப் புறத்தைத் தோட்டக் கமிட்டி, அம்மாக்களின் சுத்தத்தை – வீட்டின் சுகாதாரத்தை ஹெல்த் கமிட்டி, மற்ற பிரிவுகளை இதர கமிட்டிகளும் கவனித்துக் கொண்டதில் எக்கச்சக்கமாய் வேலைகள் இருந்த போதிலும் அத்தனையும் சிறப்பாகவே நடந்து வந்தன.

கட்டிடம் எழும்பி, பத்தடி வளர்ந்து மேலே ஓட்டும் பருவம் வருவதற்குள், வேலையோடு வேலையாய் சென்னை நகரில் நன்றாக நடந்துவரும் மிஷனரி இல்லங்களில் பூமா நிர்வாகத்துக்குத் தேவையான பயிற்சிகளைப் பெறத் தொடங்கினாள்.

நாலுமாசம் முடிந்து செப்டம்பர் பிறந்தபோது கட்டிடம் பூச்சு வேலைக்குத் தயாராக நிற்க, வாடகை இல்லத்தில் இயங்கிய சாந்தி சதனத்து அம்மாக்களின் எண்ணிக்கை பத்தொன்பதாக உயர்ந்தது.

மைதிலி மூலம் வந்த ருக்மணியம்மா, கல்யாணமே பண்ணிக் கொள்ளாமல் டீச்சராய் வாழ்ந்து காலத்தை ஓட்டி தள்ளாத வயதில் உறவுக்காரர் யாரும் இல்லாமல் கஷ்டப்பட்ட மேரியம்மாள்—

கண் முன்னாலேயே இன்னொருத்தியை அழைத்து வந்து ஒரே அறையில் ஒன்றாகக் குடுத்தனம் பண்ணச் சொல்லி அடாவடித்தனம் பண்ணிய புருஷனோடு வாழ இயலாது வீட்டைவிட்டு வெளியேறி நாலு வீடுகளில் பத்துத் தேய்த்துப் பிழைத்துக் காலத்தைக் கடத்திவிட்டு, கண்ணில் சதை வளர்ந்து, வேலை செய்யமுடியாமல் அவஸ்தைப்பட்ட கஸ்தூரி—

இருந்த சொத்தைத் தந்திரமாக எழுதி மாப்பிள்ளை வாங்கிக்கொள்ள, அவனுக்கு உடந்தையாக இருந்ததோடு அல்லாமல் 'உனக்குத் தண்டச் சோறு போட எங்களுக்குக் கட்டுப்படி ஆகாது' என்று தன் ஒரே பெண்ணால் அடித்து விரட்டப்பட்ட வள்ளி ஆச்சி—

சின்ன வயசில் கணவனுக்குச் செய்த துரோகத்தை மனசில் புதைத்து வாழ்ந்து, அவன் இறந்தபின் அது விஸ்வரூபம் எடுத்ததில் லேசாகப் பிரமை பிடித்துப் போய் தனக்குத் தானே முன்பு செய்த தவறைப் புலம்பிக் கொண்டிருந்ததால் பைத்தியக்கார விடுதியில் 'யாருமற்ற அனாதை' என்ற பெயரோடு சேர்க்கப்பட்டு 'இவளுக்குப் பைத்தியமில்லை. ஜஸ்ட் ஹிஸ்டீரியா; அதனால் ஆஸ்பத்திரி வாசம் தேவையில்லை' என்று அனுப்பப்பட்ட செந்தாமரை—

ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் வாங்கினாலும் பெற்றவளை வைத்துக் கொள்ளப் பிடிக்காமல் 'அங்க உனக்குக் குளிர் தாங்காது— நீ வர வேண்டாம்' என்று நிர்தாட்சிண்யத்தோடு சொன்னதும் அல்லாமல், பைசா பணம்கூட அனுப்பாததால் சோத்துக்கும், இருப்பிடத்துக்கும் அல்லாடி



மொட்டைத் தலையை மாசம் ஒரு முறை மழுங்கச் சிரைத்துக் கொள்ள எட்டணா இல்லாமல் தவித்த அம்புலுப் பாட்டி....

இன்னும்... இன்னும்...

ஒவ்வொருவர் பின்னாலும் அசுரத்தனமான கதைகள்...

மார்போடு அணைத்துப் பாலூட்டி, நிலாக் காட்டி, சோறூட்டி, பாட்டுப்பாடி, தாலாட்டி வளர்த்தவளை ஈவு இரக்கமில்லாமல் எட்டி உதைத்த கதைகள்.

சுயநலத்தோடு உருவாகும் இளைய தலைமுறை....

வயோதிகம் அதோ அங்கு காத்திருக்கிறது— ஒவ்வொரு வருஷ முடிவிலும் நம்மை நோக்கி நெருங்கி வருகிறது— அதை வரவேற்க மனசாலும், உடம்பாலும் தயாராக வேண்டும் என்று கடுகளவும் எண்ணாமல் 'என் பெற்றோரை நான் பேணவில்லையா? அதன்படி என்னையும் என் குழந்தைகள் காப்பாற்றுவார்கள். அது அவர்கள் கடமை' என்று காலம் மாறிவிட்டதை உணர மறுத்து, கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாகப் பிடிவாதமாக இருக்கும் முதிய தலைமுறை....

கடவுளே... கடவுளே....

துவக்கத்திலிருந்தே சிறிது தங்களை மாற்றிக் கொள்வதன் மூலம் — தயார் செய்து கொள்வதன் மூலம் — பிற்காலத்தில் பல அடிகள், வலிகள், ஏமாற்றங்கள் விழுவதை, உண்டாவதை தடுத்துவிடலாம் என்பது வயசாகிக் கொண்டு வரும் பெரியவர்களுக்கு ஏன் புரியவில்லை?

விவேகம்... இது என்று நம் நாட்டு மக்களுக்கு இயல்பாக வரும்?

அஞ்ஞானத்தை ஒழிக்க, யதார்த்தத்தை எதிர் நோக்க இவர்கள் எப்போது கற்றுக் கொள்ளப் போகிறார்கள்?...

நிறைய சுயநலத்தோடு உருவாகி வரும் இன்றைய இளைய தலைமுறையினரிடம் மிதிபடாமல் இருக்க எப்போது தங்களைத் தயார் செய்து கொள்ளப் போகிறார்கள்?

முதியோர்களும் தங்கள் எதிர்பார்ப்புகளை மாற்றிக் கொண்டு, சின்ன வயசுக்காரர்களும் பெரியவர்களையும், பெற்றவர்களையும் கைவிடாமல் பேணுவது நமது கலாசாரம், பண்பாடு என்பதை உணர்ந்து விட்டால்... ஆஹா! எத்தனை நன்றாக இருக்கும்?

ஹோஷ் ஹோஷ் என்று வீசிய காற்றால் உடம்பு குளிரத் துவங்க பூமா சட்டென்று தன்னை உலுக்கிக் கொண்டாள்.

மணி என்ன?

இருட்டத் துவங்கிவிட்டதே!

என்ன அசட்டுத்தனம் இது!

தலைக்குமேல் வேலை இருக்கும்போது இப்படி பழைய நினைப்புகளில் அமிழ்ந்துபோய் உட்கார்ந்திருந்தால் எப்படி?

சவுக்கு மரத்தடியை விட்டு எழுந்தவள், ஒருவித அவசரத்துடன் சாந்தி சதன கட்டடத்தை நோக்கி அகல அகலமாகக் கால்களை வைத்த நிமிஷத்தில் கருத்த நீலமாய் ஆர்ப்பரித்த கடலுக்குமேல் ஜகஜகவென்று மஞ்சள் ஒளியுடன் சந்திரன் தலையை நீட்டினான்.

# 22

"அக்டோபர் இரண்டாம் தேதி 'சாந்தி சதனத்தை' திறக்கறது சாத்தியம்னு நீங்க நினைக்கிறீங்களா பூமா? ஹார்ட்லி அனதர் ஒன் மன்த்!"

"கட்டிடத்தைப் பொறுத்தவரை மொஸைக் போட்டாச்சு. வொயரிங் வேலை நடக்கறது. இன்னும் தரை பாலிஷிங்கும், வெள்ளை அடிக்கற வேலையும்தானே பாக்கி?"

"திறக்கற அன்னிக்கே பர்னிச்சர் கிச்சன் சாமான்கள் எல்லாவற்றையும் தயார் பண்ணப் போறோமா, இல்லே மெதுவா ஒண்ணொண்ணா பார்த்துக்கலாமா?"

"ம்?" இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும் முன் பூமா கொஞ்சம் யோசித்தாள்.

"கையிலே இருக்கற பணம் இடம் கொடுத்தா, ஆச்சனு எல்லாத்தையும் முடிச்சுடலாம்னே நா நினைக்கிறேன், வைதேகி. டொனேஷனா வரப்போற சாமான்கள் லிஸ்ட் வைச்சிருக்கீங்களா?"

வைதேகி புத்தகங்களைப் புரட்டிவிட்டு 'இருக்கிறது' என்றாள்.

"கொஞ்சம் படிங்களேன், கேக்கலாம்..."

'லக்ஷ்மி மில்ஸ்– கோயம்புத்தூர், பாதி விலைலே பெட்ஷீட்டுகள்; கனரா பாங்க் ஆறு ஸீலிங் பேன்ஸ், அம்பத்தூர் லயன்ஸ் க்ளப் இரண்டு வீல் சேர்கள், தஞ்சாவூர் ரோட்டரி க்ளப் பத்து கட்டில்கள், சேலம் வொயிஸ்மென் அஸோஸியேஷன் எட்டு கப்போர்ட்ஸ், மெட்ராஸ் பர்னிஷிங் ஹவுஸ் பாதி விலையில் கட்டில்கள். ஸாலிடேர் டி.வி.

கம்பெனி ஒரு டி.வி.... இதைத் தவிர தனிப்பட்ட நபர்கள் நிறைய சாமான்களைக் கொடுக்க முன் வந்திருக்காங்க... புடவைகள், பாத்திரங்கள், இட்லி அரைக்கிற மிஷின், படுக்கைகள், சாப்பாட்டுத் தட்டுக்கள், ரேடியோ, வால் க்ளாக், அரிசி நாலு மூட்டைகள். ரீபைண்ட் ஆயில்.... எட்ஸட்ரா..."

"வெரி குட்.... எனக்கு என்னமோ இவற்றை வைச்சுக் கிட்டே திறப்பு விழாவை ஓரளவுக்குச் சமாளிச்சிடலாம்னு தோணறது... இப்ப நம்ப கிட்ட எத்தனை அம்மாக்கள் இருக் காங்க? பத்தொன்பதா? இலவசமா வர்ற கட்டில்கள், அல மாரிகளை வாங்கிக்கிட்டு மேற்கொண்டு தேவையானதை அரை விலைலே ஆர்டர் கொடுத்திடலாம். கிச்சன், மத்தது லேயும் இப்படி போதாததுக்கு மட்டும் வாங்கிடலாம்.... ஒரே கடைலே துணி, பர்னிச்சர்களை ஆர்டர் பண்ணிட்டு டோனர் களுக்கு பில் அனுப்பிச்சு பணத்தை வாங்கினா, யூனிஃபார் மிடி கிடைக்கும்...."

"தோட்டம் போடத் தேவையான செடிகள், மரக் கன்றுகளைக் கொடுக்க ஒரு நர்ஸரி ரெடியா இருக்கு; மண் வெட்டி, கடப்பாரை வாளிகளைக் கூட ஒரு ஹார்ட்வேர் கடைக்காரர் தர முன் வந்திருக்கார் பூமா...."

நன்கொடையாக வந்து குவியும் சாமான்களையும், பணத்தையும் காண்கையில், பூமாவுக்கும் இதர மெம்பர் களுக்கும் ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

நாட்டில் தான தர்ம உணர்வுகள் குறைந்துவிட்டன என்று யார் சொன்னது?

ம்ஹூம் இல்லை... இல்லவே இல்லை....

நல்ல மனசு படைத்தவர்கள் இன்னும் நிறையப்பேர் இருக்கவே செய்கிறார்கள்.

இல்லாவிட்டால் இப்படிச் சாமான்களும், பணமும் வந்து குவியுமா?



"முக்கியமான விஷயத்தை விட்டுட்டு நாம பாக்கி எல்லாம் பேசிட்டு இருக்கோமே பூமா."

என்ன அது என்பது போல பூமா புருவங்களைத் தூக்கினாள்.

"அக்டோபர் ஸெகண்ட் இனாகரேஷன் செய்யறது தீர்மானம்தானா?"

"முடிஞ்சா அன்னிக்கு வைச்சிக்கறதுலேதான் எனக்கு இஷ்டம்... காந்தி ஜெயந்தி வேணும்னா இன்னொரு வருஷம் இல்லே காத்திருக்கணும்..."

"சரி, உங்க விருப்பம்தான் எங்களுக்கும்... அன்னிக்கே இனாகரேட் பண்ணிடலாம்... ஆனா, பூமா, யார் வந்து திறக்கப் போறாங்க? அதைத் தீர்மானம் பண்ணறது முக்கியம் இல்லியா?"

"நீங்க யாரைச் சொல்றீங்க?"

பூமா மற்றவர்களைக் கேட்க, சுமதி "ப்ரைம்மினிஸ்டர்" என்றாள், அவசரமாக.

"மிஸஸ் இந்திரா காந்தியா? அவங்க இந்த மாதிரி சின்ன ஹோமுக்கெல்லாம் வருவாங்களா?" நஸிமா சந்தேகப் பட்டாள்.

"வொய் நாட்? நிச்சயம் வருவாங்க– ஆனால் அதுக்கு டைம் வேணும்... இப்படி ஒரு மாச அவகாசத்துலே அவர்களைக் கூப்பிட முடியாது..."

"முதல் மந்திரி, பிரஸிடெண்ட் இவங்க ப்ரோக்ராம் எல் லாம் பல மாசங்கள் முன்னாலியே தீர்மானமாற விஷயம். எனக்குத் தெரிஞ்ச ஓர் இடத்துலே பிரஸிடெண்ட் ஆஃப் இண்டி யாவை கூப்பிட்டாங்க... அவரும் நல்ல காரியம்ன்றதால வர

ஒப்புக்கிட்டார். அதுக்கப்புறம்தான் செமை வேலை ஆரம்பிச்சுது... பிரஸிடெண்ட் கலந்துக்குற நிகழ்ச்சின்ற தால முன்கூட்டியே ஒவ்வொரு நிமிஷத்தையும் கரெக்டா குறிச்சுக் கொடுத்திடணும். செக்யூரிடி ஏகமாய் இருக்கும். 'இங்க மேடை போடுங்க, இப்படி வாசல் வையுங்க, வழி இங்க போடுங்க'னு அவங்க சொல்றதைத்தான் கேட்கணும். மொத்தத்துலே எத்தனைக்கெத்தனை பெருமையோ அத்தனைக்கத்தனை டென்ஷனும் உண்டு... ப்ரைம் மினிஸ்டர் வர்றதுனாக்கூட இத்தனை கெடுபிடியும் இருக்கும்."

"சரி... நம்ப சீஃப் மினிஸ்டரைக் கூப்பிட்டா என்ன? நல்லவர்... இந்த மாதிரி காரியங்களிலே ஆத்மார்த்தமா ஈடுபாடு உள்ளவர்...."

இரண்டு நிமிஷங்களுக்கு யாரும் ஏதும் பேசவில்லை. பூமா நிமிர்ந்து ஒவ்வொருவரையும் பார்த்தாள்.

"என்ன பூமா?"

"ஒண்ணுமில்லே... எனக்கு என்னமோ இந்த பங்ஷனை அரசியல் கலப்பே இல்லாம நடத்த ஆசை.... அரசியல்லே ஏகப்பட்ட பார்ட்டிகள் இருக்கு. ஒரு தலைவரைக் கூப்பிட்டுட்டு இன்னொரு தலைவரைக் கூப்பிடலைனா வீண் மனஸ்தாபம் வரும்...."

"அப்ப வி.ஐ.பி. ஒருத்தருமே வேண்டாம்னு நினைக்கறீங்களா பூமா? நமக்குள்ளேயே இதையும் நடத்திடலாம்னா சொல்றீங்க?"

ஈஸ்வரியின் குரலில் ஏமாற்றம் கலந்திருப்பது தெளிவானது.

"நா மனசுலே நினைச்சிருக்குற வி.ஐ.பி. வந்தார்னா அதை நம்ப அதிருஷ்டமாதான் நா நினைக்கிறேன்." மெது வாகப் பேசின பூமா, சில கணங்கள் நிறுத்திவிட்டு இன்னும் மெதுவாக "மதர் தெரிஸா" என்றாள்.



INDRA LENDING LIBRARY
162, Gounderpalayam Road,
Edayarpalayam,
COIMBATORE-641 025

மதர் தெரிஸாவா?

மை காட்! எத்தனை பொருத்தமான நபர்?

வருவாரா?

'அம்மா எங்கள் இல்லத்தைத் திறந்து வைக்க வாருங்கள்' என்றால் வருவாரா?

வரவேண்டுமே....

வந்தால் ரொம்ப நன்றாக இருக்குமே....

செல்லா எழுந்து சந்தோஷத்தோடு பூமாவின் கைகளைப் பற்றிக் குலுக்கினாள்.

"பென்டாஸ்டிக்! ஒரு பூமாகிட்ட நாங்க யாருமே நெருங்க முடியாதுனு நா நினைக்கறது இதனாலதான்! எத்தனை உயர்வான எண்ணம்! மதர் தெரிஸா– கையால் சாந்தி சதன் இனாகரேஷன்... ஓ! ப்யூட்டிஃபுல்... வேற பேச்சே வேண்டாம் என்ன, லேடீஸ்?"

"நீங்க அவசரப்பட்டு ரொம்ப சந்தோஷப்படறீங்க, செல்லா... மதர் தெரிஸா வரணும்னு நா ஆசைப்படறதா சொன்னேனே தவிர அவர் வந்திடுவார்னு நிச்சயமா சொல்லலையே."

"ஓ.கே... யாரைக் கேட்கணும்? கல்கத்தாக்கு நேரே போய் கூப்பிடணுமா? நா ரெடி.... சொந்தச் செலவிலே போய் வர, நா ரெடி...."

"இருங்க.... இறக்கை கட்டிக்கிட்டு கல்கத்தாக்கே பறந்து போய்டுவீங்கபோல இருக்கே... நாலு நாளா இதே யோசனை யிலே இருந்ததால மதர் தெரிஸாவோட 'மிஷினரீஸ் ஆஃப் சாரிடீஸ்' இங்கே ராயபுரத்துல ஹோம் நடத்தறாங்க. அங்கே தொடர்பு கொண்டு விசாரிச்சேன். 'கமிட்டி பிரஸிடெண்டை சந்திச்சா எல்லா விவரமும் சொல்லுவாங்க'னு சொன்னாங்க.

அவங்களை மீட் பண்ணி நம்ப ஹோம் பத்தின விவரங் களைச் சொல்லி, மதரை வரவழைக்க முடியுமானு கேட்டா தான் நிச்சயமா எதுவும் சொல்ல முடியும்..."

"அப்ப, வாங்க அந்த பிரஸிடெண்டைப் போய்ச் சந்திக்கலாம்....'

கமிட்டி மெம்பர்கள் பூமாவைவிட அதிகமாய் துடிக்க அப்பாய்ண்மெண்ட் வாங்கிக் கொண்டு சம்பந்தப்பட்ட வரை அன்றே சந்தித்து, தங்கள் விருப்பத்தை வார்த்தைகளில் தெரிவித்து, மிகவும் வேண்டிக் கொண்டு ஒரு கடிதத்தையும் மதருக்கு அனுப்புமாறு கொடுத்தார்கள்.

அன்றிரவு தம் தம் கணவரோடு இது விஷயமாகப் பேசிவிட்டு, அவர்கள் உற்சாகம் கொடுத்ததன் விளைவாக செல்லாவும், சுமதியும் கடிதத்தின் இன்னொரு பிரதியோடு, கல்கத்தாவுக்கு விமானத்தில் சென்று, மதரைச் சந்தித்தார்கள்.

என்ன சொல்லி மதரின் மனசைக் கவர்ந்தார்களோ, அல்லது அனாதைப் பெண் முதியோர்களுக்காக ஆரம்பிக்கப் படும் இல்லம் என்பதால் மதர்தான் ஈர்க்கப் பட்டாரோ இரண்டாம் நாள் திரும்பி வந்தவர்களின் முகங்களில் மதர் தெரிஸா தந்துவிட்ட சம்மதம் ஏகமாய வெளிச்சம் போட்டிருந் தது.

மதர் தெரிஸாவா?

சென்னையில், ஒரு மூலையில் இயங்கப் போகும் இல்லத்தைத் திறக்க வருகிறாரா?

நிஜமாகவா?

அபயா சாரிடி க்ளப் இந்த சாதனையைச் செய்யப் போகிறதா?



நிஜமாகவா?

எண்ணி நாலு நாட்கள் செல்வதற்குள் சென்னையில் இந்தச் செய்தி பரவிப்போக கண்மூடித் திறக்கும் நாழிகையில் அபயா சாரிடி க்ளப், சாந்தி சதனம் ஓஹோ என்று விளம் பரப்படுத்தப்பட்டன.

இன்னும் இருபத்து எட்டு நாட்கள். அதற்குள் கட்டிட வேலை துப்புறவாக முடியவேண்டும். கட்டில், மெத்தை, பீரோக்கள், இதர பர்னிச்சர்கள், கிச்சன் சாமான்கள் வந்து இறங்க வேண்டும். இன்விடேஷன்கள் அச்சடிக்கப்பட வேண் டும். யார் யாரை அழைக்க வேண்டும் என்ற லிஸ்டைத் தயாரித்துக் கூப்பிட வேண்டும். மதர் தெரிஸாவை மரியாதை யுடன் வரவேற்று அழகாக விழாவை நடத்த வேண்டும்.

பூமாவும் மற்றவர்களும் இரவு பகல் என்று பார்க்காமல் அலைந்து காரியங்களைக் கவனித்தார்கள்.

காண்ட்ராக்டரும், மேஸ்திரியும் இருபத்து நாலு மணி நேரமும் ஆட்களை ஷிப்டில் வேலை வாங்கி, சொன்னபடி இருபது நாட்களில் கட்டிடத்தைப் பூர்த்தி செய்து கொடுத்ததும் உள் அலங்காரத்தில் அங்கத்தினர்கள் இறங்கினார்கள்.

டோனர்களிடம் சென்று சாமான்களைச் சேகரித்து வந்து அந்தந்த இடங்களில் போட்டார்கள். கட்டில்கள், படுக்கைகள், விரிப்புகள், சின்ன மேஜைகள், சமையல் கட்டு சாமான்கள், வீல் சேர்கள் — என்று ஓடி ஓடி வாங்கி வந்து இல்லத்தை அலங்கரித்தார்கள்.

மின் விசிறிகள், விளக்குகளை மாட்டி, டி.வி. ரேடி யோவை கூடத்திலும், மாவு அரைக்கும் மிஷினை பின் வராந்தாவிலும் பொருத்தினார்கள்.

ஆபீஸ் அறைக்குப் பக்கத்து அறையில் சின்ன டிஸ்பென்ஸரியை உருவாக்கினார்கள்.

கூடத்துச் சுவரில் ஒரு பக்கம் காந்திஜி, கஸ்தூரிபா, இன்னொரு பக்கம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், அன்னை சாரதாதேவி, எதிர்ப்பக்கம் மதர் தெரிஸா படங்களை மாட்டினார்கள்.

பூஜை மண்டபத்தில் அன்பர் ஒருவர் கொடுத்த வெண்கலக் குத்து விளக்கை வைத்தார்கள். பின் சுவரில் 'தீப மங்கள ஜோதி நமோ நம' என்று பெயிண்ட்டால் எழுதினார்கள்.

வாசல் கேட்டிலிருந்து படிகள்வரை குரோட்டன்ஸ் தொட்டிகளை வரிசையாய் வைத்தார்கள்.

நன்கொடையாய் வந்தவை தவிர, காசு கொடுத்து வாங்கினவை போக, தேவைப்பட்ட அனைத்து சாமான்களை யும் அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வந்து, குறை எதுவும் இல்லாமல் மெம்பர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

அழைப்பிதழ்களை அனுப்ப வேண்டியவர்களுக்கு முன் னரே அனுப்பிவிட்டாலும், மதிப்பிற்குரிய அம்புஜம்மாள், சரோஜினி வரதப்பன், தாரா செரியன், ரெஜினா வின்ஸண்ட், லிட்டில் ஸிஸ்டர் ஆஃப் த புவர், மதர் ஸுப்பீரியர், கில்ட் ஆஃப் ஸர்வீஸ் மெம்பர்கள் என்று மகா சிரத்தையுடன் சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும் நபர்களை எல்லாம் நேரடியாக பூமாவும், கமிட்டி மெம்பர்களும் சென்று சந்தித்து விழாவுக்கு அவசியம் வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

ஹெல்பேஜ்– இந்தியாவுக்கும், பணத்தையும் சாமன்களை யும் வாரிவாரிக் கொடுத்த ஒவ்வொரு நபருக்கும் விசேஷ அழைப்பை அனுப்பி கண்டிப்பாய் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.



இதனடுவில் வாரத்துக்கு ஒருமுறை அம்மாக்களை செக் அப் செய்ய வந்து போக டாக்டர் சங்கரனை நியமித்தார்கள். டெலிபோன் இலாகாவில் சொல்லி இல்லத்துக்கு போன் வசதி செய்தார்கள்.

அப்புறம்...

அப்புறம் என்ன?

சென்னைவாசிகள் மூக்கில் விரலை வைக்கிற அளவுக்கு நறுவிசாக அத்தனை காரியங்களையும் சிறப்பாகச் செய்தார் கள்.

அக்டோபர் இரண்டு...

காந்தி ஜெயந்தி.

வெயில் தெரியாமல் இருக்கப் பந்தல்... அதன் துவக்கத்தில் தலை அசைத்து வரவேற்ற வாழை மரங்கள். வரிசை வரிசையாய் போடப்பட்ட நாற்காலிகள். சின்னதாய் மேடை, கலர்க் கலராய்ச் சிரித்த தோரணங்கள். அடங்கி ஒலித்த நாதஸ்வர இசை...

இத்தனை வருஷங்களாய் உணராத சந்தோஷம் கண்களில் கொப்பளிக்க, புதுப் புடவையில் பூரித்து நின்ற அம்மாக்கள்...

இமாலய சாதனையாக ஒன்றை நடத்தி இருந்தாலும் 'நாங்கள் எதுவும் பெரிசாய் செய்து விடவில்லை, சாதிக்க இன்னும் எத்தனையோ உள்ளன' என்று அடக்கத்தோடு நின்ற அபயா சாரிடி க்ளப் அங்கத்தினர்கள்.

குறிப்பிட்ட நேரத்தில், மணி அடித்ததுபோல மதர் தெரிஸா வந்தார்.

தென்றலில் ஆடும் வெள்ளை ரோஜா மலராய்...

உலகத்தில் உள்ள அன்பையெல்லாம் தன் கண்களில் ஏந்திக் கொண்டவராய்...

இந்தப் பிறவிக்குப் பயன் உங்கள் அனைவருக்கும் சேவை செய்வதுதான் என்று உணர்த்துபவராய்...

முகமெல்லாம் புன்சிரிப்பாய்... அன்பின் உருவமாய்... கருணையின் வடிவமாய்... பரிவின் ஒளியாய்...

லட்சோப லட்சம் ஏழைகளை அணைத்து இதம் தந்த கையால் மதர் தெரிஸா குத்துவிளக்கை ஏற்றி, சாந்தி சதனத்தைத் துவக்கி வைத்த நிமிஷத்தில், இனி 'என்ன செய்வோம் என்ற அவஸ்தை இல்லை, துடிப்பு இல்லை, உறுத்தல் இல்லை... எல்லாம் நிம்மதிதான்... அமைதிதான்...' என்ற நினைப்பு எழ, அது தந்த சுகத்தை அனுபவிப்பது போல பூமா ஒரு வினாடி கண்களை மூடிக் கொண்டாள்.

## 23

"ஹலோ கேன் ஐ ஸ்பீக் டு டாக்டர் விவேகானந்தன் ப்ளீஸ்?"

"ஸ்பீக்கிங்."

"குட்மார்னிங் டாக்டர்... அபயா சாரிடி க்ளப் பிரஸிடெண்ட் பூமா பேசறேன். காலை வேளைல டிஸ்டர்ப் பண்ணறத்துக்கு மன்னிக்கணும்... நீங்க ஏழரைக்கு ஹாஸ்பிடல் போயிட்டீங்கன்னா, சாயங்காலம்தான் திரும்புவீங்க, அதான்..."

"நோ நோ... ஒரு தொந்தரவும் இல்லே... நானே உங்களுக்கு போன் பண்ணணும்னு இருந்தேன்— முந்தாநாள் உங்க இனாகரேஷன் விழா ரொம்ப நல்லா



நடந்ததுங்க... மதர் தெரிஸாவைக் கொண்டு ஹோமைத் திறந்தது உண்மையிலேயே பெரிய விஷயம்... கங்க்ராட்ஸ்..."

"தாங்க்யூ டாக்டர். எல்லாம் உங்களை மாதிரி நல்லவங்களோட ஆசீர்வாதம். விழாவுக்கு நீங்க வந்ததுக்கு நன்றி... கூட்டம் அதிகமாக இருந்ததால யாரையும் தனிப்பட்ட முறையிலே கவனிக்க முடியலை...."

"எதுக்காக கவனிக்கணும்? நாங்க எல்லாருமே பெருமைப்படற, பங்கெடுக்க விரும்புற பங்ஷன் ஆச்சே அது?"

"தாங்க்ஸ் அகெய்ன் டாக்டர்.... இப்ப நா உங்ககிட்டே இரண்டு நிமிஷம் பேசலாமா?"—

"தாராளமா... என்ன விஷயம்? எனி ப்ராப்ளம்?"—

"ப்ராப்ளம் ஒண்ணும் இல்லே... அம்மாக்கள் டயட் விஷயமா உங்ககிட்டப் பேசலாம்னுதான்... எல்லோரும் வயசானவங்க.... சத்தான, அதே சமயம் சுலபமா ஜீரணம் ஆற உணவா கொடுக்கறது அவசியம்... இரண்டு நாளா ஹோம் இனாகரேஷன், அப்புறம் வர்றவங்க கொண்டு வந்ததுனு, கட்டுப்பாடு இல்லாம, ஸ்வீட்ஸ் அப்பளம்னு சாப்பிட்டதாலேயோ என்னமோ, நாலைஞ்சு பேருக்கு டயரியா மாதிரி போறது. எங்க ஹோம் டாக்டர் நேத்து ராத்திரி வந்து பார்த்து மருந்து கொடுத்திருக்கார். இனி மேல டயட்லே கண்டிப்பா இருக்க உத்தேசம்... எனக்குத் தெரிஞ்ச டயடீஷன் ஒருத்தரை முன்னே கேட்டேன். காலைல கஞ்சி, மதியம் ரெகுலர் சாப்பாடு, இரவு லைட்டா இட்லி, தோசைனு டிபன் கொடுங்கனு சொன்னார். எதுக்கும் உங்களையும் ஒரு வார்த்தை கேட்டிடலாமேனு நினைச்சேன். கிட்டத்தட்ட ஆறு மாசமா எங்க இன்மேட்ஸுக்கு நாங்க இந்த ரீதிலேதான் சாப்பாடு கொடுக்கிறோம். புதுசா ஏதாவது சேர்க்கணுமா? நீங்க ப்ரீயா இருந்தா நா வந்து உங்களைச் சந்திக்கட்டுமா டாக்டர்?"—

'ம்ம்?... இன்னும் ஒரு மணி நேரத்துலே பெங்களூருக்கு நா புறப்படணும். அங்கே ஒரு கான்பரன்ஸ்... மூணு நாளாகும் திரும்ப... வேணா போன்லேயே சொல்றேன். குறிச்சிக்றீங்களா?''

''தொந்தரவு இல்லையே டாக்டர்?''

''நந்திங். காலைல காபி வேணாம்... வயசானவங்களுக்கு டீதான் பெட்டர். ஆறு மணிக்கு கொடுத்திடுங்க... அப்புறம் எட்டு மணிக்கு பாரீட்ஜி— அதாவது கஞ்சி— கொடுங்க... கோதுமை, ராகி, பார்லி, புழுங்கல் அரிசி, பச்சைப் பயிறு, பொட்டுக் கடலை எல்லாத்தையும் சம அளவுலே போட்டு வறுத்து நைஸா அரைச்சு வைச்சிக்கிட்டு வெல்லம் போட்டு கெட்டிக் கஞ்சியா காச்சிடுங்க. பால் கலந்து ஆளுக்கு ஒண்ணரை இரண்டு டம்ளர் கொடுத்தீங்கன்னா கம்முனு இருக்கும். வயறும் ரொம்பும். தெம்பாவும் இருக்கும். பன்னிரண்டு மணிக்கு உங்க வழக்கப்படி சோறு, சாம்பார், காய்கறி, மோர் கொடுங்க. நாலு மணிக்கு டீ... இதுகூட பொரி, பொட்டுக்கடலை கலந்து தரலாம். ராத்திரி நேரத்துலே வயசானவங்க சோறு சாப்பிடாம இருக்கறது பெட்டர். என்னைக் கேட்டா தோசை கூட வேணாம், இட்லி மட்டும் போதும்னு சொல்வேன். அஞ்சு இட்லி, முடிஞ்சா சட்னி அல்லது சாம்பாரோட கொடுங்க... இரண்டு நாளைக்கு ஒரு தரம் ஏதாவது ஒருவகைக் கீரை சேருங்க... பைல்ஸ் மூலம் கஷ்டம் இல்லாம இருக்க இது உதவும்...''

''ஹோமுக்கு வரவங்க பிஸ்கெட், ஸ்வீட்ஸ், பழங்க கொண்டு வந்தா கொடுக்கலாமா, டாக்டர்?''

''வாழைப்பழம், பிஸ்கெட் கொடுக்க அனுமதிக்கலாம். ஸ்வீட்ஸ் கண்டிப்பா வேணாம்.... மாம்பழம், கொய்யா, பலா வேணாம். சாத்துக்குடி பரவாயில்லை. இதுகூடச் சிலருக்கு சளிகட்டும்... எல்லாரும் அறுபத்து அஞ்சு வயசுக்கு மேல ஆனவங்க... கண்டதைத் தின்னா, நிமிஷமா டயரியா வந்திடும்.



வி ஹாவ் டு பீ கேர்ஃபுல்... நீங்க கண்டிப்பா இருக்கறதை நா வரவேற்கிறேன்....''

டாக்டருக்கு நன்றி சொல்லிவிட்டு தொடர்பைத் துண்டித்தவள் குறிப்புகளைப் பத்திரமாகக் கைப்பையில் வைத்தாள்.

ரொம்ப அசதியாக இருக்க நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

எல்லாம் எதிர்பார்த்ததைவிட அமோகமாகத்தான் நடந்து விட்டன.

ஊரில் ஒரு பத்திரிகை பாக்கியில்லாமல் மதர் தெரிஸா வந்ததும் ஹோமைத் திறந்ததும் செய்தியாக வெளியிட்டு விட்டன.

டி.வி.யில் கூட நிகழ்ச்சியை ஒளிபரப்பி விட்டார்கள்.

இரண்டு நாட்களுக்குள் இந்த விளம்பரங்களால் விசாரணைகள் ஏகமாய் அதிகரித்து விட்டன.

நேற்று ஒரே நாளில் எட்டு அம்மாக்களைச் சேர்க்க விண்ணப்பங்களோடு உறவினர் வந்து விட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், எட்டுப் பேரில் ஏழு பேர் ஜெனுயின் கேஸ் இல்லை. ஆரோக்கியமாக உழைத்துச் சாப்பிடக்கூடிய அம்மாக்கள் நாலுபேர்... அனாதை என்று பெற்றவளையே பொய் சொல்லி தள்ளப் பார்த்த கேஸ் ஒன்று; உள்ளூரில் மகள் இருக்கிறாள், மருமகனுக்குக் கை நிறையச் சம்பளம்; குறை ஒன்றும் இல்லை. தங்கமாகத் தாயை வைத்துக் கொள்ள அவர்களும் ரெடி, ஆனால் ஏதோ வீம்பில் இல்லத்தில் சேர வந்துவிட்ட அம்மாக்காரி ஆறாவது கேஸ். ஏழாவது கேஸ் முத்தின கான்ஸர் ஆசாமி. ஆஸ்பத்திரியில் சேர வேண்டியவர். ஆக, எட்டில் ஒன்றுதான்

தேறினாலும் இவர்களோடு பேசி, அலசி உண்மையை வரவழைப்பதற்குள் பகல் முழுவதும் ஓடிவிட்டது.

ஓயாமல் ஒலித்த போனுக்குப் பதில் சொல்லிக் கொண்டு ஒரு நடை திருவான்மியூருக்குப் போய் வந்து, நன்றி சொல்ல வேண்டியவர்களுக்குச் சொல்லி, இடையில் தேர்வுக்கு வந்த அம்மாக்களையும் கவனித்து முடிப்பதற்குள் பூமா ஓய்ந்துதான் போனாள்.

சீக்கிரம் படுத்துவிடலாம் என்று நினைத்தும் நடக்க இயலாதபடி மாலை ஏழு மணிக்கு திலகா போன் செய்தாள்- மூன்று அம்மாக்களுக்கு பேதி என்று.

செல்லாவோடு பேசி, டாக்டரை அவள் காரில் சாந்தி சதனத்துக்கு அழைத்துச் சென்று வருவதற்குள் இரவு மணி பத்து என்றது.

படுத்து ரொம்ப நேரம் ஆகியும் பூமாவால் ஏனோ உறங்க முடியவில்லை.

முந்தின தினமும் இப்படித்தான்.

விழா முடிந்து ஆடி, ஓடிக் களைத்துப் படுத்ததும் தூக்கம் வரவில்லை. மனசுக்குள் ஏனோ ஒரு முழுமை இல்லை. சரி அலைச்சல், அதுதான் இந்த உணர்வு என்று ஒதுக்கி விட்டாள்.

முந்தா நாள் அலைச்சல்.... சரி... நேற்று என்ன?

என்னமோ ஓர் உறுத்தல்....

என்னமோ சின்னதாய் ஒரு சூன்யம்...

செய்தது போதாது என்ற அதிருப்தி...

உறுத்தலா?



சூன்யமா?

அதிருப்தியா?

இன்னுமா?

அனாதை அம்மாக்களுக்காக இந்தியாவில் இந்த ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் இல்லம் என்று பேர் வாங்கியாகி விட்டது.

ஆனானப்பட்ட மதர் தெரிஸாவே வந்து இனாகரேட் பண்ணியாகிவிட்டது.

ஊரே 'ஆஹா' என்று புகழ்கிறது.

அப்புறம் என்ன?

சாதாரணப்பட்டவர்களால் இதைவிட இன்னும் என்ன பெரிசாய் சாதித்து விட முடியும்?

இதைவிட அருமையான சேவை இன்னும் இருக்கிறதா என்ன?

இத்தனை செய்தும் ஒரு முழுமை இல்லை, திருப்தி இல்லை என்று உள்ளுக்குள் என்னமோ முனகுகிற மாதிரி இருந்ததே ஒழிய, இந்த உணர்வு எதனால் என்று குறிப்பாகப் பூமாவால் ஆணி அடிக்க முடியவில்லை.

என்ன இது!

ஏன் இந்த உறுத்தல்?

நினைக்க நினைக்க குழப்பம் அதிகரிக்க, முடிவில் அயர்ச்சி ஆளை அடிக்க, தன்னையும் அறியாமல் காலை மூன்று மணி வாக்கில் உறங்கினதில் இப்போது இந்த காலை வேளையில் தலைவலி ஆளைக் குடைந்தது.

உட்கார்ந்திருந்தால் எப்படி?

வரிசையாய் செய்ய வேலைகள் எவ்வளவு இருக்கின்றன?

தாயியை சூடாக அரை டம்ளர் காபி கொண்டு வரச் சொல்லி ஒரு மெடாஸினை விழுங்கி விட்டு, பூமா எழுந்தாள்.

முதலில் சாந்தி சதனத்துக்குப் போன் செய்து அம்மாக் களின் வயிற்றுப் போக்கு எப்படி இருக்கிறது என்று விசாரித்தாள்.

கிச்சன் கமிட்டித் தலைவி கங்காவை எட்டு மணிக்கு வீட்டுக்கு வரச் சொல்லி, டாக்டர் விவேகானந்தன் தந்த டயட் குறிப்புகளை அவளிடம் தந்து 'மத்த மெம்பர்கள் கிட்ட இது பத்திப் பேசிட்டு, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ ஆரம்பிச் சிடுங்க' என்றாள்,

ஒன்பது மணிக்கு வந்த வைதேகியோடு அமர்ந்து கணக்கு வழக்குகளைப் பார்த்தாள்.

பத்தரைக்கு சுமதி கார் கொண்டுவர திருவான்மியூருக்குப் போய் அங்கு ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்து அம்மாக்களோடு அமர்ந்து சாப்பிட்டு, அவர்கள் குறை, நிறைகளைக் கேட்டு, சமாதானம் சொல்லியபின் இரண்டரை சுமாருக்கு வீட்டுக்கு வந்தாள்.

தலைவலி அதிகமாகி ஜுரம் வருகிற மாதிரிகூடத் தோன்றியது.

இன்னொரு மாத்திரையைப் போட்டுக் கொண்டு படுத்து பத்து நிமிஷங்கள் ஆகியிருக்கும்... போன் அடித்தத

லட்சுமி எடுத்துப் பேசிவிட்டு மெல்ல அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"தூங்கறீங்களா?"

"இல்லே—என்ன?"



"பாரதி சிவலிங்கம் பேசறாங்க.... உங்க கிட்டப் பேசணுமாம்..."

பூமா எழுந்து ரிஸீவரை எடுத்து 'ஹலோ' என்றாள்.

விழாவை வெகுவாகச் சிலாகித்துப் பாராட்டிய பின், "ஒரு அம்மா இருக்காங்க பூமா. அவங்களைச் சாந்தி சதன்லே சேர்க்கறது சம்பந்தமா உங்ககிட்டப் பேசணும்" என்றார்.

பூமா விவரங்களைக் கேட்டாள்.

"அந்தம்மாவை பர்ஸனலா எனக்குத் தெரியாது. ஆனா எங்க சித்திக்குத் தெரியும்– அவங்க பேர் சரோஜினி– வசதியா வாழ்ந்தவங்க. ஒரு பிள்ளை ஒரு பெண்... கணவர் ஆக்ஸிடெண்ட்லே போயி பத்து வருஷம் ஆச்சாம். சொத்து பிரிக்கறப்ப மேரீட் டாட்டருக்கும் பிள்ளைக்கும், சண்டைவர பெண் 'இனிமே உங்க முகத்துலே நா விழிக்க மாட்டேன்'னு சத்தியம் பண்ணிட்டுப் போயிட்டாளாம். பிள்ளை ஒரு என்ஜினீயர். இரண்டு வருஷம் முன்னால லண்டன்லே நல்ல வேலை கிடைச்சதால அதை ஒத்துக்கிட்டு இங்க இருக்கிற சொத்தையெல்லாம் வித்து காசாக்கி தன்பேர்ல பேங்குல போட்டுட்டு, மனைவியையும் டிபெண்டெண்ட்டுனு அம்மாவையும் கூட்டிக்கிட்டு அங்க போயிட்டான். போன வருஷம் நீச்சல் குளத்துலே குளிக்கிறப்ப ஏதோ கோணா மாணானு விபத்து ஆகி பையன் திடீர்னு தவறிட்டான். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி கொடுத்த நஷ்ட ஈடு பணத்தோட மருமகள் பேரன்களோட சரோஜினி இந்தியாவுக்குத் திரும்பி வந்திருக்காங்க.... மருமக நல்லவதான்... ஆனா அவளைப் பெத்தவங்க பயங்கரமானவங்க– கொஞ்ச கொஞ்சமா மகளை ப்ரெயின் வாஷ்பண்ணி இருக்காங்க 'உன் மாமியார் சொத்துக் காகத்தான் சொந்தம் கொண்டாடறாங்க'னு அவங்க சொன்னதை நம்பி, 'பிள்ளை செத்தப்புறம் எங்ககூட என்ன உறவு? பெண்ணுக்கிட்டப் போ'னு வீட்டை விட்டு மருமக விரட்டிட்டா... ரோஷக்காரி சரோஜினி. டில்லிலே இருக்குற

பெண்ணுகிட்டே போகாம இங்கியே சிவா விஷ்ணு கோயில்லே மடப்பள்ளிச் சாப்பாட்டைச் சாப்பிட்டுக்கிட்டு பழியா கிடந்தப்ப, எங்க சித்தி பாத்துட்டாங்க... கதை பூராவும் தெரிஞ்சுக்கிட்டு என் வீட்டுக்குக் கூட்டி வந்திருக்காங்க. எனக்கு உங்க சாந்தி சதன் ஞாபகத்துக்கு வந்தது.... உடனே போன் பண்ணறேன்."

மாலை ஆறு மணிக்குமேல் அவர் வீட்டுக்கு வந்து சரோஜினியைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு பூமா போனை வைத்தபோது நமநமவென்று உள்ளுக்குள் எரிச்சல் மூண்டது.

என்ன குழந்தைகள் வேண்டி இருக்கிறார்கள் என்று கோபம் கலந்த ஆயாசம் எரிச்சலுக்குத் தூபம் போட்டது. படித்த பெண், கணவன் சம்பாதிக்கிறான். சொத்து போதாதென்று அண்ணாவிடம் சண்டை போட்டு, அம்மாவையும் வேண்டாம் என்று தள்ளிவிட்டாள்.

லண்டனில் குடும்பம் பண்ணிய மாட்டுப் பெண் கேட்பார் பேச்சைக் கேட்டுக்கொண்டு மாமியாரை காலணா காசில்லாமல் தவிக்கவிட்டு விட்டாள்.

பேஷ்....

பாரத நாட்டுக்கு என்ன ஆகிவிட்டது?

அதன் பண்பு, கலாசாரம், பழக்க வழக்கங்கள், ஆன்மீகப் பெருமையெல்லாம் எங்கே ஓடிமறைந்து விட்டன?

இனியும் படுக்க இயலாது என்று புரிந்துபோக எழுந்து உட்கார்ந்து கணக்குகளைச் சரி பார்த்தாள். ஐந்தரைக்கு வைதேகிக்கு போன் பண்ணி வரச்சொல்லி, கிளம்பினாள்.

சரோஜினியை அவர்களுக்குப் பாரதி அறிமுகம் செய்து வைத்தார்.



சிவந்த மேனி, லட்சணமான முகம், வாழ்ந்து கெட்ட அழகு, கம்பீரம்.

முதலில் சரோஜினி வாயைத் திறக்கவே மறுத்தார். எது கேட்டாலும் பதில் சொல்லாமல், 'என்னைத் தனியாக விட்டுவிடுங்கள்' என்று அமுக்கமாய் இருந்தார்.

ஆனால் வைதேகியும், பூமாவும் விடாமல் மாறி மாறி சாந்தி சதனத்தில் இருக்கும் அம்மாக்களின் கதைகளை எடுத்துச் சொல்லி 'கஷ்டம் என்பது உங்களுக்கு மட்டுமில்லை. இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்களின் நிலை உங்களைவிட மோசமாக இருக்கிறது' என்ற ரீதியில் பேசிய பின் சில நிமிஷங்களுக்கு என்னமோ யோசிக்கிற மாதிரி இருந்துவிட்டு சரோஜினி பேசத் துவங்கினபோது அந்த பேச்சில் நிறைய துக்கம், ஆவேசம், வேதனை கலந்திருந்தது.

"என் பிள்ளைக்கு என் மேல உசிரு. அம்மா அம்மானு சுத்தி சுத்தி வருவான். லண்டனுக்குப் போனப்ப, 'நா வரலேப்பான்னேன். என்னை விட்டுட்டுப்போக மாட்டேன்னுட்டான். அங்க பெரிய வீடு.... கார், எல்லா வசதியும் உண்டு. ஞாயித்து கிழமை அன்னிக்கு 'ஸ்விம்மிங்பூல்லே குளிக்கப் போறேன் வாம்மா'ன்னு கூப்பிட்டான். கடைசிப் பேரனை வைச்சிண்டு போய் நின்னேன். தண்ணிலே குதிச்சவன் ரொம்ப நேரத்துக்கு அடியிலேயே இருந்தான். வேடிக்கை காட்டறான்னு நினைச்சேன். விழுந்த வேகத்துலே மண்டைலே அடிபட்டு பிரக்ஞை போயி பிராணன் போயிடுத்தாம். டாக்டர் சொன்னார். நா பாவி.... பிள்ளை என் கண் முன்னால பிராணாவஸ்தை பட்டப்போ, வேடிக்கைனு நினைச்சு, பரப்பிரம்மமா நின்னேன்...."

துக்கம் தாளமாட்டாமல் போக சரோஜினி மெல்ல விசும்பத் தொடங்கினார்...

"என் பேரன்கள் இரண்டும் அச்சு என் பிள்ளைதான். அதுகளைப் பார்த்து, வளர்க்கறதன் மூலம் நம்மை தேத்திக்

கலாம்னு இருந்தேன். இப்ப அதுக்கும் வழி இல்லாம இரண்டு மாசத்துக்கு முன்னால 'வெளிலே போ'னு மாட்டுப் பெண் சொல்லிட்டா.... இங்க அங்க வேலை பாத்து நாலு காசு சம்பாதிச்சு அந்தக் குழந்தைகளுக்குக் காட்பரிஸ்னா புடிக்குமேனு வயத்தைக் கட்டி வாயக்கட்டி வாங்கிண்டு போனப்போ மாட்டுப் பெண்ணோட அப்பா 'இனிமே இங்க வந்தா காலை வெட்டிப்போட்டுடுவேன்'னு சொல்லி காட்பரிஸை நாய்க்குப் போட்டார். மாட்டுப் பெண் அத்தனையும் பாத்துண்டு பேசாம நின்னா... அப்புறம்தான் 'சீ'ன்னு போச்சு... பேசாம சிவா விஷ்ணு கோயில்லே விழுந்து கிடக்க ஆரம்பிச்சேன்... எனக்குப் பணம் வேண்டாம் காசு வேண்டாம்... என் பேரன்களைப் பார்க்க விடக்கூடாதா? கொஞ்சறதுக்கு அனுமதி தரக்கூடாதா? பிள்ளைய நினைச்சுட்டா வயிறு எரியறதே... நா என்ன பண்ணுவேன்?'

# 24

பெரிசாய் வாய்விட்டு அழுத சரோஜினியை ஒரு தினுசாய் சமாதானப்படுத்திவிட்டு சாந்தி சதனில் அவரை சேர்க்க ஆவன செய்துவிட்டு இரவு பதினொரு மணிக்கு படுக்கப் போனபோது திரும்ப விவரிக்கத் தெரியாத ஒரு கனம் பூமாவினுள் ஏறி உட்கார்ந்து கொண்டது.

பிரச்சினைகள், சின்னச் சின்னதாய் நிறைய பிரச்சனைகள்.

ஆறுமாசமாக ஓரளவுக்குப் பழக்கப்பட்டுவிட்ட பிரச்சினைகள்தாம் என்றாலும், இப்போது அம்மாக்களின் எண்ணிக்கையும் கூடிய பிறகு இவையும் அதிகரித்து விட்டது நிஜம்...

இரத்தத்தோடு, ரத்தமாய் வருஷ வருஷமாய் ஊறி விட்ட ஜாதிப் பிரச்சினை.



இது என்றைக்கு ஒழியும்?

மனுஷனை மனுஷன் வெறுக்கும், அடிமையாக்கும் பழக்கம் என்று ஒழியும்?

கூனிக்குறுகி 'நாங்க பிறப்பால் தாழ்ந்தவங்க!' என்று எத்தனை கட்டி அணைத்தாலும் நிமிர மறுக்கும் காம்ப்ளக்ஸ் என்று ஒழியும்?

'என் கக்கூஸ்க்கே அவளும் வரா.... வேற கக்கூஸ் இருக்கறப்போ, இது என்ன பிடிவாதம்?'

'என் பக்கத்துலே உட்கார்ந்து சாப்பிடாட்டா சோறு உள்ள இறங்காதா? தள்ளி உட்காருன்னா யாரு கேக்கறா?'–

பிராமணர்கள் என்று மட்டுமில்லாமல், மற்ற ஜாதி ஹிந்து அம்மாக்களிடமும் தீவிரமாகக் காணப்படும் புத்தி இது...

பூமாவும் மற்றவர்களும் இந்த 'நீ உசத்தி நான் தாழ்த்தி' எண்ணங்களை அடியோடு ஒழிக்க எத்தனையோ பேசி விட்டார்கள், கரடியாய்க் கத்தி விட்டார்கள். ஏன், ஹோமில் சேர்க்கப்படும் போதே 'ஜாதி வித்தியாசம் பாக்கிறவர்களுக்கு இங்கே இடம் இல்லை' என்று கறாராய்க் கூறிவிட்டார்கள்—

என்ன சொல்லி என்ன?

அடிமனசில் ஒளிந்து கொண்டு, அவ்வப்போது இது வாலாட்டுவதால் நாலு நாளைக்கு ஒருதரம் சின்னச் சலசலப்பு உண்டாகத்தானே செய்கிறது?

அசைவ உணவு வேண்டும் என்று முணுமுணுக்கும் ஃபாத்திமா பீவி இன்னொரு ரகம்...

"சோறு உள்ள இறங்க மாட்டேங்குதுங்க. அப்பப்ப கொஞ்சமாவது செய்யச் சொன்னீங்கன்னா தேவலை...."

"அது நடக்கிற காரியம் இல்லே ஃபாத்திமா. சைவச் சாப்பாடும் ருசியாத்தானே இருக்கு? அது தேவை இல்லே இதுதான் இனினு தீர்மானம் பண்ணி கிட்டா நாக்கு இப்படி ஏங்காது, என்ன?"

மேரியம்மா இன்னொரு ரக பிரச்சினை. டீச்சராக வேலை பார்த்துவிட்டதால் அத்தனை அம்மாக்களையும் விட தான் உசத்தி என்ற எண்ணம் உண்டு. ஆங்கிலத்தில்தான் பேசுவார். தரையில் உட்காரமாட்டார். ஸ்பூனால்தான் சாப்பிடுவார். பஜனை நடக்கும்போது கலந்துகொள்ள மாட்டார். யாராவது விஸிட்டர்கள் வந்தால் தனியாய் அறிமுகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் கோபம் வந்துவிடும்.

பூமாவும் எத்தனையோ தடவை அவரைத் தனியாக அழைத்து 'இந்த மாதிரி விடுபட்டு இருக்காதீர்கள். அது நல்ல பழக்கம் இல்லை' என்று சொல்லிவிட்டாள். கேட்டால் தானே!

பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு— என்பதை நிரூபிக்கும் வகையில் பல அம்மாக்கள் நடந்து கொண்டாலும், அம்புலு பாட்டிக்கும், வள்ளி ஆச்சிக்கும் இந்த அக்ஞானம் ரொம்ப அதிகமே....

'டில்லி குளிர் உனக்கு ஒத்துக்காது—' என்று சர்வ சாதாரணமாகச் சொல்லி ஒதுக்கியதும் அல்லாமல், 'அம்மா நீ எப்படி இருக்கிறாய்?' என்று ஒரு வரி, ஒரே ஒரு வரிகூட எழுத துப்பு இல்லாத பிள்ளைப் பெருமையை இந்த அம்புலுப் பாட்டி பேசுவது, இல்லை பீற்றுவது கேட்கச் சகியாது... அப்படியொரு பெருமை...

'என் பிள்ளைக்கு வடக்கே பெரிய வேலை....'

'அவன் வேலைல மஹா கெட்டிக்காரன்'—



'புத்தின்னா அப்படியொரு புத்தி.... கண் பார்த்தா கை செய்யும்...!'

'கண்ணுக்கு மன்மதனாட்டம் இருப்பான், குழந்தைகள் அவன் மாதிரியே ராஜா கணக்கா இருக்கும்....'

பெருமை.... பெருமை.... என் பிள்ளை என்ற பெருமை...

உசத்தியான குணங்கள் வாஸ்தவத்திலேயே இருந்தால் பெற்றவளை நிராதரவாக விட்டுவிட மாட்டான் என்பது இந்தப் பாட்டிக்கு ஏன் புரியவில்லை?

தலையைச் சிரைக்க எட்டணாக் காசு இல்லாமல் திண்டாடி தோள் வரைக்கும் வளர்ந்த முடியும், பஞ்சடைந்த கண்ணுமாய் தான் ஹோமில் சேர வந்த நாள் நினைவில் இருந்துதான் பாட்டி இப்படிப் பேசுகிறாரா?

ஐயோ தெய்வமே... சூடு பட்டும்கூட, நெருப்பு சுடும் என்று இந்த வயசானவர்களுக்கு ஏன் புரியவில்லை?

வள்ளி ஆச்சியும் அம்புலுப் பாட்டி மாதிரிதான். சொல்லப் போனால் அவளைவிட ஒருபடி உபரியே...

'எம்மகளுக்கு எல்லாத்துக்கும் நா கிட்ட இருக்கணும். தீவுளி வருது... பணியாரம் பண்ண நா இல்லாட்டி தோதுப்படாது. மருமகப் பிள்ளையும் புள்ளைங்களும் ஆபா வெள்ளைப் பணியாரம், நெய் முறுக்கு செய்தாதான் நல்ல இருக்குனு சொல்லுவாக... தீவுளிக்கு நா வீட்டுக்குப் போகணும்."

இரண்டு நாளாய் இந்த வீட்டுக்குப் போகணும் என்கிற நச்சரிப்பு அதிகமாகிவிட, ஆச்சியுடன் பேசுவதற்காகவே முக்கியமாய் அன்று சாந்தி சதனத்துக்கு பூமா வந்தாள்.

ஓசைப்படாமல் உள்ளே வந்து வராந்தாவில் செருப்பைக் கழட்டிவிட்டு கூடத்துள் எட்டிப் பார்த்தாள்.

பதினொரு மணி என்பதால் சில அம்மாக்கள் குளித்து பளிச்சென்று அமர்ந்து இலைகளைத் தைத்துக் கொண்டிருந் தார்கள். செந்தாமரையும், கிருஷ்ணவேணியும் சந்தனமாலை செய்ய, ஓரமாய் அமர்ந்து பீவி ஏதோ கிழிசலை தைத்துக் கொண்டிருந்தார்.

பின் தோட்டத்தில் ஓரிருவர்.

பாக்கி அனைவரும் தம் தம் படுக்கையில் படுத்து உணவுக்கு முன்னால் போடும் குட்டித் தூக்கத்தில் ஆழ்ந்திருந் தனர்.

'க்ஹூம்...' சின்னதாய் பூமா கனைக்க, கூடத்தில் இருந்தவர்கள் சட்டென்று நிமிர்ந்தனர்.

கண்கள் குடைகளாய் விரிய 'அம்மா வந்திட்டாங்க' என்றபடி அவரவர் வேலையைப் போட்டுவிட்டு கிட்டத்தில் வந்தார்கள்.

அங்குள்ள அத்தனை கிழவிகளுக்கும் பூமா 'அம்மா'தான்.

குழந்தைகளும், வயதானவர்களும் பல விஷயங்களில் ஒன்று என்று டாக்டர் சொன்னது சரி என்கிற ஒரு தாய்ப்பாசத்தோடு பழகும் பூமாவிடம் வயசை மறந்து அனைவரும் குழந்தைகளாகத்தான் ஒட்டிக் கொண்டனர்.

"ஏம்மா நேத்து வரலை?"

"நீங்க வருவீங்கனு, இருட்டின பிறகுகூட வாசல்லியே நின்னுகிட்டிருந்தேன்ம்மா..."–

"போங்க, ஏன் வராம ஏமாத்தினீங்க?"–

அம்மாவிடம் கொஞ்சும் அசல் குழந்தைகள்தாம்...

பாசத்தையே காணாமல் வாழ்ந்துவிட்டு, இப்போது அன்பும், பரிவுமாக ஓர் ஆத்மா கிடைக்கிறபோது அதை அழுந்தப் பிடித்துக் கொள்ளவேண்டும், நெருங்கின உறவாகக் கொண்டாடவேண்டும் என்ற ஆதங்கமா?



பூமா சின்னதாய்ச் சிரித்தாள். எதிரில் நின்றவரின் தோளில் கையைப் போட்டுக் கொண்டாள் அடுத்தவர் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நேத்து ஆடிட்டர்கிட்டே வேலை இருந்ததும்மா, அது முடிய ராத்திரி எட்டாயிடுத்து... அதான் வர முடியலை..."

சில நிமிஷங்கள் அங்கேயே நின்று அவங்களோடு பேசிவிட்டு, உள்ளே எழுந்திருக்க முடியாமல் படுத்திருந்த அம்மாக்களிடம் போய் உடம்பு பற்றி விசாரித்தாள்.

அப்புறம் சமையல்கட்டுக்குள் நுழைந்தாள்.

"ம்ம்.... வாசனை ஆளைத் தூக்கறது... என்ன சமையல் முத்து?"

"பூசணிக்காய் சாம்பார். கோஸ் பொரியல், ஆத்திக்கீரை துவட்டல்.... இருந்து சாப்பிட்டுட்டுப் போங்கம்மா..."

"பாக்கலாம்... இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை ஆச்சே. கிச்சன் கமிட்டி மெம்பர்ஸ் வந்து வாராந்தர சாமான்களை எடுத்துக் கொடுத்துட்டுப் போயாச்சா?"–

"லலிதாம்மாவும், ஸ்வர்ணாம்மாவும் வந்து கொடுத்திட்டு இப்பதான் போனாங்கம்மா....'–

பூமா தோட்டத்தை ஒரு சுற்று பார்த்துவிட்டு ஆபீஸ் அறைக்கு வந்து அமர்ந்தாள். பின்னோடு வந்த மேட்ரன் திலகாவை அருகில் உட்காரச் சொன்னாள்.

"என்னமோ சொல்லணும்னு போன் பண்ணினியே என்ன திலகா?"

"இந்த வள்ளி ஆச்சி நேத்து ராத்திரி முழுக்க தூங் கலைங்க... தீபாவளிக்கு நாலு நாள்தான் இருக்கு– மக வீட்டுக் குப் போகணும்னு ஒரே அழுகை... நான்வெஜ் இல்லாம

சாப்பிடப் பிடிக்கலைனு நேத்து பீவி பட்டினி... கொஞ்சம் நீங்க பேசினா தேவலை..."

"சரி– முதல்லே பீவிய வரச்சொல்லு...."

பாத்திமா பீவி வந்தார்.

"உட்காருங்க... நேத்து சாப்பிடவேயில்லியாமே... என்ன சமாசாரம்? ம்?"

பாத்திமா பீவி தலையைக் குனிந்துகொண்டார்.

"உங்களை இங்க சேர்க்கற அன்னிக்கு ஹோம் விதி முறைகளை நாங்க விளக்கமா சொல்லித்தான் சேர்த்திருக் கோம்... இங்கே இருக்கிறவரை ஜாதி, மதம் கிடையாது. எல்லாரும் ஒண்ணு. செத்தபிறகு மட்டும் அவரவர் இஷ்டப்படி, மத வழக்கப்படி காரியங்களைப் பண்ணுவோம். வயசாகி விட்டதால் சுலபமா ஜீரணமாகிற, சத்தான உணவைக் கொடுப்போம்னு... எல்லாத்தையும் நாங்க சொன்னப்ப சரின்னுட்டு இப்ப நான் வெஜ்வேணும்னா என்ன அர்த்தம், பீவி? உங்களைப் பட்டினியாவா போடறோம்? எங்களால முடிஞ்ச விதத்துலே அன்போட, கவனிச்சுக்கிறப்ப நீங்க இப்படிப் பட்டினி கிடக்கிறது, நியாயமா? எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு பீவி... இனிமே நீங்க சாப்பிடலேன்னா, அன்னிக்கு நானும் சாப்பிடப் போறதில்லை.... என்ன பீவி?"

இதற்கும் பதில் சொல்லாமல் பாத்திமா அமர்ந்திருக்க "சரி போங்க. இன்னொருதரம் சின்னப் பிள்ளையாட்டம் பட்டினி கிடக்காதீங்க..." என்று சொல்லி அவரை அனுப்பி வைத்துவிட்டு வள்ளி ஆச்சியை அழைத்தாள்.

"என்ன ஆச்சி, ராத்திரி அழுதீங்களாமே ஏன்?"–

"இல்லே... எனக்கு என் மவளைப் பார்க்கணும்... பேரப் புள்ளைங்களை..."



மொளுக்கென்று ஆச்சி அழத் தொடங்கிவிட்டார்.

ஒரு நிமிஷம் அவரை அழ விட்டுவிட்டு பூமா பேசினாள்.

"உங்க மருமகப் பிள்ளையோட சேர்ந்துக்கிட்டு உங்க மகளும் உங்களை ஏமாத்திக் கையெழுத்து வாங்கி, சொத்தை எடுத்துக்கிட்டு நடுத்தெருவுலே விட்டதை மறந்திட்டீங்களா ஆச்சி? மனசை தேத்திக்கறதை விட்டுட்டு ஏன் வீணா பாசம், அது, இதுனு அலட்டிக்கறீங்க? ....ம்?"–

"எம்மக நல்லவதான்..... ஏதோ போதாத காலம்... இப்ப ஆறு மாசம் ஆயிடிச்சில்லே... எங்கம்மா எங்கே எங்கேனு அவ தவிச்சுக்கிட்டு இருப்பா...."

"அப்படி இருக்கறவங்கன்னா இங்க ஒரு நடை வந்து உங்களைப் பார்த்துட்டுப் போக மாட்டாங்களா.. என்ன ஆச்சி நீங்க விவரம் புரியாமப் பேசறீங்க..."

"இல்லே... எம்மவளுக்கு தனியா எங்கவும் போகத் தெரியாது... அவ ரொம்ப சாது... எனக்கு அவளைப் பாக்கணும்... தீவுளிக்கு நா செய்யற வெள்ளைப் பணியாரம்தான் நல்லாயிருக்கும்னு பிள்ளைங்க சொல்லுவாங்க; எனக்கு வீட்டுக்குப் போகணும்..."

தழைந்தது போதும் என்று நினைத்த பூமா கண்டிப் பாகப் பேசினாள்.

"இப்படிப் பாசம் கண்ணை மறைக்கவிட்டா, அப்புறம் நீங்கதான் கஷ்டப்படப் போறீங்க... இங்க உங்களுக்கு என்ன குறைச்சல்? தீபாவளி அன்னிக்கு உங்களுக்கெல்லாம் புதுப்புடவை கொடுக்கப் போறோம். நல்ல விருந்தும் உண்டு. பெரிய மனுஷங்க நிறைய பேர் உங்களைப் பார்க்க வரப் போறாங்க... பித்துக்குளி முருகதாஸ் பஜனை பண்ணப் போறார். டி.வி. லே படம் இருக்கு... அப்புறம் என்ன ஆச்சி?"–

"இல்லேம்மா... எனக்கு என் மகளைப் பார்க்கணும்... புள்ளைங்க கண்ணுலியே நிக்குதுக...."

அடங்கி இருந்த கண்ணீர் துளிக்க, திரும்ப ஆச்சி அழ முற்பட்டார்.

இனி இவரோடு பேசிப் பலன் இல்லை என்பது தெளிவாக, பூமா வாட்ச்மேன் கந்தசாமியைவிட்டு, ஆச்சியை அவர் மகளிடம் கொண்டு விடச் சொல்லி விட்டு தன் வீட்டுக்குத் திரும்பினாள்.

பகல் மூணு மணி இருக்கும். வைதேகியோடு உட்கார்ந்து தீபாவளிக்கென வந்துள்ள டொனேஷன்கள் போதுமா என்று பார்த்துக் கொண்டிருக்கையில் செல்லா வந்தாள்.

"வாட் நியூஸ் பூமா... இப்பத்தான் திலகா போன் செய்தா.... அரை மணி முன்னாலே நவநீதா பாட்டி பாத் ரூம்லே வழுக்கி விழுந்துட்டாங்களாம். துடை பெரிசா வீங்கிப் போயிடுத்தாம். 'நிச்சயம் ப்ராக்சர்தான்'னு திலகா சொல்றா... உங்க போன் வொர்க் பண்ணலியா என்ன? இரண்டு பேரும் ட்ரை பண்ணிப் பார்த்தோம். கிடைக்கலை.... சரி... இப்ப என்ன பண்ணட்டும்? டாக்டரைக் கூட்டிட்டுப் போகவா? சொல்லுங்க..."

"ம்ம்? ப்ராக்சர்னா கூட்டிக்கிட்டுப் போறதுலே அர்த்தம் இல்லே— உங்களால கார் எடுத்துக்கிட்டுப் போக முடியுமா?"—

"முடியும்"—

"அப்ப நீங்கபோய் நவநீதத்தை கார்லே ஏத்திக் கிட்டு வி.எச்.எஸ்ஸுக்கு வந்துடுங்க... நா இந்த வேலையை முடிச்சுக்கிட்டு நேரே ஆஸ்பத்திரிக்கு வந்துடறேன்..."



சரி என்று சொல்லி செல்லா கிளம்பினாள். 'உங்களோட நானும் வரேன்' என்று வைதேகி சொல்ல, அரை மணியில் இருவருமாய் வி.எச்.எஸ்ஸுக்குப் போனார்கள்.

இனி நவநீதம் பாட்டி எழுந்து நடப்பது சந்தேகம் தானாம்... டாக்டர்கள் சொல்லி விட்டார்கள்.

வயசானகாலத்தில் இருக்கிற கஷ்டம் போதாதென்று இது வேறு...

அடுத்து வந்த நாட்களில் நித்தியப்படி வேலைகளோடு தீபாவளி வேலையும் சேர்ந்துவிட்டதால் தினமும் யாராவது ஒருவராவது வி.எச்.எஸ்ஸுக்குச் சென்று பாட்டியைப் பார்த்துவரும் பொறுப்பை மற்ற அங்கத்தினர்களிடம் பூமா ஒப்படைத்தாள்.

தீபாவளி அன்று காலையிலேயே பூமாவும், வீட்டில் தீபாவளி இல்லாத வேறு சில அங்கத்தினர்களும் ஹோமுக் குச் சென்று விட்டார்கள்.

எல்லாரும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, புத்தாடை உடுத்தி, இட்லி, ஜாங்கிரி, காபி சாப்பிட்டார்கள். ஒன்பது மணிக்கு பித்துக்குளி முருகதாஸ் வந்து ஒரு மணி நேரம் அருமையாய் பஜனைப் பாடல்களைப் பாடினார். தொடர்ந்து அங்கத்தினர்கள் தம் குடும்பத்தோடு வந்தார்கள். நகரின் பிரமுகர்கள் ஓரிருவர் பழங்களோடு வந்து போனார்கள்.

மதியம் வடை பாயசத்தோடு விருந்து.

அமர்க்களமாய்ப் பொழுதுபோக அம்மாக்களின் சிரித்த முகங்கள் மனசுக்கு இதத்தைத் தர, மாலையில் பூமாவும், மற்றவர்களும் வீடு திரும்பினார்கள்.

மறுநாள் விடியும் முன்னரே பூமாவைப் போனில் அழைத்த திலகாவின் குரலில் ஏக படபடப்பு....

"மேடம்... மீனா பாட்டி ராத்திரி தூக்கத்திலேயே போயிட்டாங்கனு தோணுது.... உடம்பு சில்லிட்டு, விரைச்சுப் போயிடுச்சு... என்ன பண்ணட்டும் மேடம்? உடனே வறீங்களா?...."

சாந்தி சதன் துவங்கிய பிறகு ஏற்பட்டிருக்கும் முதல் சாவு.

வயசானவர்களாகப் பார்த்துச் சேர்த்துக் கொள்கிறோம். அதனால் எந்த நிமிஷமும் சாவை எதிர்பார்க்கலாம் என்று நினைத்திருந்தாலும், முதல் முறையாக ஒரு சாவு நிகழ்ந்து விட்டதைக் கேள்விப்பட்டதும், பூமாவின் இதயம் ஒரு வினாடி துடிப்பை மறந்து ஜில்லிட்டுத்தான் போனது.

## 25

மீனாபாய் போய்விட்டாரா?

சாந்தமான முகமும், சன்னக் குரலில் பேச்சுமாக இருந்த மீனாபாயா?

தூக்கத்திலேயே இறந்துவிட்டாரா?

அப்படியானால் ஹார்ட் அட்டாக்தானே?

மீனாபாய்க்கு ரொம்ப வயதாகவில்லையே! என்ன வயது?... அறுபத்து நாலா... ஆமாம் அவ்வளவுதான்...

மிதமாகச் சாப்பிட்டு, தன் கடமைகளை ஒழுங்காகக் கவனித்து, எதிலும் ஒரு கட்டுப்பாட்டோடு இருக்கும் மீனாபாய் போய்விட்டார் என்பதை நினைக்க நினைக்க பூமாவுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

கஷ்டப்பட்டுச் சமாளித்துக் கொண்டு செல்லாவுக்கு போன் செய்தாள்.



தூக்கக் கலக்கத்தோடு செல்லா 'ஹலோ' என்றாள்.

"ஸாரி செல்லா.... இந்த அகால வேளைல டிஸ்டர்ப் பண்ணறேன்.... திலகா போன் பண்ணினா.... மீனாபாய் போயிட்டாராம்...."

"ஏ.... என்னது?"

"விவரம் ஒண்ணும் சரியா புரியலை... உடம்பு சில்லிட்டுப் போச்சு, ராத்திரி தூக்கத்திலே போயிருக்கணும்னு சொன்னா...."

"அடடா.... நேத்துக்கூட பஜனைப் பாட்டுக்களை கூட பாடிட்டு, சந்தோஷமா, சிரிச்ச முகமா இருந்தாரே பூமா... என்னாச்சு?"—

"ஹார்ட் அட்டாக்காதான் இருக்கும்னு தோணுது... டாக்டர் சங்கரனைக் கூட்டிட்டுப்போய் காண்பிச்சாதான் விவரம் புரியும்..."

"நா கார் எடுத்திட்டு வரட்டுமா?"—

பூமா கொஞ்சம் தயங்கினாள்.

தீபாவளிக்கு மறுநாள்....

எல்லாருக்கும் தலைக்குமேல் வேலைகள் இருக்கும் நாள்—

என்னதான் ராமசாமி நல்லவர், அனுசரித்துப் போகும் கணவர் என்றாலும் சரியாக விடியாத இந்தக் காலை நேரத்தில் தொந்தரவு பண்ணுவது நியாயமா?

"உங்களுக்கு வேலை இருந்தா கஷ்டப்படாதீங்க. நா டாக்ஸி எடுத்துக்கிட்டு டாக்டரோட திருவான்மியூர் போயிட றேன். நீங்க அரை மணி கழிச்சு சுமதி மூலமா போன் பண்ணி மீனா பாய் வீட்டுக்கு விவரத்தைச் சொல்லச் சொல்லிடுங்க... ராமகிருஷ்ணன்— மீனாபாயோட தம்பி

பிள்ளை பேரு அதுதானே?— உடனே சாந்தி சதனத்துக்கு வரச் சொல்லுங்க... கமிட்டி மெம்பர்ஸ்க்கு போன் பண்ணி, நிலைமையைச் சொல்லி, யாரால வீட்டை விட்டுட்டு வரமுடியுமோ வரச் சொல்லுங்க. அஞ்சு பேர் இருந்தா போதும்.... ஒன்பதுக்குள்ள வந்துட்டீங்கன்னா, காரியத்தைக் கவனிக்க சௌகரியமா இருக்கும்... நா புறப்படட்டுமா? சந்தேகம் ஏதாவது இருந்தா அங்கே போன் பண்றீங்களா?"—

"கார் எடுத்துட்டு வரதுலே எனக்கு கஷ்டம் ஒண்ணும் இல்லே பூமா.... இந்தக் கார்த்தால வேளைல நீங்க தனியா..."

அவளை முடிக்க விடாமல் பூமா இடைமறித்தாள்.

"நோ ப்ராப்ளம் செல்லா... நீங்க மத்த விஷயங்களை கவனியுங்க.... ஓ.கே?"—

அடுத்த பத்தாம் நிமிஷம் தாயி கூட்டி வந்த டாக்ஸியில் டாக்டர் சங்கரன் வீட்டுக்குப் போய் அவரை அழைத்துக் கொண்டு திருவான்மியூருக்குச் சென்றாள்.

ஹார்ட் அட்டாக்தானாம்...

நிம்மதியாய் தூக்கத்தில் போய்விட்டாராம்.... டாக்டர் ஸர்டிபிகேட் கொடுத்துவிட்டு, காத்திருந்த டாக்ஸியிலேயே புறப்பட்டுப் போய்விட்டார்.

சுமதியிடமும் கமிட்டி மெம்பர்களிடமும் பேசிவிட்டதாகவும், தான் கிளம்பி அவர்களை அழைத்துக் கொண்டு வந்து விடுவதாகவும் செல்லாவிடமிருந்து போன் வந்துவிட்டது.

அவர்களுக்காகக் காத்திருந்த நாழிகையில் சும்மா இருக்க விரும்பாமல் திலகா, முத்துலட்சுமி, கந்தசாமியின் உதவியோடு பூமா, மீனாபாயைத் தூக்கி வந்து கூடத்தில் கிடத்தினாள்.



கால், கை கட்டை விரல்களை கஷ்டப்பட்டுச் சேர்த்துக் கட்டினாள். நெற்றியில் பட்டையாய் விபூதியைக் குழைத்து இட்டாள்.

ஊதுபத்தி ஏற்றிப் பக்கத்தில் வைத்துவிட்டு, அருகிலேயே அமர்ந்து கொண்டாள்.

மீனாபாயின் முகத்தில் துளிகூட சாவுக் களை இல்லை. விகாரப்பட்டுப் போகாமல் எப்போதும் காணப்படும் சாந்த முகமாகவே அது இருந்தது.

இல்லத்தில் இருக்கும் அம்மாக்களில் விவேகியான சிலரைக் குறிப்பிட வேண்டுமென்றால், முதலில் மீனா பாயின் பெயர்தான் வரும்.

சட்டென்று யாரையும் குற்றமாக எடுத்துக் கொள்ளாத குணம், கோணலாகப் பார்க்காத பார்வை, குதர்க்கமாக விமர்சிக்காத வாய்....

நடப்பது அத்தனையும் முன் கூட்டியே தலையில் எழுதப்பட்டவை என்பதில் தீவிர நம்பிக்கை...

இல்லத்தில் சேர வந்த அன்று, விண்ணப்பத் தாளைப் பூர்த்தி செய்த நிமிஷத்திலேயே மீனாபாயின் பண்பட்ட மனசு பூமாவுக்குத் தெளிவாகிவிட்டது.

கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லிக் கொண்டே வந்தவளின் குரலில் அழுகை இல்லை... ஐயோ நம்மை இப்படி அனாதையாகக் கொண்டு வந்து தள்ளிவிட்டார்களே என்ற ஆற்றாமை இல்லை... ஆத்திரம் இல்லை... ஆனால் விரக்தி இருந்தது, அவ்வளவுதான்.

அவகாசம் கிடைத்து, தனிமையும் இருந்தால் அவ்வப் போது மீனாபாயிடம் பூமா பேச்சுக் கொடுப்பது வழக்கம் தான்.

யதார்த்தமாகப் பேசுகையில் முத்து முத்தாகத் தத்துவங்கள் சிதறும்.

"குழைய சோறு வடிச்சி, நெய், பருப்புப் போட்டுப் பிசைஞ்சி, குழந்தையை இடுப்பிலே வைச்சி, நிலா காட்டி சோறு ஊட்டறப்ப இதே வாய் நாளைக்கு நம்மை அசிங்கமாத் திட்டலாம்னு எத்தனை பேர் நினைச்சிப் பாக்குறோம்? ஊட்டி வளக்கற தாய் புண்பட்டுப் போக இதே வாய் காரணம்னு யார் நினைக்கிறோம்? பிஞ்சுக் கால் நோவுமேனு ராத்திரி படுக்கு முன் தைலம் தடவுவோம்— எண்ணெய் தேய்ச்சி உருவி வெந்நீர் ஊத்துவோம். ஆனா இதே காலால நாளைக்கு நம்மை உதைச்சி விரட்டலாம்னு எதிர்பாக்கறோமோ? ம்ஹூம் இல்லே... பக்கத்து வீட்டுலே எதிர் வீட்டுலே இந்த அநியாயம் நித்தம் நடக்கறதை கண்ணாலே பாத்தப்புறம்கூட, இது நமக்கும் நாளைக்கு வரலாம்னு யார் யோசிக்கிறோம்? எதிர்காலத்துக்காக யார் நம்மை தயார் பண்ணிக்கிறோம்?... ம்ஹூம்... ஒண்ணும் இல்லே... என் பிள்ளை... என் பெண்... என் மருமகன்னு வாரிக் கட்டிக்கிறோம்... நாளைக்குத் தங்கத் தட்டுலே நம்மை தாங்கிடு வாங்கனு கோட்டை கட்டுறோம்... அதான் நிஜத்திலே வேற மாதிரி நடக்கறப்போ இடிஞ்சி போயிடறோம்" என்பார்.

"பெரிய வேடிக்கை என்ன தெரியுமாம்மா? சாதாரணமா உசிர் இருக்குற வரையில் அவன், அவள், அவர்னும் உசிர் பிரிஞ்ச உடனே 'அது'னும் சொல்லுவோம், இல்லையா? ஆனா, என்ன கேவலம் பாருங்க... வயசு ஆயி, ஒருத்தர் ஒண்ணும் பிரயோஜனம் இல்லாம ஆயிட்டா உசிர் இருக்கறப்பவே ஒருத்தரை 'அது' வாக்கிடறோம்... கிழவி, கிழவன்னுகூடச் சொல்லாம, கிழம், கிழம்னு சொல்றோம்... 'சனியன்! அது செத்து ஒழியக் கூடாதா'ன்றோம். உசிர் இருக்கறப்பவே உசிர் இல்லாத ஜடமா நடத்தப்படறவங்க இந்த வயசானவங்கதான் இல்லியா பூமாம்மா"— என்பார்.



இன்னும் என்னென்னமோ சொல்லுவார். தெளிவாக, எளிமையான வார்த்தைகளில் புரியும்படி பேசுவார்.

தம்பி குடும்பத்துக்காக அப்படித் தேய்ந்து உழைத்தோமே, பத்துபவுன் பெறுமானமுள்ள இரட்டை வடம், எட்டு பவுன்வளை, தோடுகளை எடுத்து மருமகளுக்குச் சீராகப் போட்டோமே, அவள் தன்னைத் திருப்பிப் பார்க்கவில்லையே, கை நிறைய சம்பாதிக்கும் மருமகனுக்கு தன் சின்ன வயிறு பாரமாகப் போய்விட்டதே— என்று ஒரு வார்த்தை? ஒரு அங்கலாய்ப்பு? ஒரு புலம்பல்?

ம்ஹூம்— இன்று வரை மீனாபாய் பொருமியோ குறைபட்டோ யாரும் காதால் கேட்டதில்லை என்பதுதான் நிஜம்.

தான் பேசவில்லை என்பது மட்டும் அல்லாமல் செந்தாமரை, ருக்மணி போன்றோர் தங்களை அடித்து விரட்டிவிட்ட உறவுக்காரர்களைத் தூஷித்துப் பேசும்போது முடிந்தால் அந்தப் பேச்சுக்களை அடக்க, திசை திருப்ப, மீனாபாய் முயற்சித்ததுண்டு.

"என்னமோ நம்ம போறாத காலம் சீரழிஞ்சோம்... வீணா ஏன் ஒருத்தருக்கு பொல்லாப்புக் கட்டணும்... விடுங்க..."

"நமக்கு நடந்துக்கத் தெரியலை.... நம்மை மாத்திக்கத் தெரியலை.... அத விட்டுட்டு எதுக்காக அவங்க மண்டையை உருட்டணும்"— இப்படி ஏதாவது சமாதானமாகப் பேசுவார்.

வாய் சபலம் உள்ள அம்மாக்கள் தீனிக்காக அலைந்து "ஒரு பொட்டலம் ஓமப்பொடி வாங்கிட்டு வாங்க" என்று பூமா, மற்ற அங்கத்தினர்களை நச்சரிக்கும் நிமிஷத்தில் தனக்கும் இந்தப் பேச்சுகளுக்கும் சம்பந்தம் இல்லாத மாதிரி

மீனாபாய் பூஜை மண்டபத்துக்கருகில் உட்கார்ந்து விடுவார். இல்லாவிட்டால் இலைகளைத் தைக்க வராந்தாவுக்குப் போய் விடுவார், அதுவும் இல்லாவிட்டால் தோட்டத்தில் களை எடுக்கச் சென்று விடுவார்.

"என்ன மீனாபாய்.... அவங்கல்லாம் கொறிக்க காராபூந்தி கேக்கறாங்களே.... உங்களுக்கு வேண்டாமா?" என்றால் சின்னதாகச் சிரிப்பார்.

"வயிறு முட்ட நீங்க வேளா வேளைக்குச் சோறு டிபன் கொடுத்திடறீங்க; அப்புறம் இதெல்லாம் எதுக்கு! வயிறு கெட்டு வயித்துப் போக்கு வரும்... வீண் சிரமம்... வாயைக் கட்டிட்டா அப்புறம் முக்கால்வாசி பிரச்சனைகள் இருக்காது..." என்பார்.

வாஸ்தவம்தான்.

மீனாபாயால் இன்றுவரை எந்தத் தொந்தரவும் இருந்ததில்லைதான்.

இப்போது இறப்பிலும் ஒரு தொந்தரவும் இல்லைதான்.

ஒரு படுக்கை, ஒரு பேதி, ஒரு டாக்டரிடம் லிஸ்ட், ஒரு மருந்து என்று கடுகத்தனை வேலையும் வைக்காமல் போய்விட்டார்.

தான் விவேகியாக இருந்ததோடு மற்ற அம்மாக்களிடமும், ஒருவரிடம் ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளும், குழந்தை களை நினைத்து ஏங்கும், தன் பழைய வாழ்க்கையை ஞாபகத் துக்குக் கொணர்ந்து பெருமை பேசும் அம்மாக்களிடமும் அவ்வப்போது புத்தி சொல்கிற விதமாய்ப் பேசுவார்....

"எல்லோர் உடம்புலேயும் சிவப்பு இரத்தம்தான் ஓடுது; எல்லாரும் வாயால சாப்பிட்டு மூக்காலத்தான் மூச்சு விடறோம்... இதுலே அவங்க மட்டம் நாம உசத்தினு என்ன அம்புலும்மா?" என்பார்.



"சும்மா பிள்ளைங்களை நினைச்சே ஏங்கறதால என்ன லாபம் ஆச்சி? அவங்கதான் நம்மளை வேணாம்னு சொல்லிட் டாங்களே... சரிப்பானு ஒதுங்கி நிக்க வேண்டியது தான் புத்திசாலித்தனம்...." என்பார்.

"அனாதை இல்லத்துலே இருக்கிறேனே, என் தலை விதினு புலம்பாதீங்க நவநீதம்மா.... ஊசிப்போன சோத்துக் குண்டானை 'நக்கு'னு பக்கத்துலே வைச்சி 'கொட்டிக்கோ தண்டச்சோறு'னு யாரும் சொல்லாம, 'சோறு போதுமா?'னு இவங்க அன்பா கேக்கறது சந்தோஷமா இருக்குனு ஒரு தடவை சொன்னதை, மனசு சங்கடப்படறப்ப எல்லாம் நினைச்சுக்கங்க... வேதனை ஓடிடும்..." என்பார்.

மொத்தத்தில் ரொம்ப ப்ராக்டிகல் பர்ஸன்.

பிணத்தின் பக்கத்தில் அமர்ந்து மனசுக்குள் எட்டிப் பார்த்த மீனாபாயின் நல்ல குணங்களை நினைக்கையில் ஆசையே படாத மீனாபாய் முதல் நாள் ஹோமில் சேர்ந்த போது, 'நா செத்துட்டேன்னா, கங்கை ஜலம் விட்டு குளிப் பாட்டி நிறைய விபூதி பூசி தகனம் பண்ணிடுங்க... மகன் இல்லே, அதனால மருமகனை விட்டு கொள்ளி வைக்கச் சொல்லுங்க... நல்லா நெஞ்சு வெந்து பிடி சாம்பலா எரிஞ்சா தான் நாளைக்கு பேயா அலைய மாட்டோம்னு எங்கம்மா சொல்லுவாங்க"... என்று விருப்பத்தைத் தெரிவித்திருந்தது பூமாவுக்கு ஞாபகம் வந்தது.

சுமதி அந்த மருமகன் ராமகிருஷ்ணனுடன் வந்து விட்டால் தேவலை....

இரண்டு பாக்கெட் விபூதி வாங்கிவரச் சொல்லி மணக்க மணக்க பூசி அனுப்பிவிடலாம்.

எட்டுமணி ஆனதும் திலகாவை அழைத்து "அம்மாக் களுக்கு வழக்கம்போல கஞ்சி கொடுத்துடு, வயசானவங் களால பட்டினி கிடக்க முடியாது" எனவும் அவள் அரை

மணியில் கஞ்சியைத் தயார் பண்ணிவிட்டு அம்மாக்களை அழைத்தாள்.

சிலர் வேண்டாம் என்று மறுத்துவிட்டனர். ஒருசிலர் அரை வயிற்றை நிரப்பிக் கொண்டனர்.

எட்டே முக்காலுக்கு அரக்கப்பரக்க, செல்லா, ஆறு மெம்பர்களோடு வந்து சேர்ந்தாள்.

"ஒவ்வொருத்தரா பிக்அப் பண்ணிக்கிட்டு வர நாழியாயிடிச்சி. எதுக்கும் இருக்கட்டும்னு ஒரு மாலை, வத்தி, கற்பூரம், விபூதி எல்லாம் வாங்கிட்டு வந்துட்டேன்..."

வந்த கமிட்டி மெம்பர்களோடு சில நிமிஷங்களுக்கு ஆபீஸ் அறையில் பூமா பேசினாள்.

எப்படிக் காரியம் பண்ணுவது? ஐயரைக் கூப்பிட வேண்டுமா, வேண்டாமா? எங்கு தகனம் செய்வது?—

எளிமையாக எதுவும் இருக்க வேண்டும். ஐயரைக் கூப்பிட்டால் குலம் கோத்திரம் சொல்ல வேண்டும். வேண்டாம் என்று ஒதுக்கி இருக்கும் சாதி உணர்வை அது கிளப்பிவிடும். ஸோ ஐயர் வேண்டாம்— மைலாப்பூர் மின்சார சுடுகாட்டுக்கு எடுத்துப்போய் விடலாம்.

தெளிவாக அத்தனையும் தீர்மானமானதும் வைதேகி தன் கணவரை போனில் அழைத்து கம்பெனி வேனை விரைவாக அனுப்பச் சொன்னாள்.

பிணத்தைக் கண்டால் பயந்து அருவருக்காத மெம்பர்களோடு தானும் பாத்ரூமுக்குச் சென்று பூமா குளித்தாள். ஈரம் சொட்டச் சொட்ட குடங்களில் நீர் எடுத்து வந்து அவற்றில் சின்ன சொம்பு கங்கை நீரைக் கலந்து சவத்தைக் குளிப்பாட்டினார்கள்.



மீனாபாய் ஆசைப்பட்ட தினுசில் நிறைய விபூதி பூசி, அவருக்குப் பிடித்த நீல சின்னாளப்பட்டி புடவையை உடுத்தி மேலே புது வெள்ளைப் போர்வையைப் போர்த்தி மாலை அணிவித்தார்கள்.

எல்லாம் ரெடி—

இந்த சுமதியை இன்னும் காணோமே!

மணி பத்தை நெருங்க, பூமா, சுமதியின் வீட்டுக்குப் போன் செய்தாள்.

காலையில் புறப்பட்டு ராமகிருஷ்ணனின் வீட்டுக்குப் போனவள் இன்னும் விடு திரும்பவில்லையாம்.

ராமகிருஷ்ணன் ஊரில் இருக்கிறானா, இல்லையா! அவனைத் தேடி அலைகிறாளா?

சரி— வேனில் ஏற்றி மைலாப்பூருக்கு எடுத்துச் சென்று விடுவோம். அங்கு ஆகவேண்டிய காரியங்களை கவனிப்பதற்குள் சுமதி வந்து விட மாட்டாளா?

சுமதி வந்தால் க்ரிமடோரியத்திற்கு வரச் சொல்லிவிட்டு மற்ற அம்மாக்கள் கை கூப்பி கண்ணீர் மல்க விடை கொடுக்க, ராம நாமத்தை ஒன்றாக மெம்பர்கள் உச்சரிக்க, சடலத்தை வேனில் ஏற்றி மைலாப்பூருக்குப் போனார்கள்.

எலக்ட்ரிக் க்ரிமடோரியம் மூடி இருந்தது.

வயரிங்கில் ஏதோ கோளாறாம்— இரண்டு நாளாகுமாம் ரிப்பேர் செய்ய....

என்ன செய்வது?

பக்கத்தில் இருக்கும் சுடுகாட்டில் எரித்து விடலாமா?

அது சரி, சுமதியை இன்னும் ஏன் காணோம்?

ராமகிருஷ்ணனோடு ஹோமுக்குச் சென்றிருந்தாலும் இதற்குள் இங்கு வந்திருக்கலாமே....

மைலாப்பூர் சுடுகாட்டில் அவர்களுக்கு இன்னொரு பிரச்சினை காத்திருந்தது.

திருவான்மியூரைச் சேர்ந்த பிணத்தை இங்கு எரிக்கக் கூடாதாம்... அந்த போலீஸ் ஸ்டேஷனின் அனுமதி லெட்டர் இருந்தால்தான் எரிக்கலாமாம்.

இறந்து போனவரை நல்லவிதமாய் தகனம் செய்ய விடாமல் என்ன கஷ்ட காலம் இது?

இப்போது என்ன செய்வது?

பிணத்தோடு இப்படி இடம் இடமாக அல்லாடுவது எத்தனை வேதனை தரும் சமாசாரம்?

செல்லாவுக்கும், மற்றவர்களுக்கும் கண்களில் நீர் கட்டிக் கொள்ளத் துவங்கியது.

திருவான்மியூர் போலீஸ் ஸ்டேஷனில் மீனாபாயின் தகனத்திற்குத் தேவையான அனுமதி லெட்டர் வாங்கலாம் என்று போனவர்களுக்கு அங்கேயும் அதிர்ச்சி...

"நாச்சுரல் டெத்துனு சொல்றீங்க... அதுக்கு நாங்க இந்த மாதிரி கடிதாசு கொடுக்கறது வழக்கம் இல்லே... இன்ஸ்பெக்டர் ஒரு கேஸ் விஷயமா போயிருக்கார். வந்தா கேளுங்க..."

இன்ஸ்பெக்டர் எப்போது வருவார், எப்போது லெட்டர் தருவார், எப்போது காரியம் நடப்பது?

ஏற்கனவே நிறைய நாழி ஆகிவிட்டது. இன்னும் எத்தனை நேரம் காப்பது?

ம்ஹூம்... இது சரியில்லை...



பூமா தீர்மானித்து விட்டாள்....

இல்லத்துக்கே திரும்பி, வேனை விடச் சொல்லி பிணத்தை இறக்காமல் அதிலேயே வைத்துவிட்டு வாட்ச்மேனை அனுப்பி, ஊர் தலையாரியை உடனே அழைத்து வரச் சொன்னாள்.

நல்ல வேளையாக அவன் உடனே வந்தான்.

சுருக்கமா விவரத்தைச் சொல்லி "இங்கேயே எரிச்சிட லாம்— சுடுகாடு எங்கே இருக்கு?" என்றாள்.

கடற்கரைக்குப் பக்கத்தில் சுடுகாடு உள்ளதாம். கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் நடக்க வேண்டுமாம். வேன் போக பாதை இல்லையாம்.... முன்னூறு ரூபாய் தந்தால் அரைமணியில் சாமான்கள், ஆட்களோடு வருவானாம்....

பூமா மறு பேச்சில்லாமல் பணத்தைத் தந்தாள்.

சொன்னபடி தலையாரி நாலு ஆட்கள், பச்சை மூங்கில் கீற்றுகளோடு வந்துவிட்ட பிறகு இன்னும் சுமதியைக் காணோமே என்கிற பதைப்பில் அவள் வீட்டுக்கு மறுபடி போன் பண்ண, 'சுமதி இன்னுமா அங்கே வரலை?' என்று அவள் கணவர் வியப்போடு பதில் கேள்வி போட்டார்.

என்ன ஆயிற்று? சுமதி எங்கே?

மணி இரண்டாகி விட்டது. இன்னும் தாமதித்தால் எப்படி?

இவர்களின் தவிப்புக்கு முடிவு கட்டுகிற மாதிரி அடுத்த பத்தாவது நிமிஷம் சுமதியின் டிரைவரிடமிருந்து போன் வந்தது.

"பப்ளிக் பூத்லேந்து பேசறேன். இன்னும் பதினைஞ்சு நிமிஷத்துலே அங்க வந்திடுவோம்... நேர்ல வந்து விவரம் சொல்லறதா அம்மா சொல்லச் சொன்னாங்க..."

அப்பாடி.... ஒரு வழியாய் சேதி வந்துவிட்டது....

பாடை தயாராகி தலையாரி ஆட்கள் அவசரப்பட அதில் மீனாபாயை கிடத்தினார்கள்.

"நாங்க புறப்படறோம். கந்தசாமி, நீ ரோடுலேயே நின்னு, வர்றவங்களை சுடுகாட்டுக்கு கூட்டிட்டு வந்திடு...."

முன்னால் தலையாரியும் ஆட்களும் செல்ல பின்னால் சின்ன ஊர்வலமாகப் பூமாவும் மெம்பர்களும் போனார்கள்.

கொளுத்தும் வெயிலில், கால்கள் புதையப் புதைய மண்ணில் நடந்து சுடுகாட்டுக்கு வந்தார்கள்.

சிதையில் பிணத்தை வைத்து விறகும் வரட்டியும் அடுக்கிய நிமிஷத்தில் தூரத்தில் பரபரப்போடு சுமதி வருவது தெரிந்தது. கூடவே மைதிலி, ஈஸ்வரி கந்தசாமி....

ஆமாம், ராமகிருஷ்ணன் எங்கே?

அவனைக் காணோமே!

ஓட்டமும் நடையுமாய் சுமதி கிட்டத்தில் வந்தபோது அவள் அழுவது புரிந்தது.

"நா... நா... எவ்வளவோ சொல்லியும் அவன் வர மாட்டேனுட்டான் பூமா... போகக் கூடாதுன்னு அவன் பெண்டாட்டி ராட்சஸியா நின்னு தடுத்திட்டா.... சரி... மாப்பிள்ளையை கேட்கலாம்னு அவன் வீட்டைத் தேடிட்டுப் போனேன். அவனும் 'யாருக்கு யார் கொள்ளி போடறது, எனக்கு என்ன தலை எழுத்தா'னு கத்தி, வரமாட்டேன்னுட் டான்... திரும்பி ராமகிருஷ்ணன் கிட்ட வந்து கெஞ்சினேன்... நா வந்து... ஐ ட்ரைட் மை பெஸ்ட் பூமா... ஸாரி..."

பரிதவிப்போடு சுமதி பேசிவிட்டு கண்களைத் துடைத்துக் கொள்ளவும் சட்டென்று பயம் அங்கிருந்த அனைவரையும் பீடித்தது.



ஐயோ, இப்போது என்ன செய்வது?

சிதைகூட அடுக்கியாயிற்றே!...

திடுமென்று பூமாவுக்குள் முப்பது வருஷத்துக்கு முன் நடந்த சம்பவம் விஸ்வரூபம் எடுத்தது.

"கொள்ளி போட வா... பிள்ளையாய் லட்சணமாய் வா ராகவா..." என்று கெஞ்சிய அம்மா, போகவிடாமல் தடுத்த மன்னி சாரதா, குத்தலாய் நின்ற அண்ணா...

பெற்ற பிள்ளை இருந்தும் கோவிந்தா கொள்ளி வாங்கிக்கொண்டு போன அப்பா...

அப்புறம், ஆஸ்பத்திரியில் நினைவு திரும்பாமல் செத்த அம்மா.... அவளுக்கும் கொள்ளிபோட வர மறுத்த பிள்ளை...

இப்போது மீனாபாய்...

மருமகன் கையால் கொள்ளி வாங்க ஆசைப்பட்ட மீனாபாய்...

அப்போது அப்பா, அம்மா...

இப்போது மீனாபாய்....

பிள்ளை, உறவின் கையால் கிடைத்து, ஸ்வர்க்கத்துக்குப் போக வேண்டும் என்று ஆசைப்பட்டு, அது நிராசையான வர்கள் இன்னும் எத்தனை?

சாந்தி சதனின் அம்மாக்கள் அத்தனை பேருடைய நிலைமையும் இனி இதுதானா?

கொள்ளி வைக்க யாரும் இல்லாமல் சாவில் கூடவா எங்களுக்குச் சீரழிப்பு என்று அவர்கள் புலம்ப வேண்டுமா?

நோ... நோ... நோ...

இது அநியாயம்...

அப்பாவும், அம்மாவும் அனாதைகளாகப் போன மாதிரி இந்த அம்மாக்களையும் போக விடமாட்டேன்.

இவர்களுக்கெல்லாம் நான் இருக்கிறேன். பிள்ளையாய்... பெண்ணாய் நான் இருப்பேன்...

பெற்று வளர்த்த பிள்ளையின், உறவினரின் பாசத்தைக் காட்டிலும் அதிகமான அன்போடு என்னால் கொள்ளி வைக்க இயலும்...

செய்வேன்.... நிச்சயமாய், சத்தியமாய்.

பெண்கள் கொள்ளி வைப்பது பற்றி சாஸ்திரம் எது வேணுமானாலும் சொல்லட்டும் எனக்குக் கவலை இல்லை...

ஒருவர் செய்யும் பாவ புண்ணியங்கள் அவர்கள் குழந்தைகள்மேல் விடியும் என்பார்கள்... நல்ல வேளையாய் எனக்கு அப்படி ஒருவரும் இல்லை. அதனால் என் காரியத்தின் விளைவுகள் என்னோடுதான்...

இனி நான்தான் என் அத்தனை அம்மாக்களுக்கும் பிள்ளை...

ஒரு வார்த்தைகூட வாய் வார்த்தையாகப் பேசாமல், சிதை தயாரானதும் அருகில் சென்ற பூமா, கட்டிக் கற்பூரத்தை சற்றே தெரிந்த மீனாபாயின் மார்பின்மேல் வைத்தாள். வானை நோக்கி இரு கரங்களையும் கூப்பினாள். "மீனாபாய்க்கு பிள்ளையா இருந்து நா வைக்கிற கொள்ளியை தெய்வங்களே, நீங்க ஏத்துக்கணும்" என்று உரத்த குரலில் கூவினாள்... சட்டென்று தீக் குச்சியைக் கிழித்து, கற்பூரத்தைப் பற்ற வைத்தாள்.

திகுதிகு என்று ஜ்வாலை விட்டுக் கற்பூரம் எரிந்து வரட்டியும், விறகும் தகதகக்க முற்பட்ட கணத்தில் பூமாவுக்குள் பொங்கிக் கொண்டு அழுகை எழுந்தது...



"அம்.. மா... ஆ..." வாய்விட்டு அழும் அளவுக்கு அழுகையும் துக்கமும் சீறிக்கொண்டு எழுந்தன.

எரியும் சிதையை மங்கிய பார்வையுடன் வெறித்தபோது இத்தனை வருஷங்களாக மனசில் தோன்றாத திருப்தி இப்போது தோன்றிவிட்ட மாதிரி இருக்க, உள்ளுக்குள் கல்லாய் கனத்த பாரம் குறைந்த மாதிரி இருக்க, நெருஞ்சி முள்ளாய் இதயத்தில் படர்ந்து உறுத்தின வேதனை மறைந்த மாதிரி இருக்க, வழியும் கண்ணீரைத் துடைக்காமலேயே பூமா திரும்பி, நிதானமாக நடக்க ஆரம்பித்தாள்.

(நெருஞ்சி முள் இனி உறுத்தாது)

பூமா— இந்தக் கதையின் கதாநாயகி— உருவாகக் காரணமாக இருந்த திருமதி சாவித்திரி வைத்திக்கு என் நன்றி. அவரும், அவருடைய 'மண்டே சாரிடி க்ளப்'பும் நிராதரவான பெண் முதியோர்களுக்கென நடத்தப்படும் 'விஸ்ராந்தி'யும் அமோகமாக வாழ, வளர, எல்லாம் வல்ல இறைவனை மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன்.

சிவசங்கரி